ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ திருவாய்மொழி ॥

*This document* has been prepared by*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font. Our sincere thanks to **Smt. Vasundara Ramarajan** for proofreading the entire document.

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| ⋆ | திருவாய்மொழித் தனியன்கள் | 9 |
| 1 | உயர்வற | 11 |
| 2 | வீடுமின் | 13 |
| 3 | பத்துடை | 15 |
| 4 | அஞ்சிறைய | 17 |
| 5 | வளவேழ் | 19 |
| 6 | பரிவதில் | 23 |
| 7 | பிறவித்துயர் | 25 |
| 8 | ஓடும்புல் | 27 |
| 9 | இவையும் அவையும் | 29 |
| 10 | பொருமாநீள் படை | 31 |
| 11 | வாயும் திரை | 33 |
| 12 | திண்ணன் வீடு | 35 |
| 13 | ஊனில் வாழ் | 37 |
| 14 | ஆடியாடி | 39 |
| 15 | அந்தாமத்தன்பு | 41 |
| 16 | வைகுந்தா | 43 |
| 17 | கேசவன் தமர் | 47 |
| 18 | அணைவது | 50 |
| 19 | எம்மாவீடு | 52 |
| 20 | கிளரொளி | 54 |
| 21 | முடிச்சோதி | 56 |
| 22 | முந்நீர் ஞாலம் | 58 |

23 ஒழிவில் காலம் ........................................ 60
24 புகழுநல் ஒருவன் ........................................ 62
25 மொய்ம்மாம் ........................................ 65
26 செய்யதாமரை ........................................ 68
27 பயிலும் சுடரொளி ........................................ 71
28 முடியானே ........................................ 73
29 சொன்னால் ........................................ 75
30 சன்மம் பலபல ........................................ 77
31 ஒரு நாயகம் ........................................ 81
32 பாலனாய் ........................................ 83
33 கோவை வாயாள் ........................................ 85
34 மண்ணை ........................................ 88
35 வீற்றிருந்து ........................................ 91
36 தீர்ப்பாரை ........................................ 93
37 சீலம் இல்லா ........................................ 95
38 ஏறாளும் ........................................ 97
39 நண்ணாதார் ........................................ 99
40 ஒன்றுந்தேவும் ........................................ 101
41 கையார் ........................................ 104
42 பொலிக ........................................ 106
43 மாசறு சோதி ........................................ 109
44 ஊரெல்லாம் ........................................ 111
45 எங்ஙனேயோ ........................................ 113
46 கடல் ஞாலம் ........................................ 115

47 நோற்ற நோன்பு ........................................ 119
48 ஆராவமுதே ........................................ 122
49 மானேய் நோக்கு ........................................ 124
50 பிறந்தவாறும் ........................................ 126
51 வைகல் பூங்கழி ........................................ 129
52 மின்னிடை மடவார் ........................................ 131
53 நல்குரவும் ........................................ 134
54 குரவையாய்ச்சியர் ........................................ 136
55 துவளில் ........................................ 138
56 மாலுக்கு ........................................ 142
57 உண்ணுஞ்சோறு ........................................ 144
58 பொன்னுலகு ........................................ 146
59 நீராய் நிலனாய் ........................................ 148
60 உலகம் உண்ட ........................................ 150
61 உண்ணிலாவிய ........................................ 153
62 கங்குலும் பகலும் ........................................ 156
63 வெள்ளைச் சுரிசங்கு ........................................ 160
64 ஆழியெழ ........................................ 164
65 கற்பார் ........................................ 166
66 பாமருமூவுலகும் ........................................ 168
67 ஏழையர் ஆவி ........................................ 171
68 மாயா! வாமனனே! ........................................ 173
69 என்றைக்கும் ........................................ 175
70 இன்பம் பயக்க ........................................ 177

71 தேவிமாராவார் ........ 181
72 நங்கள் வரிவளை ........ 185
73 அங்குமிங்கும் ........ 189
74 வார்கடா அருவி ........ 191
75 மாயக்கூத்தா ........ 195
76 எல்லியும் ........ 199
77 இருத்தும் வியந்து ........ 201
78 கண்கள் சிவந்து ........ 203
79 கருமாணிக்கமலை ........ 206
80 நெடுமாற்கடிமை ........ 210
81 கொண்ட பெண்டிர் ........ 213
82 பண்டைநாளாலே ........ 216
83 ஓராயிரமாய் ........ 220
84 மையார் ........ 222
85 இன்னுயிர்ச்சேவல் ........ 224
86 உருகுமால் ........ 226
87 எங்கானல் ........ 228
88 அறுக்கும் வினை ........ 230
89 மல்லிகை கமழ் ........ 232
90 மாலை நண்ணி ........ 236
91 தாளதாமரை ........ 238
92 கெடுமிடர் ........ 240
93 வேய் மருதோள் ........ 242
94 சார்வே தவநெறி ........ 246

95 கண்ணன் கழலிணை .......... 248
96 அருள் பெறுவார் .......... 250
97 செஞ்சொற்கவிகாள் .......... 252
98 திருமாலிருஞ்சோலைமலை .......... 255
99 சூழ்விசும்பு .......... 257
100 முனியே .......... 259

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திருவாய்மொழித் தனியன்கள் ॥

*நாதமுனிகள் அருளிச்செய்தது*

*ப$_4$க்தாம்ருதம் விஶ்வஜநாநுமோத$_3$நம்*
*ஸர்வார்த$_2$த$_3$ம் ஸ்ரீஶட$_2$கோபவாங்மயம் ।*
*ஸஹஸ்ரஶாகே$_2$ாபநிஷத்ஸமாக$_3$மம்*
*நமாம்யஹம் த்$_3$ராவிட$_3$வேத$_3$ஸாக$_3$ரம் ॥*

*ஈச்வரமுனிகள் அருளிச்செய்தது*

*திருவழுதி நாடென்றும் தென் குருகூர் என்றும்⋆*
*மருவினிய வண்பொருநல் என்றும்⋆-அருமறைகள்*
*அந்தாதி செய்தான் அடியிணையே எப்பொழுதும்⋆*
*சிந்தியாய் நெஞ்சே! தெளிந்து*

*சொட்டை நம்பிகள் அருளிச்செய்தது*

*மனத்தாலும் வாயாலும் வண் குருகூர் பேணும்⋆*
*இனத்தாரையல்லா திறைஞ்சேன்⋆-தனத்தாலும்*
*ஏதும் குறைவிலேன் எந்தை சடகோபன்⋆*
*பாதங்கள் யாமுடைய பற்று*

*அனந்தாழ்வான் அருளிச்செய்தது*

*ஏய்ந்தபெருங்கீர்த்தி இராமானுசமுனி தன்⋆*
*வாய்ந்தமலர்ப் பாதம் வணங்குகின்றேன்⋆-ஆய்ந்த பெரும்*
*சீரார் சடகோபன் செந்தமிழ் வேதம் தரிக்கும்⋆*
*பேராத உள்ளம் பெற*

## பட்டர் அருளிச்செய்தவை

வான் திகழும் சோலை மதிளரங்கர் வண் புகழ்மேல்⋆
ஆன்ற தமிழ்மறைகள் ஆயிரமும்⋆-ஈன்ற
முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த⋆
இதத்தாய் இராமுனுசன்

மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர்நிலையும்⋆
தக்க நெறியும் தடையாகித்தொக்கியலும்⋆
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர் கோன்⋆
யாழினிசை வேதத் தியல்

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ உயர்வற ॥

## ஆத்ம உபதேசம்

‡உயர்வற உயர் நலம்⋆ உடையவன் யவன் அவன்⋆
மயர்வற மதி நலம்⋆ அருளினன் யவன் அவன்⋆
அயர்வறும் அமரர்கள்⋆ அதிபதி யவன் அவன்⋆
துயரறு சுடரடி⋆ தொழுதெழென் மனனே! (1)

மனன் அக மலம் அற⋆ மலர் மிசை எழுதரும்⋆
மனன் உணர்வளவிலன்⋆ பொறியுணர்வவை இலன்⋆
இனன் உணர் முழு நலம்⋆ எதிர் நிகழ் கழிவினும்⋆
இனன் இலன் எனன் உயிர்⋆ மிகுநரை இலனே (2)

இலன் அதுவுடையன் இது⋆ என நினைவரியவன்⋆
நிலனிடை விசும்பிடை⋆ உருவினன் அருவினன்⋆
புலனொடு புலன் அலன்⋆ ஒழிவிலன் பரந்த⋆ அந்-
நலன் உடை ஒருவனை⋆ நணுகினம் நாமே (3)

நாம் அவன் இவன் உவன்⋆ அவள் இவள் உவள் எவள்⋆
தாம் அவர் இவர் உவர்⋆ அதுவிதுவுதுவெது⋆
வீம் அவை இவை உவை⋆ அவை நலம் தீங்கவை⋆
ஆம் அவை ஆயவை ஆய்⋆ நின்ற அவரே (4)

அவரவர் தமதமது⋆ அறிவறி வகைவகை⋆
அவரவர் இறையவர்⋆ என அடி அடைவர்கள்⋆
அவரவர் இறையவர்⋆ குறைவிலர் இறையவர்⋆
அவரவர் விதிவழி⋆ அடைய நின்றனரே (5)

நின்றனர் இருந்தனர்⋆ கிடந்தனர் திரிந்தனர்⋆
நின்றிலர் இருந்திலர்⋆ கிடந்திலர் திரிந்திலர்⋆
என்றுமொர் இயல்வினர்⋆ என நினைவரியவர்⋆
என்றுமொர் இயல்வொடு⋆ நின்றவெந்திடரே (6)

திட விசும்பெரி வளி⋆ நீர் நிலம் இவை மிசை⋆
படர் பொருள் முழுவதுமாய்⋆ அவை அவைதொறும்⋆
உடல் மிசை உயிர் எனக்⋆ கரந்தெங்கும் பரந்துளன்⋆
சுடர் மிகு சுருதியுள்⋆ இவையுண்ட சுரனே (7)

சுரர் அறிவரு நிலை⋆ விண் முதல் முழுவதும்⋆
வரன் முதலாய் அவை⋆ முழுதுண்ட பர பரன்⋆
புரம் ஒரு மூன்றெரித்து⋆ அமரர்க்கும் அறிவியந்து⋆
அரன் அயன் என⋆ உலகழித்தமைத்துளனே (8)

உளன் எனில் உளன் அவன்⋆ உருவம் இவ்வுருவுகள்⋆
உளன் அலன் எனில் அவன்⋆ அருவம் இவ்வருவுகள்⋆
உளன் என இலன் என⋆ இவை குணம் உடைமையில்⋆
உளன் இரு தகைமையொடு⋆ ஒழிவிலன் பரந்தே (9)

பரந்த தண் பரவையுள்⋆ நீர்தொறும் பரந்துளன்⋆
பரந்த அண்டம் இதென⋆ நில விசும் பொழிவறக்⋆
கரந்த சில் இடந்தொறும்⋆ இடந்திகழ் பொருள் தொறும்⋆
கரந்தெங்கும் பரந்துளன்⋆ இவையுண்ட கரனே (10)

‡கர விசும்பெரி வளி⋆ நீர் நிலம் இவை மிசை⋆
வரனவில் திறல் வலி⋆ அளி பொறையாய் நின்ற⋆
பரன் அடிமேல்⋆ குருகூர்ச் சடகோபன் சொல்⋆
நிரணிறை ஆயிரத்து⋆ இவை பத்தும் வீடே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வீடுமின் ॥

## உலகிற்கு உபதேசம்

‡வீடுமின் முற்றவும்⋆ வீடுசெய்து⋆ உம்முயிர்
வீடுடை யானிடை⋆ வீடுசெய்ம்மினே (1)

மின்னின் நிலையில⋆ மன்னுயிர் ஆக்கைகள்⋆
என்னும் இடத்து⋆ இறை உன்னுமின் நீரே (2)

நீர் நுமதென்றிவை⋆ வேர் முதல் மாய்த்து⋆ இறை
சேர்மின் உயிர்க்கு⋆ அதன் நேர் நிறை இல்லே (3)

இல்லதும் உள்ளதும்⋆ அல்லதவன் உரு⋆
எல்லையில் அந்நலம்⋆ புல்கு பற்றற்றே (4)

அற்றது பற்றெனில்⋆ உற்றது வீடுயிர்⋆
செற்றது மன்னுறில்⋆ அற்றிறை பற்றே (5)

பற்றிலன் ஈசனும்⋆ முற்றவும் நின்றனன்⋆
பற்றிலையாய்⋆ அவன் முற்றில் அடங்கே (6)

அடங்கெழில் சம்பத்து⋆ அடங்கக் கண்டு⋆ ஈசன்
அடங்கெழில் அஃதென்று⋆ அடங்குக உள்ளே (7)

உள்ளம் உரை செயல்⋆ உள்ளவிம் மூன்றையும்⋆
உள்ளிக் கெடுத்து⋆ இறை உள்ளில் ஒடுங்கே (8)

ஒடுங்க அவன் கண்⋆ ஒடுங்கலும் எல்லாம்⋆
விடும் பின்னும் ஆக்கை⋆ விடும்பொழுதெண்ணே (9)

எண் பெருக்கந் நலத்து⋆ ஒண் பொருள் ஈறில⋆
வண் புகழ் நாரணன்⋆ திண் கழல் சேரே (10)

‡சேர்த்தடத்⋆ தென் குருகூர்ச் சடகோபன் சொல்⋆
சீர்த் தொடை ஆயிரத்து⋆ ஓர்த்த இப்பத்தே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பத்துடை ॥

## அடியவர்க்கு எளியவன்

‡பத்துடை அடியவர்க்கெளியவன்⋆ பிறர்களுக்கரிய
 வித்தகன்⋆ மலர் மகள் விரும்பும்⋆ நம் அரும்பெறல் அடிகள்⋆
மத்துறு கடை வெண்ணெய்⋆ களவினில் உரவிடையாப் புண்டு⋆
 எத்திறம் உரலினோடு⋆ இணைந்திருந்தேங்கிய எளிவே! (1)

எளிவரும் இயல்வினன்⋆ நிலை வரம்பில பல பிறப்பாய்⋆
 ஒளிவரு முழு நலம்⋆ முதல் இல கேடில வீடாம்⋆
தெளிதரும் நிலைமைய-தொழிவிலன்⋆ முழுவதும் இறையோன்⋆
 அளிவரும் அருளினோடு⋆ அகத்தனன் புறத்தனன் அமைந்தே (2)

அமைவுடை அறநெறி⋆ முழுவதும் உயர்வற உயர்ந்த⋆
 அமைவுடை முதல் கெடல்⋆ ஒடிவிடை அற நிலம் அதுவாம்⋆
அமைவுடை அமரரும்⋆ யாவையும் யாவரும் தானாம்⋆
 அமைவுடை நாரணன்⋆ மாயையை அறிபவர் யாரே (3)

யாரும் ஓர் நிலைமையன் என⋆ அறிவரிய எம் பெருமான்⋆
 யாரும் ஓர் நிலைமையன் என⋆ அறிவெளிய எம் பெருமான்⋆
பேரும் ஓர் ஆயிரம்⋆ பிற பல உடைய எம் பெருமான்⋆
 பேரும் ஓர் உருவமும்⋆ உளதில்லை இலதில்லை பிணக்கே (4)

பிணக்கற அறுவகைச் சமயமும்⋆ நெறியுள்ளி உரைத்த⋆
 கணக்கறு நலத்தனன்⋆ அந்தமில் ஆதியம் பகவன்⋆
வணக்குடைத் தவநெறி⋆ வழிநின்று புறநெறி களைகட்டு⋆
 உணக்குமின் பசையற!⋆ அவனுடை உணர்வு கொண்டுணர்ந்தே (5)

உணர்ந்துணர்ந்திழிந்தகன்று⋆ உயர்ந்துருவியந்த இந்நிலைமை⋆
 உணர்ந்துணர்ந்துணரிலும்⋆ இறை நிலை உணர்வரிதுயிர்காள்!⋆
உணர்ந்துணர்ந்-துரைத்துரைத்து⋆ அரியயன் அரன் என்னும் இவரை⋆

உணர்ந்துணர்ந்-துரைத்துரைத்து⋆ இறைஞ்சுமின்
மனப்பட்டதொன்றே (6)

ஒன்றெனப் பலவென⋆ அறிவரும் வடிவினுள் நின்ற⋆
நன்றெழில் நாரணன்⋆ நான்முகன் அரனென்னும் இவரை⋆
ஒன்றநும் மனத்துவைத்து⋆ உள்ளிநும் இரு பசை அறுத்து⋆
நன்றென நலம் செய்வது⋆ அவனிடை நம்முடை நாளே (7)

நாளும் நின்றடு நம பழமை⋆ அங்கொடு வினையுடனே
மாளும்⋆ ஓர் குறைவில்லை⋆ மனனக மலம் அறக் கழுவி⋆
நாளும் நம் திருவுடை அடிகள் தம்⋆ நலம் கழல் வணங்கி⋆
மாளும் ஓரிடத்திலும்⋆ வணக்கொடு மாள்வது வலமே (8)

வலத்தனன் திரிபுரம் எரித்தவன்⋆ இடம்பெறத் துந்தித்
தலத்து⋆ எழு திசைமுகன் படைத்த⋆ நல்லுலகமும் தானும்
புலப்பட⋆ பின்னும் தன் உலகத்தில்⋆ அகத்தனன் தானே
சொலப் புகில்⋆ இவை பின்னும் வயிற்றுள⋆ இவை யவன்
துயக்கே (9)

துயக்கறு மதியில் நல் ஞானத்துள்⋆ அமரரைத் துயக்கும்⋆
மயக்குடை மாயைகள்⋆ வானிலும் பெரியன வல்லன்⋆
புயல் கரு நிறத்தனன்⋆ பெரு நிலங்கடந்த நல் அடிப் போது⋆
அயர்ப்பிலன் அலற்றுவன்⋆ தழுவுவன் வணங்குவன்
அமர்ந்தே (10)

‡அமரர்கள் தொழுதெழ⋆ அலை கடல் கடைந்தவன் தன்னை⋆
அமர் பொழில் வளங்குருகூர்ச்⋆ சடகோபன் குற்றேவல்⋆
அமர் சுவை ஆயிரத்து⋆ அவற்றினுள் இவை பத்தும் வல்லார்⋆
அமரரோடுயர்வில் சென்று⋆ அறுவர் தம் பிறவியஞ்சிறையே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அஞ்சிறைய ॥

## தலைமகள் தூதுவிடல்

‡அஞ்சிறைய மட நாராய்!⋆ அளியத்தாய்!⋆ நீயும் நின்
அஞ்சிறைய சேவலுமாய்⋆ ஆவா என்றெனக்கருளி⋆
வெஞ்சிறைப் புள்ளுயர்த்தாற்க்கு⋆ என் விடு தூதாய்ச் சென்றக்கால்⋆
வன்சிறையில் அவன் வைக்கில்⋆ வைப்புண்டால் என்செய்யுமோ (1)

என்செய்ய தாமரைக் கண்⋆ பெருமானார்க்கென் தூதாய்⋆
என்செய்யும் உரைத்தக்கால்⋆ இனக் குயில்காள்! நீர் அலிரே⋆
முன்செய்த முழுவினையால்⋆ திருவடிக்கீழ்க் குற்றேவல்⋆
முன்செய்ய முயலாதேன்⋆ அகல்வதுவோ விதியினமே (2)

விதியினால் பெடை மணக்கும்⋆ மென் நடைய அன்னங்காள்!⋆
மதியினால் குறள் மாணாய்⋆ உலகிரந்த கள்வற்கு⋆
மதியிலேன் வல் வினையே⋆ மாளாதோ என்றொருத்தி⋆
மதியெல்லாம் உள் கலங்கி⋆ மயங்குமால் என்னீரே (3)

என் நீர்மை கண்டிரங்கி⋆ இது தகாதென்னாத⋆
என் நீல முகில் வண்ணற்கு⋆ என் சொலி யான் சொல்லுகெனோ⋆
நன் நீர்மை இனியவர் கண்⋆ தங்காதென்றொரு வாய்ச்சொல்⋆
நன் நீல மகன்றில்காள்!⋆ நல்குதிரோ நல்கீரோ (4)

நல்கித் தான் காத்தளிக்கும்⋆ பொழில் ஏழும் வினையேற்கே⋆
நல்கத் தான் ஆகாதோ⋆ நாரணனைக் கண்டக்கால்⋆
மல்கு நீர்ப் புனல் படப்பை⋆ இரை தேர் வண் சிறு குருகே!⋆
மல்கு நீர்க் கண்ணேற்கோர்⋆ வாசகம் கொண்டருளாயே (5)

அருளாத நீர் அருளி⋆ அவர் ஆவி துவராமுன்⋆
அருள் ஆழிப் புட்கடவீர்⋆ அவர் வீதி ஒருநாள் என்று⋆
அருள் ஆழி அம்மானைக்⋆ கண்டக்கால் இது சொல்லி⋆
அருள் ஆழி வரி வண்டே!⋆ யாமும் என் பிழைத்தோமே (6)

என்பிழை கோப்பது போலப்⋆ பனி வாடை ஈர்கின்ற⋆
    என்பிழையே நினைந்தருளி⋆ அருளாத திருமாலார்க்கு⋆
என்பிழைத்தாள் திருவடியின்⋆ தகவினுக்கென்றொரு வாய்ச்சொல்⋆
    என்பிழைக்கும் இளங்கிளியே!⋆ யான் வளர்த்த நீயலையே (7)

நீயலையே சிறு பூவாய்!⋆ நெடுமாலார்க்கென் தூதாய்⋆
    நோய் எனது நுவல் என்ன⋆ நுவலாதே இருந்தொழிந்தாய்⋆
சாயலொடு மணி மாமை⋆ தளர்ந்தேன் நான்⋆ இனி உனது
    வாய் அலகில் இன்னடிசில்⋆ வைப்பாரை நாடாயே (8)

நாடாத மலர் நாடி⋆ நாடோறும் நாரணன் தன்⋆
    வாடாத மலர் அடிக்கீழ்⋆ வைக்கவே வகுக்கின்று⋆
வீடாடி வீற்றிருத்தல்⋆ வினையற்றதென் செய்வதோ⋆
    ஊடாடு பனி வாடாய்!⋆ உரைத்தீராய் எனதுடலே (9)

உடல் ஆழிப் பிறப்பு வீடு⋆ உயிர் முதலா முற்றுமாய்⋆
    கடல் ஆழி நீர் தோற்றி⋆ அதனுள்ளே கண் வளரும்⋆
அடல் ஆழி அம்மானைக்⋆ கண்டக்கால் இது சொல்லி⋆
    விடல் ஆழி மட நெஞ்சே!⋆ வினையோ ஒன்றாம் அளவே (10)

‡அளவியன்ற ஏழ் உலகத்து⋆ அவர் பெருமான் கண்ணனை⋆
    வள வயல் சூழ் வண் குருகூர்ச்⋆ சடகோபன் வாய்ந்துரைத்த⋆
அளவியன்ற அந்தாதி⋆ ஆயிரத்துள் இப்பத்தின்⋆
    வளவுரையால் பெறலாகும்⋆ வான் ஓங்கு பெரு வளமே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வளவேழ் ॥

மாறனை மால் சீலகுணத்தால் சேர்த்தல்

‡வளவேழ் உலகின் முதலாய⋆
    வானோர் இறையை⋆ அருவினையேன்
களவேழ் வெண்ணெய் தொடுவுண்ட⋆
    கள்வா! என்பன் பின்னையும்⋆
தளவேழ் முறுவல் பின்னைக்காய்⋆
    வல்லான் ஆயர் தலைவனாய்⋆
இளவேறேழும் தழுவிய⋆
    எந்தாய்! என்பன் நினைந்துநைந்தே (1)

நினைந்து நைந்துள் கரைந்துருகி⋆
    இமையோர் பலரும் முனிவரும்⋆
புனைந்த கண்ணி நீர் சாந்தம்⋆
    புகையோடேந்தி வணங்கினால்⋆
நினைந்த எல்லாப் பொருள்கட்கும்⋆
    வித்தாய் முதலில் சிதையாமே⋆
மனஞ்செய் ஞானத்துன் பெருமை⋆
    மாசூணாதோ மாயோனே (2)

மா யோனிகளாய் நடை கற்ற⋆
    வானோர் பலரும் முனிவரும்⋆
நீ யோனிகளைப் படை என்று⋆
    நிறை நான் முகனைப் படைத்தவன்⋆
சேயோன் எல்லா அறிவுக்கும்⋆
    திசைகள் எல்லாம் திருவடியால்
தாயோன்⋆ எல்லா எவ்வுயிர்க்கும்
    தாயோன்⋆ தானோர் உருவனே (3)

தானோர் உருவே தனி வித்தாய்த்⋆
    தன்னில் மூவர் முதலாய⋆
வானோர் பலரும் முனிவரும்⋆
    மற்றும் மற்றும் முற்றுமாய்⋆
தானோர் பெருநீர் தன்னுள்ளே
    தோற்றி⋆ அதனுள் கண்வளரும்⋆
வானோர் பெருமான் மா மாயன்⋆
    வைகுந்தன் எம் பெருமானே (4)

மானேய் நோக்கி மடவாளை⋆
    மார்வில் கொண்டாய்! மாதவா!⋆
கூனே சிதைய உண்டைவில்⋆
    நிறத்தில் தெறித்தாய்! கோவிந்தா!⋆
வானார் சோதி மணிவண்ணா!⋆
    மதுசூதா! நீ அருளாய்⋆ உன்
தேனே மலரும் திருப்பாதம்⋆
    சேரு மாறு வினையேனே (5)

வினையேன் வினை தீர் மருந்தானாய்!⋆
    விண்ணோர் தலைவா! கேசவா!⋆
மனை சேர் ஆயர் குல முதலே!⋆
    மா மாயனே! மாதவா!⋆
சினையேய் தழைய மராமரங்கள்⋆
    ஏழும் எய்தாய்! சிரீதரா!⋆
இனையாய்! இனைய பெயரினாய்!⋆
    என்று நைவன் அடியேனே (6)

அடியேன் சிறிய ஞானத்தன்⋆
    அறிதல் ஆர்க்கும் அரியானை⋆
கடி சேர் தண்ணந் துழாய்க்⋆ கண்ணி
    புனைந்தான் தன்னைக் கண்ணனை⋆
செடியார் ஆக்கை அடியாரைச்⋆
    சேர்தல் தீர்க்கும் திருமாலை⋆

அடியேன் காண்பான் அலற்றுவன்⋆
இதனில் மிக்கோர் அயர்வுண்டே (7)

உண்டாய் உலகேழ் முன்னமே⋆
உமிழ்ந்து மாயையால் புக்கு⋆
உண்டாய் வெண்ணெய் சிறு மனிசர்⋆
உவலை ஆக்கை நிலை எய்தி⋆
மண் தான் சோர்ந்ததுண்டேலும்⋆
மனிசர்க்காகும் பீர்⋆ சிறிதும்
அண்டா வண்ணம் மண் கரைய⋆
நெய்யூண் மருந்தோ மாயோனே (8)

மாயோம் தீயவலவலைப்⋆
பெருமா வஞ்சப் பேய் வீய⋆
தூய குழவியாய் விடப் பால்
அமுதா⋆ அமுது செய்திட்ட
மாயன்⋆ வானோர் தனித் தலைவன்⋆
மலராள் மைந்தன் எவ்வுயிர்க்கும்
தாயோன்⋆ தம்மான் என்னம்மான்⋆
அம்மா மூர்த்தியைச் சார்ந்தே (9)

சார்ந்த இருவல் வினைகளும்
சரித்து⋆ மாயப் பற்றறுத்து⋆
தீர்ந்து தன்பால் மனம் வைக்கத்⋆
திருத்தி வீடு திருத்துவான்⋆
ஆர்ந்த ஞானச் சுடர் ஆகி⋆
அகலம் கீழ் மேல் அளவிறந்து⋆
நேர்ந்த உருவாய் அருவாகும்⋆
இவற்றின் உயிராம் நெடுமாலே (10)

‡மாலே! மாயப் பெருமானே!⋆
மா மாயனே! என்றென்று⋆
மாலே ஏறி மால் அருளால்⋆
மன்னு குருகூர்ச் சடகோபன்⋆

பாலேய் தமிழர் இசைகாரர்⋆
　　பத்தர் பரவும் ஆயிரத்தின்
பாலே⋆ பட்ட இவை பத்தும்⋆
　　வல்லார்க்கில்லை பரிவதே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பரிவதில் ॥

## ஆராதனைக் கெளியவன்

‡பரிவதில் ஈசனைப் பாடி⋆ விரிவது மேவல் உறுவீர்!⋆
பிரிவகையின்றி நன்னீர் தூய்⋆ புரிவதுவும் புகை பூவே (1)

மதுவார் தண்ணந் துழாயான்⋆ முதுவேத முதல்வனுக்கு⋆
எதுவேதென் பணி என்னாது⋆ அதுவே ஆட்செய்யு மீடே (2)

ஈடும் எடுப்பும் இல் ஈசன்⋆ மாடு விடாதென் மனனே⋆
பாடும் என் நாவலன் பாடல்⋆ ஆடும் என் அங்கம் அணங்கே (3)

அணங்கென ஆடும் என் அங்கம்⋆ வணங்கி வழிபடும் ஈசன்⋆
பிணங்கி அமரர் பிதற்றும்⋆ குணங்கெழு கொள்கையினானே (4)

கொள்கை கொளாமை இலாதான்⋆ எள்கல் இராகம் இலாதான்⋆
விள்கை விள்ளாமை விரும்பி⋆ உள் கலந்தார்க்கோர் அமுதே (5)

அமுதம் அமரகட்கீந்த⋆ நிமிர் சுடர் ஆழி நெடுமால்⋆
அமுதிலும் ஆற்ற இனியன்⋆ நிமிர் திரை நீள் கடலானே (6)

நீள் கடல் சூழ் இலங்கைக் கோன்⋆ தோள்கள் தலை துணி செய்தான்⋆
தாள்கள் தலையில் வணங்கி⋆ நாள் கடலைக் கழிமினே (7)

கழிமின் தொண்டீர்கள் கழித்துத்⋆ தொழுமின் அவனைத் தொழுதால்⋆
வழி நின்ற வல்வினை மாள்வித்து⋆ அழிவின்றி ஆக்கம் தருமே (8)

தருமவரும் பயனாய⋆ திருமகளார் தனிக் கேள்வர்⋆
பெருமை உடைய பிரானார்⋆ இருமை வினை கடிவாரே (9)

கடிவார் தீய வினைகள்⋆ நொடியாரும் அளவைக்கண்⋆
கொடியா அடு புள் உயர்த்த⋆ வடிவார் மாதவனாரே (10)

‡மாதவன் பால் சடகோபன்⋆ தீதவம் இன்றியுரைத்த⋆
ஏதமில் ஆயிரத்திப்பத்து⋆ ஓத வல்லார் பிறவாரே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ பிறவித்துயர் ॥

## ஆராதிப்பார்க்கு மிக இனியன்

‡பிறவித்துயர் அற⋆ ஞானத்துள் நின்று⋆
துறவிச் சுடர் விளக்கம்⋆ தலைப்பெய்வார்⋆
அறவனை⋆ ஆழிப்படை அந்தணனை⋆
மறவியை இன்றி⋆ மனத்து வைப்பாரே (1)

வைப்பாம் மருந்தாம்⋆ அடியரை வல்வினைத்⋆
துப்பாம் புலன் ஐந்தும்⋆ துஞ்சக்கொடான் அவன்⋆
எப்பால் யவர்க்கும்⋆ நலத்தால் உயர்ந்துயர்ந்து⋆
அப்பாலவன் எங்கள்⋆ ஆயர் கொழுந்தே (2)

ஆயர் கொழுந்தாய்⋆ அவரால் புடையுண்ணும்⋆
மாயப் பிரானை⋆ என் மாணிக்கச் சோதியை⋆
தூய அமுதைப்⋆ பருகிப் பருகி⋆ என்
மாயப் பிறவி⋆ மயர்வறுத்தேனே (3)

மயர்வற என் மனத்தே⋆ மன்னினான் தன்னை⋆
உயர்வினையே தரும்⋆ ஒண் சுடர்க் கற்றையை⋆
அயர்வில் அமரர்கள்⋆ ஆதிக் கொழுந்தை⋆ என்
இசைவினை⋆ என் சொல்லி யான் விடுவேனோ (4)

விடுவேனோ என் விளக்கை⋆ என்னாவியை⋆
நடுவே வந்து⋆ உய்யக் கொள்கின்ற நாதனை⋆
தொடுவே செய்து⋆ இள வாய்ச்சியர் கண்ணினுள்⋆
விடவே செய்து⋆ விழிக்கும் பிரானையே (5)

பிரான்⋆ பெரு நிலங்கீண்டவன்⋆ பின்னும்
விராய்⋆ மலர்த் துழாய் வேய்ந்த முடியன்⋆
மராமரம் எய்த மாயவன்⋆ என்னுள்
இரான் எனில்⋆ பின்னை யான் ஒட்டுவேனோ (6)

யான் ஒட்டி என்னுள்⋆ இருத்துவம் என்றிலன்⋆
தான் ஒட்டி வந்து⋆ என் தனி நெஞ்சை வஞ்சித்து⋆
ஊன் ஒட்டி நின்று⋆ என் உயிரில் கலந்து⋆ இயல்
வான் ஒட்டுமோ⋆ இனி என்னை நெகிழ்க்கவே (7)

என்னை நெகிழ்க்கிலும்⋆ என்னுடை நன்னெஞ்சம்
தன்னை⋆ அகல்விக்கத் தானும்⋆ கில்லான் இனி⋆
பின்னை நெடும் பணைத் தோள்⋆ மகிழ் பீடுடை⋆
முன்னை அமரர்⋆ முழுமுதலானே (8)

அமரர் முழுமுதல்⋆ ஆகிய ஆதியை⋆
அமரர்க்கமுதீந்த⋆ ஆயர் கொழுந்தை⋆
அமரவழும்பத்⋆ துழாவி என்னாவி⋆
அமரத் தழுவிற்று⋆ இனி அகலுமோ (9)

அகலில் அகலும்⋆ அணுகில் அணுகும்⋆
புகலும் அரியன்⋆ பொருவல்லன் எம்மான்⋆
நிகரில் அவன் புகழ்⋆ பாடி இளைப்பிலம்⋆
பகலும் இரவும்⋆ படிந்து குடைந்தே (10)

‡குடைந்து வண்டுண்ணும்⋆ துழாய் முடியானை⋆
அடைந்த தென் குருகூர்ச்⋆ சடகோபன்⋆
மிடைந்த சொல் தொடை⋆ ஆயிரத்திப்பத்து⋆
உடைந்து நோய்களை⋆ ஓடுவிக்குமே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஓடும்புள் ॥

ஈச்வரன் ஆர்சவ குணமுடையவன்

‡ஓடும் புள்ளேறி⋆ சூடும் தண் துழாய்⋆
நீடு நின்றவை⋆ ஆடும் அம்மானே (1)

அம்மானாய்ப் பின்னும்⋆ எம்மாண்பும் ஆனான்⋆
வெம் மா வாய் கீண்ட⋆ செம் மா கண்ணனே (2)

கண்ணாவான் என்றும்⋆ மண்ணோர் விண்ணோர்க்கு⋆
தண்ணார் வேங்கட⋆ விண்ணோர் வெற்பனே (3)

வெற்பை ஒன்றெடுத்து⋆ ஒற்கம் இன்றியே⋆
நிற்கும் அம்மான் சீர்⋆ கற்பன் வைகலே (4)

வைகலும் வெண்ணெய்⋆ கை கலந்துண்டான்⋆
பொய் கலவாது⋆ என் மெய் கலந்தானே (5)

கலந்தென்னாவி⋆ நலங்கொள் நாதன்⋆
புலங்கொள் மாணாய்⋆ நிலம் கொண்டானே (6)

கொண்டான் ஏழ் விடை⋆ உண்டான் ஏழ் வையம்⋆
தண் தாமம் செய்து⋆ என் எண் தான் ஆனானே (7)

ஆனான் ஆன் ஆயன்⋆ மீனோடேனமும்⋆
தான் ஆனான் என்னில்⋆ தான் ஆய சங்கே (8)

சங்கு சக்கரம்⋆ அங்கையில் கொண்டான்⋆
எங்கும் தானாய⋆ நங்கள் நாதனே (9)

நாதன் ஞாலம் கொள்⋆ பாதன் என்னம்மான்⋆
ஓதம் போல் கிளர்⋆ வேத நீரனே (10)

‡நீர்புரை வண்ணன்⋆ சீர் சடகோபன்⋆
நேர்தல் ஆயிரத்து⋆ ஓர்தல் இவையே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ இவையும் அவையும் ॥

ஆழ்வாரோடு எம்பெருமான் கலந்தவகை

‡இவையும் அவையும் உவையும்⋆ இவரும் அவரும் உவரும்⋆
அவையும் யவரும் தன்னுள்ளே⋆ ஆகியும் ஆக்கியும் காக்கும்⋆
அவையுள் தனிமுதல் எம்மான்⋆ கண்ண பிரான் என்னமுதம்⋆
சுவையன் திருவின் மணாளன்⋆ என்னுடைச் சூழல் உளானே (1)

சூழல் பல பல வல்லான்⋆ தொல்லையங்காலத்துலகை⋆
கேழல் ஒன்றாகி இடந்த⋆ கேசவன் என்னுடை அம்மான்⋆
வேழ மருப்பை ஒசித்தான்⋆ விண்ணவர்க்கெண்ணல் அரியான்⋆
ஆழ நெடுங்கடல் சேர்ந்தான்⋆ அவன் என்னருகலிலானே (2)

அருகல் இலாய பெரும் சீர்⋆ அமரர்கள் ஆதி முதல்வன்⋆
கருகிய நீல நன் மேனி வண்ணன்⋆ செந்தாமரைக் கண்ணன்⋆
பொரு சிறைப் புள்ளுவந்தேறும்⋆ பூ மகளார் தனிக் கேள்வன்⋆
ஒருகதியின்சுவை தந்திட்டு⋆ ஒழிவிலன் என்னோடுடனே (3)

உடன் அமர் காதல் மகளிர்⋆ திருமகள் மண்மகள் ஆயர்
மட மகள்⋆ என்றிவர் மூவர் ஆளும்⋆ உலகமும் மூன்றே⋆
உடன் அவை ஒக்க விழுங்கி⋆ ஆல் இலைச் சேர்ந்தவன் எம்மான்⋆
கடல் மலி மாயப் பெருமான்⋆ கண்ணன் என் ஒக்கலை யானே (4)

ஒக்கலை வைத்து முலைப் பால் உண் என்று⋆ தந்திட வாங்கி⋆
செக்கம் செக அன்றவள் பால்⋆ உயிர் செகவுண்ட பெருமான்⋆
நக்க பிரானோடயனும்⋆ இந்திரனும் முதலாக⋆
ஒக்கவும் தோற்றிய ஈசன்⋆ மாயன் என் நெஞ்சின் உளானே (5)

மாயன் என் நெஞ்சின் உள்ளான்⋆ மற்றும் யவர்க்கும் அதுவே⋆
காயமும் சீவனும் தானே⋆ காலும் எரியும் அவனே⋆
சேயன் அணியன் யவர்க்கும்⋆ சிந்தைக்கும் கோசரம் அல்லன்⋆
தூயன் துயக்கன் மயக்கன்⋆ என்னுடைத் தோள் இணையானே (6)

தோள் இணை மேலும் நன் மார்பின்
    மேலும்⋆ சுடர் முடி மேலும்⋆
தாள் இணை மேலும் புனைந்த⋆
    தண்ணம் துழாய் உடை அம்மான்⋆
கேள் இணை ஒன்றும் இலாதான்⋆
    கிளரும் சுடர் ஒளி மூர்த்தி⋆
நாள் அணைந்தொன்றும் அகலான்⋆
    என்னுடை நாவின் உளானே (7)

நாவினுள் நின்று மலரும்⋆ ஞானக் கலைகளுக்கெல்லாம்⋆
    ஆவியும் ஆக்கையும் தானே⋆ அழிப்போடளிப்பவன் தானே⋆
பூவியல் நால் தடம் தோளன்⋆ பொரு படை ஆழி சங்கேந்தும்⋆
    காவி நன் மேனிக் கமலக் கண்ணன்⋆ என் கண்ணின் உளானே (8)

கமலக் கண்ணன் என் கண்ணின் உள்ளான்⋆
    காண்பன் அவன் கண்களாலே⋆
அமலங்கள் ஆக விழிக்கும்⋆
    ஐம்புலனும் அவன் மூர்த்தி⋆
கமலத்தயன் நம்பி தன்னைக்⋆
    கண்ணுதலானொடும் தோற்றி⋆
அமலத் தெய்வத்தோடுலகம் ஆக்கி⋆
    என் நெற்றி உளானே (9)

நெற்றியுள் நின்றென்னை ஆளும்⋆ நிரை மலர்ப் பாதங்கள் சூடிக்⋆
    கற்றைத் துழாய் முடிக் கோலக்⋆ கண்ண பிரானைத் தொழுவார்⋆
ஒற்றைப் பிறை அணிந்தானும்⋆ நான்முகனும் இந்திரனும்⋆
    மற்றைய அமரரும் எல்லாம் வந்து⋆ எனதுச்சி உளானே (10)

‡உச்சியுள்ளே நிற்கும் தேவ தேவற்குக்⋆ கண்ண பிராற்கு⋆
    இச்சையுள் செல்ல உணர்த்தி⋆ வண் குருகூர்ச் சடகோபன்⋆
இச்சொன்ன ஆயிரத்துள்⋆ இவையும் ஓர் பத்தெம்பிராற்கு⋆
    நிச்சலும் விண்ணப்பம் செய்ய⋆ நீள் கழல் சென்னி பொருமே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பொருமாநீள் படை ॥

ஈச்வரன் காரணம் இன்றிச் செய்யும் உபகாரம்

‡பொரு மா நீள் படை⋆ ஆழி சங்கத்தொடு⋆
திரு மா நீள் கழல்⋆ ஏழ் உலகும் தொழ⋆
ஒரு மாணிக் குறள் ஆகி⋆ நிமிர்ந்த⋆ அக்-
கரு மாணிக்கம்⋆ என் கண்ணுளதாகுமே (1)

கண்ணுள்ளே நிற்கும்⋆ காதன்மையால் தொழில்⋆
எண்ணிலும் வரும்⋆ என் இனி வேண்டுவம்⋆
மண்ணும் நீரும்⋆ எரியும் நல் வாயுவும்⋆
விண்ணுமாய் விரியும்⋆ எம் பிரானையே (2)

எம் பிரானை⋆ எந்தை தந்தை தந்தைக்கும்
தம் பிரானை⋆ தண் தாமரைக் கண்ணனை⋆
கொம்பராவு⋆ நுண் நேர் இடை மார்வனை⋆
எம் பிரானைத் தொழாய்⋆ மட நெஞ்சமே (3)

நெஞ்சமே நல்லை நல்லை⋆ உன்னைப் பெற்றால்
என் செய்யோம்⋆ இனி என்ன குறைவினம்⋆
மைந்தனை மலராள்⋆ மணவாளனைத்⋆
துஞ்சும்போதும்⋆ விடாது தொடர் கண்டாய் (4)

கண்டாயே நெஞ்சே⋆ கருமங்கள் வாய்க்கின்று⋆ ஓர்
எண் தானும் இன்றியே⋆ வந்தியலுமாறு⋆
உண்டானை⋆ உலகேழும் ஓர் மூவடி
கொண்டானைக்⋆ கண்டு கொண்டனை நீயுமே (5)

நீயும் நானும்⋆ இந்நேர் நிற்கில்⋆ மேல் மற்றோர்
நோயும் சார்கொடான்⋆ நெஞ்சமே சொன்னேன்⋆
தாயும் தந்தையுமாய்⋆ இவ்வுலகினில்⋆
வாயும் ஈசன்⋆ மணிவண்ணன் எந்தையே (6)

எந்தையே என்றும்⋆ எம் பெருமான் என்றும்⋆
சிந்தையுள் வைப்பன்⋆ சொல்லுவன் பாவியேன்⋆
எந்தை எம் பெருமான் என்று⋆ வானவர்⋆
சிந்தையுள் வைத்துச்⋆ சொல்லும் செல்வனையே (7)

செல்வ நாரணன் என்ற⋆ சொல் கேட்டலும்⋆
மல்கும் கண் பனி⋆ நாடுவன் மாயமே⋆
அல்லும் நன் பகலும்⋆ இடை வீடின்றி⋆
நல்கி என்னை விடான்⋆ நம்பி நம்பியே (8)

நம்பியைத்⋆ தென் குறுங்குடி நின்ற⋆ அச்-
செம்பொனே திகழும்⋆ திரு மூர்த்தியை⋆
உம்பர் வானவர்⋆ ஆதியஞ்சோதியை⋆
எம் பிரானை⋆ என் சொல்லி மறப்பனோ (9)

மறப்பும் ஞானமும்⋆ நான் ஒன்றுணர்ந்திலன்⋆
மறக்கும் என்று⋆ செந்தாமரைக் கண்ணொடு⋆
மறப்பற என்னுள்ளே⋆ மன்னினான் தன்னை⋆
மறப்பனோ இனி⋆ யான் என் மணியையே (10)

‡மணியை வானவர் கண்ணனைத்⋆ தன்னதோர்
அணியை⋆ தென் குருகூர்ச் சடகோபன்⋆ சொல்
பணி செய் ஆயிரத்துள்⋆ இவை பத்துடன்⋆
தணிவிலர் கற்பரேல்⋆ கல்வி வாயுமே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ வாயும் திரை ‖

## பிரிவாற்றாமைக்கு வருந்தல்

‡வாயும் திரையுகளும்⋆ கானல் மட நாராய்⋆
ஆயும் அமர் உலகும்⋆ துஞ்சிலும் நீ துஞ்சாயால்⋆
நோயும் பயலைமையும்⋆ மீதூர எம்மேபோல்⋆
நீயும் திருமாலால்⋆ நெஞ்சம் கோள் பட்டாயே (1)

கோள் பட்ட சிந்தையாய்க்⋆ கூர்வாய அன்றிலே⋆
சேள் பட்ட யாமங்கள்⋆ சேராதிரங்குதியால்⋆
ஆள் பட்ட எம்மேபோல்⋆ நீயும் அரவணையான்⋆
தாள் பட்ட தண் துழாய்த்⋆ தாமம் காமுற்றாயே (2)

காமுற்ற கையறவோடு⋆ எல்லே இராப்பகல்⋆
நீ முற்றக் கண் துயிலாய்⋆ நெஞ்சுருகி ஏங்குதியால்⋆
தீ முற்றத் தென் இலங்கை⋆ ஊட்டினான் தாள் நயந்த⋆
யாம் உற்றதுற்றாயோ⋆ வாழி கனை கடலே (3)

கடலும் மலையும்⋆ விசும்பும் துழாய் எம்போல்⋆
சுடர் கொள் இராப்பகல்⋆ துஞ்சாயால் தண் வாடாய்⋆
அடல் கொள் படையாழி⋆ அம்மானைக் காண்பான் நீ⋆
உடலம் நோய் உற்றாயோ⋆ ஊழி தோறூழியே (4)

ஊழி தோறூழி⋆ உலகுக்கு நீர் கொண்டு⋆
தோழியரும் யாமும் போல்⋆ நீராய் நெகிழ்கின்ற⋆
வாழிய வானமே⋆ நீயும் மதுசூதன்⋆
பாழிமையில் பட்டவன் கண்⋆ பாசத்தால் நைவாயே (5)

நைவாய எம்மே போல்⋆ நாண்மதியே நீ இந்நாள்⋆
மை வான் இருள் அகற்றாய்⋆ மாழாந்து தேம்புதியால்⋆
ஐ வாய் அரவணை மேல்⋆ ஆழிப் பெருமானார்⋆
மெய் வாசகம் கேட்டு⋆ உன் மெய்ந் நீர்மை தோற்றாயே (6)

தோற்றோம் மட நெஞ்சம்⋆ எம் பெருமான் நாரணற்கு⋆ எம்
    ஆற்றாமை சொல்லி⋆ அழுவோமை நீ நடுவே⋆
வேற்றோர் வகையில்⋆ கொடிதாய் எனை ஊழி⋆
    மாற்றாண்மை நிற்றியோ⋆ வாழி கனை இருளே (7)

இருளின் திணி வண்ணம்⋆ மா நீர்க் கழியே போய்⋆
    மருளுற்றிராப்பகல்⋆ துஞ்சிலும் நீ துஞ்சாயால்⋆
உருளும் சகடம்⋆ உதைத்த பெருமானார்⋆
    அருளின் பெரு நசையால்⋆ ஆழாந்து நொந்தாயே (8)

நொந்தாராக் காதல் நோய்⋆ மெல் ஆவியுள் உலர்த்த⋆
    நந்தா விளக்கமே⋆ நீயும் அளியத்தாய்⋆
செந்தாமரைத் தடங்கண்⋆ செங்கனி வாய் எம் பெருமான்⋆
    அந்தாமத் தண் துழாய்⋆ ஆசையால் வேவாயே (9)

வேவாரா வேட்கை நோய்⋆ மெல் ஆவியுள் உலர்த்த⋆
    ஓவாதிராப்பகல்⋆ உன்பாலே வீழ்த்தொழிந்தாய்⋆
மாவாய் பிளந்து⋆ மருதிடை போய் மண் அளந்த⋆
    மூவா முதல்வா⋆ இனியெம்மைச் சோரேலே (10)

‡சோராத எப்பொருட்கும்⋆ ஆதியாம் சோதிக்கே⋆
    ஆராத காதல்⋆ குருகூர்ச் சடகோபன்⋆
ஓர் ஆயிரம் சொன்ன⋆ அவற்றுள் இவைப் பத்தும்⋆
    சோரார் விடார் கண்டீர்⋆ வைகுந்தம் திண்ணனவே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திண்ணன் வீடு ॥

திருமால் பரத்துவத்தை அவதாரத்திலே எடுத்துக் காட்டல்

‡திண்ணன் வீடு⋆ முதல் முழுதுமாய்⋆
எண்ணின் மீதியன்⋆ எம் பெருமாயன்⋆
மண்ணும் விண்ணும் எல்லாம்⋆ உடன் உண்ட⋆ நம்
கண்ணன் கண்ணல்லது⋆ இல்லையோர் கண்ணே (1)

ஏ பாவம் பரமே⋆ ஏழ் உலகும்⋆
ஈ பாவம் செய்து⋆ அருளால் அளிப்பாரார்⋆
மா பாவம் விட⋆ அரற்குப் பிச்சை பெய்⋆
கோபால கோளரி⋆ ஏறன் அன்றியே (2)

ஏறனைப் பூவனைப்⋆ பூமகள் தன்னை⋆
வேறின்றி விண் தொழத்⋆ தன்னுள் வைத்து⋆
மேல் தன்னை மீதிட⋆ நிமிர்ந்து மண் கொண்ட⋆
மால் தனில் மிக்கும் ஓர்⋆ தேவும் உளதே (3)

தேவும் எப்பொருளும் படைக்க⋆
பூவில் நான் முகனைப் படைத்த⋆
தேவன் எம் பெருமானுக்கல்லால்⋆
பூவும் பூசனையும் தகுமே (4)

தகும் சீர்த்⋆ தன்தனி முதலினுள்ளே⋆
மிகும் தேவும்⋆ எப்பொருளும் படைக்க⋆
தகும் கோலத்⋆ தாமரைக் கண்ணன் எம்மான்⋆
மிகும் சோதி⋆ மேல் அறிவார் யவரே (5)

யவரும் யாவையும்⋆ எல்லாப் பொருளும்⋆
கவர்வின்றித்⋆ தன்னுள் ஒடுங்க நின்ற⋆
பவர் கொள் ஞான⋆ வெள்ளச் சுடர் மூர்த்தி⋆
அவர் எம்மாழி⋆ அம் பள்ளியாரே (6)

பள்ளியாலிலை⋆ ஏழ் உலகும் கொள்ளும்⋆
வள்ளல்⋆ வல் வயிற்றுப் பெருமான்⋆
உள்ளுளார் அறிவார்⋆ அவன் தன்⋆
கள்ள மாய⋆ மனக்கருத்தே (7)

கருத்தில் தேவும்⋆ எல்லாப் பொருளும்⋆
வருத்தித்த⋆ மாயப் பிரானை அன்றி⋆ ஆரே
திருத்தித்⋆ திண் நிலை மூவுலகும்⋆ தம்முள்
இருத்திக்⋆ காக்கும் இயல்வினாரே (8)

காக்கும் இயல்வினன்⋆ கண்ண பெருமான்⋆
சேர்க்கை செய்து⋆ தன் உந்தியுள்ளே⋆
வாய்த்த திசைமுகன்⋆ இந்திரன் வானவர்⋆
ஆக்கினான்⋆ தெய்வ உலகுகளே (9)

கள்வா எம்மையும்⋆ ஏழ் உலகும்⋆ நின்
உள்ளே தோற்றிய⋆ இறைவ! என்று⋆
வெள்ளேறன் நான்முகன்⋆ இந்திரன் வானவர்⋆
புள்ளூர்தி⋆ கழல் பணிந்தேத்துவரே (10)

‡ஏத்த ஏழ் உலகும் கொண்ட⋆ கோலக்
கூத்தனை⋆ குருகூர்ச் சடகோபன் சொல்⋆
வாய்த்த ஆயிரத்துள்⋆ இவை பத்துடன்⋆
ஏத்த வல்லவர்க்கு⋆ இல்லையோர் ஊனமே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஊனில் வாழ் ॥

அடியார் குழாத்தைக் கூடும் ஆசையுற்று உரைத்தல்

‡ஊனில் வாழ் உயிரே⋆ நல்லை போ உன்னைப் பெற்று⋆
வான் உளார் பெருமான்⋆ மதுசூதன் என் அம்மான்⋆
தானும் யானும் எல்லாம்⋆ தன்னுள்ளே கலந்தொழிந்தோம்⋆
தேனும் பாலும் நெய்யும்⋆ கன்னலும் அமுதும் ஒத்தே (1)

ஒத்தார் மிக்காரை⋆ இலையாய மா மாயா⋆
ஒத்தாய்⋆ எப்பொருட்கும் உயிராய்⋆ என்னைப் பெற்ற
அத் தாயாய் தந்தையாய்⋆ அறியாதன அறிவித்த⋆
அத்தா நீ செய்தன⋆ அடியேன் அறியேனே (2)

அறியாக் காலத்துள்ளே⋆ அடிமைக்கண் அன்பு செய்வித்து⋆
அறியா மா மாயத்து⋆ அடியேனை வைத்தாயால்⋆
அறியாமைக் குறளாய்⋆ நிலம் மாவலி மூவடி என்று⋆
அறியாமை வஞ்சித்தாய்⋆ எனதாவியுள் கலந்தே (3)

எனதாவியுள் கலந்த⋆ பெரு நல்லுதவிக் கைம்மாறு⋆
எனதாவி தந்தொழிந்தேன்⋆ இனி மீள்வதென்பதுண்டே⋆
எனதாவி ஆவியும் நீ⋆ பொழில் ஏழும் உண்ட எந்தாய்⋆
எனதாவியார் யான் ஆர்⋆ தந்த நீ கொண்டாக்கினையே (4)

இனியார் ஞானங்களால்⋆ எடுக்கல் எழாத எந்தாய்⋆
கனிவார் வீட்டின்பமே⋆ என் கடல் படா அமுதே⋆
தனியேன் வாழ் முதலே⋆ பொழில் ஏழும் ஏனம் ஒன்றாய்⋆
நுனியார் கோட்டில் வைத்தாய்⋆ உன் பாதம் சேர்ந்தேனே (5)

சேர்ந்தார் தீவினைகட்கு⋆ அரு நஞ்சைத் திண் மதியை⋆
தீர்ந்தார் தம் மனத்துப்⋆ பிரியாதவர் உயிரை⋆
சோர்ந்தே போகல் கொடாச் சுடரை⋆ அரக்கியை மூக்கு
ஈர்ந்தாயை⋆ அடியேன் அடைந்தேன்⋆ முதல் முன்னமே (6)

முன்நல் யாழ் பயில் நூல்⋆ நரம்பின் முதிர் சுவையே⋆
பன்னலார் பயிலும்⋆ பரனே பவித்திரனே⋆
கன்னலே அமுதே⋆ கார் முகிலே என் கண்ணா⋆
நின்னலால் இலேன்காண்⋆ என்னை நீ குறிக்கொள்ளே (7)

குறிக்கொள் ஞானங்களால்⋆ எனை ஊழி செய் தவமும்⋆
கிறிக்கொண்டிப் பிறப்பே⋆ சில நாளில் எய்தினன் யான்⋆
உறிக்கொண்ட வெண்ணெய் பால்⋆ ஒளித்துண்ணும் அம்மான் பின்⋆
நெறிக்கொண்ட நெஞ்சனாய்⋆ பிறவித் துயர் கடிந்தே (8)

கடி வார் தண்ணந் துழாய்⋆ கண்ணன் விண்ணவர் பெருமான்⋆
படி வானம் இறந்த⋆ பரமன் பவித்திரன் சீர்⋆
செடியார் நோய்கள் கெடப்⋆ படிந்து குடைந்தாடி⋆
அடியேன் வாய்மடுத்துப்⋆ பருகிக் களித்தேனே (9)

களிப்பும் கவர்வும் அற்றுப்⋆ பிறப்புப் பிணி மூப்பிறப்பற்று⋆
ஒளிக் கொண்ட சோதியுமாய்⋆ உடன் கூடுவதென்று கொலோ⋆
துளிக்கின்ற வான் இந்நிலம்⋆ சுடர் ஆழி சங்கேந்தி⋆
அளிக்கின்ற மாயப் பிரான்⋆ அடியார்கள் குழாங்களையே (10)

‡குழாங்கொள் பேர் அரக்கன்⋆ குலம் வீய முனிந்தவனை⋆
குழாங்கொள் தென் குருகூர்ச்⋆ சடகோபன் தெரிந்துரைத்த⋆
குழாங்கொள் ஆயிரத்துள்⋆ இவை பத்தும் உடன் பாடி⋆
குழாங்களாய் அடியீர் உடன்⋆ கூடி நின்றாடுமினே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஆடியாடி ॥

தலிவியின் ஆற்றாமை கண்ட தாய் தலிவனை நோக்கிக் கூறல்

‡ஆடியாடி⋆ அகம் கரைந்து⋆ இசை
பாடிப் பாடிக்⋆ கண்ணீர் மல்கி⋆ எங்கும்
நாடி நாடி⋆ நரசிங்கா! என்று⋆
வாடி வாடும்⋆ இவ்வாள் நுதலே (1)

வாள் நுதல்⋆ இம்மடவரல்⋆ உம்மைக்
காணும் ஆசையுள்⋆ நைகின்றாள்⋆ விறல்
வாணன்⋆ ஆயிரம் தோள் துணித்தீர்⋆ உம்மைக்
காண⋆ நீர் இரக்கம் இலீரே (2)

இரக்க மனத்தோடு⋆ எரியணை⋆
அரக்கும் மெழுகும்⋆ ஒக்கும் இவள்⋆
இரக்கம் எழீர்⋆ இதற்கென் செய்கேன்⋆
அரக்கன் இலங்கை⋆ செற்றீருக்கே (3)

இலங்கை செற்றவனே என்னும்⋆ பின்னும்
வலங்கொள்⋆ புள்ளுயர்த்தாய் என்னும்⋆ உள்ளம்
மலங்க⋆ வெவ்வுயிர்க்கும்⋆ கண்ணீர் மிகக்
கலங்கிக்⋆ கைதொழும் நின்றிவளே (4)

இவள் இராப்பகல்⋆ வாய்வெரீ இ⋆ தன
குவளையொண்⋆ கண்ண நீர் கொண்டாள்⋆ வண்டு
திவளும்⋆ தண்ணந் துழாய் கொடீர்⋆ என
தவள வண்ணர்⋆ தகவுகளே (5)

தகவுடையவனே என்னும்⋆ பின்னும்
மிக விரும்பும்⋆ பிரான் என்னும்⋆ என-
தகவுயிர்க்கு⋆ அமுதே என்னும்⋆ உள்ளம்
உகவுருகி⋆ நின்றுள்ளுளே (6)

உள்ளுள் ஆவி⋆ உலர்ந்துலர்ந்து⋆ என்
வள்ளலே⋆ கண்ணனே என்னும்⋆ பின்னும்
வெள்ள நீர்க்⋆ கிடந்தாய் என்னும்⋆ என்
கள்வி தான்⋆ பட்ட வஞ்சனையே (7)

வஞ்சனே என்னும்⋆ கை தொழும்⋆ தன
நெஞ்சம் வேவ⋆ நெடிதுயிர்க்கும்⋆ விறல்
கஞ்சனை⋆ வஞ்சனை செய்தீர்⋆ உம்மைத்
தஞ்சம் என்று⋆ இவள் பட்டனவே (8)

பட்ட போது⋆ எழு போதறியாள்⋆ விரை
மட்டலர்⋆ தண் துழாய் என்னும்⋆ சுடர்
வட்ட வாய்⋆ நுதி நேமியீர்⋆ நும-
திட்டம் என்கொல்⋆ இவ்வேழைக்கே (9)

ஏழை பேதை⋆ இராப் பகல்⋆ தன
கேழில் ஒண்⋆ கண்ண நீர் கொண்டாள்⋆ கிளர்
வாழ்வை வேவ⋆ இலங்கை செற்றீர்⋆ இவள்
மாழை நோக்கொன்றும்⋆ வாட்டேன்மினே (10)

‡வாட்டமில் புகழ்⋆ வாமனனை⋆ இசை
கூட்டி⋆ வண் சடகோபன் சொல்⋆ அமை
பாட்டு⋆ ஓர் ஆயிரத்திப் பத்தால்⋆ அடி
சூட்டலாகும்⋆ அந்தாமமே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அந்தாமத்தன்பு ॥

இறைவன் ஆபரணாதிகளுடன் வந்து கலக்க ஆழ்வார் மகிழ்தல்

‡அந்தாமத்தன்பு செய்து⋆ என்னாவி சேர் அம்மானுக்கு⋆
அந்தாம வாழ் முடி சங்கு⋆ ஆழி நூல் ஆரம் உள⋆
செந் தாமரைத் தடம் கண்⋆ செங்கனி வாய் செங்கமலம்⋆
செந் தாமரை அடிகள்⋆ செம் பொன் திருவுடம்பே (1)

திருவுடம்பு வான் சுடர்⋆ செந் தாமரை கண் கை கமலம்⋆
திருவிடமே மார்வம்⋆ அயன் இடமே கொப்பூழ்⋆
ஒருவிடமும்⋆ எந்தை பெருமாற்கரனேயோ⋆
ஒருவிடம் ஒன்றின்றி⋆ என்னுள் கலந்தானுக்கே (2)

என்னுள் கலந்தவன்⋆ செங்கனி வாய் செங்கமலம்⋆
மின்னும் சுடர் மலைக்கு⋆ கண் பாதம் கை கமலம்⋆
மன்னு முழுவேழ் உலகும்⋆ வயிற்றினுள⋆
தன்னுள் கலவாதது⋆ எப்பொருளும் தான் இலையே (3)

எப்பொருளும் தானாய்⋆ மரகதக் குன்றம் ஒக்கும்⋆
அப்பொழுதைத் தாமரைப் பூக்⋆ கண் பாதம் கை கமலம்⋆
எப்பொழுதும் நாள் திங்கள்⋆ ஆண்டூழி ஊழிதொறும்⋆
அப்பொழுதைக்கப்பொழுது⋆ என் ஆராவமுதமே (4)

ஆராவமுதமாய்⋆ அல்லாவியுள் கலந்த⋆
காரார் கருமுகில் போல்⋆ என்னம்மான் கண்ணனுக்கு⋆
நேரா வாய் செம் பவளம்⋆ கண் பாதம் கை கமலம்⋆
பேர் ஆர நீள் முடி நாண்⋆ பின்னும் இழை பலவே (5)

பலபலவே ஆபரணம்⋆ பேரும் பலபலவே⋆
பலபலவே சோதி⋆ வடிவு பண்பெண்ணில⋆
பலபல கண்டுண்டு⋆ கேட்டுற்றுமோந்தின்பம்⋆
பலபலவே ஞானமும்⋆ பாம்பணை மேலாற்கேயோ (6)

பாம்பணைமேல் பாற்கடலுள்⋆ பள்ளி அமர்ந்ததுவும்⋆
காம்பணை தோள் பின்னைக்கா⋆ ஏறுடன் ஏழ் செற்றதுவும்⋆
தேம் பணைய சோலை⋆ மராமரம் ஏழ் எய்ததுவும்⋆
பூம் பிணைய தண் துழாய்⋆ பொன் முடியும் போர் ஏறே (7)

பொன் முடியம் போர் ஏற்றை⋆ எம்மானை நால் தடம் தோள்⋆
தன் முடிவொன்றில்லாத⋆ தன் துழாய் மாலையனை⋆
என் முடிவு காணாதே⋆ என்னுள் கலந்தானை⋆
சொல் முடிவு காணேன் நான்⋆ சொல்லுவதென் சொல்லீரே (8)

சொல்லீர் என்னம்மானை⋆ என்னாவி ஆவிதனை⋆
எல்லையில் சீர்⋆ என் கருமாணிக்கச் சுடரை⋆
நல்லவமுதம்⋆ பெறற்கரிய வீடுமாய்⋆
அல்லி மலர் விரையொத்து⋆ ஆண் அல்லன் பெண் அல்லனே (9)

ஆண் அல்லன் பெண் அல்லன்⋆ அல்லா அலியும் அல்லன்⋆
காணலும் ஆகான்⋆ உளன் அல்லன் இல்லை அல்லன்⋆
பேணுங்கால் பேணும்⋆ உருவாகும் அல்லனுமாம்⋆
கோணை பெரிதுடைத்து⋆ எம் பெம்மானைக் கூறுதலே (10)

‡கூறுதல் ஒன்றாராக்⋆ குடக் கூத்த அம்மானைக்⋆
கூறுதலே மேவிக்⋆ குருகூர்ச் சடகோபன்⋆
கூறின அந்தாதி⋆ ஓர் ஆயிரத்துள் இப்பத்தும்⋆
கூறுதல் வல்லார் உளரேல்⋆ கூடுவர் வைகுந்தமே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வைகுந்தா ॥

## ஆழ்வார் இறைவனைச் சிக்கெனப் பிடித்தல்

‡வைகுந்தா மணிவண்ணனே⋆ என் பொல்லாத்
திருக்குறளா என்னுள் மன்னி⋆
வைகும் வைகல் தோறும்⋆
அமுதாய வான் ஏறே⋆
செய் குந்தா அரும் தீமை⋆ உன் அடியார்க்குத்
தீர்த்து⋆ அசுரர்க்குத் தீமைகள்
செய் குந்தா⋆ உன்னை நான்
பிடித்தேன் கொள் சிக்கெனவே (1)

சிக்கெனச் சிறிதோர் இடமும்⋆
புறப்படாத் தன்னுள்ளே⋆ உலகுகள்
ஒக்கவே விழுங்கிப்⋆
புகுந்தான் புகுந்ததற்பின்⋆
மிக்க ஞான வெள்ளச் சுடர் விளக்காய்த்⋆
துளக்கற்றமுதமாய்⋆ எங்கும்
பக்கம் நோக்கறியான்⋆ என்
பைந் தாமரைக் கண்ணனே (2)

தாமரைக் கண்ணனை⋆ விண்ணோர்
பரவும் தலைமகனை⋆ துழாய் விரைப்
பூ மருவு கண்ணி⋆ எம்
பிரானைப் பொன்மலையை⋆
நா மருவி நன்கேத்தி⋆ உள்ளி வணங்கி
நாம் மகிழ்ந்தாட⋆ நாவலர்
பா மருவி நிற்கத் தந்த⋆
பான்மையேய் வள்ளலே (3)

வள்ளலே மதுசூதனா⋆ என் மரதக
மலையே⋆ உனை நினைந்-
தெள்கல் தந்த எந்தாய்⋆
உன்னை எங்ஙனம் விடுகேன்⋆
வெள்ளமே புரை நின் புகழ் குடைந்தாடிப்
பாடி⋆ களித்துகந்துகந்து⋆
உள்ள நோய்கள் எல்லாம்
துரந்து⋆ உய்ந்து போந்திருந்தே (4)

உய்ந்து போந்தென் உலப்பிலாத⋆
வெந்தீ வினைகளை நாசம் செய்து⋆ உன
தந்தம் இல் அடிமை⋆
அடைந்தேன் விடுவேனோ⋆
ஐந்து பைந்தலை ஆட அரவணை மேவிப்⋆
பாற்கடல் யோக நித்திரை⋆
சிந்தை செய்த எந்தாய்⋆
உன்னைச் சிந்தை செய்து செய்தே (5)

உன்னைச் சிந்தை செய்து செய்து⋆ உன்
நெடு மா மொழி இசை பாடி ஆடி⋆ என்
முன்னைத் தீவினைகள்⋆
முழு வேர் அரிந்தனன் யான்⋆
உன்னைச் சிந்தையினால் இகழ்ந்த⋆
இரணியன் அகல் மார்வம் கீண்ட⋆ என்
முன்னைக் கோளரியே⋆
முடியாததென் எனக்கே (6)

முடியாததென் எனக்கேல் இனி⋆ முழுவேழ்
உலகும் உண்டான்⋆ உகந்து வந்து
அடியேன் உள் புகுந்தான்⋆
அகல்வானும் அல்லன் இனி⋆
செடியார் நோய்கள் எல்லாம்
துரந்து⋆ எமர் கீழ் மேல் எழு பிறப்பும்⋆

விடியா வெந்நரகத்தென்றும்⋆
    சேர்தல் மாறினரே (7)

மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து⋆ அடியை
    அடைந்துள்ளம் தேறி⋆
ஈறில் இன்பத்
    திரு வெள்ளம்⋆ யான் மூழ்கினன்⋆
பாறிப் பாறி அசுரர் தம்⋆ பல் குழாங்கள்
    நீற் எழ⋆ பாய் பறவையொன்று
ஏறி வீற்றிருந்தாய்⋆ உன்னை
    என்னுள் நீக்கேல் எந்தாய் (8)

எந்தாய்! தண் திருவேங்கடத்துள்
    நின்றாய்⋆ இலங்கை செற்றாய்⋆ மராமரம்
பைந்தாள் ஏழ் உருவ⋆ ஒரு வாளி
    கோத்த வில்லா⋆
கொந்தார் தண்ணந் துழாயினாய் அமுதே⋆
    உன்னை என்னுள்ளே குழைத்த எம்
மைந்தா⋆ வான் ஏறே⋆
    இனி எங்குப் போகின்றதே (9)

போகின்ற காலங்கள் போய காலங்கள்⋆
    போகு காலங்கள்⋆ தாய் தந்தை உயிர்
ஆகின்றாய்⋆ உன்னை நான்
    அடைந்தேன் விடுவேனோ
பாகின்ற தொல் புகழ் மூவுலகுக்கும்⋆
    நாதனே! பரமா⋆ தண் வேங்கடம்
மேகின்றாய்⋆ தண் துழாய்
    விரை நாறு கண்ணியனே (10)

‡கண்ணித் தண்ணந் துழாய் முடிக்⋆
    கமலத் தடம் பெருங்
கண்ணனை⋆ புகழ் நண்ணித் தென் குருகூர்ச்⋆
    சடகோபன் மாறன் சொன்ன⋆

எண்ணில் சோர்வில் அந்தாதி⋆ ஆயிரத்துள்
    இவையும் ஓர் பத்திசையொடும்⋆
பண்ணில் பாட வல்லார் அவர்⋆
    கேசவன் தமரே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கேசவன் தமர் ॥

## பன்னிருநாமப் பாட்டு

‡கேசவன் தமர்⋆ கீழ் மேல் எமர் ஏழ் எழு பிறப்பும்⋆
மா சதிர் இது பெற்று⋆ நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா⋆
ஈசன் என் கருமாணிக்கம் என் செங்கோலக் கண்ணன்⋆ விண்ணோர்
நாயகன்⋆ எம் பிரான் எம்மான்⋆ நாராயணனாலே (1)

நாரணன் முழுவேழ் உலகுக்கும்⋆ நாதன் வேத மயன்⋆
காரணம் கிரிசை கருமம் இவை⋆ முதல்வன் எந்தை⋆
சீர் அணங்கமரர் பிறர் பலரும்⋆ தொழுதேத்த நின்று⋆
வாரணத்தை மருப்பொசித்த பிரான்⋆ என் மாதவனே (2)

மாதவன் என்றதே கொண்டு⋆ என்னை இனி இப்பால் பட்டது⋆
யாதவங்களும் சேர்கொடேன் என்று⋆ என்னுள் புகுந்திருந்து⋆
தீதவம் கெடுக்கும் அமுதம்⋆ செந் தாமரைக் கண் குன்றம்⋆
கோதவமில் என் கன்னல் கட்டி⋆ எம்மான் என் கோவிந்தனே (3)

கோவிந்தன் குடக் கூத்தன்⋆ கோவலன் என்றென்றே குனித்து⋆
தேவும் தன்னையும்⋆ பாடி ஆடத் திருத்தி⋆ என்னைக் கொண்டென்
பாவம் தன்னையும்⋆ பாறக் கைத்தெமர் ஏழ் எழு பிறப்பும்⋆
மேவும் தன்மையம் ஆக்கினான்⋆ வல்லன் எம் பிரான் விட்டுவே (4)

விட்டிலங்கு செஞ்சோதித்⋆ தாமரை பாதம் கைகள் கண்கள்⋆
விட்டிலங்கு கருஞ்சுடர்⋆ மலையே திருவுடம்பு⋆
விட்டிலங்கு மதியம் சீர்⋆ சங்கு சக்கரம் பரிதி⋆
விட்டிலங்கு முடியம்மான்⋆ மதுசூதனன் தனக்கே (5)

மதுசூதனை அன்றி மற்றிலேன் என்று⋆ எத்தாலும் கருமம் இன்றி⋆
துதி சூழ்ந்த பாடல்கள் பாடி ஆட⋆ நின்றூழி ஊழிதொறும்⋆
எதிர் சூழல் புக்கெனைத்தோர் பிறப்பும்⋆ எனக்கே அருள்கள் செய்ய⋆
விதி சூழ்ந்ததால் எனக்கேல் அம்மான்⋆ திரிவிக்கிரமனையே (6)

திரிவிக்கிரமன் செந் தாமரைக் கண்⋆
    எம்மான் என் செங்கனி வாய்⋆
உருவில் பொலிந்த வெள்ளைப் பளிங்கு⋆
    நிறத்தனன் என்றென்று⋆ உள்ளிப்
பரவிப் பணிந்து⋆ பல்லூழி
    ஊழி நின் பாத பங்கயமே⋆
மருவித் தொழும் மனமே தந்தாய்⋆
    வல்லைகாண் என் வாமனனே (7)

வாமனன் என் மரதக வண்ணண்⋆ தாமரைக் கண்ணினன்
    காமனைப் பயந்தாய்⋆ என்றென்றுன் கழல் பாடியே பணிந்து⋆
தூ மனத்தனனாய்ப்⋆ பிறவித் துழதி நீங்க⋆ என்னைத்
    தீ மனம் கெடுத்தாய்⋆ உனக்கென் செய்கேன் என் சிரீதரனே (8)

சிரீஇதரன் செய்ய தாமரைக் கண்ணன்⋆ என்றென்றிராப் பகல் வாய்
    வெரி ஈ⋆ அலமந்து கண்கள் நீர் மல்கி⋆ வெவ்வுயிர்த்துயிர்த்து⋆
மரி ஈய தீவினை மாள இன்பம் வளர⋆ வைகல் வைகல்
    இரி ஈ⋆ உன்னை என்னுள் வைத்தனை⋆ என் இருடீகேசனே (9)

இருடீகேசன் எம் பிரான்⋆ இலங்கை அரக்கர் குலம்⋆
    முருடு தீர்த்த பிரான் எம்மான்⋆ அமரர் பெம்மான் என்றென்று⋆
தெருடியாகில் நெஞ்சே வணங்கு⋆ திண்ணம் அறி அறிந்து⋆
    மருடியேலும் விடேல் கண்டாய்⋆ நம்பி பற்பநாபனையே (10)

பற்பநாபன் உயர்வற உயரும்⋆ பெரும் திறலோன்⋆
    எற்பரன் என்னை ஆக்கிக் கொண்டு⋆ எனக்கே தன்னைத் தந்த
கற்பகம்⋆ என்னமுதம் கார் முகில் போலும்⋆ வேங்கட நல்
    வெற்பன்⋆ விசும்போர் பிரான்⋆ எந்தை தாமோதரனே (11)

தாமோதரனைத் தனி முதல்வனை⋆ ஞாலம் உண்டவனை⋆
    ஆமோ தரம் அறிய⋆ ஒருவர்க்கென்றெ தொழும் அவர்கள்⋆
தாமோதரன் உருவாகிய⋆ சிவற்கும் திசைமுகற்கும்⋆
    ஆமோ தரம் அறிய⋆ எம்மானை என் ஆழி வண்ணனையே (12)

‡வண்ண மா மணிச் சோதியை⋆
    அமரர் தலைமகனை⋆
கண்ணனை நெடுமாலைத்⋆
    தென் குருகூர்ச் சடகோபன்⋆
பண்ணிய தமிழ் மாலை⋆
    ஆயிரத்துள் இவை பன்னிரண்டும்⋆
பண்ணில் பன்னிரு நாமப் பாட்டு⋆
    அண்ணல் தாள் அணைவிக்குமே (13)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அணைவது ॥

எம்பெருமானது வீடளிக்கும் தன்மை

‡அணைவதரவணைமேல்⋆ பூம்பாவை ஆகம்
புணர்வது⋆ இருவரவர் முதலும் தானே⋆
இணைவனாம்⋆ எப் பொருட்கும் வீடு முதலாம்⋆
புணைவன்⋆ பிறவிக்கடல் நீந்துவார்க்கே (1)

நீந்தும் துயர்ப் பிறவி⋆ உட்பட மற்றெவ்வெவையும்⋆
நீந்தும் துயர் இல்லா⋆ வீடு முதலாம்⋆
பூந் தண் புனல் பொய்கை⋆ யானை இடர் கடிந்த⋆
பூந் தண் துழாய்⋆ என் தனி நாயகன் புணர்ப்பே (2)

புணர்க்கும் அயனாம்⋆ அழிக்கும் அரனாம்⋆
புணர்த்த தன்னுந்தியோடு⋆ ஆகத்து மன்னி⋆
புணர்த்த திருவாகித்⋆ தன் மார்வில் தான் சேர்⋆
புணர்ப்பன் பெரும் புணர்ப்பு⋆ எங்கும் புலனே (3)

புலன் ஐந்துமேயும்⋆ பொறி ஐந்தும் நீக்கி⋆
நலம் அந்தம் இல்லதோர்⋆ நாடு புகுவீர்⋆
அலமந்து வீய⋆ அசுரரைச் செற்றான்⋆
பல முந்து சீரில்⋆ படிமின் ஓவாதே (4)

ஓவாத் துயர்ப் பிறவி⋆ உட்பட மற்றெவ்வெவையும்⋆
மூவாத் தனி முதலாய்⋆ மூவுலகும் காவலோன்⋆
மாவாகி ஆமையாய்⋆ மீனாகி மானிடமாம்⋆
தேவாதி தேவ பெருமான்⋆ என் தீர்த்தனே (5)

தீர்த்தன் உலகளந்த⋆ சேவடிமேல் பூந்தாமம்⋆
சேர்த்தி அவையே⋆ சிவன் முடிமேல் தான் கண்டு⋆
பார்த்தன் தெளிந்தொழிந்த⋆ பைந் துழாயான் பெருமை⋆
பேர்த்தும் ஒருவரால்⋆ பேசக் கிடந்ததே (6)

கிடந்திருந்து நின்றளந்து⋆ கேழலாய்க் கீழ் புக்-
கிடந்திடும்⋆ தன்னுள் கரக்கும் உமிழும்⋆
தடம் பெருந் தோள் ஆரத் தழுவும்⋆ பார் என்னும்
மடந்தையை⋆ மால் செய்கின்ற⋆ மாலார் காண்பாரே (7)

காண்பாரார் எம் ஈசன்⋆ கண்ணனை என் காணுமாறு⋆
ஊண் பேசில் எல்லா⋆ உலகும் ஓர் துற்றாற்றா⋆
சேண் பால வீடோ⋆ உயிரோ மற்றெப் பொருட்கும்⋆
ஏண் பாலும் சோரான்⋆ பரந்துளனாம் எங்குமே (8)

எங்கும் உளன் கண்ணன் என்ற⋆ மகனைக் காய்ந்து⋆
இங்கில்லையால் என்று⋆ இரணியன் தூண் புடைப்ப⋆
அங்கப்பொழுதே⋆ அவன் வீயத் தோன்றிய⋆ என்
சிங்கப் பிரான் பெருமை⋆ ஆராயும் சீர்மைத்தே (9)

சீர்மை கொள் வீடு⋆ சுவர்க்கம் நரகீறா⋆
ஈர்மை கொள் தேவர்⋆ நடுவா மற்றெப் பொருட்கும்⋆
வேர் முதலாய் முத்தாய்ப்⋆ பரந்து தனி நின்ற⋆
கார் முகில் போல் வண்ணன்⋆ என் கண்ணனை நான்
கண்டேனே (10)

‡கண் தலங்கள் செய்ய⋆ கரு மேனி அம்மானை⋆
வண்டலம்பும் சோலை⋆ வழுதி வள நாடன்⋆
பண் தலையில் சொன்ன தமிழ்⋆ ஆயிரத்திப்பத்தும் வல்லார்⋆
விண் தலையில் வீற்றிருந்தாள்வர்⋆ எம்மா வீடே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ எம்மாவீடு ॥

வேண்டிப் பெறுதல் ஈதெனல்

‡எம்மா வீட்டுத்⋆ திறமும் செப்பம்⋆ நின்
    செம் மா பாத பற்புத்⋆ தலை சேர்த்து⋆ ஒல்லை
கைம்மா துன்பம்⋆ கடிந்த பிரானே⋆
    அம்மா அடியேன்⋆ வேண்டுவதீதே (1)

இதே யான் உன்னைக்⋆ கொள்வதெஞ்ஞான்றும்⋆ என்
    மை தோய் சோதி⋆ மணிவண்ண எந்தாய்⋆
எய்தா நின் கழல்⋆ யான் எய்த⋆ ஞானக்
    கை தா⋆ காலக் கழிவு செய்யேலே (2)

செய்யேல் தீவினை என்று⋆ அருள் செய்யும்⋆ என்
    கையார்ச் சக்கரக்⋆ கண்ண பிரானே⋆
ஐயார் கண்டம் அடைக்கிலும்⋆ நின் கழல்
    எய்யாதேத்த⋆ அருள் செய் எனக்கே (3)

எனக்கே ஆட்செய்⋆ எக் காலத்தும் என்று⋆ என்
    மனக்கே வந்து⋆ இடைவீடின்றி மன்னி⋆
தனக்கே ஆக⋆ எனைக் கொள்ளும் ஈதே⋆
    எனக்கே கண்ணனை⋆ யான் கொள் சிறப்பே (4)

சிறப்பில் வீடு⋆ சுவர்க்கம் நரகம்⋆
    இறப்பில் எய்துக⋆ எய்தற்க⋆ யானும்
பிறப்பில்⋆ பல் பிறவிப் பெருமானை⋆
    மறப்பொன்றின்றி⋆ என்றும் மகிழ்வேனே (5)

மகிழ் கொள் தெய்வம்⋆ உலோகம் அலோகம்⋆
    மகிழ் கொள் சோதி⋆ மலர்ந்த அம்மானே!⋆
மகிழ் கொள் சிந்தை⋆ சொல் செய்கை கொண்டு⋆ என்றும்
    மகிழ்வுற்று⋆ உன்னை வணங்க வாராயே (6)

வாராய்⋆ உன் திருப் பாத மலர்க்கீழ்ப்⋆
பேராதே யான் வந்து⋆ அடையும் படி
தாராதாய்⋆ உன்னை என்னுள்⋆ வைப்பில் என்றும்
ஆராதாய்⋆ எனக்கென்றும் எக்காலே (7)

எக்காலத்தெந்தையாய்⋆ என்னுள் மன்னில்⋆ மற்று
எக்காலத்திலும்⋆ யாதொன்றும் வேண்டேன்⋆
மிக்கார் வேத⋆ விமலர் விழுங்கும்⋆ என்
அக்காரக் கனியே⋆ உன்னை யானே (8)

யானே என்னை⋆ அறியகிலாதே⋆
யானே என் தனதே⋆ என்றிருந்தேன்⋆
யானே நீ⋆ என்னுடைமையும் நீயே⋆
வானே ஏத்தும்⋆ எம் வானவர் ஏறே (9)

ஏறேல் ஏழும்⋆ வென்றேர் கொள் இலங்கையை⋆
நீறே செய்த⋆ நெடுஞ்சுடர்ச் சோதி⋆
தேறேல் என்னை⋆ உன் பொன்னடிச் சேர்த்து⋆ ஒல்லை
வேறே போக⋆ எஞ்ஞான்றும் விடலே (10)

‡விடலில் சக்கரத்து⋆ அண்ணலை மேவல்⋆
விடலில் வண் குருகூர்ச்⋆ சடகோபன் சொல்⋆
கெடலில் ஆயிரத்துள்⋆ இவை பத்தும்⋆
கெடலில் வீடு செய்யும்⋆ கிளர்வார்க்கே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கிளரொளி ॥

திருமாலிருஞ்சோலை மலையை வணங்குக எனல்

‡கிளர் ஒளி இளமை⋆ கெடுவதன் முன்னம்⋆
வளர் ஒளி மாயோன்⋆ மருவிய கோயில்⋆
வளர் இளம் பொழில் சூழ்⋆ மாலிருஞ்சோலை⋆
தளர் விலராகில்⋆ சார்வது சதிரே (1)

சதிர் இள மடவார்⋆ தாழ்ச்சியை மதியாது⋆
அதிர் குரல் சங்கத்து⋆ அழகர் தம் கோயில்⋆
மதி தவழ் குடுமி⋆ மாலிருஞ்சோலை⋆
பதியதுவேத்தி⋆ எழுவது பயனே (2)

பயன் அல்ல செய்து⋆ பயன் இல்லை நெஞ்சே!⋆
புயல் மழை வண்ணர்⋆ புரிந்துறை கோயில்⋆
மயல் மிகு பொழில் சூழ்⋆ மாலிருஞ்சோலை⋆
அயன்மலை அடைவது⋆ அது கருமமே (3)

கரும வன் பாசம்⋆ கழித்துழன்றுய்யவே⋆
பெருமலை எடுத்தான்⋆ பீடுறை கோயில்⋆
வரு மழை தவழும்⋆ மாலிருஞ்சோலை⋆
திருமலை அதுவே⋆ அடைவது திறமே (4)

திறம் உடை வலத்தால்⋆ தீவினை பெருக்காது⋆
அறம் உயல் ஆழிப்⋆ படையவன் கோயில்⋆
மறுவில் வண் சுனை சூழ்⋆ மாலிருஞ்சோலை⋆
புறமலை சாரப்⋆ போவது கிறியே (5)

கிறியென நினைமின்⋆ கீழ்மை செய்யாதே⋆
உறியமர் வெண்ணெய்⋆ உண்டவன் கோயில்⋆
மறியொடு பிணை சேர்⋆ மாலிருஞ்சோலை⋆
நெறி பட அதுவே⋆ நினைவது நலமே (6)

நலம் என நினைமின்⋆ நரகழுந்தாதே⋆
    நில முனம் இடந்தான்⋆ நீடுறை கோயில்⋆
மலம் அறுமதி சேர்⋆ மாலிருஞ்சோலை⋆
    வல முறை எய்தி⋆ மருவுதல் வலமே (7)

வலம் செய்து வைகல்⋆ வலம் கழியாதே⋆
    வலம் செய்யும் ஆய⋆ மாயவன் கோயில்⋆
வலம் செய்யும் வானோர்⋆ மாலிருஞ்சோலை⋆
    வலம் செய்து நாளும்⋆ மருவுதல் வழக்கே (8)

வழக்கென நினைமின்⋆ வல்வினை மூழ்காது⋆
    அழக்கொடி அட்டான்⋆ அமர் பெருங்கோயில்⋆
மழக் களிற்றினம் சேர்⋆ மாலிருஞ்சோலை⋆
    தொழுக் கருதுவதே⋆ துணிவது சூதே (9)

சூதென்று களவும்⋆ சூதும் செய்யாதே⋆
    வேதமுன் விரித்தான்⋆ விரும்பிய கோயில்⋆
மாதுறு மயில் சேர்⋆ மாலிருஞ்சோலை⋆
    போதவிழ் மலையே⋆ புகுவது பொருளே (10)

‡பொருள் என்றிவ்வுலகம்⋆ படைத்தவன் புகழ்மேல்⋆
    மருளில் வண் குருகூர்⋆ வண் சடகோபன்⋆
தெருள் கொள்ளச் சொன்ன⋆ ஓர் ஆயிரத்துள் இப்பத்து⋆
    அருளுடையவன் தாள்⋆ அணைவிக்கும் முடித்தே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ முடிச்சோதி ॥

## அழகரது வடிவில் ஈடுபடல்

‡முடிச் சோதியாய்⋆ உனது முகச் சோதி மலர்ந்ததுவோ⋆
அடிச் சோதி நீ நின்ற⋆ தாமரையாய் அலர்ந்ததுவோ⋆
படிச் சோதி ஆடையொடும்⋆ பல் கலனாய்⋆ நின் பைம் பொன்
கடிச் சோதி கலந்ததுவோ⋆ திருமாலே! கட்டுரையே (1)

கட்டுரைக்கில் தாமரை⋆ நின் கண் பாதம் கையொவ்வா⋆
சுட்டுரைத்த நன் பொன்⋆ உள் திருமேனி ஒளி ஒவ்வாது⋆
ஒட்டுரைத்திவ்வுலகுன்னை⋆ புகழ்வெல்லாம் பெரும்பாலும்⋆
பட்டுரையாய்ப் புற்கென்றே⋆ காட்டுமால் பரஞ்சோதீ! (2)

பரஞ்சோதி! நீ பரமாய்⋆ நின்னிகழ்ந்து பின்⋆ மற்றோர்
பரஞ்சோதி இன்மையில்⋆ படி ஓவி நிகழ்கின்ற⋆
பரஞ்சோதி நின்னுள்ளே⋆ படர் உலகம் படைத்த⋆ எம்
பரஞ்சோதி கோவிந்தா!⋆ பண்புரைக்க மாட்டேனே (3)

மாட்டாதே ஆகிலும்⋆ இம்மலர் தலை மா ஞாலம்⋆ நின்
மாட்டாய மலர் புரையும்⋆ திருவுருவும் மனம் வைக்க⋆
மாட்டாத பல சமய⋆ மதி கொடுத்தாய் மலர்த்துழாய்⋆
மாட்டே நீ மனம் வைத்தாய்⋆ மா ஞாலம் வருந்தாதே (4)

வருந்தாத அரும் தவத்த⋆ மலர் கதிரின் சுடர் உடம்பாய்⋆
வருந்தாத ஞானமாய்⋆ வரம்பின்றி முழுதியன்றாய்⋆
வருங்காலம் நிகழ் காலம்⋆ கழி காலமாய்⋆ உலகை
ஒருங்காக அளிப்பாய் சீர்⋆ எங்குலக்க ஓதுவனே (5)

ஓதுவார் ஓத்தெல்லாம்⋆ எவ்வுலகத்தெவ்வெவையும்⋆
சாதுவாய் நின் புகழின்⋆ தகை அல்லால் பிறிதில்லை⋆
போது வாழ் புனம் துழாய்⋆ முடியினாய்⋆ பூவின்மேல்
மாது வாழ் மார்பினாய்!⋆ என் சொல்லி யான் வாழ்த்துவனே (6)

வாழ்த்துவார் பலராக⋆ நின்னுள்ளே நான்முகனை⋆
    மூழ்த்த நீர் உலகெல்லாம்⋆ படையென்று முதல் படைத்தாய்⋆
கேழ்த்த சீரான் முதலாக்⋆ கிளர் தெய்வமாய்க் கிளர்ந்து⋆
    சூழ்த்தமரர் துதித்தால்⋆ உன் தொல் புகழ் மாசூணாதே (7)

மாசூணாச் சுடர் உடம்பாய்⋆ மலராது குவியாது⋆
    மாசூணா ஞானமாய்⋆ முழுதுமாய் முழுதியன்றாய்⋆
மாசூணா வான் கோலத்து⋆ அமரர் கோன் வழிபட்டால்⋆
    மாசூணா உன் பாத⋆ மலர் சோதி மழுங்காதே (8)

மழுங்காத வைந் நுதிய⋆ சக்கரநல் வலத்தையாய்⋆
    தொழுங்காதல் களிறளிப்பான்⋆ புள்ளூர்ந்து தோன்றினையே⋆
மழுங்காத ஞானமே⋆ படையாக மலர் உலகில்⋆
    தொழும்பாயார்க்களித்தால்⋆ உன் சுடர்ச் சோதி மறையாதே (9)

மறையாய நால் வேதத்துள் நின்ற⋆ மலர் சுடரே⋆
    முறையால் இவ்வுலகெல்லாம்⋆ படைத்திடந்துண்-டுமிழ்ந்தளந்தாய்⋆
பிறையேறு சடையானும்⋆ நான்முகனும் இந்திரனும்⋆
    இறையாதல் அறிந்தேத்த⋆ வீற்றிருத்தல் இது வியப்பே (10)

‡வியப்பாய வியப்பில்லா⋆ மெய்ஞ் ஞான வேதியனை⋆
    சயப் புகழார் பலர் வாழும்⋆ தடம் குருகூர் சடகோபன்⋆
துயக்கின்றித் தொழுதுரைத்த⋆ ஆயிரத்துள் இப்பத்தும்⋆
    உயக்கொண்டு பிறப்பறுக்கும்⋆ ஒலி முந்நீர் ஞாலத்தே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ முந்நீர் ஞாலம் ॥

*அழகரை முற்றும் அனுபவிக்க ஏலாது ஆழ்வார் கலங்க*

‡முந்நீர் ஞாலம் படைத்த⋆ எம் முகில் வண்ணனே!⋆
அந்நாள் நீ தந்த⋆ ஆக்கையின் வழி உழல்வேன்⋆
வெந்நாள் நோய் வீய⋆ வினைகளை வேர் அறப்பாய்ந்து⋆
எந்நாள் யான் உன்னை⋆ இனி வந்து கூடுவனே (1)

வன் மா வையம் அளந்த⋆ எம் வாமனா⋆ நின்
பன் மா மாயப்⋆ பல் பிறவியில் படிகின்ற யான்⋆
தொல் மா வல்வினைத்⋆ தொடர்களை முதலரிந்து⋆
நின் மா தாள் சேர்ந்து⋆ நிற்பதெஞ்ஞான்று கொலோ (2)

கொல்லா மாக்கோல்⋆ கொலை செய்து பாரதப் போர்⋆
எல்லாச் சேனையும்⋆ இரு நிலத்தவித்த எந்தாய்⋆
பொல்லா வாக்கையின்⋆ புணர்வினை அறுக்கல் அறா⋆
சொல்லாய் யான் உன்னைச்⋆ சார்வதோர் சூழ்ச்சியே (3)

சூழ்ச்சி ஞானச்⋆ சுடரொளி யாகி⋆ என்றும்
ஏழ்ச்சிக் கேடின்றி⋆ எங்கணும் நிறைந்த எந்தாய்⋆
தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்ந்து⋆ நின் தாள் இணைக்கீழ்
வாழ்ச்சி⋆ யான் சேரும்⋆ வகை அருளாய் வந்தே (4)

வந்தாய் போலே⋆ வந்தும் என் மனத்தினை நீ⋆
சிந்தாமல் செய்யாய்⋆ இதுவே இதுவாகில்⋆
கொந்தார் காயாவின்⋆ கொழு மலர்த் திரு நிறத்த
எந்தாய்⋆ யான் உன்னை⋆ எங்கு வந்தணுகிற்பனே (5)

கிற்பன் கில்லேன்⋆ என்றிலன் முன நாளால்⋆
அற்ப சாரங்கள் அவை⋆ சுவைத் தகன்றொழிந்தேன்⋆
பற்பல் ஆயிரம்⋆ உயிர் செய்த பரமா⋆ நின்
நற் பொன் சோதித்தாள்⋆ நணுகுவதெஞ் ஞான்றே (6)

எஞ்ஞான்று நாம் இருந்திருந்து⋆ இரங்கி நெஞ்சே!⋆
மெய்ஞ் ஞானம் இன்றி⋆ வினையியல் பிறப்பழுந்தி⋆
எஞ்ஞான்றும் எங்கும்⋆ ஒழிவற நிறைந்து நின்ற⋆
மெய்ஞ் ஞானச் சோதிக்⋆ கண்ணனை மேவுதுமே (7)

மேவு துன்ப வினைகளை⋆ விடுத்துமிலேன்⋆
ஓவுதல் இன்றி⋆ உன் கழல் வணங்கிற்றிலேன்⋆
பாவு தொல் சீர்க் கண்ணா!⋆ என் பரஞ்சுடரே⋆
கூவுகின்றேன் காண்பான்⋆ எங்கெய்தக் கூவுவனே (8)

கூவிக் கூவிக்⋆ கொடுவினைத் தூற்றுள் நின்று⋆
பாவியேன் பல காலம்⋆ வழி திகைத்தலமர்கின்றேன்⋆
மேவியன்றா நிரை காத்தவன்⋆ உலகம் எல்லாம்⋆
தாவிய அம்மானை⋆ எங்கினித் தலைப்பெய்வனே (9)

தலைப்பெய் காலம்⋆ நமன் தமர் பாசம் விட்டால்⋆
அலைப்பூண் உண்ணும்⋆ அவ்வல்லல் எல்லாம் அகல⋆
கலைப்பல் ஞானத்து⋆ என் கண்ணனைக் கண்டு கொண்டு⋆
நிலைப்பெற்றென் நெஞ்சம் பெற்றது⋆ நீடுயிரே (10)

‡உயிர்கள் எல்லா⋆ உலகமும் உடையவனை⋆
குயில் கொள் சோலைத்⋆ தென் குருகூர்ச் சடகோபன்⋆
செயிரில் சொல் இசை மாலை⋆ ஆயிரத்துள் இப்பத்தும்⋆
உயிரின்மேல் ஆக்கை⋆ ஊனிடை ஒழிவிக்குமே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஒழிவில் காலம் ॥

## திருவேங்கடத்தானுக்கு அடிமை செய்ய வேண்டும் எனல்

‡ஒழிவில் காலம் எல்லாம்⋆ உடனாய் மன்னி⋆
வழுவிலா⋆ அடிமை செய்ய வேண்டும் நாம்⋆
தெழி குரல் அருவித்⋆ திருவேங்கடத்து⋆
எழில் கொள் சோதி⋆ எந்தை தந்தை தந்தைக்கே (1)

எந்தை தந்தை தந்தை⋆ தந்தை தந்தைக்கும்
முந்தை⋆ வானவர்⋆ வானவர் கோனொடும்⋆
சிந்து பூ மகிழும்⋆ திருவேங்கடத்து⋆
அந்த மில் புகழ்க்⋆ கார் எழில் அண்ணலே (2)

அண்ணல் மாயன்⋆ அணி கொள் செந்தாமரைக்-
கண்ணன்⋆ செங்கனி வாய்க்⋆ கருமாணிக்கம்⋆
தெண்ணிறைச் சுனை நீர்த்⋆ திருவேங்கடத்து⋆
எண்ணில் தொல் புகழ்⋆ வானவர் ஈசனே (3)

ஈசன் வானவர்க்கு⋆ என்பன் என்றால்⋆ அது
தேசமோ⋆ திருவேங்கடத் தானுக்கு⋆
நீசனேன்⋆ நிறைவொன்றுமிலேன்⋆ என்கண்
பாசம் வைத்த⋆ பரஞ்சுடர்ச் சோதிக்கே (4)

சோதியாகி⋆ எல்லாவுலகும் தொழும்⋆
ஆதி மூர்த்தி என்றால்⋆ அளவாகுமோ⋆
வேதியர்⋆ முழு வேதத்தமுதத்தை⋆
தீதில் சீர்த்⋆ திருவேங்கடத் தானையே (5)

வேங்கடங்கள்⋆ மெய்மேல் வினை முற்றவும்⋆
தாங்கள் தங்கட்கு⋆ நல்லனவே செய்வார்⋆
வேங்கடத்துறை வார்க்கு⋆ நமவென்ன-
லாம் கடமை⋆ அதுசுமந்தார்கட்கே (6)

சுமந்து மாமலர்⋆ நீர் சுடர் தீபம் கொண்டு⋆
அமர்ந்து வானவர்⋆ வானவர் கோனொடும்⋆
நமன்றெழும்⋆ திருவேங்கடம் நங்கட்கு⋆
சமன் கொள் வீடுதரும்⋆ தடங்குன்றமே (7)

‡குன்றம் ஏந்திக்⋆ குளிர் மழை காத்தவன்⋆
அன்று ஞாலம்⋆ அளந்த பிரான்⋆ பரன்
சென்று சேர்⋆ திருவேங்கட மா மலை⋆
ஒன்றுமே தொழ⋆ நம் வினை ஓயுமே (8)

ஓயும் மூப்புப்⋆ பிறப்பிறப்புப்பிணி⋆
வீயுமாறு செய்வான்⋆ திருவேங்கடத்-
தாயன்⋆ நாள் மலராம்⋆ அடித் தாமரை⋆
வாயுள்ளும் மனத்துள்ளும்⋆ வைப்பார்கட்கே (9)

வைத்த நாள் வரை⋆ எல்லை குறுகிச் சென்று⋆
எய்த்திளைப்பதன்⋆ முன்னம் அடைமினோ!⋆
பைத்த பாம்பணையான்⋆ திருவேங்கடம்⋆
மொய்த்த சோலை⋆ மொய் பூந்தடம் தாழ்வரே (10)

‡தாள் பரப்பி⋆ மண் தாவிய ஈசனை⋆
நீள் பொழில்⋆ குருகூர்ச் சடகோபன் சொல்⋆
கேழில் ஆயிரத்து⋆ இப்பத்தும் வல்லவர்⋆
வாழ்வர் வாழ்வெய்தி⋆ ஞாலம் புகழவே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ புகழுநல் ஒருவன் ॥

## ஆன்மாக்கள் அனைத்தும் அவனே

‡புகழுநல் ஒருவன் என்கோ!⋆
    பொருவில் சீர்ப் பூமி என்கோ⋆
திகழும் தண் பரவை என்கோ!⋆
    தீயென்கோ! வாயுவென்கோ⋆
நிகழும் ஆகாசம் என்கோ!⋆
    நீள் சுடர் இரண்டும் என்கோ⋆
இகழ்வில் இவ்வனைத்தும் என்கோ⋆
    கண்ணனைக் கூவும் ஆறே! (1)

கூவும் ஆறறிய மாட்டேன்⋆ குன்றங்கள் அனைத்தும் என்கோ⋆
    மேவுசீர் மாரி என்கோ!⋆ விளங்கு தாரகைகள் என்கோ⋆
நாவியல் கலைகள் என்கோ!⋆ ஞான நல்லாவி என்கோ⋆
    பாவு சீர்க் கண்ணன் எம்மான்⋆ பங்கயக் கண்ணனையே! (2)

பங்கயக் கண்ணன் என்கோ!⋆ பவளச் செவ்வாயன் என்கோ⋆
    அங்கதிர் அடியன் என்கோ!⋆ அஞ்சன வண்ணன் என்கோ⋆
செங்கதிர் முடியன் என்கோ!⋆ திருமறு மார்வன் என்கோ⋆
    சங்கு சக்கரத்தன் என்கோ!⋆ சாதி மாணிக்கத்தையே! (3)

சாதி மாணிக்கம் என்கோ!⋆ சவி கோள் பொன் முத்தம் என்கோ⋆
    சாதி நல் வயிரம் என்கோ⋆ தவிவில் சீர் விளக்கம் என்கோ⋆
ஆதியஞ்சோதி என்கோ!⋆ ஆதியம் புருடன் என்கோ⋆
    ஆதுமில் காலத்தெந்தை⋆ அச்சுதன் அமலனையே! (4)

அச்சுதன் அமலன் என்கோ⋆
    அடியவர் வினை கெடுக்கும்⋆
நச்சுமா மருந்தம் என்கோ!⋆
    நலங்கடல் அமுதம் என்கோ⋆

அச்சுவைக் கட்டி என்கோ!⋆
அறுசுவை அடிசில் என்கோ⋆
நெய்ச்சுவைத் தேறல் என்கோ!⋆
கனியென்கோ! பால் என்கேனோ! (5)

பால் என்கோ!⋆ நான்கு வேதப்
பயன் என்கோ⋆ சமய நீதி
நூல் என்கோ!⋆ நுடங்கு கேள்வி
இசையென்கோ!⋆ இவற்றுள் நல்ல
மேல் என்கோ⋆ வினையின் மிக்க
பயன் என்கோ⋆ கண்ணன் என்கோ!
மால் என்கோ! மாயன் என்கோ⋆
வானவர் ஆதியையே! (6)

வானவர் ஆதி என்கோ!⋆ வானவர் தெய்வம் என்கோ⋆
வானவர் போகம் என்கோ!⋆ வானவர் முற்றும் என்கோ⋆
ஊனமில் செல்வம் என்கோ!⋆ ஊனமில் சுவர்க்கம் என்கோ⋆
ஊனமில் மோக்கம் என்கோ!⋆ ஒளி மணி வண்ணனையே! (7)

ஒளி மணி வண்ணன் என்கோ!⋆ ஒருவன் என்றேத்த நின்ற⋆
நளிர் மதிச் சடையன் என்கோ!⋆ நான்முகக் கடவுள் என்கோ⋆
அளி மகிழ்ந்துலகம் எல்லாம்⋆ படைத்தவை ஏத்த நின்ற⋆
களி மலர்த் துளவன் எம்மான்⋆ கண்ணனை மாயனையே! (8)

கண்ணனை மாயன் தன்னைக்⋆ கடல் கடைந்தமுதம் கொண்ட⋆
அண்ணலை அச்சுதனை⋆ அனந்தனை அனந்தன் தன்மேல்⋆
நண்ணி நன்குறைகின்றானை⋆ ஞாலம் உண்டுமிழ்ந்த மாலை⋆
எண்ணும் ஆறறிய மாட்டேன்⋆ யாவையும் யவரும் தானே (9)

யாவையும் யவரும் தானாய்⋆ அவரவர் சமயந் தோறும்⋆
தோய்விலன் புலன் ஐந்துக்கும்⋆ சொலப்படான் உணர்வின் மூர்த்தி⋆
ஆவிசேர் உயிரின் உள்ளால்⋆ ஆதுமோர் பற்றிலாத⋆
பாவனை அதனைக் கூடில்⋆ அவனையும் கூடலாமே (10)

‡கூடி வண்டறையும் தண் தார்க்⋆
    கொண்டல் போல் வண்ணன் தன்னை⋆
மாடலர் பொழில்⋆ குருகூர்
    வண் சடகோபன் சொன்ன⋆
பாடலோர் ஆயிரத்துள்⋆
    இவையுமோர் பத்தும் வல்லார்⋆
வீடில போக மெய்தி⋆
    விரும்புவர் அமரர் மொய்த்தே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மொய்ம்மாம் ॥

*திருமாலுக்கு அன்பு செய்பவரை ஆதரித்தலும் அன்பிலாதாரை நிந்தித்தலும்*

‡மொய்ம் மாம் பூம் பொழில் பொய்கை⋆
  முதலைச் சிறைப்பட்டு நின்ற⋆
கைம்மாவுக்கருள் செய்த⋆
  கார் முகில் போல் வண்ணன் கண்ணன்⋆
எம்மானைச் சொல்லிப் பாடி⋆
  எழுந்தும் பறந்தும் துள்ளாதார்⋆
தம்மால் கருமம் என் சொல்லீர்⋆
  தண் கடல் வட்டத்துள்ளீரே! (1)

தண் கடல் வட்டத்துள்ளாரைத்⋆ தமக்கிரையாத் தடிந்துண்ணும்⋆
  திண் கழல் கால் அசுரர்க்குத்⋆ தீங்கிழைக்கும் திருமாலை⋆
பண்கள் தலைக்கொள்ளப் பாடிப்⋆ பறந்தும் குனித்துழலாதார்⋆
  மண் கொள் உலகில் பிறப்பார்⋆ வல்வினை மோத மலைந்தே (2)

மலையை எடுத்துக் கல் மாரி
  காத்துப்⋆ பசுநிரை தன்னை⋆
தொலைவு தவிர்த்த பிரானைச்⋆
  சொல்லிச் சொல்லி நின்றெப்போதும்⋆
தலையினோடாதனம் தட்டத்⋆
  தடுகுட்டமாய்ப் பறவாதார்⋆
அலை கொள் நரகத்தழுந்திக்⋆
  கிடந்துழைக்கின்ற வம்பரே (3)

வம்பவிழ் கோதை பொருட்டா⋆ மால் விடையேழும் அடர்த்த⋆
  செம் பவளத் திரள் வாயன்⋆ சிரீதரன் தொல் புகழ் பாடி⋆
கும்பிடு நட்டம் இட்டாடிக்⋆ கோகுகட்டுண்-டுழலாதார்⋆
  தம் பிறப்பால் பயன் என்னே⋆ சாது சனங்களிடையே (4)

சாது சனத்தை நலியும்⋆ கஞ்சனைச் சாதிப்பதற்கு⋆
ஆதியஞ்சோதியுருவை⋆ அங்கு வைத்திங்குப் பிறந்த⋆
வேத முதல்வனைப் பாடி⋆ வீதிகள் தோறும் துள்ளாதார்⋆
ஓதியுணர்ந்தவர் முன்னா⋆ என் சவிப்பார் மனிசரே (5)

மனிசரும் மற்றும் முற்றுமாய்⋆ மாயப் பிறவி பிறந்த⋆
தனியன் பிறப்பிலி தன்னைத்⋆ தடங்கடல் சேர்ந்த பிரானை⋆
கனியைக் கரும்பின் இன் சாற்றைக்⋆ கட்டியைத் தேனை அமுதை⋆
முனிவின்றி ஏத்திக் குனிப்பார்⋆ முழுதுணர் நீர்மையினாரே (6)

நீர்மையில் நூற்றுவர் வீய⋆ ஐவர்க்கருள் செய்து நின்று⋆
பார்மல்கு சேனை அவித்த⋆ பரஞ்சுடரை நினைந்தாடி⋆
நீர்மல்கு கண்ணினர் ஆகி⋆ நெஞ்சம் குழைந்து நையாதே⋆
ஊர்மல்கி மோடு பருப்பார்⋆ உத்தமர்கட்கென் செய்வாரே (7)

வார்புனல் அந்தண்ணருவி⋆ வட திருவேங்கடத்தெந்தை⋆
பேர்பல சொல்லிப் பிதற்றிப்⋆ பித்தர் என்றே பிறர் கூற⋆
ஊர் பல புக்கும் புகாதும்⋆ உலோகர் சிரிக்க நின்றாடி⋆
ஆர்வம் பெருகிக் குனிப்பார்⋆ அமரர் தொழப்படுவாரே (8)

அமரர் தொழப்படுவானை⋆
அனைத்துலகுக்கும் பிரானை⋆
அமரர் மனத்தினுள் யோகு புணர்ந்து⋆
அவன் தன்னோடொன்றாக⋆
அமரத் துணிய வல்லார்கள்
ஒழிய⋆ அல்லாதவர் எல்லாம்⋆
அமர நினைந்தெழுந்தாடி⋆
அலற்றுவதே கருமம்மே (9)

கருமமும் கரும பலனும் ஆகிய⋆ காரணன் தன்னை⋆
திருமணி வண்ணனைச் செங்கண் மாலினைத்⋆ தேவ பிரானை⋆
ஒருமை மனத்தினுள் வைத்து⋆ உள்ளம் குழைந்தெழுந்தாடி⋆
பெருமையும் நாணும் தவிர்ந்து⋆ பிதற்றுமின் பேதமை தீர்ந்தே (10)

‡தீர்ந்த அடியவர் தம்மைத்⋆ திருத்திப் பணிகொள்ள வல்ல⋆
ஆர்ந்த புகழ் அச்சுதனை⋆ அமரர் பிரானை எம்மானை⋆
வாய்ந்த வள வயல் சூழ்⋆ தண் வளன் குருகூர்ச் சடகோபன்⋆
நேர்ந்த ஓராயிரத்திப்பத்து⋆ அருவினை நீறு செய்யுமே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ செய்யதாமரை ॥

## அர்ச்சாவதாரமே எளிதென அருளிச் செய்தல்

‡செய்ய தாமரைக் கண்ணனாய்⋆
உலகேழும் உண்ட அவன் கண்டீர்⋆
வையம் வானம் மனிசர் தெய்வம்⋆
மற்றும் மற்றும் மற்றும் முற்றுமாய்⋆
செய்ய சூழ் சுடர் ஞானமாய்⋆ வெளிப்
பட்டிவை படைத்தான்⋆
பின்னும் மொய் கொள் சோதியோடாயினான்⋆ ஒரு
மூவர் ஆகிய மூர்த்தியே (1)

மூவர் ஆகிய மூர்த்தியை⋆ முதல் மூவர்க்கும் முதல்வன் தன்னை⋆
சாவம் உள்ளன நீக்குவானைத்⋆ தடங்கடல் கிடந்தான் தன்னைத்⋆
தேவ தேவனைத் தென்னிலங்கை⋆ எரியெழச் செற்ற வில்லியை⋆
பாவ நாசனைப் பங்கயத் தடங் கண்ணனைப்⋆ பரவுமினோ (2)

பரவி வானவர் ஏத்த நின்ற⋆
பரமனைப் பரஞ்சோதியை⋆
குரவை கோத்த குழகனை⋆ மணி
வண்ணனைக் குடக் கூத்தனை⋆
அரவம் ஏறி அலை கடல்
அமரும்⋆ துயில் கொண்ட அண்ணலை⋆
இரவும் நன் பகலும் விடாது⋆ என்றும்
ஏத்துதல் மனம் வைம்மினோ (3)

வைம்மின் நும் மனத்தென்று⋆ யான்
உரைக்கின்ற மாயவன் சீர்மையை⋆
எம் மனோர்கள் உரைப்பதென்⋆ அது நிற்க
நாள்தொறும்⋆ வானவர்
தம்மை ஆளும் அவனும்⋆ நான்முகனும்

சடைமுடி அண்ணலும்⋆
செம்மையால் அவன் பாத பங்கயம்⋆
சிந்தித்தேத்தி திரிவரே (4)

திரியும் காற்றோடகல் விசும்பு⋆
திணிந்த மண் கிடந்த கடல்⋆
எரியும் தீயோடிரு சுடர் தெய்வம்⋆
மற்றும் மற்றும் முற்றுமாய்⋆
கரிய மேனியன் செய்ய தாமரைக்
கண்ணன்⋆ கண்ணன் விண்ணோர் இறை⋆
சுரியும் பல் கருங்குஞ்சி⋆ எங்கள்
சுடர் முடியண்ணல் தோற்றமே (5)

தோற்றக் கேடவை இல்லவன் உடையான்⋆
அவன் ஒரு மூர்த்தியாய்⋆
சீற்றத்தோடருள் பெற்றவன் அடிக்
கீழ்ப்⋆ புக நின்ற செங்கண்மால்⋆
நாற்றத் தோற்றச் சுவையொலி⋆ ஊறல்
ஆகி நின்ற⋆ எம் வானவர்
ஏற்றையே அன்றி⋆ மற்றொருவரை
யான் இலேன் எழுமைக்குமே (6)

எழுமைக்கும் எனதாவிக்கு⋆ இன் அமுதத்தினை எனதார் உயிர்⋆
கெழுமிய கதிர்ச் சோதியை⋆ மணி வண்ணனைக் குடக் கூத்தனை⋆
விழுமிய அமரர் முனிவர் விழுங்கும்⋆ கன்னல் கனியினை⋆
தொழுமின் தூய மனத்தராய்⋆ இறையும் நில்லா துயரங்களே (7)

துயரமே தரு துன்ப இன்ப
வினைகளாய்⋆ அவை அல்லனாய்⋆
உயர நின்றதோர் சோதியாய்⋆
உலகேழும் உண்டுமிழ்ந்தான் தன்னை⋆
அயர ஆங்கு நமன் தமர்க்கு⋆ அரு
நஞ்சினை அச்சுதன் தன்னை⋆

தயரதற்கு மகன் தன்னை அன்றி⋆
    மற்றிலேன் தஞ்சமாகவே (8)

தஞ்சம் ஆகிய தந்தை தாயொடு⋆
    தானுமாய் அவை அல்லனாய்⋆
எஞ்சலில் அமரர் குலமுதல்⋆
    மூவர் தம்முள்ளும் ஆதியை⋆
அஞ்சி நீர் உலகத்துள்ளீர்கள்!⋆
    அவன் இவன் என்று கூழேன்மின்⋆
நெஞ்சினால் நினைப்பான் யவன்⋆ அவன்
    ஆகும் நீள் கடல் வண்ணனே (9)

கடல் வண்ணன் கண்ணன்⋆ விண்ணவர்
    கரு மாணிக்கம் எனதார் உயிர்⋆
படவரவின் அணைக்கிடந்த⋆
    பரஞ்சுடர் பண்டு நூற்றுவர்⋆
அடவரும் படை மங்க⋆
    ஐவர்கட்காகி வெஞ்சமத்து⋆ அன்று தேர்
கடவிய பெருமான்⋆ கனை கழல்
    காண்பதென்றுகொல் கண்களே (10)

‡கண்கள் காண்டற்கரியனாய்க்⋆
    கருத்துக்கு நன்றும் எளியனாய்⋆
மண் கொள் ஞாலத்துயிர்க்கெல்லாம்
    அருள் செய்யும்⋆ வானவர் ஈசனை⋆
பண் கொள் சோலை வழுதி நாடன்⋆
    குருகைக்கோன் சடகோபன் சொல்⋆
பண் கொள் ஆயிரத்திப்பத்தால்⋆
    பத்தராகக் கூடும் பயின்மினே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பயிலும் சுடரொளி ॥

## அடியார்களின் அடியார்க்குத் தாம் அடியவர் எனல்

‡பயிலும் சுடரொளி மூர்த்தியைப்⋆ பங்கயக் கண்ணனை⋆
பயில இனிய⋆ நம் பாற்கடல் சேர்ந்த பரமனை⋆
பயிலும் திருவுடையார்⋆ யவரேலும் அவர் கண்டீர்⋆
பயிலும் பிறப்பிடைதோறு⋆ எம்மை ஆளும் பரமரே (1)

ஆளும் பரமனைக் கண்ணனை⋆ ஆழிப் பிரான் தன்னை⋆
தோளும் ஓர் நான்குடைத்⋆ தூமணி வண்ணன் எம்மான் தன்னை⋆
தாளும் தடக் கையும் கூப்பிப்⋆ பணியும் அவர் கண்டீர்⋆
நாளும் பிறப்பிடை தோறு⋆ எம்மை ஆளுடை நாதரே (2)

நாதனை ஞாலமும் வானமும் ஏத்தும்⋆ நறும் துழாய்ப்
போதனை⋆ பொன் நெடும் சக்கரத்து⋆ எந்தை பிரான் தன்னை⋆
பாதம் பணிய வல்லாரைப்⋆ பணியும் அவர் கண்டீர்⋆
ஓதும் பிறப்பிடை தோறு⋆ எம்மை ஆளுடையார்களே (3)

உடை ஆர்ந்த ஆடையன்⋆ கண்டிகையன் உடை நாணினன்⋆
புடையார் பொன் நூலினன்⋆ பொன் முடியன் மற்றும் பல்கலன்⋆
நடையா உடைத் திருநாரணன்⋆ தொண்டர் தொண்டர் கண்டீர்⋆
இடையார் பிறப்பிடைதோறு⋆ எமக்கெம் பெருமக்களே (4)

பெருமக்கள் உள்ளவர் தம் பெருமானை⋆ அமரர்கட்கு⋆
அருமை ஒழிய⋆ அன்றார் அமுதூட்டிய அப்பனை⋆
பெருமை பிதற்ற வல்லாரைப்⋆ பிதற்றும் அவர் கண்டீர்⋆
வருமையும் இம்மையும்⋆ நம்மையளிக்கும் பிராக்களே (5)

அளிக்கும் பரமனை கண்ணனை⋆ ஆழிப் பிரான் தன்னை⋆
துளிக்கும் நறும் கண்ணித்⋆ தூ மணி வண்ணன் எம்மான் தன்னை⋆
ஒளிக் கொண்ட சோதியை⋆ உள்ளத்துக் கொள்ளும் அவர் கண்டீர்⋆
சலிப்பின்றி ஆண்டெம்மைச்⋆ சன்ம சன்மாந்தரம் காப்பரே (6)

சன்ம சன்மாந்தரம் காத்து⋆ அடியார்களைக் கொண்டு போய்⋆
தன்மை பெறுத்தித் தன் தாளிணைக் கீழ்⋆ கொள்ளும் அப்பனை⋆
தொன்மை பிதற்ற வல்லாறைப்⋆ பிதற்றும் அவர் கண்டீர்⋆
நம்மை பெறுத்து எம்மை⋆ நாள் உய்யக்கொள்கின்ற நம்பரே (7)

நம்பனை ஞாலம் படைத்தவனைத்⋆ திரு மார்பனை⋆
உம்பர் உலகினில் யார்க்கும்⋆ உணர்வரியான் தன்னைக்⋆
கும்பி நரகர்கள் ஏத்துவரேலும்⋆ அவர் கண்டீர்⋆
எம் பல் பிறப்பிடை தோறு⋆ எம் தொழுகுலம் தாங்களே (8)

குலம் தாங்கு சாதிகள்⋆ நாலிலும் கீழ் இழிந்து⋆ எத்தனை
நலம் தான் இலாத⋆ சண்டாள சண்டாளர்கள் ஆகிலும்⋆
வலம் தாங்கு சக்கரத்தண்ணல்⋆ மணிவண்ணற்காள் என்றுள்
கலந்தார்⋆ அடியார் தம் அடியார் எம் அடிகளே (9)

அடியார்ந்த வையம் உண்டு⋆ ஆலிலை அன்ன வசம் செய்யும்⋆
படி யாதுமில் குழவிப்படி⋆ எந்தை பிரான் தனக்கு⋆
அடியார் அடியார் தம்⋆ அடியார் அடியார் தமக்கு⋆
அடியார் அடியார் தம்⋆ அடியார் அடியோங்களே (10)

‡அடியோங்கு நூற்றவர் வீய⋆ அன்றைவருக்கருள் செய்த
நெடியோனை⋆ தென் குருகூர் சடகோபன் குற்றேவல்கள்⋆
அடியார்ந்த ஆயிரத்துள்⋆ இவை பத்தவன் தொண்டர்மேல்
முடிவு⋆ ஆரக் கற்கில்⋆ சன்மம் செய்யாமை முடியுமே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ முடியானே ॥

ஆழ்வார் கரணங்களும் தாமும் பெருவிடாய்ப் பட்டுப் பேசுதல்

‡முடியானே! மூவுலகும் தொழுதேத்தும்⋆ சீர்
அடியானே⋆ ஆழ் கடலைக் கடைந்தாய்!⋆ புள்ளூர்
கொடியானே⋆ கொண்டல் வண்ணா!⋆ அண்டத்தும்பரில்
நெடியானே!⋆ என்று கிடக்கும் என் நெஞ்சமே (1)

நெஞ்சமே! நீள் நகராக⋆ இருந்த என்
தஞ்சனே⋆ தண் இலங்கைக்கிறையைச் செற்ற
நஞ்சனே⋆ ஞாலம் கொள்வான்⋆ குறள் ஆகிய
வஞ்சனே⋆ என்னும் எப்போதும்⋆ என் வாசகமே (2)

வாசகமே ஏத்த அருள் செய்யும்⋆ வானவர் தம்
நாயகனே⋆ நாள் இளம் திங்களைக்⋆ கோள் விடுத்து⋆
வேய் அகம் பால் வெண்ணெய்⋆ தொடுவுண்ட ஆன் ஆயர்
தாயவனே⋆ என்று தடவும்⋆ என் கைகளே (3)

கைகளால் ஆரத்⋆ தொழுது தொழுதுன்னை⋆
வைகலும் மாத்திரைப்⋆ போதும் ஓர் வீடின்றி⋆
பை கொள் பாம்பேறி⋆ உறை பரனே⋆ உன்னை
மெய்கொள்ளக் காண⋆ விரும்பும் என் கண்களே (4)

கண்களால் காண⋆ வருங்கொல் என்றாசையால்⋆
மண் கொண்ட வாமனன்⋆ ஏற மகிழ்ந்து செல்⋆
பண் கொண்ட புள்ளின்⋆ சிறகொலி பாவித்து⋆
திண் கொள்ள ஓர்க்கும்⋆ கிடந்தென் செவிகளே (5)

செவிகளால் ஆர⋆ நின் கீர்த்திக் கனியென்னும்
கவிகளே⋆ காலப் பண் தேன்⋆ உறைப்பத் துற்று⋆
புவியின்மேல்⋆ பொன் நெடும் சக்கரத் துன்னையே⋆
அவிவின்றி ஆதரிக்கும்⋆ எனதாவியே (6)

ஆவியே! ஆரமுதே!⋆ என்னை ஆளுடை⋆
    தூவியம் புள்ளுடையாய்!⋆ சுடர் நேமியாய்⋆
பாவியேன் நெஞ்சம்⋆ புலம்பப் பலகாலும்⋆
    கூவியும் காணப்பெறேன்⋆ உன கோலமே (7)

கோலமே! தாமரைக் கண்ணதோர்⋆ அஞ்சன
    நீலமே⋆ நின்றெனதாவியை⋆ ஈர்கின்ற
சீலமே⋆ சென்று செல்லாதன⋆ முன்னிலாம்
    காலமே⋆ உன்னை எந்நாள் கண்டு கொள்வனே (8)

கொள்வன் நான் மாவலி⋆ மூவடி தா என்ற
    கள்வனே⋆ கஞ்சனை வஞ்சித்து⋆ வாணனை
உள் வன்மை தீர⋆ ஓர் ஆயிரம் தோள் துணித்த⋆
    புள் வல்லாய்⋆ உன்னை எஞ்ஞான்று பொருந்துவனே (9)

பொருந்திய மா மருதின் இடை போய⋆ எம்
    பெருந்தகாய்⋆ உன் கழல்⋆ காணிய பேதுற்று⋆
வருந்தி நான்⋆ வாசக மாலை கொண்டு⋆ உன்னையே
    இருந்திருந்து⋆ எத்தனை காலம் புலம்புவனே (10)

‡புலம்பு சீர்ப்⋆ பூமி அளந்த பெருமானை⋆
    நலம் கொள் சீர்⋆ நன் குருகூர்ச் சடகோபன்⋆ சொல்
வலம் கொண்ட ஆயிரத்துள்⋆ இவையும் ஓர்பத்து
    இலங்கு வான்⋆ யாவரும் ஏறுவர் சொன்னாலே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ சொன்னால் ॥

மானிடரைப் பாடாது மாதவனை ஏத்தும் எனல்

‡சொன்னால் விரோதம் இது⋆ ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ⋆
என் நாவில் இன் கவி⋆ யான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்⋆
தென்னா தெனாவென்று⋆ வண்டு முரல் திருவேங்கடத்து⋆
என்னானை என்னப்பன்⋆ எம் பெருமான் உளனாகவே (1)

உளனாகவே எண்ணித்⋆ தன்னை ஒன்றாக தன் செல்வத்தை⋆
வளனா மதிக்கும்⋆ இம் மானிடத்தைக் கவி பாடியென்⋆
குளனார் கழனி சூழ்⋆ கண்ணன் குறுங்குடி மெய்ம்மையே⋆
உளனாய எந்தையை⋆ எந்தை பெம்மானை ஒழியவே (2)

ஒழிவொன்றில்லாத⋆ பல்லூழிதோறூழி நிலாவப்⋆ போம்
வழியைத் தரும் நங்கள்⋆ வானவர் ஈசனை நிற்கப் போய்⋆
கழிய மிக நல்ல வான்⋆ கவி கொண்டு புலவீர்காள்⋆
இழியக் கருதி⋆ ஓர் மானிடம் பாடல் என்னாவதே (3)

என்னாவதெத்தனை நாளைக்குப் போதும்⋆ புலவீர்காள்⋆
மன்னா மனிசரைப் பாடிப்⋆ படைக்கும் பெரும் பொருள்⋆
மின்னார் மணி முடி⋆ விண்ணவர் தாதையைப் பாடினால்⋆
தன்னாகவே கொண்டு⋆ சன்மம் செய்யாமை கொள்ளுமே (4)

கொள்ளும் பயன் இல்லைக்⋆ குப்பை கிளர்த்தன்ன செல்வத்தை⋆
வள்ளல் புகழ்ந்து⋆ நும் வாய்மை இழக்கும் புலவீர்காள்⋆
கொள்ளக் குறைவிலன்⋆ வேண்டிற்றெல்லாம் தரும் கோதில்⋆ என்
வள்ளல் மணிவண்ணன் தன்னைக்⋆ கவி சொல்ல வம்மினோ (5)

வம்மின் புலவீர்!⋆ நும் மெய் வருத்திக் கை செய்துய்ம்மினோ⋆
இம் மன்னுலகில்⋆ செல்வர் இப்போதில்லை நோக்கினோம்⋆
நும் இன் கவி கொண்டு⋆ நும் நும் இட்டா தெய்வம் ஏத்தினால்⋆
செம் மின் சுடர் முடி⋆ என் திருமாலுக்குச் சேருமே (6)

சேரும் கொடை புகழ்⋆ எல்லை இலானை⋆ ஓராயிரம்
பேரும் உடைய பிரானை அல்லால்⋆ மற்று யான் கிலேன்⋆
மாரி அனைய கை⋆ மால் வரை ஒக்கும் திண் தோள் என்று⋆
பாரில் ஓர் பற்றையைப்⋆ பச்சைப் பசும் பொய்கள் பேசவே (7)

வேயின் மலிபுரை தோளி⋆ பின்னைக்கு மணாளனை⋆
ஆய பெரும் புகழ்⋆ எல்லை இலாதன பாடிப்போய்⋆
காயம் கழித்து⋆ அவன் தாள் இணைக்கீழ்ப் புகும் காதலன்⋆
மாய மனிசரை⋆ என் சொல்ல வல்லேன் என் வாய்கொண்டே (8)

வாய் கொண்டு மானிடம் பாட வந்த⋆ கவியேன் அல்லேன்⋆
ஆய் கொண்ட சீர் வள்ளல்⋆ ஆழிப் பிரான் எனக்கே உளன்⋆
சாய் கொண்ட இம்மையும் சாதித்து⋆ வானவர் நாட்டையும்⋆
நீ கண்டு கொள் என்று⋆ வீடும் தரும் நின்று நின்றே (9)

நின்று நின்று பல நாள் உய்க்கும்⋆ இவ்வுடல் நீங்கிப்போய்⋆
சென்று சென்றாகிலும் கண்டு⋆ சன்மம் கழிப்பான் எண்ணி⋆
ஒன்றி ஒன்றி உலகம் படைத்தான்⋆ கவி ஆயினேற்கு⋆
என்றும் என்றும் இனி⋆ மற்றொருவர் கவி ஏற்குமே (10)

‡ஏற்கும் பெரும் புகழ்⋆ வானவர் ஈசன் கண்ணன் தனக்கு⋆
ஏற்கும் பெரும் புகழ்⋆ வண் குருகூர்ச் சடகோபன் சொல்⋆
ஏற்கும் பெரும் புகழ்⋆ ஆயிரத்துள் இவையும் ஓர் பத்து⋆
ஏற்கும் பெரும் புகழ்⋆ சொல்ல வல்லார்க்கில்லை சன்மமே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ சன்மம் பலபல ॥

*திருமால்சீர் பரவப்பெற்ற எனக்கு ஒரு குறையும் இல்லை எனல்*

‡சன்மம் பல பல செய்து வெளிப்பட்டுச்⋆
சங்கொடு சக்கரம் வில்⋆
ஒண்மை உடைய உலக்கை ஒள் வாள்⋆
தண்டு கொண்டு புள்ளூர்ந்து⋆ உலகில்
வன்மை உடைய அரக்கர்⋆ அசுரரை
மாளப் படை பொருத⋆
நன்மை உடையவன் சீர் பரவப் பெற்ற⋆
நான் ஓர் குறைவிலனே (1)

குறைவில் தடங்கடல் கோள் அரவேறித்⋆ தன்
கோலச் செந்தாமரைக்கண்⋆
உறைபவன் போல ஓர் யோகு புணர்ந்த⋆ ஒளி மணி
வண்ணன் கண்ணன்⋆
கறையணி மூக்குடைப் புள்ளிக் கடாவி⋆ அசுரரைக்
காய்ந்த அம்மான்⋆
நிறை புகழ் ஏத்தியும் பாடியும் ஆடியும்⋆
யான் ஒரு முட்டிலனே (2)

முட்டில் பல் போகத்தொரு தனி நாயகன்⋆
மூவுலகுக்குரிய⋆
கட்டியைத் தேனை அமுதை⋆ நன் பாலைக்
கனியைக் கரும்பு தன்னை⋆
மட்டவிழ் தண்ணம் துழாய் முடியானை
வணங்கி⋆ அவன் திறத்துப்
பட்ட பின்னை⋆ இறையாகிலும்⋆ யான் என்
மனத்துப் பரிவிலனே (3)

பரிவின்றி வாணனைக் காத்தும்⋆ என்றன்று
படையொடும் வந்தெதிர்ந்த⋆
திரிபுரம் செற்றவனும் மகனும்⋆ பின்னும்
அங்கியும் போர் தொலைய⋆
பொரு சிறைப் புள்ளைக் கடாவிய மாயனை⋆
ஆயனைப் பொற் சக்கரத்-
தரியினை⋆ அச்சுதனைப் பற்றி⋆ யான்
இறையேனும் இடர் இலனே (4)

இடர் இன்றியே ஒரு நாள் ஒரு போழ்தில்⋆ எல்லா
உலகும் கழிய⋆
படர்புகழ்ப் பார்த்தனும் வைதிகனும்⋆ உடன் ஏறத்
திண் தேர் கடவி⋆
சுடர் ஒளியாய் நின்ற தன்னுடைச் சோதியில்⋆
வைதிகன் பிள்ளைகளை⋆
உடலொடும் கொண்டு கொடுத்தவனைப் பற்றி⋆
ஒன்றும் துயர் இலனே (5)

துயரில் சுடர் ஒளி தன்னுடைச் சோதி⋆
நின்ற வண்ணம் நிற்கவே⋆
துயரில் மலியும் மனிசர் பிறவியில்⋆
தோன்றி கண் காண வந்து⋆
துயரங்கள் செய்து நன் தெய்வநிலை உலகில்⋆
புக உய்க்கும் அம்மான்⋆
துயரம் இல் சீர்க் கண்ணன் மாயன் புகழ் துற்ற⋆
யான் ஓர் துன்பம் இலனே (6)

துன்பமும் இன்பமும் ஆகிய⋆ செய்வினையாய்
உலகங்களுமாய்⋆
இன்பமில் வெந்நரகாகி⋆ இனிய நல் வான்
சுவர்க்கங்களுமாய்⋆
மன்பல் உயிர்களும் ஆகிப்⋆ பல பல
மாய மயக்குகளால்⋆

இன்புறும் இவ்விளையாட்டுடையானைப் பெற்று⋆
ஏதும் அல்லல் இலனே (7)

அல்லலில் இன்பம் அளவிறந்தெங்கும்⋆
அழகமர் சூழ் ஒளியன்⋆
அல்லி மலர் மகள் போக மயக்குகள்⋆
ஆகியும் நிற்கும் அம்மான்⋆
எல்லையில் ஞானத்தன் ஞானம் அஃதே கொண்டு⋆
எல்லாக் கருமங்களும் செய்⋆
எல்லையில் மாயனைக் கண்ணனைத் தாள் பற்றி⋆
யான் ஓர் துக்கம் இலனே (8)

துக்கமில் ஞானச் சுடர் ஒளி மூர்த்தி⋆
துழாய் அலங்கல் பெருமான்⋆
மிக்க பல் மாயங்களால் விகிர்தம் செய்து⋆
வேண்டும் உருவு கொண்டு⋆
நக்க பிரானோடயன் முதலாக⋆ எல்லாரும்
எவையும்⋆ தன்னுள்
ஒக்க வொடுங்க விழுங்க வல்லானைப் பெற்று⋆
ஒன்றும் தளர்விலனே (9)

தளர்வின்றியே என்றும் எங்கும் பரந்த⋆
தனிமுதல் ஞானம் ஒன்றாய்⋆
அளவுடை ஐம்புலன்கள் அறியாவகையால்⋆
அருவாகி நிற்கும்⋆
வளர் ஒளி ஈசனை மூர்த்தியைப்⋆ பூதங்கள்
ஐந்தை இரு சுடரை⋆
கிளர் ஒளி மாயனைக் கண்ணனைத் தாள் பற்றி⋆
யான் என்றும் கேடிலனே (10)

‡கேடில் விழுப் புகழ்க் கேசவனைக்⋆
குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
பாடல் ஓர் ஆயிரத்துள்⋆ இவை பத்தும்
பயிற்ற வல்லார்கட்கு⋆ அவன்

நாடும் நகரமும் நன்குடன் காண⋆
    நலனிடை ஊர்தி பண்ணி⋆
வீடும் பெறுத்தித்தன் மூவுலகுக்கும் தரும்⋆
    ஒரு நாயகமே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஒரு நாயகம் ॥

## செல்வம் நிலையாமையும் திருமாலடிமையின் நிலைபேறும்

‡ஒரு நாயகமாய்⋆ ஓட உலகுடன் ஆண்டவர்⋆
கரு நாய் கவர்ந்த காலர்⋆ சிதைகிய பானையர்⋆
பெரு நாடு காண⋆ இம்மையிலே பிச்சை தாம் கொள்வர்⋆
திருநாரணன் தாள்⋆ காலம்பெறச் சிந்தித்துய்ம்மினோ (1)

உய்ம்மின் திறை கொணர்ந்து⋆ என்றுலகாண்டவர்⋆ இம்மையே
தம் இன்சுவை மடவாரைப்⋆ பிறர் கொள்ளத் தாம் விட்டு⋆
வெம்மின் ஒளி வெயில்⋆ கானகம் போய்க் குமை தின்பர்கள்⋆
செம்மின் முடித் திருமாலை⋆ விரைந்தடி சேர்மினோ (2)

அடிசேர் முடியினர் ஆகி⋆ அரசர்கள் தாம் தொழ⋆
இடிசேர் முரசங்கள்⋆ முற்றத்தியம்ப இருந்தவர்⋆
பொடிசேர் துகளாய் போவர்கள்⋆ ஆதலின் நொக்கெனக்⋆
கடிசேர் துழாய் முடிக்⋆ கண்ணன் கழல்கள் நினைமினோ (3)

நினைப்பான் புகில் கடல் எக்கலின்⋆ நுண்மணலில் பலர்⋆
எனைத்தோர் உகங்களும்⋆ இவ்வுலகாண்டு கழிந்தவர்⋆
மனைப்பால் மருங்கற⋆ மாய்தல் அல்லால் மற்றுக் கண்டிலம்⋆
பனைத் தாள் மத களிறட்டவன்⋆ பாதம் பணிமினோ (4)

பணிமின் திருவருள் என்னும்⋆ அஞ்சீதப் பைம் பூம் பள்ளி⋆
அணி மென் குழலார்⋆ இன்பக் கலவி அமுதுண்டார்⋆
துணி முன்புநாலப்⋆ பல்லேழையர் தாம் இழிப்ப செல்வர்⋆
மணி மின்னு மேனி⋆ நம் மாயவன் பேர் சொல்லி வாழ்மினோ (5)

வாழ்ந்தார்கள் வாழ்ந்தது⋆ மா மழை மொக்குளின் மாய்ந்து மாய்ந்து⋆
ஆழ்ந்தார் என்றல்லால்⋆ அன்று முதல் இன்றறுதியா⋆
வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர்⋆ என்பதில்லை நிற்குறில்⋆
ஆழ்ந்தார் கடற்பள்ளி⋆ அண்ணல் அடியவர் ஆமினோ (6)

ஆமின் சுவையவை⋆ ஆறொடடிசில் உண்டார்ந்தபின்⋆
தூ மென் மொழி மடவார்⋆ இரக்கப் பின்னும் துற்றுவார்⋆
ஈமின் எமக்கொரு துற்றென்று⋆ இடறுவர் ஆதலின்⋆
கோமின் துழாய் முடி⋆ ஆதியஞ்சோதி குணங்களே (7)

குணம் கொள் நிறை புகழ் மன்னர்⋆ கொடைக்கடன் பூண்டிருந்து⋆
இணங்கி உலகுடன் ஆக்கிலும்⋆ ஆங்கவனை இல்லார்⋆
மணம் கொண்ட கோபத்து மன்னியும்⋆ மீள்வர்கள் மீள்வில்லை⋆
பணம் கொள் அரவணையான்⋆ திருநாமம் படிமினோ (8)

படி மன்னு பல் கலன் பற்றோடறுத்து⋆ ஐம்புலன் வென்று⋆
செடி மன்னு காயம் செற்றார்களும்⋆ ஆங்கவனை இல்லார்⋆
குடி மன்னும் இன் சுவர்க்கம் எய்தியும்⋆ மீள்வர்கள் மீள்வில்லை⋆
கொடி மன்னு புள்ளுடை⋆ அண்ணல் கழல்கள் குறுகுமினோ (9)

குறுக மிகவுணர்வத்தொடு நோக்கி⋆ எல்லாம் விட்ட⋆
இறுகல் இறப்பென்னும்⋆ ஞானிக்கும் அப்பயன் இல்லையேல்⋆
சிறுக நினைவதோர் பாசம் உண்டாம்⋆ பின்னும் வீடில்லை⋆
மறுபகலில் ஈசனைப் பற்றி⋆ விடாவிடில் வீடஃதே (10)

‡அஃதே உய்யப் புகும் ஆறென்று⋆ கண்ணன் கழல்கள்மேல்⋆
கொய் பூம் பொழில் சூழ்⋆ குருகூர்ச் சடகோபன் குற்றேவல்⋆
செய் கோலத்தாயிரம்⋆ சீர்த் தொடைப் பாடல் இவை பத்தும்⋆
அஃகாமல் கற்பவர்⋆ ஆழ் துயர் போய் உய்யற் பாலரே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பாலனாய் ॥

## தலைமகள் நிலைகண்டு தாய் இரங்கல்

‡பாலனாய்⋆ ஏழ் உலகுண்டு பரிவின்றி⋆
ஆல் இலை⋆ அன்ன வசம் செய்யும் அண்ணலார்⋆
தாள் இணைமேல் அணி⋆ தண்ணந் துழாய் என்றே
மாலுமால்⋆ வல்வினையேன்⋆ மட வல்லியே (1)

வல்லி சேர் நுண்ணிடை⋆ ஆய்ச்சியர் தம்மொடும்⋆
கொல்லைமை செய்து⋆ குரவை பிணைந்தவர்⋆
நல் அடிமேல் அணி⋆ நாறு துழாய் என்றே
சொல்லுமால்⋆ சூழ் வினையாட்டியேன்⋆ பாவையே (2)

பாவியல் வேத⋆ நல் மாலை பல கொண்டு⋆
தேவர்கள் மா முனிவர்⋆ இறைஞ்ச நின்ற⋆
சேவடி மேல் அணி⋆ செம் பொன் துழாய் என்றே
கூவுமால்⋆ கோள் வினை ஆட்டியேன்⋆ கோதையே (3)

கோதில வண் புகழ்⋆ கொண்டு சமயிகள்⋆
பேதங்கள் சொல்லிப்⋆ பிதற்றும் பிரான் பரன்⋆
பாதங்கள் மேல் அணி⋆ பைம் பொன் துழாய் என்றே
ஓதுமால்⋆ ஊழ்வினையேன்⋆ தடந் தோளியே (4)

தோளி சேர் பின்னை பொருட்டு⋆ எருதேழ் தழீ இக்-
கோளியார்⋆ கோவலனார்⋆ குடக் கூத்தனார்⋆
தாள் இணை மேல் அணி⋆ தண்ணந் துழாய் என்றே
நாளு நாள்⋆ நைகின்றதால்⋆ என்றன் மாதரே (5)

மாதர் மா மண்மடந்தை பொருட்டு⋆ ஏனம் ஆய்⋆
ஆதியங்காலத்து⋆ அகல் இடம் கீண்டவர்⋆
பாதங்கள் மேல் அணி⋆ பைம் பொன் துழாய் என்றே
ஓதும்மால்⋆ எய்தினள்⋆ என்றன் மடந்தையே (6)

மடந்தையை⋆ வண் கமலத் திருமாதினை⋆
    தடம் கொள் தார் மார்பினில்⋆ வைத்தவர் தாளின்மேல்⋆
வடம் கொள் பூம் தண்ணந் துழாய் மலர்க்கே⋆ இவள்
    மடங்குமால்⋆ வாணுதலீர்!⋆ என் மடக்கொம்பே (7)

கொம்பு போல் சீதை பொருட்டு⋆ இலங்கை நகர்⋆
    அம்பெரி உய்த்தவர்⋆ தாள் இணைமேல் அணி⋆
வம்பவிழ் தண்ணந் துழாய்⋆ மலர்க்கே இவள்
    நம்புமால்⋆ நான் இதற்கென் செய்கேன்⋆ நங்கைமீர்! (8)

நங்கைமீர்! நீரும்⋆ ஓர் பெண் பெற்று நல்கினீர்⋆
    எங்ஙனே சொல்லுகேன்⋆ யான் பெற்ற ஏழையை⋆
சங்கென்னும் சக்கரம் என்னும்⋆ துழாய் என்னும்⋆
    இங்ஙனே சொல்லும்⋆ இராப் பகல் என் செய்கேன் (9)

என் செய்கேன் என்னுடைப் பேதை⋆ என் கோமளம்⋆
    என் சொல்லும்⋆ என் வசமும் அல்லள் நங்கைமீர்⋆
மின் செய் பூண் மார்பினன்⋆ கண்ணன் கழல் துழாய்⋆
    பொன் செய் பூண்⋆ மென் முலைக்கென்று மெலியுமே (10)

‡மெலியும் நோய் தீர்க்கும்⋆ நம் கண்ணன் கழல்கள்மேல்⋆
    மலி புகழ் வண் குருகூர்ச்⋆ சடகோபன் சொல்⋆
ஒலி புகழ் ஆயிரத்து⋆ இப்பத்தும் வல்லவர்⋆
    மலி புகழ் வானவர்க்காவர்⋆ நல் கோவையே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கோவை வாயாள் ॥

## எம்பிரானது சேர்க்கையால் எய்திய இன்பம்

‡கோவை வாயாள் பொருட்டு⋆ ஏற்றின்
எருத்தம் இறுத்தாய்⋆ மதிள் இலங்கைக்
கோவை வீயச் சிலை குனித்தாய்!⋆
குல நல் யானை மருப்பொசித்தாய்⋆
பூவை வீயா நீர் தூவிப்⋆
போதால் வணங்கேனேலும்⋆ நின்
பூவை வீயாம் மேனிக்குப்⋆
பூசும் சாந்தென் நெஞ்சமே (1)

பூசும் சாந்தென் நெஞ்சமே⋆ புனையும் கண்ணி எனதுடைய⋆
வாசகம் செய் மாலையே⋆ வான் பட்டாடையும் அஃதே⋆
தேசம் ஆன அணிகலனும்⋆ என் கை கூப்புச் செய்கையே⋆
ஈசன் ஞாலம் உண்டுமிழ்ந்த⋆ எந்தை ஏக மூர்த்திக்கே (2)

ஏக மூர்த்தி இரு மூர்த்தி⋆ மூன்று மூர்த்தி பல மூர்த்தி
ஆகி⋆ ஐந்து பூதமாய் இரண்டு சுடராய்⋆ அருவாகி⋆
நாகம் ஏறி நடுக் கடலுள் துயின்ற⋆ நாராயணனே⋆ உன்
ஆகம் முற்றும் அகத்தடக்கி⋆ ஆவியல்லல் மாய்த்ததே (3)

மாய்த்தல் எண்ணி வாய் முலை
தந்த⋆ மாயப் பேய் உயிர்
மாய்த்த⋆ ஆய மாயனே!⋆
வாமனனே மாதவா⋆
பூத் தண் மாலை கொண்டு⋆ உன்னைப்
போதால் வணங்கேனேலும்⋆ நின்
பூத் தண் மாலை நெடு முடிக்குப்⋆
புனையும் கண்ணி எனதுயிரே (4)

கண்ணி எனதுயிர்⋆ காதல் கனகச் சோதி முடி முதலா⋆
எண்ணில் பல் கலன்களும்⋆ ஏலும் ஆடையும் அஃதே⋆
நண்ணி மூவுலகும்⋆ நவிற்றும் கீர்த்தியும் அஃதே⋆
கண்ணன் எம் பிரான் எம்மான்⋆ கால சக்கரத் தானுக்கே (5)

கால சக்கரத்தோடு⋆ வெண்
சங்கம் கையேந்தினாய்⋆
ஞால முற்றும் உண்டுமிழ்ந்த⋆
நாராயணனே! என்றென்று⋆
ஓலம் இட்டு நான் அழைத்தால்⋆
ஒன்றும் வாராயாகிலும்⋆
கோலமாம் என் சென்னிக்கு⋆ உன்
கமலம் அன்ன குரை கழலே (6)

குரை கழல்கள் நீட்டி⋆ மண் கொண்ட கோல வாமனா⋆
குரை கழல் கை கூப்புவார்கள்⋆ கூட நின்ற மாயனே⋆
விரை கொள் பூவும் நீரும் கொண்டு⋆ ஏத்த மாட்டேனேலும்⋆ உன்
உரை கொள் சோதித் திருவுருவம்⋆ என்னதாவி மேலதே (7)

என்னதாவி மேலையாய்⋆ ஏர் கொள் ஏழ் உலகமும்⋆
துன்னி முற்றும் ஆகி நின்ற⋆ சோதி ஞான மூர்த்தியாய்⋆
உன்னதென்னதாவியும்⋆ என்னதுன்னதாவியும்⋆
இன்ன வண்ணமே நின்றாய்⋆ என்றுரைக்க வல்லேனே (8)

உரைக்க வல்லேன் அல்லேன்⋆ உன் உலப்பில் கீர்த்தி வெள்ளத்தின்⋆
கரைக்கண் என்று செல்வன் நான்⋆ காதல் மையல் ஏறினேன்⋆
புரைப்பிலாத பரம் பரனே!⋆ பொய்யிலாத பரஞ்சுடரே⋆
இரைத்து நல்ல மேன்மக்கள் ஏத்த⋆ யானும் ஏத்தினேன் (9)

யானும் ஏத்தி⋆ ஏழ் உலகும் முற்றும் ஏத்தி⋆ பின்னையும்
தானும் ஏத்திலும்⋆ தன்னை ஏத்தவேத்த எங்கெய்தும்⋆
தேனும் பாலும் கன்னலும்⋆ அமுதும் ஆகித் தித்திப்ப⋆
யானும் எம் பிரானையே ஏத்தினேன்⋆ யான் உய்வானே (10)

‡உய்வு பாயம் மற்றின்மை தேறிக்⋆ கண்ணன் ஒண் கழல்மேல்⋆
செய்ய தாமரைப் பழனத்⋆ தென்னன் குருகூர்ச் சடகோபன்⋆
பொய்யில் பாடல் ஆயிரத்துள்⋆ இவையும் பத்தும் வல்லார்கள்⋆
வையம் மன்னி வீற்றிருந்து⋆ விண்ணும் ஆள்வர் மண்ணூடே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மண்ணை ॥

*பிரிவாற்றாது போலிப் பொருள்களை கண்டு வருந்தும் தலைவியின் நிலையத் தாய் உரைத்தல்*

‡மண்ணை இருந்து துழாவி⋆
    வாமனன் மண்ணிதென்னும்⋆
விண்ணைத் தொழுதவன் மேவு⋆
    வைகுந்தம் என்று கை காட்டும்⋆
கண்ணையுண்ணீர் மல்க நின்று⋆
    கடல் வண்ணன் என்னும் அன்னே!⋆ என்
பெண்ணைப் பெருமயல் செய்தாற்கு⋆
    என்செய்கேன் பெய் வளையீரே (1)

பெய்வளைக் கைகளைக் கூப்பிப்⋆ பிரான் கிடக்கும் கடல் என்னும்⋆
    செய்யதோர் ஞாயிற்றைக் காட்டிச்⋆ சிரீதரன் மூர்த்தி ஈதென்னும்⋆
நையும் கண்ணீர் மல்க நின்று⋆ நாரணன் என்னும் அன்னே⋆ என்
    தெய்வ உருவில் சிறுமான்⋆ செய்கின்றதொன்றறியேனே (2)

அறியும் செந்தீயைத் தழுவி⋆
    அச்சுதன் என்னும் மெய் வேவாள்⋆
எறியும் தண் காற்றைத் தழுவி⋆
    என்னுடைக் கோவிந்தன் என்னும்⋆
வெறி கொள் துழாய் மலர் நாறும்⋆
    வினையுடை யாட்டியேன் பெற்ற⋆
செறி வளை முன் கைச் சிறுமான்⋆
    செய்கின்றதென் கண்ணுக்கொன்றே (3)

ஒன்றிய திங்களைக் காட்டி⋆ ஒளி மணி வண்ணனே என்னும்⋆
    நின்ற குன்றத்தினை நோக்கி⋆ நெடுமாலே! வா! என்று கூவும்⋆
நன்று பெய்யும் மழை காணில்⋆ நாரணன் வந்தான் என்றாலும்⋆
    என்றின மையல்கள் செய்தார்⋆ என்னுடைக் கோமளத்தையே (4)

கோமள வான் கன்றைப் புல்கிக்⋆ கோவிந்தன் மேய்த்தன என்னும்⋆
    போம் இள நாகத்தின் பின் போய்⋆ அவன் கிடக்கை ஈதென்னும்⋆
ஆமள ஒன்றும் அறியேன்⋆ அருவினை ஆட்டியேன் பெற்ற⋆
    கோமள வல்லியை மாயோன்⋆ மால் செய்து செய்கின்ற கூத்தே (5)

கூத்தர் குடம் எடுத்தாடில்⋆
    கோவிந்தனாம் எனா ஓடும்⋆
வாய்த்த குழல் ஓசை கேட்கில்⋆
    மாயவன் என்று மையாக்கும்⋆
ஆய்ச்சியர் வெண்ணெய்கள் காணில்⋆
    அவனுண்ட வெண்ணெய் ஈதென்னும்⋆
பேய்ச்சி முலை சுவைத்தாற்கு⋆
    என் பெண்கொடி ஏறிய பித்தே (6)

ஏறிய பித்தினோடு⋆ எல்லா உலகும் கண்ணன் படைப்பென்னும்⋆
    நீறு செவ்வேயிடக் காணில்⋆ நெடுமால் அடியார் என்றோடும்⋆
நாறு துழாய் மலர் காணில்⋆ நாரணன் கண்ணி ஈதென்னும்⋆
    தேறியும் தேறாது மாயோன்⋆ திறத்தனளே இத் திருவே (7)

திருவுடை மன்னரைக் காணில்⋆ திருமாலைக் கண்டேனே என்னும்⋆
    உருவுடை வண்ணங்கள் காணில்⋆ உலகளந்தான் என்று துள்ளும்⋆
கருவுடைத் தேவில்கள் எல்லாம்⋆ கடல் வண்ணன் கோயிலே என்னும்⋆
    வெருவிலும் வீழ்விலும் ஓவாக்⋆ கண்ணன் கழல்கள் விரும்புமே (8)

விரும்பிப் பகைவரைக் காணில்⋆
    வியல் இடம் உண்டானே! என்னும்⋆
கரும் பெரு மேகங்கள் காணில்⋆
    கண்ணன் என்றேறப் பறக்கும்⋆
பெரும் புல ஆநிரை காணில்⋆
    பிரானுளன் என்று பின் செல்லும்⋆
அரும் பெறல் பெண்ணினை மாயோன்⋆
    அலற்றி அயர்ப்பிக்கின்றானே (9)

அயர்க்கும் சுற்றும் பற்றி நோக்கி⋆
    அகலவே நீள் நோக்குக் கொள்ளும்⋆
வியர்க்கும் மழைக்கண் துளும்ப⋆
    வெவ்வுயிர்க் கொள்ளும் மெய் சோரும்⋆
பெயர்த்தும் கண்ணா! என்று பேசும்⋆
    பெருமானே! வா! என்று கூவும்⋆
மயல் பெருங்காதல் என் பேதைக்கு⋆
    என் செய்கேன் வல்வினையேனே (10)

‡வல்வினை தீர்க்கும் கண்ணனை⋆ வண் குருகூர்ச் சடகோபன்⋆
    சொல் வினையால் சொன்ன பாடல்⋆ ஆயிரத்துள் இவை பத்தும்⋆
நல்வினை என்று கற்பார்கள்⋆ நலனிடை வைகுந்தம் நண்ணி⋆
    தொல்வினை தீர எல்லாரும்⋆ தொழுதெழ வீற்றிருப்பாரே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வீற்றிருந்து ॥

## எம்பிரானுடைய இருப்பைக் கண்டு இன்புறல்

‡ வீற்றிருந்தேழ் உலகும்⋆ தனிக்கோல் செல்ல வீவில் சீர்⋆
ஆற்றல் மிக்காளும் அம்மானை⋆ வெம்மா பிளந்தான் தன்னை⋆
போற்றியென்றே கைகள் ஆரத்⋆ தொழுது சொல் மாலைகள்⋆
ஏற்ற நோற்றேற்கு⋆ இனியென்ன குறை எழுமையுமே (1)

மைய கண்ணாள் மலர் மேல் உறைவாள்⋆ உறை மார்பினன்⋆
செய்ய கோலத் தடங்கண்ணன்⋆ விண்ணோர் பெருமான் தன்னை⋆
மொய்ய சொல்லால் இசைமாலைகள் ஏத்தி⋆ உள்ளப் பெற்றேன்⋆
வெய்ய நோய்கள் முழுதும்⋆ வியன் ஞாலத்து வீயவே (2)

வீவில் இன்பமிக⋆ எல்லை நிகழ்ந்த நம் அச்சுதன்⋆
வீவில் சீரன் மலர்க் கண்ணன்⋆ விண்ணோர் பெருமான் தன்னை⋆
வீவில் காலம் இசைமாலைகள் ஏத்தி⋆ மேவப்பெற்றேன்⋆
வீவில் இன்பமிக⋆ எல்லை நிகழ்ந்தனன் மேவியே (3)

மேவி நின்று தொழுவார்⋆ வினை போக மேவும் பிரான்⋆
தூவியம் புள்ளுடையான்⋆ அடல் ஆழி அம்மான் தன்னை
நாவியலால் இசை மாலைகள் ஏத்தி⋆ நண்ணப் பெற்றேன்⋆
ஆவி என்னாவியை⋆ யான் அறியேன் செய்த ஆற்றையே (4)

ஆற்ற நல்ல வகை காட்டும் அம்மானை⋆ அமரர் தம்
ஏற்றை⋆ எல்லாப் பொருளும் விரித்தானை எம்மான் தன்னை⋆
மாற்ற மாலை புனைந்தேத்தி⋆ நாளும் மகிழ்வெய்தினேன்⋆
காற்றின் முன்னம் கடுகி⋆ வினைநோய்கள் கரியவே (5)

கரிய மேனிமிசை⋆ வெளிய நீறு சிறிதே இடும்⋆
பெரிய கோலத் தடங்கண்ணன்⋆ விண்ணோர் பெருமான் தன்னை⋆
உரிய சொல்லால் இசைமாலைகள் ஏத்தி⋆ உள்ளப் பெற்றேற்கு⋆
அரியதுண்டோ எனக்கு⋆ இன்று தொட்டும் இனியென்றுமே (6)

என்றும் ஒன்றாகி⋆ ஒத்தாரும் மிக்கார்களும்⋆ தன் தனக்கு
இன்றி நின்றானை⋆ எல்லா உலகும் உடையான் தன்னை⋆
குன்றம் ஒன்றால் மழை காத்த பிரானைச்⋆ சொல் மாலைகள்⋆
நன்று சூட்டும் விதியெய்தினம்⋆ என்ன குறை நமக்கே (7)

நமக்கும் பூவின் மிசை நங்கைக்கும்⋆ இன்பனை⋆ ஞாலத்தார்
தமக்கும்⋆ வானத்தவர்க்கும் பெருமானை⋆ தண் தாமரை
சுமக்கும்⋆ பாதப் பெருமானைச்⋆ சொல் மாலைகள் சொல்லுமாறு
அமைக்க வல்லேற்கு⋆ இனி யாவர் நிகர் அகல் வானத்தே (8)

வானத்தும் வானத்துள் உம்பரும்⋆ மண்ணுள்ளும் மண்ணின் கீழ்த்
தானத்தும்⋆ எண் திசையும் தவிராது⋆ நின்றான் தன்னை⋆
கூனல் சங்கத் தடக்கையவனைக்⋆ குடம் ஆடியை வானக்
கோனைக்⋆ கவி சொல்ல வல்லேற்கு⋆ இனி மாறுண்டோ (9)

உண்டும் உமிழ்ந்தும் கடந்தும் இடந்தும்⋆ கிடந்தும் நின்றும்⋆
கொண்ட கோலத்தொடு வீற்றிருந்தும்⋆ மணம் கூடியும்⋆
கண்ட ஆற்றால் தனக்கே⋆ உலகென நின்றான் தன்னை⋆
வண் தமிழ் நூற்க நோற்றேன்⋆ அடியார்க்கின்ப மாரியே (10)

‡ மாரி மாறாத தண்ணம்மலை⋆ வேங்கடத்தண்ணலை⋆
வாரி மாறாத பைம் பூம் பொழில் சூழ்⋆ குருகூர் நகர்⋆
காரி மாறன் சடகோபன்⋆ சொல் ஆயிரத்திப் பத்தால்⋆
வேரி மாறாத பூமேல் இருப்பாள்⋆ வினை தீர்க்குமே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தீர்ப்பாரை ॥

## வெறிவிலக்கு

‡தீர்ப்பாரையாம் இனி⋆ எங்ஙனம் நாடுதும் அன்னைமீர்⋆
ஓர்ப்பால் இவ்வொண்ணுதல்⋆ உற்ற நல் நோய் இது தேறினோம்⋆
போர்ப்பாகு தான் செய்து⋆ அன்றைவரை வெல்வித்த⋆ மாயப்போர்த்
தேர்ப்பாகனார்க்கு⋆ இவள் சிந்தை துழாய்த் திசைக்கின்றதே (1)

திசைக்கின்றதே இவள் நோய்⋆ இது மிக்க பெருந் தெய்வம்⋆
இசைப்பின்றி⋆ நீர் அணங்காடும் இளந் தெய்வம் அன்றிது⋆
திசைப்பின்றியே⋆ சங்கு சக்கரம் என்றிவள் கேட்க⋆ நீர்
இசைக்கிற்றிராகில்⋆ நன்றேஇல் பெறும் இது காண்மினே (2)

இது காண்மின் அன்னைமீர்!⋆ இக்கட்டுவிச்சி சொல் கொண்டு⋆ நீர்
எதுவானும் செய்து⋆ அங்கோர் கள்ளும் இறைச்சியும் தூவேன்மின்⋆
மதுவார் துழாய் முடி⋆ மாயப் பிரான் கழல் வாழ்த்தினால்⋆
அதுவே இவள் உற்ற நோய்க்கும்⋆ அரு மருந்தாகுமே (3)

மருந்தாகும் என்றங்கோர்⋆ மாய வலவை சொல் கொண்டு⋆ நீர்
கருஞ்சோறும் மற்றைச் செஞ்சோறும்⋆ களன் இழைத்தென் பயன்⋆
ஒருங்காகவே உலகேழும்⋆ விழுங்கி உமிழ்ந்திட்ட⋆
பெருந்தேவன் பேர் சொல்லகிற்கில்⋆ இவளைப் பெறுதிரே (4)

இவளைப் பெறும் பரிசு⋆ இவ்வணங்காடுதல் அன்றந்தோ⋆
குவளைத் தடங்கண்ணும்⋆ கோவைச் செவ்வாயும் பயந்தனள்⋆
கவளக் கடாக் களிறட்ட பிரான்⋆ திருநாமத்தால்⋆
தவளப் பொடிக் கொண்டு⋆ நீர் இட்டிடுமின் தணியுமே (5)

தணியும் பொழுதில்லை⋆ நீர் அணங்காடுதிர் அன்னைமீர்⋆
பிணியும் ஒழிகின்றதில்லை⋆ பெருகும் இதுவல்லால்⋆
மணியின் அணி நிற மாயன்⋆ தமர் அடி நீறு கொண்டு⋆
அணிய முயலின்⋆ மற்றில்லை கண்டீர் இவ்வணங்குக்கே (6)

அணங்குக்கரு மருந்தென்று⋆ அங்கோர் ஆடும் கள்ளும் பராய்⋆
துணங்கை எறிந்து⋆ நும் தோள் குலைக்கப்படும் அன்னைமீர்⋆
உணங்கல் கெடக்⋆ கழுதை உதடாட்டம் கண்டென் பயன்⋆
வணங்கீர்கள் மாயப் பிரான்⋆ தமர் வேதம் வல்லாரையே (7)

வேதம் வல்லார்களைக் கொண்டு⋆ விண்ணோர் பெருமான் திருப்
பாதம் பணிந்து⋆ இவள் நோய்⋆ இது தீர்த்துக் கொள்ளாது போய்⋆
ஏதம் பறைந்தல்ல செய்து⋆ கள்ளூடு கலாய்த் தூய்⋆
கீத முழவிட்டு⋆ நீர் அணங்காடுதல் கீழ்மையே (8)

கீழ்மையினால் அங்கோர்⋆ கீழ்மகன் இட்ட முழவின் கீழ்⋆
நாழ்மை பல சொல்லி⋆ நீர் அணங்காடும் பொய் காண்கிலேன்⋆
ஏழ்மைப் பிறப்புக்கும் சேமம்⋆ இந்நோய்க்கும் ஈதே மருந்து⋆
ஊழ்மையில் கண்ண பிரான்⋆ கழல் வாழ்த்துமின் உன்னித்தே (9)

உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள்⋆ அவனையல்லால்⋆
நும்மிச்சை சொல்லி⋆ நும் தோள் குலைக்கப்படும் அன்னைமீர்⋆
மன்னப் படும் மறைவாணனை⋆ வண் துவராபதி
மன்னனை⋆ ஏத்துமின் ஏத்துதலும்⋆ தொழுதாடுமே (10)

‡தொழுதாடி தூ மணி வண்ணனுக்கு⋆ ஆட்செய்து நோய் தீர்ந்த⋆
வழுவாத தொல் புகழ்⋆ வண் குருகூர்ச் சடகோபன்⋆ சொல்
வழுவாத ஆயிரத்துள்⋆ இவை பத்து வெறிகளும்⋆
தொழுதாடிப் பாட வல்லார்⋆ துக்க சீலம் இலர்களே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ சீலம் ல்லா ॥

திருமாலை வந்தருளுமாறு தன் குறைகூறி வருந்தி அழைத்தல்

‡சீலம் இல்லாச் சிறியனேலும்⋆ செய்வினையோ பெரிதால்⋆
ஞாலம் உண்டாய் ஞான மூர்த்தி⋆ நாராயணா! என்றென்று⋆
காலந்தோறும் யான் இருந்து⋆ கைதலை பூசல் இட்டால்⋆
கோல மேனி காண வாராய்⋆ கூவியும் கொள்ளாயே (1)

கொள்ள மாளா இன்ப வெள்ளம்⋆ கோதில தந்திடும்⋆ என்
வள்ளலேயோ! வையம் கொண்ட⋆ வாமனாவோ! என்றென்று⋆
நள்ளிராவும் நன் பகலும்⋆ நானிருந்தோலம் இட்டால்⋆
கள்ள மாயா! உன்னை⋆ என் கண் காண வந்தீயாயே (2)

ஈவிலாத தீவினைகள்⋆ எத்தனை செய்தனன்கொல்⋆
தாவி வையம் கொண்ட எந்தாய்!⋆ தாமோதரா! என்றென்று⋆
கூவிக் கூவி நெஞ்சுருகிக்⋆ கண்பனி சோர நின்றால்⋆
பாவி நீ என்றொன்று சொல்லாய்⋆ பாவியேன் காண வந்தே (3)

காண வந்தென் கண் முகப்பே⋆ தாமரைக் கண் பிறழ⋆
ஆணி செம்பொன் மேனியெந்தாய்!⋆ நின்றருளாய் என்றென்று⋆
நாணம் இல்லாச் சிறுதகையேன்⋆ நான் இங்கலற்றுவதென்⋆
பேணி வானோர் காணமாட்டாப்⋆ பீடுடை அப்பனையே (4)

அப்பனே! அடல் ஆழியானே⋆ ஆழ் கடலைக் கடைந்த
துப்பனே⋆ உன் தோள்கள் நான்கும்⋆ கண்டிடக் கூடுங்கொல் என்று⋆
எப்பொழுதும் கண்ண நீர் கொண்டு⋆ ஆவி துவர்ந்து துவர்ந்து⋆
இப்போழுதே வந்திடாய் என்று⋆ ஏழையேன் நோக்குவனே (5)

நோக்கி நோக்கி உன்னைக் காண்பான்⋆ யான் எனதாவியுள்ளே⋆
நாக்கு நீள்வன் ஞானம் இல்லை⋆ நாள்தோறும் என்னுடைய⋆
ஆக்கையுள்ளும் ஆவியுள்ளும்⋆ அல்ல புறத்தினுள்ளும்⋆
நீக்கம் இன்றி எங்கும் நின்றாய்!⋆ நின்னை அறிந்தறிந்தே (6)

அறிந்தறிந்து தேறித் தேறி⋆ யான் எனதாவியுள்ளே⋆
நிறைந்த ஞான மூர்த்தியாயை⋆ நின்மலமாக வைத்து⋆
பிறந்தும் செத்தும் நின்றிடறும்⋆ பேதைமை தீர்ந்தொழிந்தேன்⋆
நறுந் துழாயின் கண்ணியம்மா!⋆ நான் உன்னைக் கண்டு
கொண்டே (7)

கண்டு கொண்டென் கைகள் ஆர⋆ நின் திருப்பாதங்கள் மேல்⋆
என் திசையும் உள்ள பூக் கொண்டு⋆ ஏத்தி உகந்துகந்து⋆
தொண்டரோங்கள் பாடியாடச்⋆ சூழ் கடல் ஞாலத்துள்ளே⋆
வண் துழாயின் கண்ணி வேந்தே!⋆ வந்திடகில்லாயே (8)

இட கிலேன் ஒன்றட்ட கில்லேன்⋆ ஐம்புலன் வெல்ல கில்லேன்⋆
கடவன் ஆகிக் காலந்தோறும்⋆ பூப் பறித்தேத்த கில்லேன்⋆
மடவல் நெஞ்சம் காதல் கூர⋆ வல்வினையேன் அயர்ப்பாய்⋆
தடவுகின்றேன் எங்குக் காண்பன்⋆ சக்கரத்தண்ணலையே (9)

சக்கரத்தண்ணலே என்று⋆ தாழ்ந்து கண்ணீர் ததும்ப⋆
பக்கம் நோக்கி நின்றலந்தேன்⋆ பாவியேன் காண்கின்றிலேன்⋆
மிக்க ஞான மூர்த்தியாய⋆ வேத விளக்கினை⋆ என்
தக்க ஞானக் கண்களாலே⋆ கண்டு தழுவுவனே (10)

‡தழுவி நின்ற காதல் தன்னால்⋆ தாமரைக் கண்ணந் தன்னை⋆
குழுவு மாடத் தென் குருகூர்⋆ மாறன் சடகோபன்⋆ சொல்
வழுவிலாத ஒண் தமிழ்கள்⋆ ஆயிரத்துள் இப்பத்தும்⋆
தழுவப் பாடியாட வல்லார்⋆ வைகுந்தம் ஏறுவரே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஏறாளும் ॥

எம்பிரான் விரும்பாதவைகளால் தமக்குப் பயன் இல்லை என்று தலைவி கூற்றாகப் பேசுதல்

‡ஏறாளும் இறையோனும்⋆ திசைமுகனும் திருமகளும்⋆
கூறாளும் தனியுடம்பன்⋆ குலம் குலமா அசுரர்களை⋆
நீறாகும் படியாக⋆ நிருமித்துப் படைதொட்ட⋆
மாறாளன் கவராத⋆ மணி மாமை குறைவிலமே (1)

மணி மாமை குறைவில்லா⋆ மலர்மாதர் உறை மார்வன்⋆
அணி மானத் தடவரைத் தோள்⋆ அடல் ஆழித் தடக்கையன்⋆
பணி மானம் பிழையாமே⋆ அடியேனைப் பணி கொண்ட⋆
மணிமாயன் கவராத⋆ மட நெஞ்சால் குறைவிலமே (2)

மட நெஞ்சால் குறைவில்லா⋆ மகள் தாய் செய்தொரு பேய்ச்சி⋆
விட நஞ்ச முலை சுவைத்த⋆ மிகு ஞானச் சிறு குழவி⋆
படநாகத் தணைக் கிடந்த⋆ பரு வரைத்தோள் பரம்புருடன்⋆
நெடுமாயன் கவராத⋆ நிறையினால் குறைவிலமே (3)

நிறையினால் குறைவில்லா⋆
நெடும் பணைத்தோள் மடப் பின்னை⋆
பொறையினால் முலையணைவான்⋆
பொரு விடை ஏழ் அடர்த்துகந்த⋆
கறையினார் துவர் உடுக்கை⋆
கடையாவின் கழி கோல் கைச்⋆
சறையினார் கவராத⋆
தளிர் நிறத்தால் குறைவிலமே (4)

தளிர்நிறத்தால் குறைவில்லாத்⋆ தனிச் சிறையில் விளப்புற்ற⋆
கிளிமொழியாள் காரணமாக்⋆ கிளர் அரக்கன் நகர் எரித்த⋆

களி மலர்த் துழாய் அலங்கல்⋆ கமழ் முடியன் கடல் ஞாலத்து⋆
அளிமிக்கான் கவராத⋆ அறிவினால் குறைவிலமே (5)

அறிவினால் குறைவில்லா⋆ அகல் ஞாலத்தவர் அறிய⋆
நெறியெல்லாம் எடுத்துரைத்த⋆ நிறை ஞானத்தொரு மூர்த்தி⋆
குறிய மாண் உருவாகிக்⋆ கொடுங்கோளால் நிலம் கொண்ட⋆
கிறியம்மான் கவராத⋆ கிளர் ஒளியால் குறைவிலமே (6)

கிளர் ஒளியால் குறைவில்லா⋆ அரியுருவாய்க் கிளர்ந்தெழுந்து⋆
கிளர் ஒளிய இரணியனது⋆ அகல் மார்பம் கிழித்துகந்த⋆
வளர் ஒளிய கனல் ஆழி⋆ வலம்புரியன் மணி நீல⋆
வளர் ஒளியான் கவராத⋆ வரி வளையால் குறைவிலமே (7)

வரி வளையால் குறைவில்லாப்⋆ பெரு முழக்கால் அடங்காரை⋆
எரியழலம் புகவூதி⋆ இரு நிலமுன் துயர் தவிர்த்த⋆
தெரிவரிய சிவன் பிரமன்⋆ அமரர் கோன் பணிந்தேத்தும்⋆
விரி புகழான் கவராத⋆ மேகலையால் குறைவிலமே (8)

மேகலையால் குறைவில்லா⋆ மெலிவுற்ற அகல் அல்குல்⋆
போகமகள் புகழ்த்தந்தை⋆ விறல் வாணன் புயம் துணித்து⋆
நாகமிசைத் துயில்வான் போல்⋆ உலகெல்லாம் நன்கொடுங்க⋆
யோகணைவான் கவராத⋆ உடம்பினால் குறைவிலமே (9)

உடம்பினால் குறைவில்லா⋆ உயிர் பிரிந்த மலைத்துண்டம்⋆
கிடந்தன போல் துணி பலவா⋆ அசுரர் குழாம் துணித்துகந்த⋆
தடம் புனல சடைமுடியன்⋆ தனியொரு கூறமர்ந்துறையும்⋆
உடம்புடையான் கவராத⋆ உயிரினால் குறைவிலமே (10)

‡உயிரினால் குறைவில்லா⋆ உலகேழ் தன்னுள் ஒடுக்கி⋆
தயிர் வெண்ணெய் உண்டானைத்⋆ தடம் குருகூர்ச் சடகோபன்⋆
செயிரில் சொல் இசைமாலை⋆ ஆயிரத்துள் இப்பத்தால்⋆
வயிரம் சேர் பிறப்பறுத்து⋆ வைகுந்தம் நண்ணுவரே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ நண்ணாதார் ‖

உலகியற்கையில் வெறுப்புற்ற ஆழ்வார் திருவடி சேர்க்குமாறு
எம்பெருமானை வேண்டுதல்

‡நண்ணாதார் முறுவலிப்ப⋆ நல்லுற்றார் கரைந்தேங்க⋆
எண்ணாராத் துயர் விளைக்கும்⋆ இவையென்ன உலகியற்கை⋆
கண்ணாளா! கடல் கடைந்தாய்!⋆ உன் கழற்கே வரும் பரிசு⋆
தண்ணாவாதடியேனைப்⋆ பணி கண்டாய் சாமாறே (1)

சாமாறும் கெடுமாறும்⋆ தமர் உற்றார் தலைத்தலைப்பெய்து⋆
ஏமாறிக் கிடந்தலற்றும்⋆ இவையென்ன உலகியற்கை⋆
ஆமாறொன்றறியேன் நான்⋆ அரவணையாய்! அம்மானே⋆
கூமாறே விரை கண்டாய்⋆ அடியேனைக் குறிக்கொண்டே (2)

கொண்டாட்டும் குலம் புனைவும்⋆ தமர் உற்றார் விழு நிதியும்⋆
வண்டார் பூங்குழலாளும்⋆ மனையொழிய உயிர் மாய்தல்⋆
கண்டாற்றேன் உலகியற்கை⋆ கடல் வண்ணா! அடியேனை⋆
பண்டே போல் கருதாது⋆ உன்னடிக்கே கூய்ப்பணிகொள்ளே (3)

கொள்ளென்று கிளர்ந்தெழுந்த⋆ பெரும் செல்வம் நெருப்பாக⋆
கொள்ளென்று தம மூடும்⋆ இவையென்ன உலகியற்கை⋆
வள்ளலே! மணிவண்ணா!⋆ உன கழற்கே வரும்பரிசு⋆
வள்ளல் செய்தடியேனை⋆ உனதருளால் வாங்காயே (4)

வாங்கு நீர் மலர் உலகில்⋆ நிற்பனவும் திரிவனவும்⋆
ஆங்குயிர்கள் பிறப்பிறப்புப்⋆ பிணி மூப்பால் தகர்ப்புண்ணும்⋆
ஈங்கிதன்மேல் வெந்நரகம்⋆ இவையென்ன உலகியற்கை⋆
வாங்கெனை நீ மணிவண்ணா!⋆ அடியேனை மறுக்கேலே (5)

மறுக்கி வல் வலைப்படுத்திக்⋆ குமைத்திட்டுக் கொன்றுண்பர்⋆
அறப்பொருளை அறிந்தோரார்⋆ இவையென்ன உலகியற்கை⋆

வெறித் துளவ முடியானே!⋆ வினையேனை உனக்கடிமை⋆
அறக்கொண்டாய்⋆ இனி என்னார் அமுதே!⋆ கூயருளாயே (6)

ஆயே! இவ்வுலகத்து⋆ நிற்பனவும் திரிவனவும்⋆
நீயே மற்றொரு பொருளும்⋆ இன்றி நீ நின்றமையால்⋆
நோயே மூப்பிறப்பிறப்புப்⋆ பிணியே என்றிவை ஒழியக்⋆
கூயேகொள் அடியேனைக்⋆ கொடுவுலகம் காட்டேலே (7)

காட்டி நீ கரந்துமிழும்⋆ நில நீர் தீ விசும்பு கால்⋆
ஈட்டீ நீ வைத்தமைத்த⋆ இமையோர் வாழ் தனி முட்டைக்⋆
கோட்டையினில் கழித்து⋆ எனை உன் கொழும் சோதி உயரத்து⋆
கூட்டரிய திருவடிக்கள்⋆ எஞ்ஞான்று கூட்டுதியே (8)

கூட்டுதி நின் குரை கழல்கள்⋆ இமையோரும் தொழாவகை செய்து⋆
ஆட்டுதி நீ அரவணையாய்!⋆ அடியேனும் அஃதறிவன்⋆
வேட்கையெல்லாம் விடுத்து⋆ எனை உன் திருவடியே சுமந்துழல⋆
கூட்டரிய திருவடிக்கள்⋆ கூட்டினை நான் கண்டேனே (9)

கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலும்⋆ ஐங்கருவி
கண்ட இன்பம்⋆ தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம்⋆
ஒண் தொடியாள் திருமகளும்⋆ நீயுமே நிலா நிற்ப⋆
கண்ட சதிர் கண்டொழிந்தேன்⋆ அடைந்தேன் உன் திருவடியே (10)

‡திருவடியை நாரணனைக்⋆ கேசவனைப் பரஞ்சுடரை⋆
திருவடி சேர்வது கருதிச்⋆ செழுங்குருகூர்ச் சடகோபன்⋆
திருவடிமேல் உரைத்த தமிழ்⋆ ஆயிரத்துள் இப்பத்தும்⋆
திருவடியே அடைவிக்கும்⋆ திருவடி சேர்ந்தொன்றுமினே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஒன்றுந்தேவும் ॥

எம்பெருமான் எல்லாத் தேவர்கட்கும் மேம்பட்டவன் எனல்

‡ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும்⋆ யாதும் இல்லா
அன்று⋆ நான்முகன் தன்னொடு⋆ தேவர் உலகோடுயிர் படைத்தான்⋆
குன்றம் போல் மணி மாடம் நீடு⋆ திருக்குருகூர் அதனுள்⋆
நின்ற ஆதிப்பிரான் நிற்க⋆ மற்றைத்தெய்வம் நாடுதிரே (1)

நாடி நீர் வணங்கும் தெய்வமும்⋆ உம்மையும் முன் படைத்தான்⋆
வீடில் சீர்ப் புகழ் ஆதிப்பிரான்⋆ அவன் மேவி உறை கோயில்⋆
மாட மாளிகை சூழ்ந்தழகாய⋆ திருக்குருகூர் அதனைப்⋆
பாடியாடிப் பரவிச் சென்மின்கள்⋆ பல்லுலகீர்! பரந்தே (2)

பரந்த தெய்வமும் பல்லுலகும் படைத்து⋆
அன்றுடனே விழுங்கிக்⋆
கரந்துமிழ்ந்து கடந்திடந்தது⋆
கண்டும் தெளியகில்லீர்⋆
சிரங்களால் அமரர் வணங்கும்⋆
திருக்குருகூர் அதனுள்⋆
பரன் திறம் அன்றிப் பல்லுலகீர்!⋆ தெய்வம்
மற்றில்லை பேசுமினே (3)

பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும்⋆ பிறர்க்கும்
நாயகன் அவனே⋆ கபாலநன் மோக்கத்துக்⋆ கண்டுகொள்மின்⋆
தேச மா மதிள் சூழ்ந்தழகாய⋆ திருக்குருகூர் அதனுள்⋆
ஈசன்பால் ஓர் அவம் பறைதல்⋆ என்னாவதிலிங்கியர்க்கே (4)

‡இலிங்கத்திட்ட புராணத்தீரும்⋆
சமணரும் சாக்கியரும்⋆
வலிந்து வாது செய்வீர்களும்⋆ மற்று நும்
தெய்வமும் ஆகி நின்றான்⋆

மலிந்து செந்நெல் கவரி வீசும்⋆
    திருக்குருகூர் அதனுள்⋆
பொலிந்து நின்ற பிரான் கண்டீர்⋆ ஒன்றும்
    பொய்யில்லை போற்றுமினே (5)

போற்றி மற்றோர் தெய்வம்⋆ பேணப்புறத்திட்டு⋆ உம்மையின்னே
    தேற்றி வைத்தது⋆ எல்லீரும் வீடு பெற்றால் உலகில்லை என்றே⋆
சேற்றில் செந்நெல் கமலம் ஓங்கு⋆ திருக்குருகூர் அதனுள்⋆
    ஆற்ற வல்லவன் மாயம் கண்டீர்⋆ அதறிந்தறிந்தோடுமினே (6)

ஓடியோடிப் பல் பிறப்பும் பிறந்து⋆ மற்றோர் தெய்வம்
    பாடியாடிப் பணிந்து⋆ பல்படிகால் வழியேறிக் கண்டீர்⋆
கூடி வானவர் ஏத்த நின்ற⋆ திருக்குருகூர் அதனுள்⋆
    ஆடு புட்கொடி ஆதி மூர்த்திக்கு⋆ அடிமை புகுவதுவே (7)

புக்கடிமையினால் தன்னைக் கண்ட⋆ மார்க்கண்டேயன் அவனை⋆
    நக்க பிரானும் அன்றுய்யக்கொண்டது⋆ நாராயணன் அருளே⋆
கொக்கலர் தடந்தாழை வேலித்⋆ திருக்குருகூர் அதனுள்⋆
    மிக்க ஆதிப்பிரான் நிற்க⋆ மற்றைத்தெய்வம் விளம்புதிரே (8)

விளம்பும் ஆறு சமயமும்⋆
    அவையாகியும் மற்றும் தன்பால்⋆
அளந்து காண்டற்கரியன் ஆகிய⋆
    ஆதிப்பிரான் அமரும்⋆
வளங்கொள் தண்பணை சூழ்ந்தழகாய⋆
    திருக்குருகூர் அதனை⋆
உளங்கொள் ஞானத்து வைம்மின்⋆ உம்மை
    உய்யக்கொண்டு போகுறிலே (9)

உறுவதாவதெத்தேவும்⋆
    எவ்வுலகங்களும் மற்றும் தன்பால்⋆
மறுவில் மூர்த்தியோடொத்து⋆ இத்தனையும்
    நின்ற வண்ணம் நிற்கவே⋆

செறுவில் செந்நெல் கரும்பொடோங்கு⋆
திருக்குருகூர் அதனுள்⋆
குறிய மாண் உருவாகிய⋆
நீள் குடக்கூத்தனுக்காள் செய்வதே (10)

‡ஆட்செய்தாழிப் பிரானைச் சேர்ந்தவன்⋆ வண் குருகூர் நகரான்⋆
நாட்கமழ் மகிழ் மாலை மார்பினன்⋆ மாறன் சடகோபன்⋆
வேட்கையால் சொன்ன பாடல்⋆ ஆயிரத்துள் இப்பத்தும் வல்லார்⋆
மீட்சி இன்றி வைகுந்த மாநகர்⋆ மற்றது கையதுவே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ கையார் ॥

## உண்மையான பக்தி இல்லாத நிலையிலும் சிறந்த பேற்றை அருளும் எம்பெருமான் கருணைத் திறம்

‡கையார் சக்கரத்து⋆ என் கருமாணிக்கமே! என்றென்று⋆
பொய்யே கைம்மை சொல்லிப்⋆ புறமே புறமே ஆடி⋆
மெய்யே பெற்றொழிந்தேன்⋆ விதிவாய்க்கின்று காப்பாரார்⋆
ஐயோ கண்ண பிரான்!⋆ அறையோ இனிப் போனாலே (1)

போனாய் மா மருதின் நடுவே⋆ என் பொல்லா மணியே⋆
தேனே! இன்னமுதே!⋆ என்றென்றே சில கூற்றுச்சொல்ல⋆
தானேல் எம் பெருமான்⋆ அவன் என்னாகி ஒழிந்தான்⋆
வானே மா நிலமே⋆ மற்று முற்றும் என்னுள்ளனவே (2)

உள்ளன மற்றுளவாப்⋆ புறமே சில மாயம் சொல்லி⋆
வள்ளல் மணிவண்ணனே!⋆ என்றென்றே உனையும் வஞ்சிக்கும்⋆
கள்ள மனம் தவிர்ந்தே⋆ உனைக் கண்டு கொண்டுய்ந்தொழிந்தேன்⋆
வெள்ளத்தணைக் கிடந்தாய்⋆ இனி உன்னை விட்டென்-
கொள்வனே (3)

என் கொள்வன் உன்னை விட்டென்னும்⋆ வாசகங்கள் சொல்லியும்⋆
வன் கள்வனேன் மனத்தை வலித்துக்⋆ கண்ண நீர் கரந்து⋆
நின்கண் நெருங்க வைத்தே⋆ எனதாவியை நீக்ககில்லேன்⋆
என்கண் மலினம் அறுத்து⋆ என்னைக் கூவி அருளாய் கண்ணனே (4)

கண்ண பிரானை⋆ விண்ணோர் கரு மாணிக்கத்தை அமுதை⋆
நண்ணியும் நண்ணகில்லேன்⋆ நடுவேயோர் உடம்பில் இட்டு⋆
திண்ணம் அழுந்தக் கட்டிப்⋆ பல செய்வினை வன் கயிற்றால்⋆
புண்ணை மறைய வரிந்து⋆ என்னைப் போர வைத்தாய் புறமே (5)

புறம் அறக் கட்டிக் கொண்டு⋆ இரு வல்வினையார் குமைக்கும்⋆
முறை முறை யாக்கை புகல் ஒழியக்⋆ கண்டு கொண்டொழிந்தேன்⋆

நிறம் உடை நால் தடம் தோள்⋆ செய்ய வாய் செய்ய தாமரைக் கண்⋆
அறமுயல் ஆழியங்கைக்⋆ கருமேனி அம்மான் தன்னையே (6)

அம்மான் ஆழிப்பிரான்⋆ அவன் எவ்விடத்தான் யானார்⋆
எம்மா பாவியர்க்கும்⋆ விதி வாய்க்கின்று வாய்க்கும் கண்டீர்⋆
கைம்மா துன்பொழித்தாய்! என்று⋆ கை தலை பூசல் இட்டே⋆
மெய்ம் மாலாய் ஒழிந்தேன்⋆ எம்பிரானும் என் மேலானே (7)

மேலாத் தேவர்களும்⋆ நிலத் தேவரும் மேவித் தொழும்⋆
மாலார் வந்தினநாள்⋆ அடியேன் மனத்தே மன்னினார்⋆
சேலேய் கண்ணியரும்⋆ பெரும் செல்வமும் நன்மக்களும்⋆
மேலாத் தாய் தந்தையும்⋆ அவரே இனி ஆவாரே (8)

ஆவாரார் துணை என்று⋆ அலை நீர்க் கடலுள் அழுந்தும்
நாவாய் போல்⋆ பிறவிக் கடலுள்⋆ நின்று நான் துளங்க⋆
தேவார் கோலத்தொடும்⋆ திருச்சக்கரம் சங்கினொடும்⋆
ஆவா! என்றருள் செய்து⋆ அடியேனொடும் ஆனானே (9)

ஆனான் ஆளுடையான் என்று⋆ அஃதே கொண்டுகந்து வந்து⋆
தானே இன்னருள் செய்து⋆ என்னை முற்றவும் தான் ஆனான்⋆
மீனாய் ஆமையுமாய்⋆ நரசிங்கமுமாய்க் குறளாய்⋆
கானார் ஏனமுமாய்க்⋆ கற்கியாம் இன்னம் கார் வண்ணனே (10)

‡கார் வண்ணன் கண்ண பிரான்⋆ கமலத் தடங்கண்ணன் தன்னை⋆
ஏர்வள ஒண்கழனிக்⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
சீர் வண்ண ஒண் தமிழ்கள்⋆ இவை ஆயிரத்துள் இப்பத்தும்⋆
ஆர்வண்ணத்தால் உரைப்பார்⋆ அடிக்கீழ் புகுவார் பொலிந்தே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ பொலிக ॥

அடியார் திருக்கூட்டத்தைக் கண்டு வாழ்த்தல்

‡பொலிக பொலிக பொலிக!⋆
போயிற்று வல்லுயிர்ச் சாபம்⋆
நலியும் நரகமும் நைந்த⋆
நமனுக்கிங்கு யாதொன்றும் இல்லை⋆
கலியும் கெடும் கண்டு கொள்மின்⋆
கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்⋆
மலியப் புகுந்திசை பாடி⋆
ஆடி உழிதரக் கண்டோம் (1)

கண்டோம் கண்டோம் கண்டோம்⋆ கண்ணுக்கினியன கண்டோம்⋆
தொண்டீர்! எல்லீரும் வாரீர்⋆ தொழுது தொழுது நின்றார்த்தும்⋆
வண்டார் தண்ணன் துழாயான்⋆ மாதவன் பூதங்கள் மண்மேல்⋆
பண் தான் பாடி நின்றாடிப்⋆ பரந்து திரிகின்றனவே (2)

திரியும் கலியுகம் நீங்கித்⋆ தேவர்கள் தாமும் புகுந்து⋆
பெரிய கிதயுகம் பற்றிப்⋆ பேரின்ப வெள்ளம் பெருக⋆
கரிய முகில்வண்ணன் எம்மான்⋆ கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்⋆
இரியப் புகுந்திசை பாடி⋆ எங்கும் இடம் கொண்டனவே (3)

இடம் கொள் சமயத்தை எல்லாம்⋆ எடுத்துக் களைவன போல⋆
தடம் கடல் பள்ளிப் பெருமான்⋆ தன்னுடைப் பூதங்களேயாய்⋆
கிடந்தும் இருந்தும் எழுந்தும்⋆ கீதம் பலபல பாடி⋆
நடந்தும் பறந்தும் குனித்தும்⋆ நாடகம் செய்கின்றனவே (4)

செய்கின்றதென் கண்ணுக்கொன்றே⋆
ஒக்கின்றதிவ்வுலகத்து⋆
வைகுந்தன் பூதங்களேயாய்⋆
மாயத்தினால் எங்கும் மன்னி⋆

ஐயம் ஒன்றில்லை அரக்கர்⋆
    அசுரர் பிறந்தீர் உள்ளீரேல்⋆
உய்யும் வகையில்லை தொண்டீர்!⋆
    ஊழி பெயர்த்திடும் கொன்றே (5)

கொன்றுயிர் உண்ணும் விசாதி⋆
    பகை பசி தீயன எல்லாம்⋆
நின்றிவ்வுலகில் கடிவான்⋆
    நேமிப் பிரான் தமர் போந்தார்⋆
நன்றிசை பாடியும் துள்ளி
    ஆடியும்⋆ ஞாலம் பரந்தார்⋆
சென்று தொழுதுய்ம்மின் தொண்டீர்!⋆
    சிந்தையைச் செந்நிறுத்தியே (6)

நிறுத்தி நும் உள்ளத்துக் கொள்ளும்⋆
    தெய்வங்கள் உம்மை உய்யக்கொள்⋆
மறுத்தும் அவனோடே கண்டீர்⋆
    மார்க்கண்டேயனும் கரியே⋆
கறுத்த மனம் ஒன்றும் வேண்டா⋆
    கண்ணன் அல்லால் தெய்வம் இல்லை⋆
இறுப்பதெல்லாம் அவன் மூர்த்தியாய்⋆
    அவர்க்கே இறுமினே (7)

இறுக்கும் இறை இறுத்துண்ண⋆ எவ்வுலகுக்கும் தன் மூர்த்தி⋆
    நிறுத்தினான் தெய்வங்கள் ஆக⋆ அத்தெய்வ நாயகன் தானே⋆
மறுத் திரு மார்வன் அவன் தன்⋆ பூதங்கள் கீதங்கள் பாடி⋆
    வெறுப்பின்றி ஞாலத்து மிக்கார்⋆ மேவித் தொழுதுய்ம்மின் நீரே (8)

மேவித் தொழுதுய்ம்மினீர்கள்⋆ வேதப் புனித இருக்கை⋆
    நாவில் கொண்டச்சுதன் தன்னை⋆ ஞான விதி பிழையாமே⋆
பூவில் புகையும் விளக்கும்⋆ சாந்தமும் நீரும் மலிந்து⋆
    மேவித் தொழும் அடியாரும்⋆ பகவரும் மிக்கதுலகே (9)

மிக்க உலகுகள் தோறும்⋆ மேவிக் கண்ணன் திரு மூர்த்தி⋆
நக்க பிரானோடு⋆ அயனும் இந்திரனும் முதலாக⋆
தொக்க அமரர் குழாங்கள்⋆ எங்கும் பரந்தன தொண்டீர்!⋆
ஒக்கத் தொழ கிற்றிராகில்⋆ கலியுகம் ஒன்றும் இல்லையே (10)

‡கலியுகம் ஒன்றும் இன்றிக்கே⋆ தன் அடியார்கருள் செய்யும்⋆
மலியும் சுடர் ஒளி மூர்த்தி⋆ மாயப் பிரான் கண்ணன் தன்னை⋆
கலிவயல் தென்னன் குருகூர்⋆ காரிமாறன் சடகோபன்⋆
ஒலி புகழ் ஆயிரத்திப்பத்து⋆ உள்ளத்தை மாசறுக்குமே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மாசறு சோதி ॥

## தலைமகள் காதல் கைமுக்கு மடலூரத் துணிதல்

‡மாசறு சோதி⋆ என் செய்யவாய் மணிக்குன்றத்தை⋆
ஆசறு சீலனை⋆ ஆதி மூர்த்தியை நாடியே⋆
பாசறவெய்தி⋆ அறிவிழந்தெனை நாளையம்⋆
ஏசறு மூரவர் கவ்வை⋆ தோழீ! என் செய்யுமே (1)

என் செய்யும் ஊரவர் கவ்வை⋆ தோழீ! இனி நம்மை⋆
என் செய்ய தாமரைக் கண்ணன்⋆ என்னை நிறை கொண்டான்⋆
முன் செய்ய மாமை இழந்து⋆ மேனி மெலிவெய்தி⋆
என் செய்ய வாயும் கருங்கண்ணும்⋆ பயப்பூர்ந்தவே (2)

ஊர்ந்த சகடம்⋆ உதைத்த பாதத்தன்⋆ பேய்முலை
சார்ந்து சுவைத்த செவ்வாயன்⋆ என்னை நிறை கொண்டான்⋆
பேர்ந்தும் பெயர்ந்தும்⋆ அவனோடன்றி ஓர் சொல்லிலேன்⋆
தீர்ந்த என் தோழீ!⋆ என்செய்யும் ஊரவர் கவ்வையே (3)

ஊரவர் கவ்வை எருவிட்டு⋆ அன்னை சொல் நீர் மடுத்து⋆
ஈர நெல் வித்தி முளைத்த⋆ நெஞ்சப் பெருஞ்செய்யுள்⋆
பேரமர் காதல்⋆ கடல் புரைய விளைவித்த⋆
கார் அமர் மேனி⋆ நம் கண்ணன் தோழீ! கடியனே (4)

கடியன் கொடியன்⋆ நெடியமால் உலகம் கொண்ட
அடியன்⋆ அறிவரு மேனி மாயத்தன்⋆ ஆகிலும்
கொடிய என் நெஞ்சம்⋆ அவன் என்றே கிடக்கும் எல்லே⋆
துடி கொளிடை மடத்தோழீ!⋆ அன்னை என் செய்யுமே (5)

அன்னை என் செய்யில் என்⋆ ஊர் என் சொல்லில் என் தோழிமீர்⋆
என்னை இனி உமக்காசை இல்லை⋆ அகப்பட்டேன்⋆
முன்னை அமரர் முதல்வன்⋆ வண் துவராபதி
மன்னன்⋆ மணிவண்ணன் வாசுதேவன் வலையுளே (6)

வலையுள் அகப்படுத்து⋆ என்னை நல் நெஞ்சம் கூவிக் கொண்டு⋆
அலை கடல் பள்ளியம்மானை⋆ ஆழிப்பிரான் தன்னை⋆
கலை கொள் அகல் அல்குல் தோழீ!⋆ நம் கண்களால் கண்டு⋆
தலையில் வணங்கவும் ஆங்கொலோ⋆ தையலார் முன்பே (7)

பேய் முலை உண்டு சகடம் பாய்ந்து⋆ மருதிடைப்
போய் முதல் சாய்த்து⋆ புள்வாய் பிளந்து களிறட்ட⋆
தூ முறுவல் தொண்டை வாய்ப் பிரானை⋆ எந்நாள் கொலோ⋆
யாம் உறுகின்றது தோழீ!⋆ அன்னையர் நாணவே (8)

நாணும் நிறையும் கவர்ந்து⋆ என்னை நல் நெஞ்சம் கூவிக் கொண்டு⋆
சேண் உயர் வானத்திருக்கும்⋆ தேவ பிரான் தன்னை⋆
ஆணை என் தோழீ!⋆ உலகுதோறலர் தூற்றி⋆ ஆம்
கோணைகள் செய்து⋆ குதிரியாம் மடல் ஊர்துமே (9)

யாம் மடல் ஊர்ந்தும்⋆ எம் ஆழியங்கைப் பிரான் உடை⋆
தூ மடல் தண்ணன் துழாய்⋆ மலர் கொண்டு சூடுவோம்⋆
யாம் மடம் இன்றித்⋆ தெருவுதோறயல் தையலார்⋆
நா மடங்காப் பழி தூற்றி⋆ நாடும் இரைக்கவே (10)

‡இரைக்கும் கருங்கடல் வண்ணன்⋆ கண்ண பிரான் தன்னை⋆
விரைக் கொள் பொழில்⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
நிரைக் கொள் அந்தாதி⋆ ஓர் ஆயிரத்துள் இப்பத்தும்⋆
உரைக்க வல்லார்க்கு⋆ வைகுந்தம் ஆகும் தம் ஊர் எல்லாம் (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஊரெல்லாம் ॥

தலைவி இரவு நீட்டிப்புக்கு வருந்தி கூறல்

‡ஊர் எல்லாம் துஞ்சி⋆ உலகெல்லாம் நள்ளிருளாய்⋆
நீர் எல்லாம் தேறி⋆ ஓர் நீள் இரவாய் நீண்டதால்⋆
பார் எல்லாம் உண்ட⋆ நம் பாம்பணையான் வாரானால்⋆
ஆர் எல்லே! வல்வினையேன்⋆ ஆவி காப்பார் இனியே (1)

ஆவி காப்பார் இனி யார்⋆ ஆழ் கடல் மண் விண் மூடி
மாவி காரமாய்⋆ ஓர் வல்லிரவாய் நீண்டதால்⋆
காவி சேர் வண்ணன்⋆ என் கண்ணனும் வாரானால்⋆
பாவியேன் நெஞ்சமே!⋆ நீயும் பாங்கல்லையே (2)

நீயும் பாங்கல்லைகாண்⋆ நெஞ்சமே! நீள் இரவும்⋆
ஓயும் பொழுதின்றி⋆ ஊழியாய் நீண்டதால்⋆
காயும் கடும் சிலை⋆ என் காகுத்தன் வாரானால்⋆
மாயும் வகை அறியேன்⋆ வல் வினையேன் பெண் பிறந்தே (3)

பெண் பிறந்தார் எய்தும்⋆ பெரும் துயர் காண்கிலேன் என்று⋆
ஒண் சுடரோன்⋆ வாராதொளித்தான்⋆ இம்மண் அளந்த
கண் பெரிய செவ்வாய்⋆ எம் காரேறு வாரானால்⋆
எண் பெரிய சிந்தை நோய்⋆ தீர்ப்பாரார் என்னையே (4)

ஆர் என்னை ஆராய்வார்⋆ அன்னையரும் தோழியரும்⋆
நீர் என்னே! என்னாதே⋆ நீள் இரவும் துஞ்சுவரால்⋆
கார் அன்ன மேனி⋆ நம் கண்ணனும் வாரானால்⋆
பேர் என்னை மாயாதால்⋆ வல்வினையேன் பின் நின்றே (5)

பின் நின்ற காதல் நோய்⋆ நெஞ்சம் பெரிதடுமால்⋆
முன் நின்றிரா ஊழி⋆ கண் புதைய மூடிற்றால்⋆
மன் நின்ற சக்கரத்து⋆ எம் மாயவனும் வாரானால்⋆
இந்நின்ற நீள் ஆவி⋆ காப்பார் ஆர் இவ்விடத்தே (6)

காப்பார் ஆர் இவ்விடத்து⋆ கங்கிருளின் நுண் துளியாய்⋆
சேண் பாலதூழியாய்ச்⋆ செல்கின்ற கங்குல்வாய்த்⋆
தூப் பால வெண் சங்கு⋆ சக்கரத்தன் தோன்றானால்⋆
தீப் பால வல்வினையேன்⋆ தெய்வங்காள்! என் செய்கேனோ (7)

தெய்வங்காள்! என் செய்கேன்⋆ ஓர் இரவேழ் ஊழியாய்⋆
மெய் வந்து நின்று⋆ எனதாவி மெலிவிக்கும்⋆
கை வந்த சக்கரத்து⋆ என் கண்ணனும் வாரானால்⋆
தை வந்த தண் தென்றல்⋆ வெஞ்சுடரில் தான் அடுமே (8)

வெஞ்சுடரில் தான் அடுமால்⋆ வீங்கிருளின் நுண் துளியாய்⋆
அஞ்சுடர வெய்யோன்⋆ அணி நெடும் தேர் தோன்றாதால்⋆
செஞ்சுடர்த் தாமரைக்கண்⋆ செல்வனும் வாரானால்⋆
நெஞ்சிடர் தீர்ப்பார் இனியார்⋆ நின்றுருகுகின்றேனே! (9)

நின்றுருகுகின்றேனே போல⋆ நெடு வானம்⋆
சென்றுருகி நுண் துளியாய்ச்⋆ செல்கின்ற கங்குல்வாய்⋆
அன்றொருகால் வையம்⋆ அளந்த பிரான் வாரான் என்று⋆
ஒன்றொருகால் சொல்லாது⋆ உலகோ உறங்குமே (10)

‡உறங்குவான் போல்⋆ யோகு செய்த பெருமானை⋆
சிறந்த பொழில் சூழ்⋆ குருகூர்ச் சடகோபன் சொல்⋆
நிறம் கிளர்ந்த அந்தாதி⋆ ஆயிரத்திப்பத்தால்⋆
இறந்து போய் வைகுந்தம்⋆ சேராவாறெங்ஙனேயோ (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ எங்ஙனேயோ ॥

உருவெளிப்பாடு கண்ட தலைவி தாயை மறுத்துரைத்தல்

‡எங்ஙனேயோ அன்னைமீர்காள்!⋆ என்னை முனிவது நீர்⋆
நங்கள் கோலத் திருக்குறுங்குடி நம்பியை⋆ நான் கண்டபின்⋆
சங்கினோடும் நேமியோடும்⋆ தாமரைக் கண்களோடும்⋆
செங்கனி வாய் ஒன்றினோடும்⋆ செல்கின்றதென் நெஞ்சமே (1)

என் நெஞ்சினால் நோக்கிக் காணீர்⋆ என்னை முனியாதே⋆
தென் நன் சோலைத் திருக்குறுங்குடி நம்பியை⋆ நான் கண்டபின்⋆
மின்னும் நூலும் குண்டலமும்⋆ மார்வில் திருமறுவும்⋆
மன்னு பூணும் நான்கு தோளும்⋆ வந்தெங்கும் நின்றிடுமே (2)

நின்றிடும் திசைக்கும் நையும் என்று⋆ அன்னையரும் முனிதிர்⋆
குன்ற மாடத் திருக்குறுங்குடி நம்பியை⋆ நான் கண்டபின்⋆
வென்றி வில்லும் தண்டும் வாளும்⋆ சக்கரமும் சங்கமும்⋆
நின்று தோன்றிக் கண்ணுள் நீங்கா⋆ நெஞ்சுள்ளும் நீங்காவே (3)

நீங்க நில்லாக் கண்ண நீர்கள் என்று⋆ அன்னையரும் முனிதிர்⋆
தேன் கொள் சோலைத் திருக்குறுங்குடி நம்பியை⋆ நான் கண்டபின்⋆
பூந் தண் மாலைத் தண் துழாயும்⋆ பொன் முடியும் வடிவும்⋆
பாங்கு தோன்றும் பட்டும் நாணும்⋆ பாவியேன் பக்கத்தவே (4)

பக்கம் நோக்கி நிற்கும் நையும் என்று⋆ அன்னையரும் முனிதிர்⋆
தக்க கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியை⋆ நான் கண்டபின்⋆
தொக்கசோதித் தொண்டை வாயும்⋆ நீண்ட புருவங்களும்⋆
தக்க தாமரைக் கண்ணும்⋆ பாவியேன் ஆவியின் மேலனவே (5)

மேலும் வன் பழி நங்குடிக்கிவள் என்று⋆ அன்னை காணக் கொடாள்⋆
சோலை சூழ் தண் திருக்குறுங்குடி நம்பியை⋆ நான் கண்டபின்⋆
கோல நீள் கொடி மூக்கும்⋆ தாமரைக் கண்ணும் கனி வாயும்⋆
நீல மேனியும் நான்கு தோளும்⋆ என் நெஞ்சம் நிறைந்தனவே (6)

நிறைந்த வன் பழி நம் குடிக்கிவள் என்று⋆ அன்னை காணக்கொடாள்⋆
சிறந்த கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியை⋆ நான் கண்டபின்⋆
நிறைந்த சோதி வெள்ளம் சூழ்ந்த⋆ நீண்ட பொன் மேனியொடும்⋆
நிறைந்தென் உள்ளேநின்றொழிந்தான்⋆ நேமி அங்கை உளதே (7)

கையுள் நன் முகம் வைக்கும் நையும் என்று⋆
அன்னையரும் முனிதிர்⋆
மை கொள் மாடத் திருக்குறுங்குடி நம்பியை⋆
நான் கண்டபின்⋆
செய்ய தாமரைக் கண்ணும் அல்குலும்⋆
சிற்றிடையும் வடிவும்⋆
மொய்ய நீள் குழல் தாழ்ந்த தோள்களும்⋆
பாவியேன் முன்நிற்குமே (8)

முன் நின்றாய் என்று தோழி மார்களும்⋆ அன்னையரும் முனிதிர்⋆
மன்னு மாடத் திருக்குறுங்குடி நம்பியை⋆ நான் கண்டபின்⋆
சென்னி நீள் முடி ஆதியாய⋆ உலப்பிலணி கலத்தன்⋆
கன்னல் பால் அமுதாகி வந்து⋆ என் நெஞ்சம் கழியானே (9)

கழிய மிக்கதோர் காதலள் இவள் என்று⋆ அன்னை காணக்கொடாள்⋆
வழுவில் கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியை⋆ நான் கண்டபின்⋆
குழுமித் தேவர் குழாங்கள்⋆ கை தொழச் சோதி வெள்ளத்தினுள்ளே⋆
எழுவதோர் உருவென்னெஞ்சுள் எழும்⋆ ஆர்க்கும் அறிவரிதே (10)

‡அறிவரிய பிரானை⋆
ஆழி அங்கையனையே அலற்றி⋆
நறிய நல் மலர் நாடி⋆
நன் குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
குறி கொள் ஆயிரத்துள் இவை பத்தும்⋆
திருக்குறுங்குடி அதன் மேல்⋆
அறியக் கற்று வல்லார் வைட்டணவர்⋆
ஆழ் கடல் ஞாலத்துள்ளே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ கடல் ஞாலம் ‖

தலைவன் தன்மைகளைத் தன்னதாகக் கொண்டு பேசும் தலைவியின் நிலைகண்டு தாய் ஆவேசமோ என்று நொந்து கூறல்

‡கடல் ஞாலம் செய்தேனும் யானே என்னும்⋆
  கடல் ஞாலம் ஆவேனும் யானே என்னும்⋆
கடல் ஞாலம் கொண்டேனும் யானே என்னும்⋆
  கடல் ஞாலம் கீண்டேனும் யானே என்னும்⋆
கடல் ஞாலம் உண்டேனும் யானே என்னும்⋆
  கடல் ஞாலத்தீசன் வந்தேறக் கொலோ⋆
கடல் ஞாலத்தீர்க்கிவை என் சொல்லுகேன்⋆
  கடல் ஞாலத்தென் மகள் கற்கின்றவே (1)

கற்கும் கல்விக்கெல்லை இலனே என்னும்⋆
  கற்கும் கல்வி ஆவேனும் யானே என்னும்⋆
கற்கும் கல்வி செய்வேனும் யானே என்னும்⋆
  கற்கும் கல்வி தீர்ப்பேனும் யானே என்னும்⋆
கற்கும் கல்விச் சாரமும் யானே என்னும்⋆
  கற்கும் கல்வி நாதன் வந்தேறக் கொலோ⋆
கற்கும் கல்வியீர்க்கிவை என் சொல்லுகேன்⋆
  கற்கும் கல்வி என் மகள் காண்கின்றனவே (2)

காண்கின்ற நிலம் எல்லாம் யானே என்னும்⋆
  காண்கின்ற விசும்பெல்லாம் யானே என்னும்⋆
காண்கின்ற வெந்தீ எல்லாம் யானே என்னும்⋆
  காண்கின்ற இக்காற்றெல்லாம் யானே என்னும்⋆
காண்கின்ற கடல் எல்லாம் யானே என்னும்⋆
  காண்கின்ற கடல் வண்ணன் ஏறக்கொலோ⋆
காண்கின்ற உலகத்தீர்க்கென் சொல்லுகேன்⋆
  காண்கின்ற என் காரிகை செய்கின்றனவே (3)

செய்கின்ற கிதி எல்லாம் யானே என்னும்⋆
    செய்வான் நின்றனகளும் யானே என்னும்⋆
செய்து முன் இறந்தவும் யானே என்னும்⋆
    செய்கைப் பயன் உண்பேனும் யானே என்னும்⋆
செய்வார்களைச் செய்வேனும் யானே என்னும்⋆
    செய்ய கமலக் கண்ணன் ஏறக்கொலோ⋆
செய்ய உலகத்தீர்க்கிவை என் சொல்லுகேன்⋆
    செய்ய கனிவாய் இள மான் திறத்தே (4)

திறம்பாமல் மண் காக்கின்றேன் யானே என்னும்⋆
    திறம்பாமல் மலை எடுத்தேனே என்னும்⋆
திறம்பாமல் அசுரரைக் கொன்றேனே என்னும்⋆
    திறம் காட்டி அன்றைவரைக் காத்தேனே என்னும்⋆
திறம்பாமல் கடல் கடைந்தேனே என்னும்⋆
    திறம்பாத கடல்வண்ணன் ஏறக்கொலோ⋆
திறம்பாத உலகத்தீர்க்கென் சொல்லுகேன்⋆
    திறம்பாதென் திருமகள் எய்தினவே (5)

இன வேய் மலை ஏந்தினேன் யானே என்னும்⋆
    இனவேறுகள் செற்றேனும் யானே என்னும்⋆
இனவன் கன்று மேய்த்தேனும் யானே என்னும்⋆
    இனவா நிரை காத்தேனும் யானே என்னும்⋆
இனவாயர் தலைவனும் யானே என்னும்⋆
    இனத்தேவர் தலைவன் வந்தேறக்கொலோ⋆
இனவேற்கண் நல்லீர்க்கிவை என் சொல்லுகேன்⋆
    இனவேற்கண்ணி என்மகள் உற்றனவே (6)

உற்றார்கள் எனக்கில்லை யாரும் என்னும்⋆
    உற்றார்கள் எனக்கிங்கெல்லாரும் என்னும்⋆
உற்றார்களைச் செய்வேனும் யானே என்னும்⋆
    உற்றார்களை அழிப்பேனும் யானே என்னும்⋆
உற்றார்களுக்குற்றேனும் யானே என்னும்⋆
    உற்றார் இலி மாயன் வந்தேறக் கொலோ⋆

உற்றீர்கட்கென் சொல்லிச் சொல்லுகேன் யான்⋆
உற்றென்னுடைப் பேதை உரைக்கின்றனவே (7)

உரைக்கின்ற முக்கண் பிரான் யானே என்னும்⋆
உரைக்கின்ற திசைமுகன் யானே என்னும்⋆
உரைக்கின்ற அமரரும் யானே என்னும்⋆
உரைக்கின்ற அமரர் கோன் யானே என்னும்
உரைக்கின்ற முனிவரும் யானே என்னும்
உரைக்கின்ற முகில் வண்ணன் ஏறக்கொலோ
உரைக்கின்ற உலகத்தீர்க்கென் சொல்லுகேன்
உரைக்கின்ற என் கோமள ஒண் கொடிக்கே (8)

கொடிய வினை யாதும் இலனே என்னும்⋆
கொடிய வினை ஆவேனும் யானே என்னும்⋆
கொடிய வினை செய்வேனும் யானே என்னும்⋆
கொடிய வினை தீர்ப்பேனும் யானே என்னும்⋆
கொடியான் இலங்கை செற்றேனே என்னும்⋆
கொடிய புள்ளுடையவன் ஏறக்கொலோ⋆
கொடிய உலகத்தீர்க்கிவை என் சொல்லுகேன்⋆
கொடியேன் கொடி என் மகள் கோலங்களே (9)

கோலம் கொள் சுவர்க்கமும் யானே என்னும்⋆
கோலம் இல் நரகமும் யானே என்னும்⋆
கோலம் திகழ் மோக்கமும் யானே என்னும்
கோலம் கொள் உயிர்களும் யானே என்னும்
கோலம் கொள் தனிமுதல் யானே என்னும்
கோலம் கொள் முகில்வண்ணன் ஏறக்கொலோ
கோலம் கொள் உலகத்தீர்க்கென் சொல்லுகேன்
கோலம் திகழ் கோதை என் கூந்தலுக்கே (10)

‡கூந்தல் மலர் மங்கைக்கும் மண் மடந்தைக்கும்⋆
குலவாயர் கொழுந்துக்கும் கேள்வன் தன்னை⋆
வாய்ந்த வழுதி வள நாடன்⋆ மன்னு
குருகூர்ச் சடகோபன் குற்றேவல் செய்து⋆

ஆய்ந்த தமிழ் மாலை⋆ ஆயிரத்துள்
    இவையும் ஓர் பத்தும் வல்லார்⋆ உலகில்
ஏந்து பெரும் செல்வத்தராய்த்⋆ திருமால்
    அடியார்களைப் பூசிக்க நோற்றார்களே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நோற்ற நோன்பு ॥

## வானமாமலைப் பெருமானது அருளை வேண்டல்

‡நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்⋆
ஆகிலும் இனி உன்னை விட்டு⋆ ஒன்றும்
ஆற்ற கின்றிலேன்⋆ அரவின் அணை அம்மானே⋆
சேற்றுத் தாமரை செந்நெல் ஊடு மலர்⋆
சிரீவர மங்கலநகர்⋆
வீற்றிருந்த எந்தாய்!⋆ உனக்கு மிகை அல்லேன் அங்கே⋆ (1)

அங்குற்றேன் அல்லேன் இங்குற்றேன் அல்லேன்⋆
உன்னைக் காணும் அவாவில் வீழ்ந்து⋆ நான்
எங்குற்றேனும் அல்லேன்⋆ இலங்கை செற்ற அம்மானே⋆
திங்கள் சேர்மணி மாட நீடு⋆
சிரீவர மங்கலநகர் உறை⋆
சங்கு சக்கரத்தாய்!⋆ தமியேனுக்கருளாயே (2)

கருள புட்கொடி சக்கரப் படை⋆
வான நாட! என் கார்முகில் வண்ணா⋆
பொருள் அல்லாத என்னைப் பொருளாக்கி⋆ அடிமை கொண்டாய்⋆
தெருள் கொள் நான்மறை வல்லவர் பலர் வாழ்⋆
சிரீவர மங்கலநகர்க்கு⋆
அருள் செய்தங்கிருந்தாய்!⋆ அறியேன் ஒரு கைம்மாறே (3)

மாறு சேர் படை நூற்றுவர் மங்க⋆ ஓர் ஐவர்க்-
காயன்று மாயப்போர் பண்ணி⋆
நீறு செய்த எந்தாய்!⋆ நிலம் கீண்ட அம்மானே⋆
தேறு ஞானத்தர் வேத வேள்வியறாச்⋆
சிரீவர மங்கலநகர்⋆
ஏறி வீற்றிருந்தாய்!⋆ உன்னை எங்கெய்தக் கூவுவனே (4)

எய்தக் கூவுதல் ஆவதே எனக்கு⋆ எவ்வ
    தெவ்வத்துள் ஆயுமாய் நின்று⋆
கை தவங்கள் செய்யும்⋆ கருமேனி அம்மானே⋆
    செய்த வேள்வியர் வையத் தேவரறாச்⋆
சிரீவர மங்கலநகர்⋆
    கை தொழ இருந்தாய்⋆ அது நானும் கண்டேனே (5)

‡ஏனமாய் நிலம் கீண்ட என்னப்பனே! கண்ணா!⋆
    என்றும் என்னை ஆளுடை⋆
வான நாயகனே!⋆ மணி மாணிக்கச் சுடரே⋆
    தேனமாம் பொழில் தண்
சிரீவர மங்கலத்தவர்⋆ கை தொழவுறை⋆
    வான மாமலையே!⋆ அடியேன் தொழ வந்தருளே (6)

வந்தருளி என் நெஞ்சிடம் கொண்ட⋆ வானவர்
    கொழுந்தே!⋆ உலகுக்கோர்
முந்தைத் தாய் தந்தையே!⋆ முழு ஏழுலகும் உண்டாய்!⋆
    செந்தொழிலவர் வேத வேள்வி அறாச்⋆
சிரீவர மங்கலநகர்⋆
    அந்தமில் புகழாய்!⋆ அடியேனை அகற்றேலே (7)

அகற்ற நீ வைத்த மாய வல்லை ஐம்புலன்க-
    ளாம் அவை⋆ நன்கறிந்தனன்⋆
அகற்றி என்னையும் நீ⋆ அரும் சேற்றில் வீழ்த்தி கண்டாய்⋆
    பகல் கதிர் மணி மாடம் நீடு⋆
சிரீவர மங்கை வாணனே⋆ என்றும்
    புகற்கரிய எந்தாய்!⋆ புள்ளின் வாய் பிளந்தானே! (8)

புள்ளின் வாய் பிளந்தாய்! மருதிடை போயினாய்!⋆
    எருதேழ் அடர்த்த⋆ என்
கள்ள மாயவனே!⋆ கரு மாணிக்கச் சுடரே⋆
    தெள்ளியார் திரு நான்மறைகள் வல்லார்⋆ மலி தண்
சிரீவர மங்கை⋆
    உள் இருந்த எந்தாய்!⋆ அருளாய் உய்யுமாறெனக்கே (9)

ஆறெனக்கு நின் பாதமே⋆ சரணாகத் தந்தொழிந்தாய்⋆
    உனக்கோர் கைம்மாறு நான் ஒன்றிலேன்⋆ எனதாவியும் உனதே⋆
சேறு கொள் கரும்பும் பெரும் செந்நெலும்⋆ மலி தண்
    சிரீவர மங்கை⋆
நாறு பூந் தண் துழாய் முடியாய்!⋆ தெய்வநாயகனே! (10)

‡தெய்வநாயகன் நாரணன்⋆ திரிவிக்கிரமன் அடியிணைமிசை⋆
    கொய் கொள் பூம் பொழில் சூழ்⋆ குருகூர்ச் சடகோபன்⋆
செய்த ஆயிரத்துள் இவை⋆ தண் சிரீவர மங்கை மேய பத்துடன்⋆
    வைகல் பாட வல்லார்⋆ வானோர்க்காராவமுதே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஆராவமுதே ॥

ஆராவமுதாழ்வார் பேறுகளைத் தாராமையால் ஆழ்வார் தீராத ஆசையுடன் ஆற்றாமை பேசி அலமருதல்

‡ஆராவமுதே! அடியேன் உடலம்⋆ நின்பால் அன்பாயே⋆
நீராய் அலைந்து கரைய⋆ உருக்குகின்ற நெடுமாலே⋆
சீரார் செந்நெல் கவரி வீசும்⋆ செழு நீர்த் திருக்குடந்தை⋆
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்!⋆ கண்டேன் எம்மானே! (1)

எம்மானே! என் வெள்ளை மூர்த்தி!⋆ என்னை ஆள்வானே⋆
எம்மா உருவும் வேண்டும் ஆற்றால்⋆ ஆவாய் எழில் ஏறே⋆
செம்மா கமலம் செழு நீர் மிசைக்கண் மலரும்⋆ திருக்குடந்தை⋆
அம்மா மலர்க்கண் வளர்கின்றானே!⋆ என்நான் செய்கேனே! (2)

என் நான் செய்கேன்! யாரே களைகண்⋆ என்னை என் செய்கின்றாய்⋆
உன்னால் அல்லால் யாவராலும்⋆ ஒன்றும் குறை வேண்டேன்⋆
கன்னார் மதிள் சூழ் குடந்தைக் கிடந்தாய்!⋆ அடியேன் அருவாணாள்⋆
சென்னாள் எந்நாள் அந்நாள்⋆ உனதாள் பிடித்தே செலக்காணே (3)

செலக் காண்கிற்பார் காணும் அளவும்⋆ செல்லும் கீர்த்தியாய்⋆
உலப்பிலானே! எல்லா உலகும் உடைய⋆ ஒரு மூர்த்தி⋆
நலத்தால் மிக்கார் குடந்தைக் கிடந்தாய்!⋆ உன்னைக் காண்பான்நான்
அலப்பாய்⋆ ஆகாசத்தை நோக்கி⋆ அழுவன் தொழுவனே (4)

அழுவன் தொழுவன் ஆடிக் காண்பன்⋆ பாடி அலற்றுவன்⋆
தழுவல் வினையால் பக்கம் நோக்கி⋆ நாணிக் கவிழ்ந்திருப்பன்⋆
செழுவொண் பழனக் குடந்தைக் கிடந்தாய்!⋆ செந்தாமரைக் கண்ணா!⋆
தொழுவனேனை உனதாள் சேரும்⋆ வகையே சூழ் கண்டாய் (5)

சூழ் கண்டாய் என் தொல்லை வினையை அறுத்து⋆ உன் அடிசேரும்
ஊழ் கண்டிருந்தே⋆ தூராக்குழி தூர்த்து⋆ எனை நாள் அகன்றிருப்பன்⋆

வாழ் தொல் புகழார் குடந்தைக் கிடந்தாய்!⋆ வானோர் கோமானே⋆
யாழின் இசையே! அமுதே!⋆ அறிவின் பயனே! அரியேறே! (6)

அரியேறே! என்னம் பொன் சுடரே!⋆ செங்கண் கரு முகிலே!⋆
எரியே! பவளக் குன்றே!⋆ நால் தோள் எந்தாய்! உனதருளே⋆
பிரியா அடிமை என்னைக் கொண்டாய்⋆ குடந்தைத் திருமாலே⋆
தரியேன் இனி உன் சரணம் தந்து⋆ என் சன்மம் களையாயே (7)

களைவாய் துன்பம் களையா தொழிவாய்⋆ களைகண் மற்றிலேன்⋆
வளை வாய் நேமிப் படையாய்!⋆ குடந்தைக் கிடந்த மா மாயா⋆
தளரா உடலம் என்னதாவி⋆ சரிந்து போம் போது⋆
இளையாதுன தாள் ஒருங்கப் பிடித்துப்⋆ போத இசைநீயே (8)

இசைவித்தென்னை உன் தாள் இணைக்கீழ்⋆ இருத்தும் அம்மானே⋆
அசைவில் அமரர் தலைவர் தலைவா⋆ ஆதிப் பெரு மூர்த்தி⋆
திசை வில் வீசும் செழு மா மணிகள் சேரும்⋆ திருக்குடந்தை⋆
அசைவில் உலகம் பரவக் கிடந்தாய்!⋆ காண வாராயே (9)

‡வாராவருவாய் வருமென் மாயா!⋆ மாயா மூர்த்தியாய்⋆
ஆராவமுதாய் அடியேன் ஆவி⋆ அகமே தித்திப்பாய்⋆
தீரா வினைகள் தீர என்னை ஆண்டாய்!⋆ திருக்குடந்தை
ஊரா!⋆ உனக்காள் பட்டும்⋆ அடியேன் இன்னம் உழல்வேனோ (10)

‡உழலை என்பின் பேய்ச்சி முலையூடு⋆ அவளை உயிர் உண்டான்⋆
கழல்கள் அவையே சரணாகக் கொண்ட⋆ குருகூர்ச் சடகோபன்⋆
குழலின் மலியச் சொன்ன⋆ ஓர் ஆயிரத்துள் இப்பத்தும்⋆
மழலை தீர வல்லார்⋆ காமர் மானேய் நோக்கியர்க்கே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மானேய் நோக்கு ॥

திருவல்லவாழ் செல்லுதலைத் தடுக்கும் தோழியார்க்குத் தலைவி கூறுதல்

‡மானேய் நோக்கு நல்லீர்!⋆ வைகலும் வினையேன் மெலிய⋆
வானார் வண் கமுகும்⋆ மது மல்லிகையுங்கமழும்⋆
தேனார் சோலைகள் சூழ்⋆ திருவல்லவாழ் உறையும்
கோனாரை⋆ அடியேன் அடிகூடுவதென்றுகொலோ (1)

என்றுகொல் தோழிமீர்காள்⋆ எம்மை நீர் நலிந்தென்செய்திரோ⋆
பொன் திகழ் புன்னை மகிழ்⋆ புது மாதவி மீதணவி⋆
தென்றல் மணம் கமழும்⋆ திருவல்லவாழ் நகருள்
நின்ற பிரான்⋆ அடிநீறடியோம் கொண்டு சூடுவதே (2)

சூடும் மலர்க்குழலீர்!⋆ துயராட்டியேனை மெலிய⋆
பாடுநல் வேதவொலி⋆ பரவைத் திரை போல் முழங்க⋆
மாடுயர்ந்தோமப் புகை கமழும்⋆ தண் திருவல்லவாழ்⋆
நீடுறைகின்ற பிரான்⋆ கழல் காண்டுங்கொல் நிச்சலுமே (3)

நிச்சலும் தோழிமீர்காள்!⋆ எம்மை நீர் நலிந்தென் செய்திரோ⋆
பச்சிலை நீள் கமுகும்⋆ பலவும் தெங்கும் வாழைகளும்⋆
மச்சணி மாடங்கள் மீதணவும்⋆ தண் திருவல்லவாழ்⋆
நச்சரவின் அணைமேல்⋆ நம்பிரானது நன்னலமே (4)

நன்னலத் தோழிமீர்காள்!⋆ நல்ல அந்தணர் வேள்விப் புகை⋆
மைந்நலங்கொண்டுயர் விண் மறைக்கும்⋆ தண் திருவல்லவாழ்⋆
கன்னலம் கட்டி தன்னைக்⋆ கனியை இன்னமுதம் தன்னை⋆
என்னலம் கொள் சுடரை⋆ என்றுகொல் கண்கள் காண்பதுவே (5)

காண்பதெஞ்ஞான்று கொலோ⋆ வினையேன் கனிவாய் மடவீர்⋆
பாண் குரல் வண்டினொடு⋆ பசுந் தென்றலும் ஆகி எங்கும்⋆

சேண் சினை ஓங்கு மரச்⋆ செழுங்கானல் திருவல்லவாழ்⋆
மாண் குறள் கோலப் பிரான்⋆ மலர்த் தாமரைப் பாதங்களே (6)

பாதங்கள் மேலணி⋆ பூத்தொழக் கூடுங்கொல் பாவை நல்லீர்⋆
ஓத நெடுந்தடத்துள்⋆ உயர் தாமரை செங்கழுநீர்⋆
மாதர்கள் வாள் முகமும்⋆ கண்ணும் ஏந்தும் திருவல்லவாழ்⋆
நாதன் இஞ்ஞாலம் உண்ட⋆ நம் பிரான் தன்னை நாள்தொறுமே (7)

நாள்தொறும் வீடின்றியே⋆ தொழக் கூடுங்கொல் நன்னுதலீர்⋆
ஆடுறு தீங்கரும்பும்⋆ விளை செந்நெலும் ஆகி எங்கும்⋆
மாடுறு பூந்தடம் சேர்⋆ வயல் சூழ் தண் திருவல்லவாழ்⋆
நீடுறைகின்ற பிரான்⋆ நிலம் தாவிய நீள் கழலே (8)

கழல் வளை பூரிப்ப யாம் கண்டு⋆ கைதொழக் கூடுங்கொலோ⋆
குழல் என்ன யாழும் என்னக்⋆ குளிர் சோலையுள் தேன் அருந்தி⋆
மழலை வரி வண்டுகள் இசை பாடும்⋆ திருவல்லவாழ்⋆
சுழலின் மலி சக்கரப் பெருமான்⋆ அது தொல்லருளே (9)

தொல்லருள் நல் வினையால்⋆ சொலக் கூடுங்கொல் தோழிமீர்காள்⋆
தொல்லருள் மண்ணும் விண்ணும்⋆ தொழ நின்ற திருநகரம்⋆
நல்லருள் ஆயிரவர்⋆ நலன் ஏந்தும் திருவல்லவாழ்⋆
நல்லருள் நம் பெருமான்⋆ நாராயணன் நாமங்களே (10)

‡நாமங்கள் ஆயிரம் உடைய⋆ நம் பெருமான் அடி மேல்⋆
சேமம் கொள் தென் குருகூர்ச்⋆ சடகோபன் தெரிந்துரைத்த⋆
நாமங்கள் ஆயிரத்துள்⋆ இவை பத்தும் திருவல்லவாழ்⋆
சேமம் கொள் தென் நகர்மேல்⋆ செப்புவார் சிறந்தார் பிறந்தே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ பிறந்தவாறும் ॥

ஆழ்வார் தாம் சேர்ந்தனுபவிக்கும் நிலையைச் செய் என எம்பெருமானை வேண்டுதல்

‡பிறந்தவாறும் வளர்ந்தவாறும்⋆
    பெரிய பாரதம் கைசெய்து⋆ ஐவர்க்குத்
திறங்கள் காட்டியிட்டுச்⋆ செய்து போன மாயங்களும்⋆
    நிறம் தன் ஊடு புக்கெனதாவியை⋆ நின்று நின்-
றுருக்கி உண்கின்ற⋆ இச்-
    சிறந்த வான் சுடரே!⋆ உன்னை என்று கொல் சேர்வதுவே (1)

வதுவை வார்த்தையுள் ஏறு பாய்ந்ததும்⋆
    மாய மாவினை வாய் பிளந்ததும்⋆
மதுவை வார் குழலார்⋆ குரவை பிணைந்த குழகும்⋆
    அதுவிது உதுவென்னலாவன அல்ல⋆
என்னை உன் செய்கை நைவிக்கும்⋆
    முது வைய முதல்வா!⋆ உன்னை என்று தலைப்பெய்வனே (2)

பெய்யும் பூங்குழல் பேய்முலை உண்ட⋆
    பிள்ளைத் தேற்றமும்⋆ பேர்ந்தோர் சாடிறச்
செய்ய பாதம் ஒன்றால்⋆ செய்த நின் சிறுச் சேவகமும்⋆
    நெய்யுண் வார்த்தையுள் அன்னை கோல் கொள்ள⋆
நீயுன் தாமரைக் கண்கள் நீர் மல்க⋆
    பையவே நிலையும் வந்து⋆ என் நெஞ்சை உருக்குங்களே (3)

கள்ள வேடத்தைக் கொண்டு போய்ப்⋆ புறம்
    புக்கவாறும்⋆ கலந்தசுரரை
உள்ளம் பேதம் செய்திட்டு⋆ உயிர் உண்ட உபாயங்களும்⋆
    வெள்ள நீர்ச் சடையானும்⋆ நின்னிடை
வேறலாமை விளங்க நின்றதும்⋆
    உள்ளமுள் குடைந்து⋆ என் உயிரை உருக்கி உண்ணுமே (4)

உண்ண வானவர் கோனுக்கு⋆ ஆயர்
ஒருப்படுத்த அடிசில் உண்டதும்⋆
வண்ண மால் வரையை எடுத்து⋆ மழை காத்ததும்⋆
மண்ணை முன் படைத்துண்டுமிழ்ந்து⋆ கடந்திடந்து
மணந்த மாயங்கள்⋆
எண்ணுந்தோறும் என் நெஞ்சு⋆ எரிவாய் மெழுகொக்கு நின்றே (5)

நின்றவாறும் இருந்த வாறும்⋆
கிடந்த வாறும் நினைப்பரியன⋆
ஒன்றலா உருவாய்⋆ அருவாய நின் மாயங்கள்⋆
நின்று நின்று நினைக்கின்றேன்⋆ உன்னை எங்ஙனம்
நினைகிற்பன்⋆ பாவியேற்-
கொன்று நன்குரையாய்⋆ உலகம் உண்ட ஒண் சுடரே! (6)

ஒண் சுடரோடிருளுமாய்⋆ நின்ற வாறும்
உண்மையோடின்மையாய் வந்து⋆ என்
கண் கொளாவகை⋆ நீகரந்தென்னைச் செய்கின்றன⋆
எண் கொள் சிந்தையுள் நைகின்றேன்⋆ என்
கரிய மாணிக்கமே!⋆ என் கண்கட்குத்
திண் கொள்ள ஒரு நாள்⋆ அருளாய் உன் திருவுருவே (7)

திருவுருவு கிடந்தவாறும்⋆ கொப்பூழ்ச்
செந்தாமரை மேல்⋆ திசைமுகன்
கருவுள் வீற்றிருந்து⋆ படைத்திட்ட கருமங்களும்⋆
பொருவில் உன் தனி நாயகம் அவை கேட்கும்தோறும்⋆
என் நெஞ்சம் நின்று நெக்கு⋆
அருவி சோரும் கண்ணீர்⋆ என் செய்கேன் அடியேனே (8)

அடியை மூன்றை இரந்தவாறும்⋆ அங்கே நின்-
றாம் கடலும் மண்ணும் விண்ணும்
முடிய⋆ ஈர் அடியால்⋆ முடித்துக் கொண்ட முக்கியமும்⋆
நொடியுமாறவை கேட்கும்தோறும்⋆ என்
நெஞ்சம் நின் தனக்கே கரைந்துகும்⋆
கொடிய வல்வினையேன்⋆ உன்னை என்றுகொல் கூடுவதே (9)

கூடி நீரை கடைந்த வாறும்⋆ அமுதம்
    தேவர் உண்ண⋆ அசுரரை
வீடும் வண்ணங்களே⋆ செய்து போன வித்தகமும்⋆
    ஊடு புக்கெனதாவியை⋆ உருக்கி
உண்டிடுகின்ற⋆ நின் தன்னை
    நாடும் வண்ணம் சொல்லாய்⋆ நச்சு நாகணை யானே! (10)

‡நாகணை மிசை நம் பிரான்⋆ சரணே
    சரண் நமக்கென்று⋆ நாள்தொறும்
ஏக சிந்தையனாய்க்⋆ குருகூர்ச் சடகோபன் மாறன்⋆
    ஆக நூற்றவந்தாதி⋆ ஆயிரத்துள்
இவை ஓர் பத்தும் வல்லார்⋆
    மாக வைகுந்தத்து⋆ மகிழ்வெய்துவர் வைகலுமே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வைகல் பூங்கழி ॥

## பறவைகளைத் தூதுவிடல்

‡வைகல் பூங்கழிவாய்⋆ வந்து மேயும் குருகினங்காள்⋆
செய் கொள் செந்நெல் உயர்⋆ திருவண்வண்டூர் உறையும்⋆
கை கொள் சக்கரத்து⋆ என் கனிவாய் பெருமானைக் கண்டு⋆
கைகள் கூப்பிச் சொல்லீர்⋆ வினையாட்டியேன் காதன்மையே (1)

காதல் மென் பெடையோடு⋆ உடன் மேயும் கரு நாராய்⋆
வேத வேள்வி ஒலி முழங்கும்⋆ தண் திருவண்வண்டூர்⋆
நாதன் ஞாலம் எல்லாம் உண்ட⋆ நம் பெருமானைக் கண்டு⋆
பாதம் கை தொழுது பணியீர்⋆ அடியேன் திறமே (2)

திறங்கள் ஆகி எங்கும்⋆ செய்கள் ஊடுழல் புள்ளினங்காள்⋆
சிறந்த செல்வம் மல்கு⋆ திருவண்வண்டூர் உறையும்⋆
கறங்கு சக்கரக்கைக்⋆ கனிவாய்ப் பெருமானைக் கண்டு⋆
இறங்கி நீர் தொழுது பணியீர்⋆ அடியேன் இடரே (3)

இடரில் போகம் மூழ்கி⋆ இணைந்தாடும் மடவன்னங்காள்!⋆
விடலில் வேதவொலி முழங்கும்⋆ தண் திருவண்வண்டூர்⋆
கடலின் மேனிப் பிரான்⋆ கண்ணணை நெடுமாலைக் கண்டு⋆
உடலம் நைந்தொருத்தி⋆ உருகும் என்றுணர்த்துமினே (4)

உணர்த்தல் ஊடல் உணர்ந்து⋆ உடன் மேயும் மடவன்னங்காள்⋆
திணர்த்த வண்டல்கள் மேல்⋆ சங்கு சேரும் திருவண்வண்டூர்⋆
புணர்த்த பூந்தண் துழாய் முடி⋆ நம் பெருமானைக் கண்டு⋆
புணர்த்த கையினராய்⋆ அடியேனுக்கும் போற்றுமினே (5)

போற்றி யான் இரந்தேன்⋆ புன்னை மேல் உறை பூங்குயில்காள்⋆
சேற்றில் வாளை துள்ளும்⋆ திருவண்வண்டூர் உறையும்⋆
ஆற்றல் ஆழியங்கை⋆ அமரர் பெருமானைக் கண்டு⋆
மாற்றம் கொண்டருளீர்⋆ மையல் தீர்வதொரு வண்ணமே (6)

ஒருவண்ணம் சென்று புக்கு⋆ எனக்கொன்றுரை ஒண் கிளியே⋆
செருவொண் பூம் பொழில் சூழ்⋆ செக்கர் வேலை திருவண்வண்டூர்⋆
கரு வண்ணம் செய்ய வாய்⋆ செய்ய கண் செய்ய கை செய்ய கால்⋆
செருவொண் சக்கரம் சங்கு⋆ அடையாளம் திருந்தக் கண்டே (7)

திருந்தக் கண்டெனக்கொன்றுரையாய்⋆ ஒண் சிறு பூவாய்⋆
செருந்தி ஞாழல் மகிழ்⋆ புன்னை சூழ் தண் திருவண்வண்டூர்⋆
பெரும் தண் தாமரைக் கண்⋆ பெரு நீள் முடி நால் தடந்தோள்⋆
கரும் திண் மா முகில் போல்⋆ திருமேனி அடிகளையே (8)

அடிகள் கை தொழுது⋆ அலர்மேல் அசையும் அன்னங்காள்⋆
விடிவை சங்கொலிக்கும்⋆ திருவண்வண்டூர் உறையும்⋆
கடிய மாயன் தன்னைக்⋆ கண்ணனை நெடுமாலைக் கண்டு⋆
கொடிய வல்வினையேன்⋆ திறம் கூறுமின் வேறு கொண்டே (9)

வேறு கொண்டும்மை யான் இரந்தேன்⋆ வெறி வண்டினங்காள்⋆
தேறு நீர்ப் பம்பை⋆ வடபாலைத் திருவண்வண்டூர்⋆
மாறில் போர் அரக்கன்⋆ மதிள் நீறெழச் செற்றுகந்த⋆
ஏறு சேவகனார்க்கு⋆ என்னையும் உளள் என்மின்களே (10)

‡மின் கொள் சேர் புரிநூல் குறளாய்⋆ அகல் ஞாலம் கொண்ட⋆
வன் கள்வன் அடிமேல்⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
பண் கொள் ஆயிரத்துள் இவை பத்தும்⋆ திருவண்வண்டூர்க்கு⋆
இன்கொள் பாடல் வல்லார்⋆ மதனர் மின்னிடை அவர்க்கே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மின்னிடை மடவார் ॥

தலைவன் தாமதித்து வரக்கண்ட தலைவி ஊடல் கொண்டுரைத்தல்

‡மின்னிடை மடவார்கள் நின்னருள் சூடுவார்⋆
முன்பு நானதஞ்சுவன்⋆
மன்னுடை இலங்கை⋆ அரண் காய்ந்த மாயவனே⋆
உன்னுடைய சுண்டாயம் நான் அறிவன்⋆ இனி அது
கொண்டு செய்வதென்⋆
என்னுடைய பந்தும் கழலும்⋆ தந்து போகு நம்பீ! (1)

போகு நம்பீ! உன் தாமரை புரை கண் இணையும்⋆
செவ்வாய் முறுவலும்⋆
ஆகுலங்கள் செய்ய⋆ அழிதற்கே நோற்றோமே யாம்⋆
தோகை மா மயிலார்கள் நின்னருள் சூடுவார்⋆
செவியோசை வைத்தெழ⋆
ஆகள் போக விட்டு⋆ குழலூது போயிருந்தே (2)

போயிருந்தும் நின் புள்ளுவம் அறியாது⋆
அவர்க்குரை நம்பி!⋆ நின் செய்ய
வாய் இருங்கனியும் கண்களும்⋆ விபரீதம் இந்நாள்⋆
வேய் இரும் தடம் தோளினார்⋆ இத்திருவருள்
பெறுவார்யவர் கொல்⋆
மா இரும் கடலைக் கடைந்த⋆ பெருமானாலே (3)

ஆலினீள் இலை ஏழ் உலகம் உண்டு⋆ அன்று நீ
கிடந்தாய்⋆ உன் மாயங்கள்
மேலை வானவரும் அறியார்⋆ இனி எம் பரமே⋆
வேலினேர் தடம் கண்ணினார்⋆ விளையாடு
சூழலைச் சூழவே நின்று⋆
காலி மேய்க்க வல்லாய்!⋆ எம்மை நீ கழறேலே (4)

கழறேல் நம்பீ!⋆ உன் கை தவம் மண்ணும் விண்ணும்
நன்கறியும்⋆ திண் சக்கர
நிழறு தொல் படையாய்!⋆ உனக்கொன்றுணர்த்துவன் நான்⋆
மழறு தேன் மொழியார்கள் நின்னருள்
சூடுவார் மனம் வாடி நிற்க⋆ எம்
குழறு பூவையோடும்⋆ கிளியோடும் குழகேலே (5)

குழகி எங்கள் குழமணன் கொண்டு⋆
கோயின்மை செய்து கன்மம் ஒன்றில்லை⋆
பழகி யாம் இருப்போம்⋆ பரமே இத்திருவருள்கள்⋆
அழகியார் இவ்வுலக மூன்றுக்கும்⋆
தேவிமை தகுவார் பலர் உளர்⋆
கழகம் ஏறேல் நம்பீ!⋆ உனக்கும் இளைதே கன்மமே (6)

கன்மம் அன்றெங்கள் கையில் பாவை பறிப்பது⋆
கடல் ஞாலம் உண்டிட்ட⋆
நின்மலா! நெடியாய்!⋆ உனக்கேலும் பிழை பிழையே⋆
வன்மமே சொல்லி எம்மை நீ விளையாடுதி⋆
அது கேட்கில் என்னைமார்⋆
தன்ம பாவம் என்னார்⋆ ஒரு நான்று தடி பிணக்கே (7)

பிணக்கி யாவையும் யாவரும்⋆ பிழையாமல்
பேதித்தும் பேதியாததோர்⋆
கணக்கில் கீர்த்தி வெள்ளக்⋆ கதிர் ஞான மூர்த்தியினாய்
இணக்கி எம்மை எம் தோழிமார்⋆ விளையாடப்
போதுமின் என்னப் போந்தோமை⋆
உணக்கி நீ வளைத்தால்⋆ என் சொல்லார் உகவாதவரே (8)

உகவையால் நெஞ்சம் உள்ளுருகி⋆
உன் தாமரைத் தடம் கண் விழிகளின்⋆
அக வலைப் படுப்பான்⋆ அழித்தாய் உன் திருவடியால்⋆
தகவு செய்திலை எங்கள் சிற்றிலும்⋆ யாம் அடு
சிறு சோறும் கண்டு⋆ நின்
முகவொளி திகழ⋆ முறுவல் செய்து நின்றிலையே (9)

நின்றிலங்கு முடியினாய்!⋆ இருபத்தோர் கால்
    அரசு களை கட்ட⋆
வென்றி நீள் மழுவா!⋆ வியன் ஞாலம் முன் படைத்தாய்!⋆
    இன்றிவ்வாயர் குலத்தை வீடுய்யத்
தோன்றிய⋆ கருமாணிக்கச் சுடர்⋆
    நின் தன்னால் நலிவே படுவோம்⋆ என்றும் ஆய்ச்சியோமே (10)

‡ஆய்ச்சி ஆகிய அன்னையால்⋆ அன்று வெண்ணெய்
    வார்த்தையுள்⋆ சீற்ற முண்டமு
கூத்த அப்பன் தன்னைக்⋆ குருகூர்ச் சடகோபன்⋆
    ஏத்திய தமிழ் மாலை⋆ ஆயிரத்துள் இவையும்
ஓர் பத்திசையோடும்⋆
    நாத்தன்னால் நவில உரைப்பார்கு⋆ இல்லை நல்குரவே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நல்குரவும் ॥

தம்மை வசிகரித்தவன் சர்வேச்வரன் எனல்

‡நல்குரவும் செல்வும்⋆ நரகும் சுவர்க்கமுமாய்⋆
வெல்பகையும் நட்பும்⋆ விடமும் அமுதமுமாய்⋆
பல்வகையும் பரந்த⋆ பெருமான் என்னை ஆள்வானை⋆
செல்வம் மல்கு குடி⋆ திருவிண்ணகர் கண்டேனே (1)

கண்ட இன்பம் துன்பம்⋆ கலக்கங்களும் தேற்றமுமாய்⋆
தண்டமும் தண்மையும்⋆ தழலும் நிழலுமாய்⋆
கண்டு கோடற்கரிய பெருமான் என்னை ஆள்வான் ஊர்
தென் திரைப் புனல் சூழ்⋆ திருவிண்ணகர் நன்னகரே (2)

நகரமும் நாடுகளும்⋆ ஞானமும் மூடமுமாய்⋆
நிகரில் சூழ் சுடராய் இருளாய்⋆ நிலனாய் விசும்பாய்⋆
சிகர மாடங்கள் சூழ்⋆ திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான்⋆
புகர்கொள் கீர்த்தி அல்லால் இல்லை⋆ யாவர்க்கும் புண்ணியமே (3)

புண்ணியம் பாவம்⋆ புணர்ச்சி பிரிவென்றிவையாய்⋆
எண்ணமாய் மறப்பாய்⋆ உண்மையாய் இன்மையாய் அல்லனாய்⋆
திண்ண மாடங்கள் சூழ்⋆ திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான்⋆
கண்ணன் இன் அருளே⋆ கண்டு கொண்மின்கள் கைதவமே (4)

கை தவம் செம்மை⋆ கருமை வெளுமையுமாய்⋆
மெய்பொய் இளமை⋆ முதுமை புதுமை பழமையுமாய்⋆
செய்த திண் மதிள் சூழ்⋆ திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான்⋆
பெய்த காவு கண்டீர்⋆ பெரும் தேவுடை மூவுலகே (5)

மூவுலகங்களுமாய்⋆ அல்லனாய் உகப்பாய் முனிவாய்⋆
பூவில் வாழ் மகளாய்⋆ தவ்வையாய்ப் புகழாய் பழியாய்⋆
தேவர் மேவித்தொழும்⋆ திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான்⋆
பாவியேன் மனத்தே⋆ உறைகின்ற பரஞ்சுடரே (6)

பரஞ்சுடர் உடம்பாய்⋆ அழுக்கு பதித்த உடம்பாய்⋆
கரந்தும் தோன்றியும் நின்றும்⋆ கை தவங்கள் செய்யும்⋆ விண்ணோர்
சிரங்களால் வணங்கும்⋆ திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான்⋆
வரம்கொள் பாதம் அல்லால் இல்லை⋆ யாவர்க்கும் வன் சரணே (7)

வன் சரண் சுரர்க்காய்⋆ அசுரர்க்கு வெம் கூற்றமுமாய்⋆
தன் சரண் நிழற்கீழ்⋆ உலகம் வைத்தும் வையாதும்⋆
தென் சரண் திசைக்குத்⋆ திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான்⋆
என் சரண் என் கண்ணன்⋆ என்னை ஆளுடை என் அப்பனே (8)

என் அப்பன் எனக்காய் இகுளாய்⋆ என்னைப் பெற்றவளாய்⋆
பொன்னப்பன் மணியப்பன்⋆ முத்தப்பன் என் அப்பனுமாய்⋆
மின்னப் பொன் மதிள் சூழ்⋆ திருவிண்ணகர்ச் சேர்ந்தவப்பன்⋆
தன்னொப்பார் இல்லப்பன்⋆ தந்தனன் தன தாள் நிழலே (9)

நிழல் வெயில் சிறுமை பெருமை⋆ குறுமை நெடுமையுமாய்⋆
சுழல்வன நிற்பன⋆ மற்றுமாய் அவை அல்லனுமாய்⋆
மழலை வாய் வண்டு வாழ்⋆ திருவிண்ணகர் மன்னு பிரான்⋆
கழல்கள் அன்றி⋆ மற்றோர் களைகண் இலம் காண்மின்களே (10)

‡காண்மின்கள் உலகீர்! என்று⋆ கண்முகப்பே நிமிர்ந்த⋆
தாள் இணையன் தன்னைக்⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
ஆணை ஆயிரத்துத்⋆ திருவிண்ணகர்ப் பத்தும் வல்லார்⋆
கோணையின்றி விண்ணோர்க்கு⋆ என்றுமாவர் குரவர்களே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ குரவையாய்ச்சியர் ॥

## கண்ணனது அவதாரச் செயல்களைப் பேசப் பெற்றமைக்குக் களித்தல்

‡குரவை ஆய்ச்சியரோடு கோத்ததும்⋆ குன்றம் ஒன்றேந்தியதும்⋆
உரவு நீர்ப் பொய்கை நாகம் காய்ந்ததும்⋆ உட்பட மற்றும் பல⋆
அரவில் பள்ளிப் பிரான் தன்⋆ மாய வினைகளையே அலற்றி⋆
இரவும் நன் பகலும் தவிர்கிலம்⋆ என்ன குறை எமக்கே (1)

கேயத் தீங்குழல் ஊதிற்றும் நிரை மேய்த்ததும்⋆ கெண்டை ஒண் கண்⋆
வாசப் பூங்குழல் பின்னை தோள்கள் மணந்ததும்⋆ மற்றும் பல⋆
மாயக் கோலப் பிரான் தன்⋆ செய்கை நினைந்து மனம் குழைந்து⋆
நேயத்தோடு கழிந்த போது⋆ எனக்கெவ்வுலகம் நிகரே (2)

நிகரில் மல்லரைச் செற்றதும் நிரை மேய்த்ததும்⋆ நீள் நெடுங்கைச்⋆
சிகர மா களிறட்டதும்⋆ இவை போல்வனவும் பிறவும்⋆
புகர் கொள் சோதிப் பிரான் தன்⋆ செய்கை நினைந்து புலம்பி என்றும்⋆
நுகர வைகல் வைகப்பெற்றேன்⋆ எனக்கென் இனி நோவதுவே (3)

நோவ ஆய்ச்சி உரலோடார்க்க⋆ இரங்கிற்றும் வஞ்சப் பெண்ணை⋆
சாவப் பாலுண்டதும்⋆ ஊர் சகடம் இறச் சாடியதும்⋆
தேவக் கோல பிரான் தன்⋆ செய்கை நினைந்து மனம் குழைந்து⋆
மேவக் காலங்கள் கூடினேன்⋆ எனக்கென் இனி வேண்டுவதே (4)

வேண்டித் தேவரிரக்க வந்து பிறந்ததும்⋆
வீங்கிருள்வாய்
பூண்டு⋆ அன்றன்னை புலம்பப் போய்⋆ அங்கோர்
ஆய்க்குலம் புக்கதும்⋆
காண்டல் இன்றி வளர்ந்து⋆ கஞ்சனைத் துஞ்ச
வஞ்சம் செய்ததும்⋆
ஈண்டு நான் அலற்றப் பெற்றேன்⋆
எனக்கென்ன இகல் உளதே (5)

இகல் கொள் புள்ளைப் பிளந்ததும்⋆ இமில் ஏறுகள் செற்றதுவும்⋆
உயர் கொள் சோலைக் குருந்தொசித்ததும்⋆ உட்பட மற்றும் பல⋆
அகல் கொள் வையம் அளந்த மாயன்⋆ என் அப்பன் தன் மாயங்களே⋆
பகல் இராப் பரவப் பெற்றேன்⋆ எனக்கென்ன மனப் பரிப்பே (6)

மனப் பரிப்போடழுக்கு⋆ மானிட சாதியில் தான் பிறந்து⋆
தனக்கு வேண்டுருக் கொண்டு⋆ தான் தன சீற்றத்தினை முடிக்கும்⋆
புனத் துழாய் முடி மாலை மார்பன்⋆ என் அப்பன் தன் மாயங்களே⋆
நினைக்கும் நெஞ்சுடையேன்⋆ எனக்கினி யார் நிகர் நீள் நிலத்தே (7)

நீள் நிலத்தொடு வான் வியப்ப⋆ நிறை பெரும் போர்கள் செய்து⋆
வாணன் ஆயிரம் தோள் துணித்ததும்⋆ உட்பட மற்றும் பல⋆
மாணியாய் நிலம் கொண்ட மாயன்⋆ என் அப்பந் தன் மாயங்களே⋆
காணும் நெஞ்சுடையேன்⋆ எனக்கினி என்ன கலக்கம் உண்டே (8)

கலக்க ஏழ் கடல் ஏழ்⋆ மலை உலகேழும் கழியக் கடாய்⋆
உலக்கத் தேர்கொடு சென்ற மாயமும்⋆ உட்பட மற்றும் பல⋆
வலக்கை ஆழி இடக்கை சங்கம்⋆ இவையுடை மால் வண்ணனை⋆
மலக்கு நாவுடையேற்கு⋆ மாறுளதோ இம் மண்ணின் மிசையே (9)

மண்மிசைப் பெரும் பாரம் நீங்க⋆ ஓர்
பாரத மா பெரும் போர்
பண்ணி⋆ மாயங்கள் செய்து சேனையைப் பாழ்பட⋆
நூற்றிட்டுப் போய்⋆
விண்மிசைத் தன தாமமே புக⋆ மேவிய
சோதி தன் தாள்⋆
நண்ணி நான் வணங்கப்பெற்றென்⋆
எனக்கார் பிறர் நாயகரே (10)

‡நாயகன் முழுவேழ் உலகுக்குமாய்⋆ முழுவேழ் உலகும்⋆ தன்
வாயகம் புக வைத்துமிழ்ந்தவையாய்⋆ அவை அல்லனுமாம்⋆
கேசவன் அடி இணைமிசைக்⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
தூய ஆயிரத்திப்பத்தால்⋆ பத்தர் ஆவர் துவள் இன்றியே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ துவளில் ॥

தோழி தாயரை நோக்கிக் கூறுதல்

‡துவளில் மா மணி மாடம் ஓங்கு⋆
    தொலைவில்லி மங்கலம் தொழும்
இவளை⋆ நீர் இனி அன்னை மீர்!⋆
    உமக்காசை இல்லை விடுமினோ⋆
தவள ஒண்சங்கு சக்கரம் என்றும்⋆
    தாமரைத் தடங்கண் என்றும்⋆
குவளை ஒண் மலர்க் கண்கள் நீர் மல்க⋆
    நின்று நின்று குமுறுமே (1)

குமுறும் ஓசை விழவொலித்⋆
    தொலைவில்லி மங்கலம் கொண்டு புக்கு⋆
அமுத மென் மொழியாளை⋆ நீர்
    உமக்காசை இன்றி அகற்றினீர்⋆
திமிர் கொண்டால் ஒத்து நிற்கும்⋆ மற்றிவள்
    தேவ தேவ பிரான் என்றே⋆
நிமியும் வாயொடு கண்கள் நீர் மல்க⋆
    நெக்கொசிந்து கரையுமே (2)

கரை கொள் பைம் பொழில் தண் பணைத்⋆
    தொலைவில்லி மங்கலம் கொண்டு புக்கு⋆
உரை கொள் இன் மொழியாளை⋆ நீர்
    உமக்காசை இன்றி அகற்றினீர்⋆
திரை கொள் பௌவத்துச் சேர்ந்ததும்⋆
    திசை ஞாலம் தாவி அளந்ததும்⋆
நிரைகள் மேய்த்ததுமே பிதற்றி⋆
    நெடும் கண்ணீர் மல்க நிற்குமே (3)

நிற்கும் நான்மறை வாணர் வாழ்⋆
    தொலைவில்லி மங்கலம் கண்டபின்⋆
அற்கம் ஒன்றும் அறிவுறாள்⋆ மலிந்தாள்
    கண்டீர் இவள் அன்னைமீர்⋆
கற்கும் கல்வியெல்லாம்⋆ கருங்கடல்
    வண்ணன் கண்ண பிரான் என்றே⋆
ஒற்கம் ஒன்றும் இலள் உகந்துகந்து⋆
    உள் மகிழ்ந்து குழையுமே (4)

குழையும் வாள் முகத்தேழையைத்⋆
    தொலைவில்லி மங்கலம் கொண்டு புக்கு⋆
இழை கொள் சோதிச் செந்தாமரைக் கண்
    பிரான்⋆ இருந்தமை காட்டினீர்⋆
மழை பெய்தால் ஒக்கும் கண்ண நீரினொடு⋆
    அன்று தொட்டும் மையாந்து⋆ இவள்
நுழையும் சிந்தையள் அன்னைமீர்!⋆ தொழும்
    அத்திசை உற்று நோக்கியே (5)

நோக்கும் பக்கம் எல்லாம்⋆ கரும்பொடு
    செந்நெல் ஓங்கு செந்தாமரை⋆
வாய்க்கும் தண் பொருநல்⋆ வடகரை
    வண் தொலைவில்லி மங்கலம்⋆
நோக்குமேல் அத்திசை அல்லால்⋆ மறு
    நோக்கிலள் வைகல் நாள்தொறும்⋆
வாய்க்கொள் வாசகமும்⋆ மணிவண்ணன்
    நாமமே இவள் அன்னைமீர்! (6)

அன்னைமீர்! அணி மா மயில்⋆ சிறுமான்
    இவள் நம்மைக் கைவலிந்து⋆
என்ன வார்த்தையும் கேட்குறாள்⋆
    தொலைவில்லி மங்கலம் என்றல்லால்⋆
முன்னம் நோற்ற விதிகொலோ⋆ முகில்
    வண்ணன் மாயம் கொலோ⋆ அவன்

சின்னமும் திருநாமமும்⋆ இவள்
வாயனகள் திருந்தவே (7)

திருந்து வேதமும் வேள்வியும்⋆
திரு மா மகளிரும் தாம்⋆ மலிந்-
திருந்து வாழ் பொருநல்⋆ வடகரை
வண் தொலைவில்லி மங்கலம்⋆
கருந் தடம் கண்ணி கை தொழுத⋆ அந்நாள்
தொடங்கி இந்நாள்தொறும்⋆
இருந்திருந்தரவிந்த லோசன!⋆
என்றென்றே நைந்திரங்குமே (8)

இரங்கி நாள்தொறும்⋆ வாய்வெரீ இயிவள்
கண்ண நீர்கள் அலமர⋆
மரங்களும் இரங்கு வகை⋆
மணிவண்ணவோ! என்று கூவுமால்⋆
துரங்கம் வாய் பிளந்தான் உறை⋆
தொலைவில்லி மங்கலம் என்று⋆ தன்
கரங்கள் கூப்பித் தொழும்⋆ அவ்வூர்த்
திருநாமம் கற்றதன் பின்னையே (9)

பின்னைகொல் நில மா மகள்கொல்⋆
திருமகள்கொல் பிறந்திட்டாள்⋆
என்ன மாயம் கொலோ⋆ இவள் நெடுமால்
என்றே நின்று கூவுமால்⋆
முன்னி வந்தவன் நின்றிருந்துறையும்⋆
தொலைவில்லி மங்கலம்
சென்னியால் வணங்கும்⋆ அவ்வூர்த்
திருநாமம்⋆ கேட்பது சிந்தையே (10)

‡சிந்தையாலும் சொல்லாலும் செய்கையி-
னாலும்⋆ தேவ பிரானையே⋆
தந்தை தாய் என்றடைந்த⋆ வண்
குருகூரவர் சடகோபன் சொல்⋆

முந்தை ஆயிரத்துள் இவை⋆ தொலை-
வில்லி மங்கலத்தைச் சொன்ன⋆
செந் தமிழ் பத்தும் வல்லார்⋆
அடிமை செய்வார் திருமாலுக்கே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மாலுக்கு ॥

தலைமகளைக் குறித்துத் தாய் இரங்குதல்

‡மாலுக்கு⋆ வையம் அளந்த மணாளற்கு⋆
நீலக் கரு நிற⋆ மேக நியாயற்கு⋆
கோலச் செந்தாமரைக்⋆ கண்ணற்கு⋆
என் கொங்கலரேலக் குழலி⋆ இழந்தது சங்கே (1)

சங்கு வில் வாள் தண்டு⋆ சக்கரக் கையற்கு⋆
செங்கனி வாய்ச்⋆ செய்ய தாமரை கண்ணற்கு⋆
கொங்கலர் தண்ணந் துழாய்⋆ முடியானுக்கு⋆
என் மங்கை இழந்தது⋆ மாமைநிறமே (2)

நிறம் கரியானுக்கு⋆ நீடுலகுண்ட⋆
திறம் கிளர் வாய்ச்⋆ சிறுக் கள்ளன் அவற்கு⋆
கறங்கிய சக்கரக்⋆ கையவனுக்கு⋆ என்
பிறங்கிரும் கூந்தல்⋆ இழந்தது பீடே (3)

பீடுடை நான்முகனைப்⋆ படைத்தானுக்கு⋆
மாடுடை வையம் அளந்த⋆ மணாளற்கு⋆
நாடுடை மன்னர்க்குத்⋆ தூது செல் நம்பிக்கு⋆ என்
பாடுடை அல்குல்⋆ இழந்தது பண்பே (4)

பண்புடை வேதம்⋆ பயந்த பரனுக்கு⋆
மண் புரை வையம் இடந்த⋆ வராகற்கு⋆
தெண் புனல் பள்ளி⋆ எம் தேவ பிரானுக்கு⋆ என்
கண்புனை கோதை⋆ இழந்தது கற்பே (5)

கற்பகக் காவன⋆ நற்பல தோளற்கு⋆
பொன் சுடர்க் குன்றன்ன⋆ பூந்தண் முடியற்கு⋆
நற்பல தாமரை⋆ நாண்மலர்க் கையற்கு⋆ என்
வில் புருவக்கொடி⋆ தோற்றது மெய்யே (6)

மெய்யமர் பல் கலன்⋆ நன்கணிந்தானுக்கு⋆
பையரவின் அணைப்⋆ பள்ளியினானுக்கு⋆
கையொடு கால் செய்ய⋆ கண்ண பிரானுக்கு⋆ என்
தையல் இழந்தது⋆ தன்னுடைச் சாயே (7)

சாயக் குருந்தம் ஒசித்த⋆ தமியற்கு⋆
மாயச் சகடம் உதைத்த⋆ மணாளற்கு⋆
பேயைப் பிணம்படப்⋆ பால் உண் பிரானுக்கு⋆ என்
வாசக் குழலி⋆ இழந்தது மாண்பே (8)

மாண்பமை கோலத்து⋆ எம் மாயக் குறளற்கு⋆
சேண் சுடர்க் குன்றன்ன⋆ செஞ்சுடர் மூர்த்திக்கு⋆
காண் பெரும் தோற்றத்து⋆ எம் காகுத்த நம்பிக்கு⋆ என்
பூண்புனை மென்முலை⋆ தோற்றது பொற்பே (9)

பொற்பமை நீள் முடிப்⋆ பூந்தண் துழாயற்கு⋆
மற்பொரு தோள் உடை⋆ மாயப் பிரானுக்கு⋆
நிற்பன பல்லுருவாய்⋆ நிற்கு மாயற்கு⋆ என்
கற்புடையாட்டி⋆ இழந்தது கட்டே (10)

‡கட்டெழில் சோலை⋆ நல் வேங்கட வாணனை⋆
கட்டெழில் தென் குருகூர்ச்⋆ சடகோபன் சொல்⋆
கட்டெழில் ஆயிரத்து⋆ இப்பத்தும் வல்லவர்⋆
கட்டெழில் வானவர்⋆ போகம் உண்பாரே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ உண்ணுஞ்சோறு ॥

தலைவனது நகர்நோக்கிச் சென்ற மகளைக் குறித்துத் தாய் இரங்குதல்

‡உண்ணும் சோறு பருகுநீர்⋆ தின்னும் வெற்றிலையும் எல்லாம்
கண்ணன்⋆ எம் பெருமான் என்றென்றே⋆ கண்கள் நீர் மல்கி⋆
மண்ணினுள் அவன் சீர்⋆ வளம் மிக்கவன் ஊர் வினவி⋆
திண்ணம் என் இளமான் புகும் ஊர்⋆ திருக்கோளூரே (1)

ஊரும் நாடும் உலகும்⋆ தன்னைப்போல் அவனுடைய⋆
பேரும் தார்களுமே பிதற்றக்⋆ கற்பு வான் இடறி⋆
சேருநல் வளம் சேர்⋆ பழனத் திருக்கோளூர்க்கே⋆
போரும் கொல் உரையீர்⋆ கொடியேன் கொடி பூவைகளே (2)

பூவை பைங்கிளிகள்⋆ பந்து தூதைபூம் புட்டில்கள்⋆
யாவையும் திருமால்⋆ திருநாமங்களே கூவியெழும்⋆ என்
பாவை போயினித்⋆ தண் பழனத் திருக்கோளூர்க்கே⋆
கோவைவாய் துடிப்ப⋆ மழைக் கண்ணொடென்
செய்யுங்கொலோ (3)

கொல்லை என்பர்கொலோ⋆ குணம் மிக்கனள் என்பர்கொலோ⋆
சில்லை வாய்ப் பெண்டுகள்⋆ அயல் சேரியுள்ளாரும் எல்லே⋆
செல்வம் மல்கி அவன் கிடந்த⋆ திருக்கோளூர்க்கே⋆
மெல்லிடை நுடங்க⋆ இளமான் செல்ல மேவினளே (4)

மேவி நைந்து நைந்து விளையாடலுறாள்⋆ என் சிறுத்
தேவி போய்⋆ இனித் தன் திருமால்⋆ திருக்கோளூரில்⋆
பூவியல் பொழிலும்⋆ தடமும் அவன் கோயிலும் கண்டு⋆
ஆவியுள் குளிர⋆ எங்ஙனே உகக்குங்கொல் இன்றே (5)

இன்றெனக்குத-வாதகன்ற⋆ இளமான் இனிப்போய்⋆
தென் திசைத் திலதம் அனைய⋆ திருக்கோளூர்க்கே சென்று⋆

தன் திருமால் திருக்கண்ணும்⋆ செவ்வாயும் கண்டு⋆
நின்று நின்று நையும்⋆ நெடும் கண்கள் பனி மல்கவே (6)

மல்கு நீர் கண்ணோடு⋆ மையல் உற்ற மனத்தனளாய்⋆
அல்லுநன் பகலும்⋆ நெடுமால் என்றழைத்தினிப் போய்⋆
செல்வம் மல்கி அவன் கிடந்த⋆ திருக்கோளூர்க்கே⋆
ஒல்கி ஒல்கி நடந்து⋆ எங்ஙனே புகுங்கொல் ஒசிந்தே (7)

ஒசிந்த நுண்ணிடை மேல்⋆ கையை வைத்து நொந்து நொந்து⋆
கசிந்த நெஞ்சினளாய்க்⋆ கண்ண நீர் துளும்பச் செல்லுங்கொல்⋆
ஒசிந்த ஒண் மலராள்⋆ கொழுநன் திருக்கோளூர்க்கே⋆
கசிந்த நெஞ்சினளாய்⋆ எம்மை நீத்த எம் காரிகையே (8)

காரியம் நல்லனகள்⋆ அவை காணில் என் கண்ணனுக்கென்று⋆
ஈரியாய் இருப்பாள் இதெல்லாம்⋆ கிடக்க இனிப்போய்⋆
சேரி பல் பழி தூயிரைப்பத்⋆ திருக்கோளூர்க்கே⋆
நேரிழை நடந்தாள்⋆ எம்மை ஒன்றும் நினைத்திலளே (9)

நினைக்கிலேன் தெய்வங்காள்⋆ நெடுங்கண் இளமான் இனிப்போய்⋆
அனைத்துலகும் உடைய⋆ அரவிந்த லோசனனை⋆
தினைத்தனையும் விடாள்⋆ அவன் சேர் திருக்கோளூர்க்கே⋆
மனைக்கு வான் பழியும் நினையாள்⋆ செல்ல வைத்தனளே (10)

‡வைத்த மா நிதியாம்⋆ மதுசூதனையே அலற்றி⋆
கொத்தலர் பொழில் சூழ்⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
பத்து நூற்றுள் இப்பத்து⋆ அவன் சேர் திருக்கோளூர்க்கே⋆
சித்தம் வைத்துரைப்பார்⋆ திகழ் பொன் உலகாள்வாரே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பொன்னுலகு ॥

*திருநாடு முதலியவற்றில் தலைமகள் பறவைகளைத் தூதுவிடல்*

‡பொன்னுலகாளீரோ⋆ புவனி முழுதாளீரோ⋆
நன்னலப் புள்ளினங்காள்!⋆ வினையாட்டியேன் நான் இரந்தேன்⋆
முன்னுலகங்கள் எல்லாம் படைத்த⋆ முகில்வண்ணன் கண்ணன்⋆
என் நலம் கொண்ட பிரான் தனக்கு⋆ என் நிலைமை உரைத்தே (1)

மையமர் வாள் நெடுங்கண்⋆ மங்கைமார் முன்பென் கையிருந்து⋆
நெய்யமர் இன்னடிசில்⋆ நிச்சல் பாலோடு மேவீரோ⋆
கையமர் சக்கரத்து⋆ என் கனிவாய்ப் பெருமானைக் கண்டு⋆
மெய்யமர் காதல் சொல்லிக்⋆ கிளிகாள்! விரைந்தோடி வந்தே (2)

ஓடிவந்தென் குழல்மேல்⋆ ஒளி மா மலர் ஊதீரோ⋆
கூடிய வண்டினங்காள்!⋆ குருநாடுடை ஐவர்கட்காய்⋆
ஆடிய மா நெடும் தேர்ப்படை⋆ நீறெழ செற்ற பிரான்⋆
சூடிய தண் துளவம் உண்ட⋆ தூ மது வாய்கள் கொண்டே (3)

தூ மது வாய்கள் கொண்டுவந்து⋆ என் முல்லைகள்மேல் தும்பிகாள்⋆
பூ மதுவுண்ணச் செல்லில்⋆ வினையேனைப் பொய்செய்தகன்ற⋆
மா மதுவார் தண்டுழாய்முடி⋆ வானவர் கோனைக் கண்டு⋆
யாம் இதுவோ தக்கவாறென்னவேண்டும்⋆ கண்டீர் நுங்கட்கே (4)

நுங்கட்கு யான் உரைக்கேன் வம்மின்⋆ யான் வளர்த்த கிளிகாள்⋆
வெங்கண் புள்ளூர்ந்து வந்து⋆ வினையேனை நெஞ்சம் கவர்ந்த⋆
செங்கண் கருமுகிலைச்⋆ செய்ய வாய்ச் செழுங்கற்பகத்தை⋆
எங்குச் சென்றாகிலும் கண்டு⋆ இதுவோ தக்கவாறென்மினே (5)

என் மின்னு நூல் மார்வன்⋆ என் கரும் பெருமான் என் கண்ணன்⋆
தன் மன்னு நீள் கழல்மேல்⋆ தண்டுழாய் நமக்கன்றி நல்கான்⋆
கன்மின்கள் என்றும்மை யான்⋆ கற்பியாவைத்த மாற்றம் சொல்லி⋆
சென்மின்கள் தீவினையேன்⋆ வளர்த்த சிறு பூவைகளே (6)

பூவைகள் போல் நிறத்தன்⋆ புண்டரீகங்கள் போலும் கண்ணன்⋆
யாவையும் யாவருமாய்⋆ நின்ற மாயன் என்னாழி பிரான்⋆
மாவை வல் வாய் பிளந்த⋆ மதுசூதற்கென் மாற்றம் சொல்லி⋆
பாவைகள்! தீர்க்கிற்றிரே⋆ வினையாட்டியேன் பாசறவே (7)

பாசறவெய்தி இன்னே⋆ வினையேன் எனை ஊழி நைவேன்⋆
ஆசறு தூவி வெள்ளைக் குருகே!⋆ அருள் செய்யொருநாள்⋆
மாசறு நீலச் சுடர் முடி⋆ வானவர் கோனைக் கண்டு⋆
ஏசறும் நும்மை அல்லால்⋆ மறுநோக்கிலள் பேர்த்துமற்றே (8)

பேர்த்து மற்றோர் களைகண்⋆ வினையாட்டியேன் நானொன்றிலேன்⋆
நீர்த் திரைமேல் உலவி⋆ இரை தேரும் புதாவினங்காள்⋆
கார்த் திரள் மா முகில் போல் கண்ணன்⋆ விண்ணவர் கோனைக் கண்டு⋆
வார்த்தைகள் கொண்டருளி உரையீர்⋆ வைகல் வந்திருந்தே (9)

வந்திருந்தும்முடைய⋆ மணிச் சேவலும் நீரும் எல்லாம்⋆
அந்தரம் ஒன்றும் இன்றி⋆ அலர்மேல் அசையும் அன்னங்காள்⋆
என் திரு மார்வற்கென்னை⋆ இன்னாவாறிவள் காண்மின் என்று⋆
மந்திரத்தொன்றுணர்த்தி உரையீர்⋆ மறு மாற்றங்களே (10)

‡மாற்றங்கள் ஆய்ந்து கொண்டு⋆ மதுசூத பிரான் அடிமேல்⋆
நாற்றங்கொள் பூம் பொழில் சூழ்⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
தோற்றங்கள் ஆயிரத்துள்⋆ இவையும் ஒரு பத்தும் வல்லார்⋆
ஊற்றின்கண் நுண் மணல் போல்⋆ உருகாநிற்பர் நீராயே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நீராய் நிலனாய் ॥

கேட்டோர் நெஞ்சம் நீராய் உருகும் வண்ணம் ஆழ்வார் எம்பெருமானைக் கூப்பிடுதல்

‡நீராய் நிலனாய்⋆ தீயாய்க் காலாய் நெடுவானாய்⋆
சீரார் சுடர்கள் இரண்டாய்ச்⋆ சிவனாய் அயன் ஆனாய்⋆
கூரார் ஆழி வெண் சங்கேந்திக்⋆ கொடியேன்பால்
வாராய்⋆ ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே (1)

மண்ணும் விண்ணும் மகிழக்⋆ குறளாய் வலம் காட்டி⋆
மண்ணும் விண்ணும் கொண்ட⋆ மாய அம்மானே⋆
நண்ணி உனை நான்⋆ கண்டுகந்து கூத்தாட⋆
நண்ணி ஒருநாள்⋆ ஞாலத்தூடே நடவாயே (2)

ஞாலத்தூடே நடந்தும் நின்றும்⋆ கிடந்திருந்தும்⋆
சாலப் பல நாள்⋆ உகந்தோறுயிர்கள் காப்பானே⋆
கோலத் திருமா மகளோடு⋆ உன்னைக் கூடாதே⋆
சாலப் பல நாள்⋆ அடியேன் இன்னம் தளர்வேனோ (3)

தளர்ந்தும் முறிந்தும்⋆ சகட அசுரர் உடல் வேறா⋆
பிளந்து வீயத்⋆ திருக் கால் ஆண்ட பெருமானே⋆
கிளர்ந்து பிரமன் சிவன்⋆ இந்திரன் விண்ணவர் சூழ⋆
விளங்க ஒருநாள்⋆ காண வாராய் விண்மீதே (4)

விண்மீதிருப்பாய்! மலைமேல் நிற்பாய்!⋆ கடல் சேர்ப்பாய்⋆
மண்மீதுழல்வாய்!⋆ இவற்றுள் எங்கும் மறைந்துறைவாய்⋆
எண் மீதியன்ற புறவண்டத்தாய்!⋆ எனதாவி⋆
உள் மீதாடி⋆ உருக்காட்டாதே ஒளிப்பாயோ (5)

பாயோர் அடிவைத்ததன் கீழ்ப்⋆ பரவை நிலம் எல்லாம்
தாய்⋆ ஓர் அடியால்⋆ எல்லா உலகும் தடவந்த

மாயோன்⋆ உன்னைக் காண்பான்⋆ வருந்தி எனை நாளும்⋆
தீயோடு உடன்சேர் மெழுகாய்⋆ உலகில் திரிவேனோ (6)

உலகில் திரியும் கரும கதியாய்⋆ உலகமாய்⋆
உலகுக்கே ஓர் உயிரும் ஆனாய்⋆ புறவண்டத்து⋆
அலகில் பொலிந்த⋆ திசை பத்தாய அருவேயோ⋆
அலகில் பொலிந்த⋆ அறிவிலேனுக்கருளாயே (7)

அறிவிலேனுக்கருளாய்⋆ அறிவார் உயிர் ஆனாய்⋆
வெறி கொள் சோதி மூர்த்தி!⋆ அடியேன் நெடுமாலே⋆
கிறிசெய்தென்னைப் புறத்திட்டு⋆ இன்னம் கெடுப்பாயோ⋆
பிறிதொன்றறியா அடியேன்⋆ ஆவி திகைக்கவே (8)

ஆவி திகைக்க⋆ ஐவர் குமைக்கும் சிற்றின்பம்⋆
பாவியேனைப்⋆ பல நீ காட்டிப் படுப்பாயோ⋆
தாவி வையம் கொண்ட⋆ தடம் தாமரைகட்கே⋆
கூவிக் கொள்ளும் காலம்⋆ இன்னம் குறுகாதோ (9)

குறுகா நீளா⋆ இறுதி கூடா எனையூழி⋆
சிறுகா பெருகா⋆ அளவில் இன்பம் சேர்ந்தாலும்⋆
மறு கால் இன்றி மாயோன்⋆ உனக்கே ஆளாகும்⋆
சிறு காலத்தை உறுமோ⋆ அந்தோ தெரியிலே (10)

‡தெரிதல் நினைதல்⋆ எண்ணல் ஆகாத் திருமாலுக்கு⋆
உரிய தொண்டர் தொண்டர்⋆ தொண்டன் சடகோபன்⋆
தெரியச் சொன்ன⋆ ஓர் ஆயிரத்துள் இப்பத்தும்⋆
உரிய தொண்டர் ஆக்கும்⋆ உலகம் உண்டாற்கே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# || உலகம் உண்ட ||

திருவேங்கடமுடையானது திருவடிகளில் சரணம் புகுதல்

‡உலகம் உண்ட பெருவாயா!⋆ உலப்பில் கீர்த்தி அம்மானே⋆
நிலவும் சுடர் சூழ் ஒளி மூர்த்தி!⋆ நெடியாய்! அடியேன் ஆருயிரே⋆
திலதம் உலகுக்காய் நின்ற⋆ திருவேங்கடத்தெம் பெருமானே⋆
குல தொல் அடியேன் உன பாதம்⋆ கூடுமாறு கூறாயே (1)

கூறாய் நீறாய் நிலன் ஆகிக்⋆ கொடுவல் அசுரர் குலம் எல்லாம்⋆
சீறா எறியும் திரு நேமி வலவா!⋆ தெய்வக் கோமானே⋆
சேறார் சுனைத் தாமரை செந்தீ மலரும்⋆ திருவேங்கடத்தானே⋆
ஆறா அன்பில் அடியேன்⋆ உன் அடிசேர் வண்ணம் அருளாயே (2)

வண்ண மருள் கொள் அணி மேக
வண்ணா!⋆ மாய அம்மானே⋆
எண்ணம் புகுந்து தித்திக்கும்
அமுதே!⋆ இமையோர் அதிபதியே⋆
தெண்ணல் அருவி மணி பொன் முத்-
தலைக்கும்⋆ திருவேங்கடத்தானே⋆
அண்ணலே! உன் அடிசேர⋆
அடியேற்காவா என்னாயே! (3)

ஆவா என்னாதுலகத்தை அலைக்கும்⋆ அசுரர் வாணாள்மேல்⋆
தீவாய் வாளி மழை பொழிந்த சிலையா!⋆ திரு மா மகள் கேள்வா
தேவா⋆ சுரர்கள் முனிக் கணங்கள் விரும்பும்⋆ திருவேங்கடத்தானே⋆
பூவார் கழல்கள் அருவினையேன்⋆ பொருந்துமாறு புணராயே (4)

புணரா நின்ற மரம் ஏழ்⋆ அன்றெய்த ஒருவில் வலவாவோ⋆
புணரேய் நின்ற மரம் இரண்டின்⋆ நடுவே போன முதல்வாவோ⋆
திணரார் மேகம் எனக்களிறு சேரும்⋆ திருவேங்கடத்தானே⋆
திணரார் சார்ங்கத்துன பாதம்⋆ சேர்வதடியேன் எந்நாளே (5)

எந்நாளே நாம் மண்ணளந்த⋆
    இணைத் தாமரைகள் காண்பதற்கென்று⋆
எந்நாளும் நின்றிமையோர்கள்
    ஏத்தி⋆ இறைஞ்சி இனம் இனமாய்⋆
மெய்ந்நா மனத்தால் வழிபாடு
    செய்யும்⋆ திருவேங்கடத்தானே⋆
மெய்ந்நான் எய்தி எந்நாள்⋆ உன்
    அடிக்கண் அடியேன் மேவுவதே (6)

அடியேன் மேவி அமர்கின்ற
    அமுதே!⋆ இமையோர் அதிபதியே⋆
கொடியா அடு புள் உடையானே!⋆
    கோலக் கனிவாய்ப் பெருமானே⋆
செடியார் வினைகள் தீர் மருந்தே!⋆
    திருவேங்கடத்தெம் பெருமானே⋆
நொடியார் பொழுதும் உன பாதம்⋆
    காண நோலாதாற்றேனே (7)

நோலாதாற்றேன் உன பாதம்⋆ காணவென்று நுண் உணர்வில்⋆
    நீலார் கண்டத்தம்மானும்⋆ நிறை நான்முகனும் இந்திரனும்⋆
சேலேய் கண்ணார் பலர் சூழ விரும்பும்⋆ திருவேங்கடத்தானே⋆
    மாலாய் மயக்கி அடியேன்பால்⋆ வந்தாய் போலே வாராயே (8)

வந்தாய் போலே வாராதாய்!⋆
    வாராதாய் போல் வருவானே⋆
செந் தாமரைக் கண் செங்கனி வாய்⋆
    நால் தோள் அமுதே! எனதுயிரே⋆
சிந்தா மணிகள் பகர் அல்லைப்-
    பகல் செய்⋆ திருவேங்கடத்தானே⋆
அந்தோ! அடியேன் உன பாதம்⋆
    அகலகில்லேன் இறையுமே (9)

‡அகலகில்லேன் இறையும் என்று⋆
    அலர்மேல் மங்கை உறை மார்பா⋆

நிகரில் புகழாய்! உலகமூன்-
றுடையாய்!⋆ என்னை ஆள்வானே⋆
நிகரில் அமரர் முனிக் கணங்கள்
விரும்பும்⋆ திருவேங்கடத்தானே⋆
புகல் ஒன்றில்லா அடியேன்⋆ உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே (10)

‡அடிக் கீழ் அமர்ந்து புகுந்து⋆ அடியீர்!
வாழ்மின் என்றென்றருள் கொடுக்கும்⋆
படிக்கேழ் இல்லாப் பெருமானைப்⋆
பழனக் குருகூர்ச் சடகோபன்⋆
முடிப்பான் சொன்ன ஆயிரத்துத்⋆
திருவேங்கடத்துக்கிவை பத்தும்⋆
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து⋆
பெரிய வானுள் நிலாவுவரே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ உண்ணிலாவிய ॥

## இந்திரியங்களால் இன்னும் எத்தனை நாள் துன்புறுவேன் என்று ஆழ்வார் வர்ந்தல்

‡உண்ணிலாவிய ஐவரால் குமைதீற்றி⋆ என்னை
உன் பாத பங்கயம்⋆
நண்ணிலா வகையே⋆ நலிவான் இன்னும் எண்ணுகின்றாய்⋆
எண்ணிலாப் பெருமாயனே! இமையோர்கள்
ஏத்தும்⋆ உலக மூன்றுடை⋆
அண்ணலே! அமுதே! அப்பனே!⋆ என்னை ஆள்வானே! (1)

என்னை ஆளும் வன்கோ ஓர் ஐந்திவை பெய்து⋆
இராப்பகல் மோது வித்திட்டு⋆
உன்னை நான் அணுகாவகை⋆ செய்து போதி கண்டாய்⋆
கன்னலே! அமுதே! கார் முகில் வண்ணனே!⋆
கடல் ஞாலம் காக்கின்ற⋆
மின்னுநேமியினாய்!⋆ வினையேனுடை வேதியனே! (2)

வேதியாநிற்கும் ஐவரால்⋆ வினையேனை
மோதுவித்து⋆ உன் திருவடிச்
சாதியாவகை⋆ நீ தடுத்தென் பெறுதியந்தோ⋆
ஆதியாகி அகல் இடம் படைத்து⋆ உண்-
டுமிழந்து கடந்திடந்திட்ட⋆
சோதி நீள் முடியாய்!⋆ தொண்டனேன் மதுசூதனனே! (3)

சூது நான் அறியாவகை⋆ சுழற்றியோர் ஐவரைக்
காட்டி⋆ உன்னடிப்
போது நான் அணுகாவகை⋆ செய்து போதி கண்டாய்⋆
யாதும் யாவரும் இன்றி நின்னகம்பால் ஒடுக்கி⋆
ஓர் ஆலின் நீள் இலை⋆
மீது சேர் குழவி!⋆ வினையேன் வினைதீர் மருந்தே! (4)

தீர் மருந்தின்றி ஐந்து நோய் அடும்⋆ செக்கில் இட்டுத்
திரிக்கும் ஐவரை⋆
நேர் மருங்குடைத்தா அடைத்து⋆ நெகிழிப்பான் ஒக்கின்றாய்⋆
ஆர் மருந்தினி ஆகுவர்⋆ அடல் ஆழி ஏந்தி
அசுரர் வன் குலம்⋆
வேர் மருங்கறுத்தாய்!⋆ விண்ணுளார் பெருமானேயோ! (5)

விண்ணுளார் பெருமாற்கடிமை செய்வாரையும்
செறும்⋆ ஐம்புலன் இவை⋆
மண்ணுள் என்னைப் பெற்றால்⋆ என் செய்யா மற்று நீயும் விட்டால்⋆
பண்ணுளாய்! கவி தன்னுளாய்!⋆ பத்தியின் உள்ளாய்!
பரமீசனே⋆ வந்தென்
கண்ணுளாய்! நெஞ்சுளாய்!⋆ சொல்லுளாய்! ஒன்று சொல்லாயே (6)

ஒன்று சொல்லி ஒருத்தினில் நிற்கிலாத⋆
ஓர் ஐவர் வன் கயவரை⋆
என்று யான் வெல்கிற்பன்⋆ உன் திருவருள் இல்லையேல்⋆
அன்று தேவர் அசுரர் வாங்க⋆ அலை கடல்
அரவம் அளாவி⋆ ஓர்
குன்றம் வைத்த எந்தாய்!⋆ கொடியேன் பருகு இன்னமுதே! (7)

இன்னமுதெனத் தோன்றி⋆ ஓர் ஐவர் யாவரையும்
மயக்க⋆ நீ வைத்த
முன்ன மாயம் எல்லாம்⋆ முழு வேர் அரிந்து⋆ என்னையுன்
சின்னமும் திரு மூர்த்தியும்⋆ சிந்தித் தேத்திக்
கை தொழவே அருள் எனக்கு⋆
என்னம்மா! என் கண்ணா!⋆ இமையோர் தம் குலமுதலே! (8)

குல முதல் அடும் தீவினைக்⋆ கொடுவன் குழியினில்
வீழ்க்கும் ஐவரை⋆
வல முதல் கெடுக்கும்⋆ வரமே தந்தருள் கண்டாய்⋆
நிலமுதல் இனி எவ்வுலகுக்கும்⋆ நிற்பன
செல்வன எனப்⋆ பொருள்
பல முதல் படைத்தாய்!⋆ என் கண்ணா! என் பரஞ்சுடரே! (9)

என் பரஞ்சுடரே! என்றுன்னை அலற்றி⋆
உன் இணைத் தாமரைகட்கு⋆
அன்புருகி நிற்கும்⋆ அது நிற்கச் சுமடு தந்தாய்⋆
வன் பரங்கள் எடுத்தைவர்⋆ திசை திசை
வலித்தெற்றுகின்றனர்⋆
முன் பரவை கடைந்து⋆ அமுதம் கொண்ட மூர்த்தியோ! (10)

‡கொண்ட மூர்த்தி ஓர் மூவராய்⋆ குணங்கள் படைத்-
தளித்துக் கெடுக்கும்⋆ அப்-
புண்டரீகப் கொப்பூழ்⋆ புனல் பள்ளி அப்பனுக்கே⋆
தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன்⋆
சடகோபன் சொல் ஆயிரத்துள் இப்பத்தும்⋆
கண்டு பாட வல்லார்⋆ வினைபோம் கங்குலும் பகலே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ கங்குலும் பகலும் ‖

தலைவியின் நிலைகண்ட தாய் அரங்கரைப் பார்த்து வினாதல்

‡கங்குலும் பகலும் கண் துயில் அறியாள்⋆
    கண்ண நீர் கைகளால் இறைக்கும்⋆
சங்கு சக்கரங்கள் என்று கை கூப்பும்⋆
    தாமரைக் கண் என்றே தளரும்⋆
எங்ஙனே தரிக்கேன் உன்னை விட்டென்னும்⋆
    இரு நிலம் கை துழாவிருக்கும்⋆
செங்கயல் பாய் நீர்த் திருவரங்கத்தாய்!⋆
    இவள் திறத்தென் செய்கின்றாயே (1)

என் செய்கின்றாய் என் தாமரைக் கண்ணா!
    என்னும்⋆ கண்ணீர் மல்க இருக்கும்⋆
என் செய்கேன் எறி நீர்த் திருவரங்கத்தாய்
    என்னும்⋆ வெவ்வுயிர்த்துயிர்த்துருகும்⋆
முன் செய்த வினையே! முகப்படாய் என்னும்⋆
    முகில்வண்ணா! தகுவதோ என்னும்⋆
முன் செய்திவ்வுலகம் உண்டுமிழ்ந்தளந்தாய்!⋆
    எங்கொலோ முடிகின்றதிவட்கே (2)

வட்கிலள் இறையும் மணிவண்ணா! என்னும்⋆
    வானமே நோக்கும் மையாக்கும்⋆
உட்குடை அசுரர் உயிர் எல்லாம் உண்ட⋆
    ஒருவனே! என்னும் உள்ளுருகும்⋆
கட்கிலீ! உன்னைக் காணுமாறருளாய்⋆
    காகுத்தா! கண்ணனே! என்னும்⋆
திட்கொடி மதிள் சூழ் திருவரங்கத்தாய்!⋆
    இவள்திறத்தென் செய்திட்டாயே (3)

இட்ட கால் இட்ட கைகளாய் இருக்கும்⋆
    எழுந்துலாய் மயங்கும் கை கூப்பும்⋆
கட்டமே காதல் என்று மூர்ச்சிக்கும்⋆
    கடல்வண்ணா! கடியைகாண் என்னும்⋆
வட்ட வாய் நேமி வலங்கையா! என்னும்⋆
    வந்திடாய் என்றென்றே மயங்கும்⋆
சிட்டனே! செழு நீர்த் திருவரங்கத்தாய்!⋆
    இவள்திறத்தென் சிந்தித்தாயே (4)

சிந்திக்கும் திகைக்கும் தேறும் கை கூப்பும்⋆
    திருவரங்கத்துள்ளாய்! என்னும்
வந்திக்கும்⋆ ஆங்கே மழைக்கண்ணீர் மல்க⋆
    வந்திடாய் என்றென்றே மயங்கும்⋆
அந்திப்போதவுணன் உடல் இடந்தானே!⋆
    அலை கடல் கடைந்த ஆரமுதே⋆
சந்தித்துன் சரணம் சார்வதே வலித்த⋆
    தையலை மையல் செய்தானே! (5)

மையல் செய்தென்னை மனம் கவர்ந்தானே!
    என்னும்⋆ மா மாயனே! என்னும்⋆
செய்ய வாய் மணியே! என்னும்⋆ தண் புனல் சூழ்
    திருவரங்கத்துள்ளாய்! என்னும்⋆
வெய்ய வாள் தண்டு சங்கு சக்கரம் வில்
    ஏந்தும்⋆ விண்ணோர் முதல்! என்னும்⋆
பை கொள் பாம்பணையாய்! இவள் திறத்தருளாய்⋆
    பாவியேன் செயற்பாலதுவே (6)

பால துன்பங்கள் இன்பங்கள் படைத்தாய்!⋆
    பற்றிலார் பற்ற நின்றானே⋆
கால சக்கரத்தாய்! கடல் இடம் கொண்ட⋆
    கடல்வண்ணா! கண்ணனே! என்னும்⋆
சேல் கொள் தண் புனல் சூழ் திருவரங்கத்தாய்!
    என்னும்⋆ என் தீர்த்தனே! என்னும்⋆

கோல மா மழைக்கண் பனி மல்க இருக்கும்⋆
  என்னுடைக் கோமளக் கொழுந்தே (7)

கொழுந்து வானவர்கட்கென்னும்⋆
  குன்றேந்திக்கோ நிரை காத்தவன்! என்னும்⋆
அழும்தொழும் ஆவி அனல வெவ்வுயிர்க்கும்⋆
  அஞ்சன வண்ணனே! என்னும்⋆
எழுந்து மேல் நோக்கி இமைப்பிலள் இருக்கும்⋆
  எங்ஙனே நோக்குகேன் என்னும்⋆
செழுந் தடம் புனல் சூழ் திருவரங்கத்தாய்!⋆
  என் செய்கேன் என் திருமகட்கே (8)

‡என் திருமகள் சேர் மார்வனே! என்னும்⋆
  என்னுடை ஆவியே! என்னும்⋆
நின் திருவெயிற்றால் இடந்து நீ கொண்ட⋆
  நிலமகள் கேள்வனே! என்னும்⋆
அன்றுருவேழும் தழுவி நீ கொண்ட⋆
  ஆய்மகள் அன்பனே! என்னும்⋆
தென் திருவரங்கம் கோயில் கொண்டானே!⋆
  தெளிகிலேன் முடிவிவள் தனக்கே (9)

முடிவிவள் தனக்கொன்றறிகிலேன் என்னும்⋆
  மூவுலகாளியே! என்னும்⋆
கடி கமழ் கொன்றைச் சடையனே! என்னும்⋆
  நான்முகக் கடவுளே! என்னும்⋆
வடிவுடை வானோர் தலைவனே! என்னும்⋆
  வண் திருவரங்கனே! என்னும்⋆
அடியடையாதாள் போலிவள் அணுகி
  அடைந்தனள்⋆ முகில்வண்ணன் அடியே (10)

‡முகில்வண்ணன் அடியை அடைந்தருள் சூடி
  உய்ந்தவன்⋆ மொய் புனல் பொருநல்⋆
துகில் வண்ணத் தூ நீர்ச் சேர்ப்பன்⋆
  வண் பொழில் சூழ் வண் குருகூர்ச் சடகோபன்⋆

முகில்வண்ணன் அடிமேல் சொன்ன சொல் மாலை⋆
ஆயிரத்திப் பத்தும் வல்லார்⋆
முகில் வண்ண வானத்திமையவர் சூழ
இருப்பர்⋆ பேரின்ப வெள்ளத்தே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வெள்ளைச் சுரிசங்கு ॥

தாய்மாரும் தோழிமாரும் உற்றாரும் தடுக்கவும் தலைவி
திருப்பேரெயில் சேரத் துணிதல்

‡வெள்ளைச் சுரி சங்கொடாழி ஏந்தித்⋆
தாமரைக் கண்ணன் என் நெஞ்சினூடே⋆
புள்ளைக் கடாகின்ற வாற்றைக் காணீர்⋆
என் சொல்லிச் சொல்லுகேன் அன்னைமீர்காள்⋆
வெள்ளச் சுகம் அவன் வீற்றிருந்த⋆
வேத ஒலியும் விழா ஒலியும்⋆
பிள்ளைக் குழா விளையாட்டொலியும்
அறாத்⋆ திருப்பேரையில் சேர்வன் நானே (1)

நானக் கருங்குழல் தோழிமீர்காள்!⋆
அன்னையர்காள்! அயல் சேரியீர்காள்⋆
நான் இத்தனி நெஞ்சம் காக்க மாட்டேன்⋆
என் வசம் அன்றிதிராப்பகல் போய்⋆
தேன் மொய்த்த பூம் பொழில் தண் பணை சூழ்
தென் திருப்பேரையில் வீற்றிருந்த⋆
வானப் பிரான் மணிவண்ணன் கண்ணன்⋆
செங்கனி வாயின் திறத்ததுவே (2)

செங்கனி வாயின் திறத்ததாயும்⋆
செஞ்சுடர் நீள் முடித் தாழ்ந்ததாயும்⋆
சங்கொடு சக்கரம் கண்டுகந்தும்⋆
தாமரைக் கண்களுக்கற்றுத் தீர்ந்தும்⋆
திங்களும் நாளும் விழாவறாத⋆
தென் திருப்பேரையில் வீற்றிருந்த⋆
நங்கள் பிரானுக்கென் நெஞ்சம் தோழி!⋆
நாணும் நிறையும் இழந்ததுவ்வே (3)

இழந்த எம்மாமை திறத்துப் போன⋆
என் நெஞ்சினாரும் அங்கே ஒழிந்தார்⋆
உழந்தினி யாரைக் கொண்டென் உசாகோ⋆
ஓதக் கடல் ஒலி போல⋆ எங்கும்
எழுந்த நல் வேதத்தொலி நின்றோங்கு⋆
தென் திருப்பேரையில் வீற்றிருந்த⋆
முழங்கு சங்கக் கையன் மாயத் தாழ்ந்தேன்⋆
அன்னையர்காள்! என்னை என் முனிந்தே (4)

முனிந்து சகடம் உதைத்து மாயப்
பேய் முலையுண்டு⋆ மருதிடை போய்⋆
கனிந்த விளவுக்கு கன்றெறிந்த⋆
கண்ண பிரானுக்கென் பெண்மை தோற்றேன்⋆
முனிந்தினி என் செய்தீர் அன்னைமீர்காள்⋆
முன்னியவன் வந்து வீற்றிருந்த⋆
கனிந்த பொழில் திருப்பேரையிற்கே⋆
காலம் பெறவென்னைக் காட்டுமின்னே (5)

காலம் பெறவென்னைக் காட்டுமின்கள்⋆
காதல் கடலின் மிகப் பெரிதால்⋆
நீல முகில் வண்ணத்தெம் பெருமான்⋆
நிற்கு முன்னே வந்தென் கைக்கும் எய்தான்⋆
ஞாலத்தவன் வந்து வீற்றிருந்த⋆
நான்மறையாளரும் வேள்வி ஓவா⋆
கோலச் செந்நெற்கள் கவரி வீசும்⋆
கூடு புனல் திருப்பேரையிற்கே (6)

பேர் எயில் சூழ் கடல் தென் இலங்கை⋆
செற்ற பிரான் வந்து வீற்றிருந்த⋆
பேரையிற்கே புக்கென் நெஞ்சம் நாடிப்⋆
பேர்த்து வரவெங்கும் காண மாட்டேன்⋆
ஆரை இனிங்குடையம் தோழி!⋆
என் நெஞ்சம் கூவ வல்லாரும் இல்லை⋆

ஆரை இனிக்கொண்டென் சாதிக்கின்றது⋆
    என் நெஞ்சம் கண்டதுவே கண்டேனே (7)

கண்டதுவே கொண்டெல்லாரும் கூடிக்⋆
    கார்க்கடல் வண்ணனோடென்திறத்துக்
கொண்டு⋆ அலர் தூற்றிற்றது முதலாக்⋆
    கொண்டவென் காதல் உரைக்கில் தோழி⋆
மண் திணி ஞாலமும் ஏழ் கடலும்⋆
    நீள் விசும்பும் கழியப் பெரிதால்⋆
தெண் திரை சூழ்ந்தவன் வீற்றிருந்த⋆
    தென் திருப்பேரையில் சேர்வன் சென்றே (8)

சேர்வன் சென்றென்னுடைத் தோழிமீர்காள்!⋆
    அன்னையர்காள்! என்னைத் தேற்ற வேண்டா⋆
நீர்கள் உரைக்கின்றதென் இதற்கு⋆
    நெஞ்சும் நிறைவும் எனக்கிங்கில்லை⋆
கார்வண்ணன் கார்க் கடல் ஞாலம் உண்ட⋆
    கண்ண பிரான் வந்து வீற்றிருந்த⋆
ஏர் வள ஒண் கழனிப் பழனத்து⋆
    தென் திருப்பேரையின் மாநகரே (9)

நகரமும் நாடும் பிறவும் தேர்வேன்⋆
    நாண் எனக்கில்லை என் தோழி மீர்காள்⋆
சிகரம் அணி நெடு மாடம் நீடு⋆
    தென் திருப்பேரையில் வீற்றிருந்த⋆
மகர நெடுங்குழைக் காதன் மாயன்⋆
    நூற்றுவரை அன்று மங்க நூற்ற⋆
நிகரில் முகில்வண்ணன் நேமியான் என்⋆
    நெஞ்சம் கவர்ந்தெனை ஊழியானே (10)

‡ஊழிதோறூழி உருவும் பேரும்
    செய்கையும்⋆ வேறவன் வையங்காக்கும்⋆
ஆழி நீர் வண்ணனை அச்சுதனை⋆
    அணி குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆

கேழில் அந்தாதி ஓராயிரத்துள்
 இவை⋆ திருப்பேரையில் மேய பத்தும்⋆
ஆழி அங்கையனை ஏத்த வல்லார்⋆
 அவர் அடிமைத் திறத்தாழியாரே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஆழியெழ ॥

எம்பெருமானது வெற்றிச் செயல்களைப் பேசுதல்

‡ஆழியெழச்⋆ சங்கும் வில்லும் எழ⋆ திசை
வாழியெழத்⋆ தண்டும் வாளும் எழ⋆ அண்டம்
மோழையெழ⋆ முடி பாதம் எழ⋆ அப்பன்
ஊழியெழ⋆ உலகம் கொண்டவாறே (1)

ஆறு மலைக்கு⋆ எதிர்ந்தோடும் ஒலி⋆ அர-
வூறு சுலாய்⋆ மலை தேய்க்கும் ஒலி⋆ கடல்
மாறு சுழன்று⋆ அழைக்கின்ற ஒலி⋆ அப்பன்
சாறுபட⋆ அமுதம் கொண்ட நான்றே (2)

நான்றில ஏழ்⋆ மண்ணும் தானத்தவே⋆ பின்னும்
நான்றில ஏழ்⋆ மலை தானத்தவே⋆ பின்னும்
நான்றில ஏழ்⋆ கடல் தானத்தவே⋆ அப்பன்
ஊன்றியிடந்து⋆ எயிற்றில் கொண்ட நாளே (3)

நாளுமெழ⋆ நில நீருமெழ⋆ விண்ணும்
கோளுமெழ⋆ எரி காலுமெழ⋆ மலை
தாளுமெழச்⋆ சுடர் தானுமெழ⋆ அப்பன்
ஊளியெழ⋆ உலகமுண்ட ஊணே (4)

ஊணுடை மல்லர்⋆ ததர்ந்த ஒலி⋆ மன்னர்
ஆணுடை சேனை⋆ நடுங்கும் ஒலி⋆ விண்ணுள்
ஏண் உடைத் தேவர்⋆ வெளிப்பட்ட ஒலி⋆ அப்பன்
காணுடைப் பாரதம்⋆ கையறைப் போழ்தே (5)

போழ்து மெலிந்த⋆ புன் செக்கரில்⋆ வான் திசை
சூழும் எழுந்து⋆ உதிரப் புனலா⋆ மலை
கீழ்து பிளந்த⋆ சிங்கம் ஒத்ததால்⋆ அப்பன்
ஆழ் துயர் செய்து⋆ அசுரரைக் கொல்லுமாறே (6)

மாறு நிரைத்து⋆ இரைக்கும் சரங்கள்⋆ இன
நூறு பிணம்⋆ மலை போல் புரள⋆ கடல்
ஆறு மடுத்து⋆ உதிரப் புனலா⋆ அப்பன்
நீறுபட⋆ இலங்கை செற்றநேரே (7)

நேர்சரிந்தான்⋆ கொடிக் கோழி கொண்டான்⋆ பின்னும்
நேர்சரிந்தான்⋆ எரியும் அனலோன்⋆ பின்னும்
நேர்சரிந்தான்⋆ முக்கண் மூர்த்தி கண்டீர்⋆ அப்பன்
நேர்சரி வாணன்⋆ திண்தோள் கொண்ட அன்றே (8)

அன்று மண் நீர் எரி கால்⋆ விண் மலை முதல்⋆
அன்று சுடர்⋆ இரண்டு பிறவும்⋆ பின்னும்
அன்று மழை⋆ உயிர் தேவும் மற்றும்⋆ அப்பன்
அன்று முதல்⋆ உலகம் செய்ததுமே (9)

மேய் நிரை கீழ் புக⋆ மா புரள⋆ சுனை
வாய் நிறை நீர்⋆ பிளிறிச் சொரிய⋆ இன
ஆநிரை பாடி⋆ அங்கே ஒடுங்க⋆ அப்பன்
தீ மழை காத்துக்⋆ குன்றம் எடுத்தானே (10)

‡குன்றம் எடுத்த பிரான்⋆ அடியாரொடும்⋆
ஒன்றி நின்ற⋆ சடகோபன் உரை செயல்⋆
நன்றி புனைந்த⋆ ஓர் ஆயிரத்துள் இவை⋆
வென்றி தரும் பத்தும்⋆ மேவிக் கற்பார்க்கே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கற்பார் ॥

எம்பிரான்க்கு ஆளாகாத உலகத்தாரை நோக்கி இரங்குதல்

‡கற்பார் இராம பிரானை அல்லால்⋆ மற்றும் கற்பரோ⋆
புற்பா முதலாப்⋆ புல்லெறும்பாதி ஒன்றின்றியே
நற்பால் அயோத்தியில் வாழும்⋆ சராசரம் முற்றவும்
நற்பாலுக்குய்த்தனன்⋆ நான்முகனார் பெற்ற நாட்டுளே (1)

நாட்டில் பிறந்தவர்⋆ நாரணற்காள் அன்றியாவரோ⋆
நாட்டில் பிறந்து படாதன பட்டு⋆ மனிசர்க்கா⋆
நாட்டை நலியும் அரக்கரை⋆ நாடித் தடிந்திட்டு⋆
நாட்டை அளித்துய்யச் செய்து⋆ நடந்தமை கேட்டுமே (2)

கேட்பார்கள் கேசவன் கீர்த்தியல்லால்⋆ மற்றும் கேட்பரோ⋆
கேட்பார் செவி சுடு⋆ கீழ்மை வசவுகளே வையும்⋆
சேட்பால் பழம் பகைவன்⋆ சிசுபாலன்⋆ திருவடி
தாட்பால் அடைந்த⋆ தன்மை அறிவாரை அறிந்துமே (3)

தன்மை அறிபவர்⋆ தாம் அவற்காள் அன்றியாவரோ⋆
பன்மைப் படர் பொருள்⋆ ஆதும் இல்பாழ் நெடுங்காலத்து⋆
நன்மைப் புனல் பண்ணி⋆ நான்முகனைப் பண்ணி தன்னுள்ளே⋆
தொன்மை மயக்கிய தோற்றிய⋆ சூழல்கள் சிந்தித்தே (4)

சூழல்கள் சிந்திக்கில்⋆ மாயன் கழல் அன்றிச் சூழ்வரோ⋆
ஆழப் பெரும் புனல்⋆ தன்னுள் அழுந்திய ஞாலத்தை⋆
தாழப் படாமல்⋆ தன் பால் ஒரு கோட்டிடைத் தான் கொண்ட⋆
கேழல் திருவுருவாயிற்றுக்⋆ கேட்டும் உணர்ந்துமே (5)

கேட்டும் உணர்ந்தவர்⋆ கேசவற்காள் அன்றியாவரோ⋆
வாட்டம் இலா வண்கை⋆ மாவலி வாதிக்க வாதிப்புண்டு⋆
ஈட்டங்கொள் தேவர்கள்⋆ சென்றிரந்தார்க்கிடர் நீக்கிய⋆
கோட்டங்கை வாமனன் ஆய்ச்⋆ செய்த கூத்துகள் கண்டுமே (6)

கண்டும் தெளிந்தும் கற்றார்⋆ கண்ணற்காள் அன்றியாவரோ⋆
வண்டுண் மலர்த்தொங்கல்⋆ மார்க்கண்டேயனுக்கு வாழுநாள்⋆
இண்டைச் சடைமுடி⋆ ஈசன் உடன் கொண்டு உசாச் செல்ல⋆
கொண்டங்குத் தன்னொடும் கொண்டு⋆ உடன் சென்ற-
துணர்ந்துமே (7)

செல்ல உணர்ந்தவர்⋆ செல்வன் தன் சீர் அன்றிக் கற்பரோ⋆
எல்லையிலாத பெரும் தவத்தால்⋆ பல செய் மிறை⋆
அல்லல் அமரரைச் செய்யும்⋆ இரணியன் ஆகத்தை⋆
மல்லல் அரியுருவாய்ச்⋆ செய்த மாயம் அறிந்துமே (8)

மாயம் அறிபவர்⋆ மாயவற்காள் அன்றியாவரோ⋆
தாயம் செறும் ஒரு நூற்றுவர் மங்க⋆ ஓர் ஐவர்க்காய்⋆
தேசம் அறிய ஓர் சாரதியாய்ச் சென்று⋆ சேனையை
நாசம் செய்திட்டு⋆ நடந்த நல் வார்த்தை அறிந்துமே (9)

‡வார்த்தை அறிபவர்⋆ மாயவற்காள் அன்றியாவரோ⋆
போர்த்த பிறப்பொடு நோயோடு மூப்பொடு⋆ இறப்பிவை
பேர்த்து⋆ பெரும் துன்பம் வேரற நீக்கித்⋆ தன் தாளின் கீழ்ச்
சேர்த்து⋆ அவன் செய்யும்⋆ சேமத்தை எண்ணித் தெளிவுற்றே (10)

‡தெளிவுற்று வீவின்றி⋆ நின்றவர்க்கின்பக் கதி செய்யும்⋆
தெளிவுற்ற கண்ணனை⋆ தென் குருகூர்ச் சடகோபன் சொல்⋆
தெளிவுற்ற ஆயிரத்துள்⋆ இவை பத்தும் வல்லார் அவர்⋆
தெளிவுற்ற சிந்தையர்⋆ பா மரு மூவுலகத்துள்ளே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பாமருமூவுலகும் ॥

எம்பெருமானது குணம் அழகு முதலியவற்றில் ஆழ்வார் ஈடுபட்டு
அவனைக் காணுமாறு மனம் உருகி அழைத்தல்

‡பா மரு மூவுலகும் படைத்த⋆ பற்பநாபாவோ⋆
பாமரு மூவுலகும் அளந்த⋆ பற்ப பாதாவோ⋆
தாமரைக் கண்ணாவோ!⋆ தனியேன் தனியாளாவோ⋆
தாமரைக் கையாவோ!⋆ உன்னை என்றுகொல் சார்வதுவே (1)

என்றுகொல் சேர்வதந்தோ⋆ அரன் நான்முகன் ஏத்தும்⋆ செய்ய
நின் திருப்பாதத்தை⋆ யான் நிலம் நீர் எரி கால்⋆ விண்ணுயிர்
என்றிவை தாம் முதலா⋆ முற்றுமாய் நின்ற எந்தாயோ⋆
குன்றெடுத்தாநிரை மேய்த்து⋆ அவை காத்த எம் கூத்தாவோ (2)

காத்த எம் கூத்தாவோ!⋆ மலையேந்திக் கன்மாரி தன்னை⋆
பூத்தண் துழாய் முடியாய்!⋆ புனை கொன்றையஞ்செஞ்சடையாய்⋆
வாய்த்த என் நான்முகனே!⋆ வந்தென் ஆருயிர் நீயானால்⋆
ஏத்தரும் கீர்த்தியினாய்!⋆ உன்னை எங்குத் தலைப்பெய்வனே (3)

எங்குத் தலைப்பெய்வன் நான்⋆ எழில் மூவுலகும் நீயே⋆
அங்குயர் முக்கண் பிரான்⋆ பிரமன் பெருமான் அவன் நீ⋆
வெங்கதிர் வச்சிரக் கை⋆ இந்திரன் முதலாத் தெய்வம் நீ⋆
கொங்கலர் தண்ணந் துழாய் முடி⋆ என்னுடைக் கோவலனே! (4)

என்னுடைக் கோவலனே!⋆
என் பொல்லாக் கரு மாணிக்கமே⋆
உன்னுடை உந்தி மலர்⋆
உலகம் அவை மூன்றும் பரந்து⋆
உன்னுடைச் சோதி வெள்ளத்தகம்பால்⋆
உன்னைக் கண்டு கொண்டிட்டு⋆

என்னுடை ஆருயிரார்⋆
எங்ஙனேகொல் வந்தெய்துவரே (5)

வந்தெய்து மாறறியேன்⋆ மல்கு நீலச் சுடர் தழைப்ப⋆
செஞ்சுடர்ச் சோதிகள் பூத்து⋆ ஒரு மாணிக்கம் சேர்வது போல்⋆
அந்தரமேல் செம்பட்டோடு⋆ அடி உந்தி கை மார்வு கண் வாய்⋆
செஞ்சுடர்ச் சோதி விடவுறை⋆ என் திருமார்பனையே (6)

என் திருமார்பன் தன்னை⋆ என் மலைமகள் கூறன் தன்னை⋆
என்றும் என் நாமகளை⋆ அகம்பால் கொண்ட நான்முகனை⋆
நின்ற சசிபதியை⋆ நிலம் கீண்டெயில் மூன்றெரித்த⋆
வென்று புலம் துரந்த⋆ விசும்பாளியைக் காணேனோ (7)

ஆளியைக் காண் பரியாய்⋆
அரி காண் நரியாய்⋆ அரக்கர்
ஊளை இட்டன்றிலங்கை கடந்து⋆
பிலம் புக்கொளிப்ப⋆
மீளியம் புள்ளைக்கடாய்⋆
விறல் மாலியைக் கொன்று⋆ பின்னும்
ஆளுயர் குன்றங்கள் செய்து⋆
அடர்த்தானையும் காண்டுங்கொலோ (8)

காண்டுங்கொலோ நெஞ்சமே!⋆ கடிய வினையே முயலும்⋆
ஆண் திறல் மீளி மொய்ம்பில்⋆ அரக்கர் குலத்தைத் தடிந்து⋆
மீண்டும் அவன் தம்பிக்கே⋆ விரி நீர் இலங்கையருளி⋆
ஆண்டு தன் சோதி புக்க⋆ அமரர் அரியேற்றினையே (9)

ஏற்றரும் வைகுந்தத்தை⋆ அருளும் நமக்கு⋆ ஆயர் குலத்து
ஈற்றிளம் பிள்ளை ஒன்றாய்ப் புக்கு⋆ மாயங்களே இயற்றி⋆
கூற்றியல் கஞ்சனைக் கொன்று⋆ ஐவர்க்காய் கொடும் சேனை தடிந்து⋆
ஆற்றல் மிக்கான் பெரிய⋆ பரஞ்சோதி புக்க அரியே (10)

‡புக்க அரியுருவாய்⋆ அவுணன் உடல் கீண்டுகந்த⋆
சக்கரச் செல்வன் தன்னைக்⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆

மிக்க ஓர் ஆயிரத்துள்⋆ இவைபத்தும் வல்லார் அவரை⋆
தொக்குப் பல்லாண்டிசைத்துக்⋆ கவரி செய்வர் ஏழையரே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஏழையர் ஆவி ॥

எம்பெருமானது பேரழகை உருவெளித் தோற்றத்தில் கண்டு தலைவி வருந்தி உரைத்தல்

‡ஏழையர் ஆவியுண்ணும்⋆ இணைக் கூற்றங்கொலோ அறியேன்⋆
ஆழியம் கண்ண பிரான்⋆ திருக்கண்கள்கொலோ அறியேன்⋆
சூழவும் தாமரை நாண்மலர் போல்⋆ வந்து தோன்றும் கண்டீர்⋆
தோழியர்காள்! அன்னைமீர்!⋆ என் செய்கேன் துயராட்டியேனே (1)

ஆட்டியும் தூற்றியும் நின்று⋆ அன்னைமீர் என்னை நீர் நலிந்தென்⋆
மாட்டுயர் கற்பகத்தின்⋆ வல்லியோ கொழுந்தோ அறியேன்⋆
ஈட்டிய வெண்ணெய் உண்டான்⋆ திருமூக்கென-தாவியுள்ளே⋆
மாட்டிய வல் விளக்கின்⋆ சுடராய் நிற்கும் வாலியதே (2)

வாலியதோர் கனிகொல்⋆ வினையாட்டியேன் வல்வினைகொல்⋆
கோலம் திரள் பவளக்⋆ கொழும் துண்டங்கொலோ அறியேன்⋆
நீல நெடு முகில் போல்⋆ திருமேனி அம்மான் தொண்டைவாய்⋆
ஏலும் திசையுள் எல்லாம்⋆ வந்து தோன்றும் என் இன்னுயிர்க்கே (3)

இன்னுயிர்க்கேழையர் மேல்⋆ வளையும் இணை நீல விற்கொல்⋆
மன்னிய சீர் மதனன்⋆ கருப்புச் சிலைகொல்⋆ மதனன்
தன்னுயிர்த் தாதை⋆ கண்ண பெருமான் புருவம் அவையே⋆
என்னுயிர் மேலனவாய்⋆ அடுகின்றன என்றும் நின்றே (4)

என்றும் நின்றே திகழும்⋆ செய்ய ஈன் சுடர் வெண் மின்னுக்கொல்⋆
அன்றி என்னாவியடும்⋆ அணி முத்தங்கொலோ அறியேன்⋆
குன்றம் எடுத்த பிரான்⋆ முறுவல் எனதாவியடும்⋆
ஒன்றும் அறிகின்றிலேன்⋆ அன்னைமீர்! எனக்குய்விடமே (5)

உய்விடம் ஏழையர்க்கும்⋆ அசுரர்க்கும் அரக்கர்கட்கும்⋆
எவ்விடம் என்றிலங்கி⋆ மகரம் தழைக்கும் தளிர்கொல்⋆

பை விடப் பாம்பணையான்⋆ திருக் குண்டலக் காதுகளே⋆
கைவிடல் ஒன்றும் இன்றி⋆ அடுகின்றன காண்மின்களே (6)

காண்மின்கள் அன்னையர்காள்⋆ ! என்று காட்டும் வகையறியேன்⋆
நாண்மன்னு வெண் திங்கள்கொல்!⋆ நயந்தார்கட்கு நச்சிலைகொல்⋆
சேண் மன்னு நால் தடம் தோள்⋆ பெருமான் தன் திரு நுதலே⋆
கோள் மன்னி ஆவியடும்⋆ கொடியேன் உயிர் கோள் இழைத்தே (7)

கோள் இழைத் தாமரையும்⋆ கொடியும் பவளமும் வில்லும்⋆
கோள் இழைத் தண் முத்தமும்⋆ தளிரும் குளிர் வான் பிறையும்⋆
கோள் இழையாவுடைய⋆ கொழும் சோதி வட்டங்கொல்⋆ கண்ணன்
கோளிழை வாள் முகமாய்க்⋆ கொடியேன் உயிர் கொள்கின்றதே (8)

கொள்கின்ற கோள் இருளைச்⋆ சுகிர்ந்திட்ட கொழும் சுருளின்⋆
உள்கொண்ட நீல நன்னூல் தழைகொல்⋆ அன்று மாயன் குழல்⋆
விள்கின்ற பூந்தண்டுழாய்⋆ விரை நாற வந்தென் உயிரை⋆
கள்கின்றவாறறியீர்⋆ அன்னைமீர்! கழறா நிற்றிரே (9)

நிற்றி முற்றத்துள் என்று⋆ நெரித்த கையராய்⋆ என்னை நீர்
சுற்றியும் சூழ்ந்தும்⋆ வைதிர் சுடர்ச் சோதி மணி நிறமாய்⋆
முற்ற இம்மூவுலகும்⋆ விரிகின்ற சுடர் முடிக்கே⋆
ஒற்றுமைக் கொண்டதுள்ளம்⋆ அன்னைமீர்! நசையென்
நுங்கட்கே (10)

‡கட்கரிய பிரமன் சிவன்⋆ இந்திரன் என்றிவர்க்கும்⋆
கட்கரிய கண்ணனைக்⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
உட்குடை ஆயிரத்துள்⋆ இவையும் ஒரு பத்தும் வல்லார்⋆
உட்குடை வானவரோடு⋆ உடனாய் என்றும் மாயாரே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மாயா! வாமனனே! ॥

எம்பெருமானது விசித்திர விபுதியைக் கண்டு ஆழ்வார் வியப்புறுதல்

‡மாயா! வாமனனே!⋆ மதுசூதா! நீ அருளாய்⋆
தீயாய் நீராய் நிலனாய்⋆ விசும்பாய் காலாய்⋆
தாயாய் தந்தையாய்⋆ மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்⋆
நீயாய் நீ நின்றவாறு⋆ இவை என்ன நியாயங்களே! (1)

அங்கண் மலர்த் தண் துழாய் முடி⋆ அச்சுதனே! அருளாய்⋆
திங்களும் ஞாயிறுமாய்ச்⋆ செழும் பல் சுடராய் இருளாய்⋆
பொங்கு பொழி மழையாய்ப்⋆ புகழாய் பழியாய்ப் பின்னும் நீ
வெங்கண் வெங்கூற்றமுமாம்⋆ இவை என்ன விசித்திரமே! (2)

சித்திரத் தேர் வலவா!⋆ திருச் சக்கரத்தாய்! அருளாய்⋆
எத்தனையோர் உகமும்⋆ அவையாய் அவற்றுள் இயலும்⋆
ஒத்த வொண் பல் பொருள்கள்⋆ உலப்பில்லனவாய் வியவாய்⋆
வித்தகத்தாய் நிற்றி நீ⋆ இவை என்ன விடமங்களே! (3)

கள்ளவிழ் தாமரைக் கண்⋆ கண்ணனே! எனக்கொன்றருளாய்⋆
உள்ளதும் இல்லதுமாய்⋆ உலப்பில்லனவாய் வியவாய்⋆
வெள்ளத் தடம் கடலுள்⋆ விட நாகணைமேல் மருவி⋆
உள்ளப்பல் யோகுசெய்தி⋆ இவை என்ன உபாயங்களே! (4)

பாசங்கள் நீக்கி⋆ என்னை உனக்கே அறக் கொண்டிட்டு⋆ நீ
வாச மலர்த் தண் துழாய் முடி⋆ மாயவனே! அருளாய்⋆
காயமும் சீவனுமாய்க்⋆ கழிவாய்ப் பிறப்பாய்ப் பின்னும் நீ⋆
மாயங்கள் செய்து வைத்தி⋆ இவையென்ன மயக்குகளே! (5)

மயக்கா! வாமனனே!⋆ மதியாம் வண்ணம் ஒன்றருளாய்⋆
அயர்ப்பாய்த் தேற்றமுமாய்⋆ அழலாய்க் குளிராய் வியவாய்⋆
வியப்பாய் வென்றிகளாய்⋆ வினையாய்ப் பயனாய்ப் பின்னும் நீ⋆
துயக்காய் நீ நின்றவாறு⋆ இவை என்ன துயரங்களே! (6)

துயரங்கள் செய்யும் கண்ணா!⋆ சுடர் நீள் முடியாய் அருளாய்⋆
துயரம் செய் மானங்களாய்⋆ மதனாகி உகவைகளாய்⋆
துயரம் செய் காமங்களாய்த்⋆ துலையாய் நிலையாய் நடையாய்⋆
துயரங்கள் செய்து வைத்தி⋆ இவையென்ன சுண்டாயங்களே (7)

என்ன சுண்டாயங்களால்⋆ நின்றிட்டாய் என்னை ஆளும் கண்ணா⋆
இன்னதோர் தன்மையை என்று⋆ உன்னை யாவர்க்கும் தேற்றரியை⋆
முன்னிய மூவுலகும்⋆ அவையாய் அவற்றைப் படைத்து⋆
பின்னும் உள்ளாய்! புறத்தாய்!⋆ இவை என்ன இயற்கைகளே! (8)

என்ன இயற்கைகளால்⋆ எங்ஙனே நின்றிட்டாய் என் கண்ணா⋆
துன்னு கர சரணம் முதலாக⋆ எல்லாவுறுப்பும்⋆
உன்னு சுவையொளி⋆ ஊறொலி நாற்றம் முற்றும் நீயே⋆
உன்னை உணரவுறில்⋆ உலப்பில்லை நுணுக்கங்களே (9)

இல்லை நுணுக்கங்களே⋆
இதனில் பிறிதென்னும் வண்ணம்⋆
தொல்லை நன்னூலில் சொன்ன⋆
உருவும் அருவும் நீயே⋆
அல்லித் துழாய் அலங்கல்⋆
அணி மார்ப! என் அச்சுதனே⋆
வல்லதோர் வண்ணம் சொன்னால்⋆
அதுவே உனக்காம் வண்ணமே (10)

‡ஆம் வண்ணம் இன்னதொன்றென்று⋆
அறிவதரிய அரியை⋆
ஆம் வண்ணத்தால்⋆ குருகூர்ச்
சடகோபன் அறிந்துரைத்த⋆
ஆம் வண்ண ஒண் தமிழ்கள்⋆
இவை ஆயிரத்துள் இப்பத்தும்⋆
ஆம் வண்ணத்தால் உரைப்பார்⋆
அமைந்தார் தமக்கென்றைக்குமே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ என்றைக்கும் ॥

இன்கவி பாடும் பேற்றை எம்பெருமான் தமக்கு அருளியமைக்குக் கைம்மாறு இல்லை எனல்

‡என்றைக்கும் என்னை⋆ உய்யக்கொண்டு போகிய⋆
அன்றைக்கன்றென்னைத்⋆ தன்னாக்கி என்னால் தன்னை⋆
இன் தமிழ் பாடிய ஈசனை⋆ ஆதியாய்
நின்ற என் சோதியை⋆ என் சொல்லி நிற்பனோ (1)

என் சொல்லி நிற்பன்⋆ என் இன்னுயிரின் ஒன்றாய்⋆
என் சொல்லால் யான் சொன்ன⋆ இன்கவி என்பித்து⋆
தன் சொல்லால் தான் தன்னைக்⋆ கீர்த்தித்த மாயன்⋆ என்
முன் சொல்லும்⋆ மூவுருவாம் முதல்வனே (2)

ஆம் முதல்வன் இவன் என்று⋆ தன் தேற்றி⋆ என்
நா முதல் வந்து புகுந்து⋆ நல்லின் கவி⋆
தூ முதல் பத்தர்க்குத்⋆ தான் தன்னைச் சொன்ன⋆ என்
வாய் முதல் அப்பனை⋆ என்று மறப்பனோ (3)

அப்பனை என்று மறப்பன்⋆ என்னாகியே⋆
தப்புதல் இன்றித்⋆ தனைக் கவி தான் சொல்லி⋆
ஒப்பிலாத் தீவினையேனை⋆ உய்யக்கொண்டு⋆
செப்பமே செய்து⋆ திரிகின்ற சீர் கண்டே (4)

சீர் கண்டு கொண்டு⋆ திருந்து நல்லின் கவி⋆
நேற்பட யான் சொல்லும்⋆ நீர்மை இலாமையில்⋆
ஏர்விலா என்னைத்⋆ தன்னாக்கி என்னால் தன்னை⋆
பார் பரவு இன் கவி⋆ பாடும் பரமரே (5)

இன் கவி பாடும்⋆ பரம கவிகளால்⋆
தன் கவி தான் தன்னை⋆ பாடுவியாதின்று⋆

நன்கு வந்தென்னுடன் ஆக்கி⋆ என்னால் தன்னை⋆
வன் கவி பாடும்⋆ என் வைகுந்த நாதனே (6)

வைகுந்த நாதன்⋆ என் வல்வினை மாய்ந்தறச்⋆
செய் குந்தன் தன்னை⋆ என்னாக்கி என்னால் தன்னை⋆
வைகுந்தன் ஆகப்⋆ புகழ வண் தீங்கவி⋆
செய் குந்தன் தன்னை⋆ என்னாள் சிந்தித்தார்வனோ (7)

ஆர்வனோ ஆழியங்கை⋆ எம்பிரான் புகழ்⋆
பார் விண் நீர் முற்றும்⋆ கலந்து பருகிலும்⋆
ஏர்விலா என்னைத்⋆ தன்னாக்கி என்னால் தன்னை⋆
சீர்பெற இன் கவி⋆ சொன்ன திறத்துக்கே (8)

திறத்துக்கே துப்புரவாம்⋆ திருமாலின் சீர்⋆
இறப்பெதிர் காலம்⋆ பருகிலும் ஆர்வனோ⋆
மறப்பிலா என்னைத்⋆ தன்னாக்கி என்னால் தன்னை⋆
உறப்பல இன் கவி⋆ சொன்ன உதவிக்கே (9)

உதவிக் கைம்மாறு⋆ என்னுயிர் என்ன உற்றெண்ணில்⋆
அதுவும் மற்றாங்கவன்⋆ தன்னதென்னால் தன்னை⋆
பதவிய இன் கவி⋆ பாடிய அப்பனுக்கு⋆
எதுவும் ஒன்றும் இல்லை⋆ செய்வதிங்கும் அங்கே (10)

‡இங்கும் அங்கும்⋆ திருமால் அன்றி இன்மை கண்டு⋆
அங்ஙனே வண் குருகூர்ச்⋆ சடகோபன்⋆
இங்ஙனே சொன்ன⋆ ஓர் ஆயிரத்திப்பத்தும்⋆
எங்ஙனே சொல்லினும்⋆ இன்பம் பயக்குமே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ ன்பம் பயக்க ॥

திருவாறன்விளை சென்று எம்பெருமானைக் கண்டு ஆழ்வார் அடிமை செய்யக் கருதுதல்

‡இன்பம் பயக்க எழில் மலர்
மாதரும்⋆ தானும் இவ்வேழ் உலகை⋆
இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்து⋆
ஆள்கின்ற எங்கள் பிரான்⋆
அன்புற்றமர்ந்துறைகின்ற⋆ அணி பொழில்
சூழ் திருவாறன் விளை⋆
அன்புற்றமர்ந்து வலம் செய்து⋆
கை தொழும் நாள்களும் ஆகுங்கொலோ (1)

ஆகுங்கொல் ஐயம் ஒன்றின்றி⋆
அகல் இடம் முற்றவும் ஈர் அடியே⋆
ஆகும் பரிசு நிமிர்ந்த⋆
திருக்குறள் அப்பன் அமர்ந்துறையும்⋆
மாகம் திகழ் கொடி மாடங்கள் நீடு⋆
மதிள் திருவாறன் விளை⋆
மா கந்த நீர் கொண்டு தூவி வலஞ்செய்து⋆
கை தொழக் கூடுங்கொலோ (2)

கூடுங்கொல் வைகலும்⋆ கோவிந்தனை
மதுசூதனைக் கோளரியை⋆
ஆடும் பறவை மிசைக் கண்டு⋆
கை தொழுதன்றி அவன் உறையும்⋆
பாடும் பெரும் புகழ் நான்மறை வேள்வியைந்து⋆
ஆறங்கம் பன்னினர் வாழ்⋆
நீடு பொழில் திருவாறன் விளை தொழ⋆
வாய்க்குங்கொல் நிச்சலுமே (3)

வாய்க்குங்கொல் நிச்சலும்⋆ எப்பொழுதும்
    மனத்து ஈங்கு நினைக்கப்பெற⋆
வாய்க்கும் கரும்பும் பெரும் செந்நெலும்⋆
    வயல் சூழ் திருவாறன் விளை⋆
வாய்க்கும் பெரும் புகழ் மூவுலகீசன்⋆
    வட மதுரைப் பிறந்த⋆
வாய்க்கும் மணி நிறக் கண்ண பிரான் தன்⋆
    மலரடிப் போதுகளே (4)

மலரடிப்போதுகள் என் நெஞ்சத்தெப்
    பொழுதும்⋆ இருத்தி வணங்க⋆
பலர் அடியார் முன்பருளிய⋆
    பாம்பணையப்பன் அமர்ந்துறையும்⋆
மலரில் மணி நெடு மாடங்கள் நீடு⋆
    மதிள் திருவாறன் விளை⋆
உலகம் மலி புகழ் பாட⋆ நம்மேல் வினை
    ஒன்றும் நில்லா கெடுமே (5)

ஒன்றும் நில்லா கெடும் முற்றவும்⋆
    தீவினை உள்ளித் தொழுமின் தொண்டீர்⋆
அன்றங்கமர் வென்றுருப்பிணி நங்கை⋆
    அணி நெடும் தோள் புணர்ந்தான்⋆
என்றும் எப்போதும் என் நெஞ்சம் துதிப்ப⋆
    உள்ளே இருக்கின்ற பிரான்⋆
நின்ற அணி திருவாறன் விளையென்னும்⋆
    நீள் நகரம் அதுவே (6)

நீள் நகரம் அதுவே மலர்ச்
    சோலைகள் சூழ்⋆ திருவாறன் விளை⋆
நீள் நகரத்துறைகின்ற பிரான்⋆ நெடுமால்
    கண்ணன் விண்ணவர் கோன்⋆
வாண புரம் புக்கு முக்கண் பிரானைத் தொலைய⋆
    வெம் போர்கள் செய்து⋆

வாணனை ஆயிரம் தோள் துணித்தான்⋆ சரண்
அன்றி மற்றொன்றிலமே (7)

அன்றி மற்றொன்றிலம் நின் சரணே என்று⋆
அகல் இரும் பொய்கையின்வாய்⋆
நின்று தன்நீள் கழல் ஏத்திய⋆ ஆனையின்
நெஞ்சிடர் தீர்த்த பிரான்⋆
சென்றங்கினிதுறைகின்ற⋆ செழும் பொழில்
சூழ் திருவாறன் விளை⋆
ஒன்றி வலஞ்செய்ய ஒன்றுமோ⋆ தீவினை
உள்ளத்தின் சார்வல்லவே (8)

தீவினை உள்ளத்தின் சார்வல்லவாகித்⋆
தெளி விசும்பேறலுற்றால்⋆
நாவினுள்ளும் உள்ளத் துள்ளும்⋆ அமைந்த
தொழிலினுள்ளும் நவின்று⋆
யாவரும் வந்து வணங்கும் பொழில்⋆
திருவாறன் விளை அதனை⋆
மேவி வலஞ்செய்து கை தொழக் கூடுங்கொல்⋆
என்னும் என் சிந்தனையே (9)

சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத் தன்மை⋆
தேவ பிரான் அறியும்⋆
சிந்தையினால் செய்வ தான் அறியாதன⋆
மாயங்கள் ஒன்றும் இல்லை⋆
சிந்தையினால் சொல்லினால் செய்கையால்⋆ நிலத் தேவர்
குழு வணங்கும்⋆
சிந்தை மகிழ் திருவாறன் விளையுறை⋆
தீர்த்தனுக்கற்ற பின்னே (10)

‡தீர்த்தனுக்கற்ற பின்⋆ மற்றோர்
சரண் இல்லை என்றெண்ணி⋆ தீர்த்தனுக்கே
தீர்த்த மனத்தனன் ஆகிச்⋆
செழுங்குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆

தீர்த்தங்கள் ஆயிரத்துள்⋆ இவை பத்தும்
வல்லார்களை⋆ தேவர் வைகல்
தீர்த்தங்களே என்று பூசித்து
நல்கி உரைப்பர்⋆ தம் தேவியர்க்கே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தேவிமாராவார் ॥

*எம்பெருமானது அடியார் வாசமாகும் நிலையையும் யாவையும் தானாகும் நிலையையும் ஆழ்வார் சங்கித்துத் தெளிதல்*

‡தேவிமார் ஆவார் திருமகள் பூமி⋆
ஏவ மற்றமரர் ஆட்செய்வார்⋆
மேவிய உலகம் மூன்றவை ஆட்சி⋆
வேண்டு வேண்டுருவம் நின் உருவம்⋆
பாவியேன் தன்னை அடுகின்ற கமலக்-
கண்ணதோர்⋆ பவள வாய் மணியே⋆
ஆவியே! அமுதே! அலை கடல் கடைந்த
அப்பனே காணுமாறருளாய் (1)

காணுமாறருளாய் என்றென்றே கலங்கிக்⋆
கண்ண நீர் அலமர⋆ வினையேன்
பேணுமாறெல்லாம் பேணி⋆ நின் பெயரே
பிதற்றுமாறருள் எனக்கந்தோ⋆
காணுமாறருளாய் காகுத்தா! கண்ணா!⋆
தொண்டனேன் கற்பகக் கனியே⋆
பேணுவார் அமுதே! பெரிய தண் புனல் சூழ்⋆
பெரு நிலம் எடுத்த பேராளா! (2)

எடுத்த பேராளன் நந்தகோபன் தன்⋆
இன்னுயிர்ச் சிறுவனே⋆ அசோதைக்-
கடுத்த பேரின்பக் குல விளங்களிறே⋆
அடியனேன் பெரிய அம்மானே⋆
கடுத்த போர் அவுணன் உடல் இரு பிளவாக்⋆
கையுகிர் ஆண்ட எங்கடலே⋆
அடுத்ததோர் உருவாய் இன்று நீ வாராய்⋆
எங்ஙனம் தேறுவர் உமரே (3)

உமர் உகந்துகந்த உருவம் நின் உருவம்
ஆகி⋆ உன் தனக்கன்பர் ஆனார்⋆
அவர் உகந்தமர்ந்த செய்கை உன் மாயை⋆
அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன்⋆
அமர் அது பண்ணி அகல் இடம் புடை சூழ்⋆
அடு படை அவித்த அம்மானே⋆
அமரர் தம் அமுதே! அசுரர்கள் நஞ்சே⋆
என்னுடை ஆர் உயிரேயோ! (4)

ஆர் உயிரேயோ! அகல் இடம் முழுதும்⋆
படைத்திடந்துண்டு உமிழ்ந்தளந்த⋆
பேர் உயிரேயோ! பெரிய நீர் படைத்து⋆ அங்-
குறைந்தது கடைந்தடைத்துடைத்த⋆
சீருயிரேயோ! மனிசர்க்குத் தேவர்
போல⋆ தேவர்க்கும் தேவாவோ⋆
ஒர் உயிரேயோ! உலகங்கட்கெல்லாம்⋆
உன்னை நான் எங்கு வந்துறுகோ (5)

எங்கு வந்துறுகோ என்னை ஆள்வானே⋆
ஏழ் உலகங்களும் நீயே⋆
அங்கவர்க்கமைத்த தெய்வமும் நீயே⋆
அவற்றவை கருமமும் நீயே⋆
பொங்கிய புறம்பால் பொருள் உளவேலும்⋆
அவையுமோ நீ இன்னே ஆனால்⋆
மங்கிய அருவாம் நேர்ப்பமும் நீயே⋆
வான் புலம் இறந்ததும் நீயே (6)

இறந்ததும் நீயே எதிர்ந்ததும் நீயே⋆
நிகழ்வதோ நீ இன்னேயானால்⋆
சிறந்த நின் தன்மை அதுவிதுவுதுவென்று⋆
அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன்⋆
கறந்த பால் நெய்யே! நெய்யின் சுவையே!⋆
கடலினுள் அமுதமே⋆ அமுதில்

பிறந்த இன் சுவையே! சுவையது பயனே!⋆
பின்னை தோள் மணந்த பேராயா! (7)

மணந்த பேராயா! மாயத்தால் முழுதும்⋆
வல்வினையேனை ஈர்கின்ற⋆
குணங்களை உடையாய்! அசுரர் வன்கையர்
கூற்றமே!⋆ கொடிய புள்ளுயர்த்தாய்⋆
பணங்கள் ஆயிரமும் உடைய பைந்நாகப்
பள்ளியாய்!⋆ பாற்கடல் சேர்ப்பா⋆
வணங்குமாறறியேன் மனமும் வாசகமும்⋆
செய்கையும் யானும் நீ தானே (8)

யானும் நீ தானே ஆவதோ மெய்யே⋆
அரு நரகவையும் நீ ஆனால்⋆
வான் உயர் இன்பம் எய்திலென்⋆ மற்றை
நரகமே எய்தில் என் எனினும்⋆
யானும் நீ தானாய்த் தெளிதொறும் நன்றும்
அஞ்சுவன்⋆ நரகம் நான் அடைதல்⋆
வான் உயர் இன்பம் மன்னி வீற்றிருந்தாய்⋆
அருளு நின் தாள்களை எனக்கே (9)

தாள்களை எனக்கே தலைத்தலைச் சிறப்பத்
தந்த⋆ பேர் உதவிக் கைம் மாறாத்⋆
தோள்களை ஆரத் தழுவி என்னுயிரை⋆
அற விலை செய்தனன் சோதீ
தோள்கள் ஆயிரத்தாய்! முடிகள் ஆயிரத்தாய்⋆
துணைமலர்க் கண்கள் ஆயிரத்தாய்⋆
தாள்கள் ஆயிரத்தாய்! பேர்கள் ஆயிரத்தாய்⋆
தமியனேன் பெரிய அப்பனே! (10)

‡பெரிய அப்பனைப் பிரமன் அப்பனை⋆
உருத்திரன் அப்பனை⋆ முனிவர்க்-
குரிய அப்பனை அமரர் அப்பனை⋆
உலகுக்கோர் தனி அப்பன் தன்னை⋆

பெரிய வண்குருகூர் வண்சடகோபன்⋆
பேணின ஆயிரத்துள்ளும்⋆
உரிய சொல் மாலை இவையும் பத்திவற்றால்⋆
உய்யலாம் தொண்டீர்! நங்கட்கே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நங்கள் வரிவளை ॥

தலைவனை நோக்கிச் செல்லக்கருதிய தலைவி கூற்று

‡நங்கள் வரிவளையாய் ஆயங்காளோ⋆
நம்முடை ஏதலர் முன்பு நாணி⋆
நுங்கட்கு யான் ஒன்றுரைக்கும் மாற்றம்⋆
நோக்குகின்றேன் எங்கும் காண மாட்டேன்⋆
சங்கம் சரிந்தன சாய் இழந்தேன்⋆
தட முலை பொன் நிறமாய்த் தளர்ந்தேன்⋆
வெங்கண் பறவையின் பாகன் எங்கோன்⋆
வேங்கடவாணனை வேண்டிச் சென்றே (1)

வேண்டிச் சென்றொன்று பெறுகிற்பாரில்⋆
என்னுடைத் தோழியர் நுங்கட்கேலும்⋆
ஈண்டிதுரைக்கும் படியை அந்தோ⋆
காண்கின்றிலேன் இடராட்டியேன் நான்⋆
காண் தகு தாமரைக் கண்ணன் கள்வன்⋆
விண்ணவர் கோன் நங்கள் கோனைக் கண்டால்⋆
ஈண்டிய சங்கும் நிறைவும் கொள்வான்⋆
எத்தனை காலம் இளைக்கின்றேனே! (2)

காலம் இளைக்கில் அல்லால் வினையேன்
நான் இளைக்கின்றிலன்⋆ கண்டு கொண்மின்⋆
ஞாலம் அறியப் பழி சுமந்தேன்⋆
நன்னுதலீர்! இனி நாணித் தான் என்⋆
நீல மலர் நெடும் சோதி சூழ்ந்த⋆
நீண்ட முகில் வண்ணன் கண்ணன் கொண்ட⋆
கோல வளையொடு மாமை கொள்வான்⋆
எத்தனை காலம் கூடச் சென்றே (3)

கூடச் சென்றேன் இனி என் கொடுக்கேன்⋆
    கோல்வளை நெஞ்சத் தொடக்கம் எல்லாம்⋆
பாடற்றொழிய இழந்து வைகல்⋆
    பல்வளையார்முன் பரிசழிந்தேன்⋆
மாடக் கொடி மதிள் தென் குளந்தை⋆
    வண் குடபால் நின்ற மாயக் கூத்தன்⋆
ஆடல் பறவை உயர்த்த வெல் போர்⋆
    ஆழிவலவனை ஆதரித்தே (4)

ஆழிவலவனை ஆதரிப்பும்⋆
    ஆங்கவன் நம்மில் வரவும் எல்லாம்⋆
தோழியர்காள்! நம்முடையமேதான்⋆
    சொல்லுவதோ இங்கரியதுதான்⋆
ஊழிதோறூழி ஒருவனாக⋆
    நன்குணர்வார்க்கும் உணரலாகா⋆
சூழல் உடைய சுடர் கொள் ஆதித்⋆
    தொல்லையஞ்சோதி நினைக்குங்காலே (5)

தொல்லையஞ்சோதி நினைக்குங்கால்⋆ என்
    சொல் அளவன்றிமையோர் தமக்கும்⋆
எல்லை இலாதன கூழ்ப்புச் செய்யும்⋆
    அத்திறம் நிற்க எம்மாமை கொண்டான்⋆
அல்லி மலர்த் தண் துழாயும் தாரான்⋆
    ஆர்க்கிடுகோ இனிப்பூசல் சொல்லீர்⋆
வல்லி வள வயல் சூழ் குடந்தை⋆
    மா மலர்க்கண் வளர்கின்ற மாலே (6)

மால் அரி கேசவன் நாரணன்⋆ சீமாதவன்
    கோவிந்தன் வைகுந்தன் என்றென்று⋆
ஓலமிட என்னைப் பண்ணி விட்டிட்டு⋆
    ஒன்றும் உருவும் சுவடும் காட்டான்⋆
ஏல மலர் குழல் அன்னைமீர்காள்!⋆
    என்னுடைத் தோழியர்காள்! என் செய்கேன்⋆

காலம் பல சென்றும் காண்பதாணை⋆
உங்களோடெங்கள் இடையில்லையே (7)

இடையில்லை யான் வளர்த்த கிளிகாள்⋆
பூவைகாள்! குயில்காள்! மயில்காள்⋆
உடைய நம் மாமையும் சங்கும் நெஞ்சும்⋆
ஒன்றும் ஒழிய ஒட்டாது கொண்டான்⋆
அடையும் வைகுந்தமும் பாற்கடலும்⋆
அஞ்சன வெற்பும் அவை நணிய⋆
கடையறப் பாசங்கள் விட்டபின்னை
அன்றி⋆ அவன் அவை காண்கொடானே (8)

காண்கொடுப்பான் அல்லன் ஆர்க்கும் தன்னை⋆
கைசெயப்பாலதோர் மாயம் தன்னால்⋆
மாண் குறள் கோல வடிவு காட்டி⋆
மண்ணும் விண்ணும் நிறைய மலர்ந்த⋆
சேண்சுடர்த் தோள்கள் பல தழைத்த⋆
தேவ பிராற்கென் நிறைவினோடு⋆
நாண் கொடுத்தேன் இனி என் கொடுக்கேன்⋆
என்னுடை நன்னுதல் நங்கைமீர்காள் (9)

என்னுடை நன்னுதல் நங்கைமீர்காள்!⋆
யான் இனிச் செய்வதென் என் நெஞ்சென்னை⋆
நின்னிடையேன் அல்லேன் என்று நீங்கி⋆
நேமியும் சங்கும் இருகைக் கொண்டு⋆
பன்னெடும் சூழ் சுடர் ஞாயிற்றோடு⋆
பான்மதி ஏந்தி ஓர் கோல நீல⋆
நன்னெடும் குன்றம் வருவதொப்பான்⋆
நாண்மலர்ப் பாதம் அடைந்ததுவே (10)

‡பாதம் அடைவதன் பாசத்தாலே⋆
மற்றவன் பாசங்கள் முற்ற விட்டு⋆
கோதில் புகழ்க் கண்ணன் தன்னடிமேல்⋆
வண்குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆

தீதில் அந்தாதியோர் ஆயிரத்துள்⋆
    இவையும் ஓர் பத்திசையோடும் வல்லார்⋆
ஆதும் ஓர் தீதிலர் ஆகி⋆ இங்கும்
    அங்கும் எல்லாம் அமைவார்கள் தாமே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ அங்குமிங்கும் ॥

எம்பெருமானுக்கு அன்புடையார் எங்கும் உளர் என்பதை அருளால் உணர்ந்து ஆழ்வார் அச்சம் தீர்தல்

‡அங்கும் இங்கும்⋆ வானவர் தானவர்⋆ யாவரும்
எங்கும் இனையை என்று⋆ உன்னை அறியகிலாதலற்றி⋆
அங்கம் சேரும்⋆ பூமகள் மண்மகள் ஆய்மகள்⋆
சங்கு சக்கரக் கையவன் என்பர்⋆ சரணமே (1)

சரணம் ஆகிய⋆ நான்மறை நூல்களும் சாராதே⋆
மரணம் தோற்றம்⋆ வான் பிணி மூப்பென்றிவை மாய்த்தோம்⋆
கரணப் பல் படை⋆ பற்றறவோடும் கனல் ஆழி⋆
அரணத் திண் படை ஏந்திய⋆ ஈசற்காளாயே (2)

ஆளும் ஆளார் ஆழியும்⋆ சங்கும் சுமப்பார் தாம்⋆
வாளும் வில்லும் கொண்டு⋆ பின் செல்வார் மாற்றில்லை⋆
தாளும் தோளும்⋆ கைகளை ஆரத் தொழக் காணேன்⋆
நாளும் நாளும் நாடுவன்⋆ அடியேன் ஞாலத்தே (3)

ஞாலம் போனகம் பற்றி⋆ ஓர் முற்றா உருவாகி⋆
ஆலம் பேர் இலை⋆ அன்னவசம் செய்யும் அம்மானே⋆
காலம் பேர்வதோர்⋆ கார் இருள் ஊழி ஒத்துளதால்⋆ உன்
கோலம் கார் எழில்⋆ காணலுற்றாழும் கொடியேற்கே (4)

கொடியார் மாடக்⋆ கோளூர் அகத்தும் புளிங்குடியும்⋆
மடியாதின்னே⋆ நீ துயில் மேவி மகிழ்ந்தது தான்⋆
அடியார் அல்லல் தவிர்த்த⋆ அசைவோ அன்றேல்⋆ இப்-
படி தான் நீண்டு தாவிய⋆ அசைவோ பணியாயே (5)

பணியா அமரர்⋆ பணிவும் பண்பும் தாமேயாம்⋆
அணியார் ஆழியும்⋆ சங்கமும் ஏந்தும் அவர் காண்மின்⋆

தணியா வெந்நோய்⋆ உலகில் தவிர்ப்பான்⋆ திருநீல
    மணியார் மேனியோடு⋆ என் மனம் சூழ வருவாரே (6)

வருவார் செல்வார்⋆ வண்பரிசாரத்திருந்த⋆ என்
    திருவாழ் மார்வற்கு⋆ என்திறம் சொல்லார் செய்வதென்⋆
உருவார் சக்கரம்⋆ சங்கு சுமந்திங்கும்மோடு⋆
    ஒருபாடுழல்வான்⋆ ஓர் அடியானும் உளன் என்றே (7)

என்றே என்னை⋆ உன் ஏரார் கோலத் திருந்தடிக்கீழ்⋆
    நின்றே ஆட்செய்ய⋆ நீ கொண்டருள நினைப்பதுதான்⋆
குன்றேழ் பாரேழ்⋆ சூழ் கடல் ஞாலம் முழுவேழும்⋆
    நின்றே தாவிய⋆ நீள் கழல் ஆழித் திருமாலே (8)

திருமால் நான்முகன்⋆ செஞ்சடையான் என்றிவர்கள்⋆ எம்
    பெருமான் தன்மையை⋆ யார் அறிகிற்பார் பேசியென்⋆
ஒரு மா முதல்வா!⋆ ஊழிப் பிரான் என்னை ஆளுடை⋆
    கரு மா மேனியன்! என்பன்⋆ என் காதல் கலக்கவே (9)

கலக்கம் இல்லா⋆ நல் தவ முனிவர் கரை கண்டோர்⋆
    துளக்கம் இல்லா⋆ வானவர் எல்லாம் தொழுவார்கள்⋆
மலக்கம் எய்த⋆ மா கடல் தன்னைக் கடைந்தானை⋆
    உலக்க நாம் புகழ்கிற்பது⋆ என் செய்வதுரையீரே (10)

‡உரையா வெந்நோய் தவிர⋆ அருள் நீள் முடியானை⋆
    வரையார் மாடம்⋆ மன்னு குருகூர்ச் சடகோபன்⋆
உரையேய் சொல் தொடை⋆ ஓர் ஆயிரத்துள் இப்பத்தும்⋆
    நிரையே வல்லார்⋆ நீடுலகத்துப் பிறவாரே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வார்கடா அருவி ॥

எம்பெருமானது வலிமை அவன் அன்புடையாருடன் அமர்ந்திருக்கும் சேர்த்தி முதலியவற்றைத் திருச்செங்குன்றூரில் கண்டு மகிழ்தல்

‡வார் கடா அருவி யானை மாமலையின்⋆
    மருப்பிணைக் குவடிறுத்துருட்டி⋆
ஊர் கொள் திண் பாகன் உயிர் செகுத்து⋆ அரங்கின்
    மல்லரைக் கொன்று சூழ் பரண்மேல்⋆
போர் கடா அரசர் புறக்கிட⋆ மாட
    மீமிசைக் கஞ்சனைத் தகர்த்த⋆
சீர் கொள் சிற்றாயன் திருச்செங்குன்றூரில்⋆
    திருச்சிற்றாறெங்கள் செல்சார்வே (1)

எங்கள் செல்சார்வு யாமுடை அமுதம்⋆
    இமையவர் அப்பன் என் அப்பன்⋆
பொங்கு மூவுலகும் படைத்தளித்தழிக்கும்⋆
    பொருந்து மூவுருவனெம் அருவன்⋆
செங்கயல் உகளும் தேம் பணை புடை சூழ்⋆
    திருச்செங்குன்றூர் திருச்சிற்றா-
றங்கமர்கின்ற⋆ ஆதியான் அல்லால்⋆
    யாவர் மற்றென் அமர் துணையே (2)

என்னமர் பெருமான் இமையவர் பெருமான்⋆
    இரு நிலம் இடந்த எம் பெருமான்⋆
முன்னை வல் வினைகள் முழுதுடன் மாள⋆
    என்னை ஆள்கின்ற எம் பெருமான்⋆
தென் திசைக்கணி கொள் திருச்செங்குன்றூரில்⋆
    திருச்சிற்றாற்றங்கரை மீபால்
நின்ற எம்பெருமான்⋆ அடியல்லால் சரணம்
    நினைப்பிலும்⋆ பிறிதில்லை எனக்கே (3)

பிறிதில்லை எனக்குப் பெரிய மூவுலகும்⋆
நிறையப்பேர் உருவமாய் நிமிர்ந்த⋆
குறிய மாண் எம்மான் குரை கடல் கடைந்த⋆
கோல மாணிக்கம் என் அம்மான்⋆
செறி குலை வாழை கமுகு தெங்கணி சூழ்⋆
திருச்செங்குன்றூர் திருச்சிற்றாறு
அறிய⋆ மெய்ம்மையே நின்ற எம் பெருமான்⋆
அடியிணை அல்லதோர் அரணே (4)

அல்லதோர் அரணும் அவனில் வேறில்லை⋆
அது பொருள் ஆகிலும்⋆ அவனை
அல்லதென் ஆவி அமர்ந்தணைகில்லாது⋆
ஆதலால் அவன் உறைகின்ற⋆
நல்ல நான்மறையோர் வேள்வியுள் மடுத்த⋆
நறும் புகை விசும்பொளி மறைக்கும்⋆
நல்ல நீள் மாடத் திருச்செங்குன்றூரில்⋆
திருச்சிற்றாறெனக்கு நல் அரணே (5)

எனக்கு நல் அரணை எனதாருயிரை⋆
இமையவர் தந்தை தாய் தன்னை⋆
தனக்கும் தன் தன்மை அறிவரியானைத்⋆
தடங்கடல் பள்ளி அம்மானை⋆
மனக்கொள் சீர் மூவாயிரவர்⋆ வண் சிவனும்
அயனும் தானும் ஒப்பார் வாழ்⋆
கனக்கொள் திண் மாடத் திருச்செங்குன்றூரில்⋆
திருச்சிற்றாறதனுள் கண்டேனே (6)

திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறதனுள்
கண்ட⋆ அத்திருவடி என்றும்⋆
திருச்செய்ய கமலக் கண்ணும்⋆ செவ்வாயும்
செவ்வடியும் செய்ய கையும்⋆
திருச்செய்ய கமல உந்தியும்⋆ செய்ய
கமல மார்பும் செய்யவுடையும்⋆

திருச்செய்ய முடியும் ஆரமும் படையும்⋆
திகழ என் சிந்தையுளானே (7)

திகழ என் சிந்தையுள் இருந்தானைச்⋆
செழு நிலத்தேவர் நான்மறையோர்⋆
திசை கை கூப்பி ஏத்தும்⋆ திருச்செங்குன்றூரில்
திருச்சிற்றாற்றங்கரையானை⋆
புகர் கொள் வானவர்கள் புகலிடம் தன்னை⋆
அசுரர் வன்கையர் வெங்கூற்றை⋆
புகழுமாறறியேன் பொருந்து மூவுலகும்⋆
படைப்பொடு கெடுப்புக் காப்பவனே (8)

படைப்பொடு கெடுப்புக் காப்பவன்⋆ பிரம
பரம்பரன் சிவபிரான் அவனே⋆
இடைப்புக்கோர் உருவும் ஒழிவில்லை அவனே⋆
புகழ்வில்லை யாவையும் தானே⋆
கொடைப் பெரும் புகழார் இனையர் தன்னானார்⋆
கூரிய விச்சையோடொழுக்கம்⋆
நடைப் பலி இயற்கைத் திருச்செங்குன்றூரில்⋆
திருச்சிற்றாறமர்ந்த நாதனே (9)

அமர்ந்த நாதனை அவர் அவர் ஆகி⋆
அவர்க்கருள் அருளும் அம்மானை⋆
அமர்ந்த தண் பழனத் திருச்செங்குன்றூரில்⋆
திருச்சிற்றாற்றங்கரையானை⋆
அமர்ந்த சீர் மூவாயிரவர் வேதியர்கள்⋆
தம்பதி அவனிதேவர் வாழ்வு⋆
அமர்ந்த மாயோனை முக்கண் அம்மானை⋆
நான்முகனை அமர்ந்தேனே (10)

‡தேனை நன் பாலைக் கன்னலை அமுதைத்⋆
திருந்துலகுண்ட அம்மானை⋆
வான நான்முகனை மலர்ந்த தண் கொப்பூழ்⋆
மலர்மிசைப் படைத்த மாயோனை⋆

கோனை வண் குருகூர் வண் சடகோபன்⋆
    சொன்ன ஆயிரத்துள் இப்பத்தும்⋆
வானின் மீதேற்றி அருள் செய்துமுடிக்கும்⋆
    பிறவி மா மாயக் கூத்தினையே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மாயக்கூத்தா ॥

எம்பெருமானது வடிவழகைக் காணப்பெறாத ஆழ்வார் ஆசை மிகுந்து அழுது அரற்றுதல்

‡மாயக் கூத்தா! வாமனா!⋆
வினையேன் கண்ணா! கண் கை கால்⋆
தூய செய்ய மலர்களாச்⋆
சோதிச் செவ்வாய் முகிழதா⋆
சாயல் சாமத் திருமேனி⋆
தண் பாசடையா⋆ தாமரை நீள்
வாசத் தடம்போல் வருவானே!⋆
ஒருநாள் காண வாராயே (1)

காண வாராய் என்றென்று⋆
கண்ணும் வாயும் துவர்ந்து⋆ அடியேன்
நாணி நன்னாட்டலமந்தால்⋆
இரங்கி ஒருநாள் நீ அந்தோ
காண வாராய் கரு நாயி-
றுதிக்கும்⋆ கரு மா மாணிக்க⋆
நாள் நல் மலைபோல் சுடர்ச் சோதி⋆
முடி சேர் சென்னி அம்மானே! (2)

முடி சேர் சென்னி அம்மா!⋆ நின்
மொய் பூந்தாமத் தண் துழாய்⋆
கடி சேர் கண்ணிப் பெருமானே!⋆
என்றென்றேங்கி அழுதக்கால்⋆
படிசேர் மகரக் குழைகளும்⋆
பவள வாயும் நால் தோளும்⋆
துடி சேர் இடையும் அமைந்ததோர்⋆
தூ நீர் முகில் போல் தோன்றாயே (3)

தூ நீர் முகில் போல் தோன்றும்⋆ நின்
சுடர் கொள் வடிவும் கனிவாயும்⋆
தே நீர்க் கமலக் கண்களும்⋆
வந்தென் சிந்தை நிறைந்தவா⋆
மா நீர் வெள்ளி மலை தன்மேல்⋆
வண் கார் நீல முகில் போல⋆
தூ நீர்க் கடலுள் துயில்வானே!⋆
எந்தாய்! சொல்ல மாட்டேனே (4)

சொல்ல மாட்டேன் அடியேன்⋆ உன்
துளங்கு சோதித் திருப் பாதம்⋆
எல்லையில் சீர் இள ஞாயிறு⋆
இரண்டுபோல் என்னுள்ளவா!⋆
அல்லல் என்னும் இருள் சேர்தற்கு⋆
உபாயம் என்னே ஆழி சூழ்⋆
மல்லல் ஞால முழுதுண்ட
மா நீர்க்⋆ கொண்டல் வண்ணனே! (5)

கொண்டல் வண்ணா! குடக்கூத்தா!⋆
வினையேன் கண்ணா! கண்ணா⋆ என்
அண்ட வாணா! என்றென்னை⋆
ஆளக் கூப்பிட்டழைத்தக்கால்⋆
விண் தன்மேல் தான் மண்மேல் தான்⋆
விரி நீர்க் கடல் தான் மற்றுத்தான்⋆
தொண்டனேன் உன் கழல் காண⋆
ஒருநாள் வந்து தோன்றாயே (6)

வந்து தோன்றாயன்றேல்⋆ உன்
வையம் தாய மலர் அடிக்கீழ்⋆
முந்தி வந்து யான் நிற்ப⋆
முகப்பே கூவிப் பணி கொள்ளாய்⋆
செந்தண் கமலக் கண் கை கால்⋆
சிவந்த வாயோர் கரு நாயிறு⋆

அந்தம் இல்லாக் கதிர் பரப்பி⋆
அலர்ந்ததொக்கும் அம்மானே! (7)

ஒக்கும் அம்மான் உருவம் என்று⋆
உள்ளம் குழைந்து நாணாளும்⋆
தொக்க மேகப் பல் குழாங்கள்⋆
காணும் தோறும் தொலைவன் நான்⋆
தக்க ஐவர் தமக்காய் அன்று⋆
ஈர் ஐம்பதின்மர் தாள் சாய⋆
புக்க நல்தேர்த் தனிப்பாகா!⋆
வாராய் இதுவோ பொருத்தமே (8)

இதுவோ பொருத்தம் மின் ஆழிப்
படையாய்!⋆ ஏறும் இரும் சிறைப்புள்⋆
அதுவே கொடியா உயர்த்தானே!⋆
என்றென்றேங்கி அழுதக்கால்⋆
எதுவேயாகக் கருதுங்கொல்⋆
இம் மா ஞாலம் பொறை தீர்ப்பான்⋆
மது வார் சோலை⋆ உத்தர
மதுரைப் பிறந்த மாயனே (9)

பிறந்த மாயா! பாரதம்
பொருத மாயா!⋆ நீயின்னே⋆
சிறந்த கால் தீ நீர் வான்⋆ மண்
பிறவுமாய பெருமானே⋆
கறந்த பாலுள் நெய்யே போல்⋆
இவற்றுள் எங்கும் கண்டுகொள்⋆
இறந்து நின்ற பெரு மாயா!⋆
உன்னை எங்கே காண்கேனே (10)

‡எங்கே காண்கேன் ஈன் துழாய்
அம்மான் தன்னை⋆ யான் என்றென்று⋆
அங்கே தாழ்ந்த சொற்களால்⋆
அந்தண் குருகூர்ச் சடகோபன்⋆

செங்கேழ் சொன்ன ஆயிரத்துள்⋆
இவையும் பத்தும் வல்லார்கள்⋆
இங்கே காண இப்பிறப்பே
மகிழ்வர்⋆ எல்லியும் காலையே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ எல்லியும் ॥

ஆழ்வாரது துன்பத்தைத் தீர்க்கும் பொருட்டு திருமால் திருக்கடித்தானத்தில் இருந்தமை கூறல்

‡எல்லியும் காலையும்⋆ தன்னை நினைந்தெழ⋆
நல்ல அருள்கள்⋆ நமக்கே தந்தருள்செய்வான்⋆
அல்லியந் தண்ணந் துழாய்⋆ முடி அப்பன் ஊர்⋆
செல்வர்கள் வாழும்⋆ திருக்கடித் தானமே (1)

திருக்கடித் தானமும்⋆ என்னுடைச் சிந்தையும்⋆
ஒருக்கடுத்துள்ளே⋆ உறையும் பிரான் கண்டீர்⋆
செருக் கடுத்தன்று⋆ திகைத்த அரக்கரை⋆
உருக் கெட வாளி⋆ பொழிந்த ஒருவனே (2)

ஒருவர் இருவர் ஓர்⋆ மூவர் என நின்று⋆
உருவுகரந்து⋆ உள்ளுந்தோறும் தித்திப்பான்⋆
திருவமர் மார்வன்⋆ திருக்கடித்தானத்தை⋆
மருவியுறைகின்ற⋆ மாயப் பிரானே (3)

மாயப் பிரான்⋆ என வல்வினை மாய்ந்தற⋆
நேசத்தினால் நெஞ்சம்⋆ நாடு குடி கொண்டான்⋆
தேசத்தமரர்⋆ திருக்கடித்தானத்தை⋆
வாசப் பொழில் மன்னு⋆ கோயில் கொண்டானே (4)

கோயில் கொண்டான் தன்⋆ திருக்கடித்தானத்தை⋆
கோயில் கொண்டான்⋆ அதனோடும் என் நெஞ்சகம்⋆
கோயில்கொள்⋆ தெய்வம் எல்லாம் தொழ⋆
வைகுந்தம் கோயில் கொண்ட⋆ குடக்கூத்த அம்மானே (5)

கூத்த அம்மான்⋆ கொடியேன் இடர் முற்றவும்⋆
மாய்த்த அம்மான்⋆ மதுசூத அம்மான் உறை⋆

பூத்த பொழில் தண்⋆ திருக்கடித்தானத்தை⋆
ஏத்த நில்லா⋆ குறிக்கொண்மின் இடரே (6)

கொண்மின் இடர் கெட⋆ உள்ளத்துக் கோவிந்தன்⋆
மண் விண் முழுதும்⋆ அளந்த ஒண் தாமரை⋆
மண்ணவர் தாம் தொழ⋆ வானவர் தாம் வந்து⋆
நண்ணு திருக்கடித்தான நகரே (7)

தான நகர்கள்⋆ தலைச்சிறந்தெங்கெங்கும்⋆
வானின் நிலம் கடல்⋆ முற்றும் எம்மாயற்கே⋆
ஆனவிடத்தும் என் நெஞ்சும்⋆ திருக்கடித்-
தான நகரும்⋆ தன தாயப் பதியே (8)

தாயப் பதிகள்⋆ தலைச்சிறந்தெங்கெங்கும்⋆
மாயத்தினால் மன்னி⋆ வீற்றிருந்தான் உறை⋆
தேசத்தமரர்⋆ திருக்கடித்தானத்துள்⋆
ஆயர்க்கதிபதி⋆ அற்புதன் தானே (9)

அற்புதன் நாராயணன்⋆ அரி வாமனன்⋆
நிற்பது மேவி⋆ இருப்பதென் நெஞ்சகம்⋆
நல் புகழ் வேதியர்⋆ நான்மறை நின்றதிர்⋆
கற்பகச் சோலைத்⋆ திருக்கடித்தானமே (10)

‡சோலைத் திருக்கடித்தானத்து⋆ உறை திரு-
மாலை⋆ மதிள் குருகூர்ச்⋆ சடகோபன் சொல்⋆
பாலோடமுதன்ன⋆ ஆயிரத்திப் பத்தும்⋆
மேலை வைகுந்தத்து⋆ இருத்தும் வியந்தே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ருத்தும் வியந்து ॥

*தம் உள்ளத்தில் எம்பெருமான் வீற்றிருந்த படியை ஆழ்வார் கூறி மகிழ்தல்*

‡இருத்தும் வியந்தென்னைத்⋆ தன் பொன்னடிக்கீழ் என்று⋆
அருத்தித்தெனைத்தோர்⋆ பல நாள் அழைத்தேற்கு⋆
பொருத்தம் உடை⋆ வாமனன் தான் புகுந்து⋆ என்தன்
கருத்தையுற⋆ வீற்றிருந்தான் கண்டு கொண்டே (1)

இருந்தான் கண்டு கொண்டு⋆ எனதேழை நெஞ்சாளும்⋆
திருந்தாத ஓர் ஐவரைத்⋆ தேய்ந்தற மன்னி⋆
பெருந்தாள் களிற்றுக்கு⋆ அருள் செய்த பெருமான்⋆
தரும் தான் அருள் தான்⋆ இனியான் அறியேனே (2)

அருள் தான் இனியான் அறியேன்⋆ அவனென்னுள்⋆
இருள் தான் அற⋆ வீற்றிருந்தான் இதுவல்லால்⋆
பொருள் தான் எனின்⋆ மூவுலகும் பொருள் அல்ல⋆
மருள் தான் ஈதோ⋆ மாய மயக்கு மயக்கே (3)

மாய மயக்கு மயக்கான்⋆ என்னை வஞ்சித்து⋆
ஆயன் அமரர்க்கு⋆ அரியே எனதம்மான்⋆
தூய சுடர்ச்சோதி⋆ தனதென்னுள் வைத்தான்⋆
தேசம் திகழும்⋆ தன் திருவருள் செய்தே (4)

திகழும் தன் திருவருள் செய்து⋆ உலகத்தார்
புகழும் புகழ்⋆ தானது காட்டித் தந்து⋆
என்னுள் திகழும்⋆ மணிக் குன்றம் ஒன்றே ஒத்து நின்றான்⋆
புகழும் புகழ்⋆ மற்றெனக்கும் ஓர் பொருளே (5)

பொருள் மற்றெனக்கும் ஓர் பொருள் தன்னில்⋆ சீர்க்கத்
தருமேல்⋆ பின்னை யார்க்கவன்⋆ தன்னைக் கொடுக்கும்⋆

கரு மாணிக்கக் குன்றத்துத்⋆ தாமரை போல்⋆
திரு மார்பு கால் கண் கை⋆ செவ்வாய் உந்தியானே (6)

செவ்வாய் உந்தி⋆ வெண்பல் சுடர்க் குழை தன்னோடு⋆
எவ்வாய்ச் சுடரும்⋆ தம்மில் முன் வளாய்க் கொள்ள⋆
செவ்வாய் முறுவலோடு⋆ எனதுள்ளத்திருந்த⋆
அவ்வாய் அன்றி⋆ யான் அறியேன் மற்றருளே (7)

அறியேன் மற்றருள்⋆ என்னையாளும் பிரானார்⋆
வெறிதே அருள் செய்வர்⋆ செய்வார்கட்குகந்து⋆
சிறியேனுடைச்⋆ சிந்தையுள் மூவுலகும்⋆
தன்னெறியா வயிற்றில் கொண்டு⋆ நின்றொழிந்தாரே (8)

வயிற்றில் கொண்டு⋆ நின்றொழிந்தாரும் யவரும்⋆
வயிற்றில் கொண்டு⋆ நின்றொரு மூவுலகும்⋆ தம்
வயிற்றில் கொண்டு⋆ நின்றவண்ணம் நின்ற மாலை⋆
வயிற்றில் கொண்டு⋆ மன்ன வைத்தேன் மதியாலே (9)

வைத்தேன் மதியால்⋆ எனதுள்ளத்தகத்தே⋆
எய்த்தே ஒழிவேன் அல்லேன்⋆ என்றும் எப்போதும்⋆
மொய்த்தேய் திரை⋆ மோது தண் பாற்கடல் உளால்⋆
பைத்தேய் சுடர்ப் பாம்பணை⋆ நம் பரனையே (10)

‡சுடர்ப் பாம்பணை நம் பரனைத்⋆ திருமாலை⋆
அடிச் சேர்வகை⋆ வண் குருகூர்ச் சடகோபன்⋆
முடிப்பான் சொன்னவாயிரத்து⋆ இப்பத்தும் சன்மம்
விட⋆ தேய்ந்தற நோக்கும்⋆ தன் கண்கள் சிவந்தே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கண்கள் சிவந்து ॥

ஆருயிரின் ஏற்றத்தை எம்பெருமான் காட்டக் கண்டு ஆழ்வார் பேசுதல்

‡கண்கள் சிவந்து பெரியவாய்⋆ வாயும் சிவந்து கனிந்து⋆ உள்ளே
வெண் பல் இலகு சுடர் இலகு⋆ விலகு மகர குண்டலத்தன்⋆
கொண்டல் வண்ணன் சுடர் முடியன்⋆ நான்கு தோளன் குனி சார்ங்கன்⋆
ஒண் சங்கதை வாள் ஆழியான்⋆ ஒருவன் அடியேன் உள்ளானே (1)

அடியேன் உள்ளான் உடல் உள்ளான்⋆
அண்டத்தகத்தான் புறத்துள்ளான்⋆
படியேயிதுவென்றுரைக்கலாம்
படியன்⋆ அல்லன் பரம்பரன்⋆
கடிசேர் நாற்றத்துள் ஆலை⋆
இன்பத் துன்பக் கழி நேர்மை⋆
ஒடியா இன்பப் பெருமையோன்⋆
உணர்வில் உம்பர் ஒருவனே (2)

உணர்வில் உம்பர் ஒருவனை⋆ அவனதருளால் உறல்பொருட்டு⋆ என்
உணர்வின் உள்ளே இருத்தினேன்⋆ அதுவும் அவனதின்னருளே⋆
உணர்வும் உயிரும் உடம்பும்⋆ மற்ற உலப்பிலனவும் பழுதேயாம்⋆
உணர்வைப் பெறவூர்ந்திறவேறி⋆ யானும் தானாய் ஒழிந்தானே (3)

யானும் தானாய் ஒழிந்தானை⋆ யாதும் யவர்க்கும் முன்னோனை⋆
தானும் சிவனும் பிரமனும் ஆகிப்⋆ பணைத்த தனி முதலை⋆
தேனும் பாலும் கன்னலும்⋆ அமுதும் ஆகித் தித்தித்து⋆ என்
ஊனில் உயிரில் உணர்வினில்⋆ நின்ற ஒன்றை உணர்ந்தேனே (4)

நின்ற ஒன்றை உணர்ந்தேனுக்கு⋆
அதனுள் நேர்மை அதுவிதுவென்று⋆
ஒன்றும் ஒருவர்க்குணரலாகாது⋆
உணர்ந்தும் மேலும் காண்பரிது⋆

சென்று சென்று பரம்பரமாய்⋆
    யாதும் இன்றித் தேய்ந்தற்று⋆
நன்று தீதென்றறிவரிதாய்⋆
    நன்றாய் ஞானம் கடந்ததே (5)

நன்றாய் ஞானம் கடந்துபோய்⋆
    நல் இந்திரியம் எல்லாம் ஈர்த்து⋆
ஒன்றாய்க் கிடந்த அரும் பெரும் பாழ்⋆
    உலப்பில் அதனை உணர்ந்துணர்ந்து⋆
சென்றாங்கின்ப துன்பங்கள்⋆
    செற்றுக் களைந்து பசையற்றால்⋆
அன்றே அப்போதே வீடு⋆
    அதுவே வீடு வீடாமே (6)

அதுவே வீடு வீடு பேற்று⋆ இன்பம் தானும் அது தேறி⋆
    எதுவே தானும் பற்றின்றி⋆ யாதும் இலிகள் ஆகிற்கில்⋆
அதுவே வீடு வீடு பேற்று⋆ இன்பம் தானும் அது தேறாது⋆
    எதுவே வீடேதின்பம் என்று⋆ எய்த்தார் எய்த்தார் எய்த்தாரே (7)

எய்த்தார் எய்த்தார் எய்த்தார்
    என்று⋆ இல்லத்தாரும் புறத்தாரும்
மொய்த்து⋆ ஆங்கலறி முயங்கத்⋆ தாம்
    போகும்போது⋆ உன்மத்தர் போல்
பித்தேயேறி அனுராகம்
    பொழியும்போது⋆ எம் பெம்மானோடு
ஒத்தே சென்று⋆ அங்குளம்
    கூடக்⋆ கூடிற்றாகில் நல்லுறைப்பே (8)

கூடிற்றாகில் நல்லுறைப்புக்⋆ கூடாமையைக் கூடினால்⋆
    ஆடல் பறவை உயர் கொடி⋆ எம் மாயன் ஆவதததுவே⋆
வீடைப் பண்ணி ஒரு பரிசே⋆ எதிர்வும் நிகழ்வும் கழிவுமாய்⋆
    ஓடித் திரியும் யோகிகளும்⋆ உளரும் இல்லை அல்லரே (9)

உளரும் இல்லை அல்லராய்⋆
உளராய் இல்லை ஆகியே⋆
உளர் எம்மொருவர் அவர்வந்து⋆
எனுள்ளத்துள்ளே உறைகின்றார்⋆
வளரும் பிறையும் தேய் பிறையும்
போல்⋆ அசைவும் ஆக்கமும்⋆
வளரும் சுடரும் இருளும் போல்⋆
தெருளும் மருளும் மாய்த்தோமே (10)

‡தெருளும் மருளும் மாய்த்துத்⋆
தந்திருந்து செம்பொன் கழல் அடிக்கீழ்⋆
அருளியிருத்தும் அம்மானாம்⋆
அயனாம் சிவனாம்⋆ திருமாலால்
அருளப் பட்ட சடகோபன்⋆ ஓர்
ஆயிரத்துள் இப்பத்தால்⋆
அருளி அடிக்கீழ் இருத்தும்⋆ நம்
அண்ணல் கருமாணிக்கமே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கருமாணிக்கமலை ॥

## தலைவியின் உண்மைக் காதலைத் தாய்மாருக்குத் தோழி எடுத்துரைத்து அயல் மணம் விலக்கல்

‡கரு மாணிக்க மலைமேல்⋆ மணித் தடம்
தாமரைக் காடுகள் போல்⋆
திருமார்வு வாய் கண் கை⋆ உந்தி கால் உடை
ஆடைகள் செய்ய பிரான்⋆
திருமால் எம்மான் செழு நீர் வயல்⋆ குட்ட
நாட்டுத் திருப்புலியூர்⋆
அரு மாயன் பேரன்றிப் பேச்சிலள்⋆ அன்னைமீர்
இதற்கென் செய்கேனா (1)

அன்னைமீர் இதற்கென் செய்கேன்⋆ அணி
மேருவின் மீதுலவும்⋆
துன்னு சூழ் சுடர் ஞாயிறும்⋆ அன்றியும்
பல் சுடர்களும் போல்⋆
மின்னு நீள் முடியாரம் பல் கலன்⋆ தான்
உடை எம்பெருமான்⋆
புன்னையம் பொழில் சூழ்⋆ திருப்புலியூர்
புகழும் இவளே (2)

புகழும் இவள் நின்றிராப்பகல்⋆ பொரு நீர்க்
கடல் தீப் பட்டு⋆ எங்கும்
திகழும் எரியோடு செல்வதொப்பச்⋆
செழும் கதிர் ஆழி முதல்⋆
புகழும் பொரு படை ஏந்திப்⋆ போர் புக்கு
அசுரரைப் பொன்றுவித்தான்⋆
திகழு மணி நெடு மாட நீடு⋆
திருப்புலியூர் வளமே (3)

ஊர் வளம் கிளர் சோலையும்⋆ கரும்பும்
பெரும் செந்நெலும் சூழ்ந்து⋆
ஏர் வளம் கிளர் தண் பணைக்⋆ குட்ட
நாட்டுத் திருப்புலியூர்⋆
சீர் வளம் கிளர் மூவுலகுண்டுமிழ்⋆
தேவ பிரான்⋆
பேர் வளம் கிளர்ந்தன்றிப் பேச்சிலள்⋆
இன்றிப் புனையிழையே (4)

புனையிழைகள் அணிவும் ஆடையுடையும்⋆
புதுக்கணிப்பும்⋆
நினையும் நீர்மையதன்றிவட்கிது⋆ நின்று
நினைக்கப்புக்கால்⋆
சுனையினுள் தடம் தாமரை மலரும்⋆
தண் திருப்புலியூர்⋆
முனைவன் மூவுலகாளி⋆ அப்பன்
திருவருள் மூழ்கினளே (5)

திருவருள் மூழ்கி வைகலும்⋆ செழு நீர்
நிறக் கண்ண பிரான்⋆
திருவருள்களும் சேர்ந்தமைக்கு⋆
அடையாளம் திருந்தவுள⋆
திருவருள் அருளால் அவன்⋆ சென்று
சேர் தண் திருப்புலியூர்⋆
திருவருள் கமுகொண் பழத்தது⋆
மெல்லியல் செவ்விதழே (6)

மெல்லிலைச் செல்வ வண் கொடிபுல்க⋆
வீங்கிளம் தாள் கமுகின்⋆
மல்லிலை மடல் வாழை⋆ ஈன் கனி சூழ்ந்து
மணம் கமழ்ந்து⋆
புல்லிலைத் தெங்கினூடு⋆ கால் உலவும்
தண் திருப்புலியூர்⋆

மல்லலம் செல்வக் கண்ணன் தாள் அடைந்தாள்⋆
இம் மடவரலே (7)

மடவரல் அன்னைமீர்கட்கு⋆ என்சொல்லிச் சொல்லுகேன்
மல்லைச் செல்வ⋆
வடமொழி மறைவாணர்⋆ வேள்வியுள் நெய்யழல்
வான் புகை போய்⋆
திடவிசும்பில் அமரர் நாட்டை மறைக்கும்⋆
தண் திருப்புலியூர்⋆
படவரவணையான் தன் நாமம் அல்லால்⋆
பரவாள் இவளே (8)

பரவாள் இவள் நின்றிராப்பகல்⋆ பனி நீர்
நிறக் கண்ண பிரான்⋆
விரவார் இசை மறை வேதியர் ஒலி⋆ வேலையின்
நின்றொலிப்ப⋆
கரவார் தடந்தொறும் தாமரைக் கயம்⋆
தீவிகை நின்றலரும்⋆
புரவார் கழனிகள் சூழ்⋆ திருப்புலியூர்ப்
புகழ் அன்றி மற்றே (9)

அன்றி மற்றோர் உபாயமென்⋆ இவள்
அந் தண் துழாய் கமழ்தல்⋆
குன்ற மா மணி மாட மாளிகைக்⋆ கோலக்
குழாங்கள் மல்கி⋆
தென் திசைத் திலதம்புரைக்⋆ குட்ட
நாட்டுத் திருப்புலியூர்⋆
நின்ற மாயப் பிரான் திருவருளாம்⋆
இவள் நேர்ப்பட்டதே (10)

‡நேர்ப்பட்ட நிறை மூவுலகுக்கும்⋆
நாயகன் தன்னடிமை⋆
நேர்ப்பட்ட தொண்டர் தொண்டர் தொண்டர்⋆
தொண்டன் சடகோபன் சொல்⋆

நேர்ப்பபட்ட தமிழ் மாலை⋆
ஆயிரத்துள் இவையும் ஓர் பத்தும்
நேர் பட்டார்⋆ அவர்நேர்பட்டார்⋆
நெடுமாற்கடிமை செய்யவே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நெடுமாற்கடிமை ॥

பாகவதர்கட்குத் தாம் அடிமையாய் இருக்கும்
உண்மையை ஆழ்வார் பேசுதல்

‡நெடுமாற்கடிமை செய்வேன்போல்⋆
    அவனைக் கருத வஞ்சித்து⋆
தடுமாற்றற்ற தீக்கதிகள்⋆
    முற்றும் தவிர்ந்த சதிர் நினைந்தால்⋆
கொடு மா வினையேன் அவன் அடியார்
    அடியே⋆ கூடும் இதுவல்லால்⋆
விடுமாறென்பதென் அந்தோ!⋆
    வியன் மூவுலகு பெறினுமே (1)

வியன் மூவுலகு பெறினும் போய்த்⋆
    தானே தானே ஆனாலும்⋆
புயல் மேகம் போல் திருமேனி
    அம்மான்⋆ புனை பூங்கழல் அடிக்கீழ்⋆
சயமே அடிமை தலை நின்றார்⋆
    திருத்தாள் வணங்கி⋆ இம்மையே
பயனே இன்பம் யான் பெற்றது⋆
    உறுமோ பாவியேனுக்கே (2)

உறுமோ பாவியேனுக்கு⋆ இவ்வுலகம் மூன்றும் உடன் நிறைய⋆
    சிறுமா மேனி நிமிர்த்த⋆ என் செந்தாமரைக் கண் திருக்குறளன்⋆
நறுமா விரை நாண் மலரடிக் கீழ்ப்⋆ புகுதல் அன்றி அவன் அடியார்⋆
    சிறுமா மனிசராய் என்னை ஆண்டார்⋆ இங்கே திரியவே (3)

இங்கே திரிந்தேற்கிழக்குற்றென்!⋆ இரு மா நிலம் முன் உண்டுமிழ்ந்த⋆
    செங்கோலத்த பவள வாய்ச்⋆ செந்தாமரைக் கண் என்னம்மான்⋆
பொங்கேழ் புகழ்கள் வாயவாய்ப்⋆ புலன்கொள் வடிவென் மனத்ததாய்⋆
    அங்கேய் மலர்கள் கையவாய்⋆ வழிபட்டோட அருளிலே (4)

வழிபட்டோட அருள் பெற்று⋆ மாயன் கோல மலர் அடிக்கீழ்⋆
சுழிபட்டோடும் சுடர்ச்சோதி வெள்ளத்து⋆ இன்புற்றிருந்தாலும்⋆
இழிபட்டோடும் உடலினில் பிறந்து⋆ தன் சீர் யான் கற்று⋆
மொழிபட்டோடும் கவியமுதம்⋆ நுகர்ச்சி உறுமோ முழுதுமே (5)

நுகர்ச்சி உறுமோ மூவுலகின்⋆ வீடு பேறு தன் கேழில்⋆
புகர்ச் செம் முகத்த களிறட்ட⋆ பொன்னாழிக்கை என்னம்மான்⋆
நிகர்ச் செம் பங்கி எரிவிழிகள்⋆ நீண்ட அசுரர் உயிர் எல்லாம்⋆
தகர்த்துண்டுழலும் புட்பாகன்⋆ பெரிய தனி மாப் புகழே (6)

தனி மாப் புகழே எஞ்ஞான்றும்⋆ நிற்கும் படியாத் தான் தோன்றி⋆
முனி மாப் பிரம முதல்வித்தாய்⋆ உலகம் மூன்றும் முளைப்பித்த⋆
தனி மாத் தெய்வத் தளிர் அடிக்கீழ்ப்⋆ புகுதல் அன்றி அவன் அடியார்⋆
நனி மாக் கலவி இன்பமே⋆ நாளும் வாய்க்க நங்கட்கே (7)

நாளும் வாய்க்க நங்கட்கு⋆
நளிர் நீர்க் கடலைப் படைத்து⋆ தன்
தாளும் தோளும் முடிகளும்⋆
சமன் இலாத பல பரப்பி⋆
நீளும் படர் பூங்கற்பகக்காவும்⋆ நிறை பன்னாயிற்றின்⋆
கோளும் உடைய மணி மலை போல்⋆
கிடந்தான் தமர்கள் கூட்டமே (8)

தமர்கள் கூட்ட வல்வினையை⋆ நாசம் செய்யும் சதிர் மூர்த்தி⋆
அமர் கொள் ஆழி சங்கு வாள்⋆ வில் தண்டாதி பல் படையன்⋆
குமரன் கோல ஐங்கணை வேள் தாதை⋆ கோதில் அடியார் தம்⋆
தமர்கள் தமர்கள் தமர்களாம்⋆ சதிரே வாய்க்க தமியேற்கே (9)

வாய்க்க தமியேற்கு⋆ ஊழிதோறூழி ஊழி⋆
மா காயாம் பூக்கொள் மேனி நான்கு தோள்⋆
பொன்னாழிக் கை என்னம்மான்⋆
நீக்கம் இல்லா அடியார் தம்⋆
அடியார் அடியார் அடியார் எம்
கோக்கள்⋆ அவர்க்கே குடிகளாய்ச்
செல்லும்⋆ நல்ல கோட்பாடே (10)

‡நல்ல கோட்பாட்டுலகங்கள்⋆ மூன்றினுள்ளும் தான் நிறைந்த⋆
அல்லிக் கமலக் கண்ணனை⋆ அந்தண் குருகூர்ச் சடகோபன்⋆
சொல்லப் பட்ட ஆயிரத்துள்⋆ இவையும் பத்தும் வல்லார்கள்⋆
நல்ல பதத்தால் மனை வாழ்வர்⋆ கொண்ட பெண்டிர் மக்களே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கொண்ட பெண்டிர் ॥

எல்லா வகையிலும் உறவினனான திருமாலைச் சேர்மின் எனல்

‡கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார்⋆
    சுற்றத்தவர் பிறரும்⋆
கண்டதோடு பட்டதல்லால்⋆
    காதல் மற்று யாதும் இல்லை⋆
எண்டிசையும் கீழும் மேலும்⋆
    முற்றவும் உண்ட பிரான்⋆
தொண்டரோமாய் உய்யல் அல்லால்⋆
    இல்லை கண்டீர் துணையே (1)

துணையும் சார்வும் ஆகுவார்போல்⋆
    சுற்றத்தவர் பிறரும்⋆
அணைய வந்த ஆக்கம் உண்டேல்⋆
    அட்டைகள்போல் சுவைப்பர்⋆
கணை ஒன்றாலே ஏழ் மமரமும் எய்த⋆
    எம் கார் முகிலை⋆
புணை என்றுய்யப் போகில் அல்லால்⋆
    இல்லை கண்டீர் பொருளே (2)

பொருள் கையுண்டாய்ச் செல்லக்காணில்⋆
    போற்றி என்றேற்றுஎழுவர்⋆
இருள்கொள் துன்பத்தின்மை காணில்⋆
    என்னே! என்பாரும் இல்லை⋆
மருள்கொள் செய்கை அசுரர் மங்க⋆
    வட மதுரைப் பிறந்தாற்கு⋆
அருள்கொள் ஆளாய் உய்யல் அல்லால்⋆
    இல்லை கண்டீர் அரணே (3)

அரணம் ஆவர் அற்ற காலைக்கு⋆ என்றென்றமைக்கப் பட்டார்⋆
இரணம் கொண்ட தெப்பர் ஆவர்⋆ இன்றியிட்டாலும் அஃதே⋆
வருணித்தென்னே⋆ வட மதுரைப் பிறந்தவன் வண் புகழே⋆
சரண் என்றுய்யப் போகில் அல்லால்⋆ இல்லை கண்டீர் சதிரே (4)

சதிரம் என்று தம்மைத் தாமே⋆
சம்மதித்தின் மொழியார்⋆
மதுர போகம் அதுற்றவரே⋆
வைகி மற்றொன்றுறுவர்⋆
அதிர்கொள் செய்கை அசுரர் மங்க⋆
வட மதுரைப் பிறந்தாற்கு⋆
எதிர்கொள் ஆளாய் உய்யல் அல்லால்⋆
இல்லை கண்டீர் இன்பமே (5)

இல்லை கண்டீர் இன்பம் அந்தோ!⋆ உள்ளது நினையாதே⋆
தொல்லையார்கள் எத்தனைவர்⋆ தோன்றிக் கழிந்தொழிந்தார்⋆
மல்லை மூதூர்⋆ வட மதுரைப் பிறந்தவன் வண் புகழே⋆
சொல்லி உய்யப் போகல் அல்லால்⋆ மற்றொன்றில்லை சுருக்கே (6)

மற்றொன்றில்லை சுருங்கச் சொன்னோம்⋆ மா நிலத்தெவ்வுயிர்க்கும்⋆
சிற்ற வேண்டா சிந்திப்பே அமையும்⋆ கண்டீர்கள் அந்தோ!⋆
குற்றம் அன்றெங்கள் பெற்றத் தாயன்⋆ வட மதுரைப் பிறந்தான்⋆
குற்றமில் சீர் கற்று வைகல்⋆ வாழ்தல் கண்டீர் குணமே (7)

வாழ்தல் கண்டீர் குணம் இதந்தோ!⋆ மாயவன் அடி பரவி⋆
போழ்து போக உள்ளகிற்கும்⋆ புன்மை இலாதவர்க்கு⋆
வாழ் துணையா⋆ வட மதுரைப் பிறந்தவன் வண் புகழே⋆
வீழ் துணையாய்ப் போம் இதனில்⋆ யாதும் இல்லை மிக்கதே (8)

யாதும் இல்லை மிக்கதனில்⋆ என்றென்றது கருதி⋆
காது செய்வான் கூதை செய்து⋆ கடைமுறை வாழ்க்கையும் போம்⋆
மாதுகிலின் கொடிக்கொள் மாட⋆ வட மதுரைப் பிறந்த⋆
தாது சேர் தோள் கண்ணன் அல்லால்⋆ இல்லை கண்டீர் சரணே (9)

கண்ணன் அல்லால் இல்லை கண்டீர்⋆ சரண் அது நிற்க வந்து⋆
மண்ணின் பாரம் நீக்குதற்கே⋆ வட மதுரைப் பிறந்தான்⋆
திண்ணமா நும் உடைமை உண்டேல்⋆ அவன் அடி சேர்ந்துய்ம்மினோ⋆
எண்ண வேண்டா நும்மதாதும்⋆ அவன் அன்றி மற்றில்லையே (10)

‡ஆதும் இல்லை மற்றவனில்⋆ என்றதுவே துணிந்து⋆
தாது சேர் தோள் கண்ணனைக்⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
தீதிலாத ஒண் தமிழ்கள்⋆ இவை ஆயிரத்துள் இப்பத்தும்⋆
ஓத வல்ல பிராக்கள்⋆ நம்மை ஆளுடையார்கள் பண்டே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பண்டைநாளாலே ॥

எல்லா உறவின் காரியமும் தமக்குக் குறையில்லாமல் அருளுமாறு ஆழ்வார் எம்பெருமானை வேண்டுதல்

‡பண்டை நாளாலே நின் திருவருளும்⋆
பங்கயத்தாள் திருவருளும்
கொண்டு⋆ நின் கோயில் சீய்த்துப் பல்படிகால்⋆
குடி குடி வழிவந்தாட்செய்யும்⋆
தொண்டரோர்க்கருளிச் சோதி வாய் திறந்து⋆ உன்
தாமரைக் கண்களால் நோக்காய்⋆
தெண் திரைப் பொருநல் தண் பணை சூழ்ந்த⋆
திருப்புளிங்குடிக் கிடந்தானே (1)

குடிக்கிடந்தாக்கம் செய்து⋆ நின் தீர்த்த
அடிமைக் குற்றேவல் செய்து⋆ உன் பொன்
அடிக் கடவாதே வழி வருகின்ற⋆
அடியரோர்க்கருளி⋆ நீ ஒருநாள்
படிக்களவாக நிமிர்த்த⋆ நின் பாத
பங்கயமே தலைக்கணியாய்⋆
கொடிக்கொள் பொன் மதிள் சூழ் குளிர் வயல் சோலைத்⋆
திருப்புளிங்குடிக் கிடந்தானே (2)

கிடந்த நாள் கிடந்தாய் எத்தனை காலம்
கிடத்தி⋆ உன் திருவுடம்பசைய⋆
தொடர்ந்து குற்றேவல் செய்து தொல்லடிமை
வழி வரும்⋆ தொண்டரோர்க்கருளி⋆
தடங்கொள் தாமரைக் கண் விழித்து⋆ நீ எழுந்துன்
தாமரை மங்கையும் நீயும்⋆
இடங்கொள் மூவுலகும் தொழ இருந்தருளாய்⋆
திருப்புளிங்குடிக் கிடந்தானே (3)

புளிங்குடிக் கிடந்து வரகுணமங்கை
இருந்து⋆ வைகுந்தத்துள் நின்று⋆
தெளிந்த என் சிந்தையகம் கழியாதே⋆
என்னை ஆள்வாய் எனக்கருளி⋆
நளிந்த சீர் உலகம் மூன்றுடன் வியப்ப⋆
நாங்கள் கூத்தாடி நின்றார்ப்ப⋆
பளிங்கு நீர் முகிலின் பவளம் போல்⋆ கனிவாய்
சிவப்ப நீ காண வாராயே (4)

பவளம் போல் கனி வாய் சிவப்ப நீ காண
வந்து⋆ நின் பல் நிலா முத்தம்⋆
தவழ் கதிர் முறுவல் செய்து⋆ நின் திருக்கண்
தாமரை தயங்க நின்றருளாய்
பவள நன் படர்க்கீழ் சங்குறை பொருநல்⋆
தண் திருப்புளிங்குடிக் கிடந்தாய்⋆
கவள மா களிற்றின் இடர் கெடத் தடத்துக்⋆
காய் சினப் பறவை ஊர்ந்தானே (5)

காய் சினப் பறவை ஊர்ந்து⋆ பொன் மலையின்
மீமிசைக் கார் முகில் போல்⋆
மா சின மாலி மாலிமான் என்று⋆ அங்-
கவர் படக் கனன்று முன் நின்ற⋆
காய் சின வேந்தே! கதிர் முடியானே!⋆
கலி வயல் திருப்புளிங்குடியாய்⋆
காய் சினவாழி சங்கு வாள் வில் தண்-
டேந்தி⋆ எம்மிடர் கடிவானே! (6)

எம்மிடர் கடிந்திங்கென்னை ஆள்வானே!⋆
இமையவர் தமக்கும் ஆங்கனையாய்⋆
செம்மடல் மலரும் தாமரைப் பழனத்⋆
தண் திருப்புளிங்குடிக் கிடந்தாய்⋆
நம்முடை அடியர் கவ்வை கண்டுகந்து⋆
நாம் களித்துள நலம் கூர⋆

இம்மடவுலகர் காண நீ ஒருநாள்⋆
    இருந்திடாய் எங்கள் கண் முகப்பே (7)

எங்கள் கண் முகப்பே உலகர்கள் எல்லாம்⋆
    இணையடி தொழுதெழுந்திறைஞ்சி⋆
தங்களன்பார தமது சொல் வலத்தால்⋆
    தலைத்தலைச் சிறந்து பூசிப்ப⋆
திங்கள் சேர் மாடத் திருப்புளிங்குடியாய்!⋆
    திரு வைகுந்தத்துள்ளாய்! தேவா⋆
இங்கண் மா ஞாலத்திதனுளும் ஒருநாள்⋆
    இருந்திடாய் வீற்றிடம் கொண்டே (8)

வீற்றிடம் கொண்டு வியன்கொள் மா ஞாலத்து⋆
    இதனுளும் இருந்திடாய்⋆ அடியோம்
போற்றி ஓவாதே கண்ணினை குளிர⋆
    புது மலர் ஆகத்தைப் பருக⋆
சேற்றிள வாளை செந் நெலூடுகளும்⋆
    செழும் பணைத் திருப்புளிங்குடியாய்⋆
கூற்றமாய் அசுரர் குலமுதல் அரிந்த⋆
    கொடுவினைப் படைகள் வல்லானே! (9)

கொடு வினைப் படைகள் வல்லையாய்⋆ அமரர்க்-
    கிடர் கெட அசுரர்கட்கிடர் செய்⋆
கடு வினை நஞ்சே! என்னுடை அமுதே⋆
    கலி வயல் திருப்புளிங்குடியாய்⋆
வடிவிணையில்லா மலர்மகள்⋆ மற்றை
    நிலமகள் பிடிக்கும் மெல்லடியைக்⋆
கொடுவினையேனும் பிடிக்க நீ ஒருநாள்⋆
    கூவுதல் வருதல் செய்யாயே (10)

‡கூவுதல் வருதல் செய்திடாய் என்று⋆
    குரை கடல் கடைந்தவன் தன்னை⋆
மேவி நன்கமர்ந்த வியன் புனல் பொருநல்⋆
    வழுதி நாடன் சடகோபன்⋆

நாவியல் பாடல் ஆயிரத்துள்ளும்⋆
இவையும் ஓர் பத்தும் வல்லார்கள்⋆
ஓவுதல் இன்றி உலகம் மூன்றளந்தான்⋆
அடியிணை உள்ளத்தோர்வாரே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஓராயிரமாய் ॥

எம்பெருமானோடு உள்ள தொடர்பினைக் கண்ட ஆழ்வார் அவனது சீலத்தில் ஈடுபட்டுக் கூறுதல்

‡ஓர் ஆயிரமாய்⋆ உலகேழ் அளிக்கும்⋆
பேர் ஆயிரம் கொண்டதோர்⋆ பீடுடையன்
கார் ஆயின⋆ காள நல் மேனியினன்⋆
நாராயணன்⋆ நங்கள் பிரான் அவனே (1)

அவனே அகல் ஞாலம்⋆ படைத்திடந்தான்⋆
அவனே அஃதுண்டுமிழ்ந்தான்⋆ அளந்தான்⋆
அவனே அவனும்⋆ அவனும் அவனும்⋆
அவனே மற்றெல்லாமும் அறிந்தனமே (2)

அறிந்தன வேத⋆ அரும் பொருள் நூல்கள்⋆
அறிந்தன கொள்க⋆ அரும் பொருள் ஆதல்⋆
அறிந்தனர் எல்லாம்⋆ அரியை வணங்கி⋆
அறிந்தனர்⋆ நோய்கள் அறுக்கும் மருந்தே (3)

மருந்தே நங்கள்⋆ போக மகிழ்ச்சிக்கென்று⋆
பெரும் தேவர் குழாங்கள்⋆ பிதற்றும் பிரான்⋆
கருந்தேவன் எம்மான்⋆ கண்ணன் விண்ணுலகம்⋆
தரும் தேவனை⋆ சோரேல் கண்டாய் மனமே! (4)

மனமே! உன்னை⋆ வல்வினையேன் இரந்து⋆
கனமே சொல்லினேன்⋆ இது சோரேல் கண்டாய்⋆
புன மேவிய⋆ பூந் தண் துழாய் அலங்கல்⋆
இனம் ஏதும் இலானை⋆ அடைவதுமே (5)

அடைவதும் அணியார்⋆ மலர் மங்கை தோள்⋆
மிடைவதும்⋆ அசுரர்க்கு வெம் போர்களே⋆

கடைவதும்⋆ கடலுள் அமுதம்⋆ என் மனம்
    உடைவதும்⋆ அவற்கே ஒருங்காகவே (6)

ஆகம் சேர்⋆ நரசிங்கம் அதாகி⋆ ஓர்
    ஆகம் வள்ளுகிரால்⋆ பிளந்தான் உறை⋆
மாக வைகுந்தம்⋆ காண்பதற்கு⋆ என் மனம்
    ஏகம் எண்ணும்⋆ இராப்பகல் இன்றியே (7)

இன்றிப் போக⋆ இரு வினையும் கெடுத்து⋆
    ஒன்றி யாக்கை புகாமை⋆ உய்யக்கொள்வான்⋆
நின்ற வேங்கடம்⋆ நீள் நிலத்துள்ளது
    சென்று தேவர்கள்⋆ கை தொழுவார்களே (8)

தொழுது மா மலர்⋆ நீர் சுடர் தூபம் கொண்டு⋆
    எழுதும் என்னுமிது⋆ மிகை ஆதலில்⋆
பழுதில் தொல் புகழ்ப்⋆ பாம்பணைப் பள்ளியாய்⋆
    தழுவுமாறறியேன்⋆ உன தாள்களே (9)

தாள தாமரையான்⋆ உனதுந்தியான்⋆
    வாள் கொள் நீள் மழுவாளி⋆ உன் ஆகத்தான்⋆
ஆளராய் த்தொழுவாரும்⋆ அமரர்கள்⋆
    நாளும் என் புகழ்கோ⋆ உன சீலமே (10)

‡சீலம் எல்லையிலான்⋆ அடிமேல்⋆ அணி
    கோலனீள்⋆ குருகூர்ச் சடகோபன்⋆ சொல்
மாலை ஆயிரத்துள்⋆ இவை பத்தினின்
    பாலர்⋆ வைகுந்தம் ஏறுதல்⋆ பான்மையே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ மையார் ‖

## எம்பெருமானைக் காண விரும்பி அழைத்து தாம் விரும்பிய வண்ணமே கண்டு மகிழ்தல்

‡மையார் கருங்கண்ணி⋆ கமல மலர்மேல்
செய்யாள்⋆ திருமார்வினில் சேர்⋆ திருமாலே⋆
வெய்யார் சுடர் ஆழி⋆ சுரி சங்கம் ஏந்தும்
கையா⋆ உனைக் காணக்⋆ கருதும் என் கண்ணே (1)

கண்ணே உன்னைக்⋆ காணக் கருதி⋆ என் நெஞ்சம்
எண்ணே கொண்ட⋆ சிந்தையதாய் நின்றியம்பும்⋆
விண்ணோர் முனிவர்க்கென்றும்⋆ காண்பரியாயை⋆
நண்ணாதொழியேன் என்று⋆ நான் அழைப்பனே (2)

அழைக்கின்ற அடிநாயேன்⋆ நாய் கூழை வாலால்⋆
குழைக்கின்றது போல⋆ என்னுள்ளம் குழையும்⋆
மழைக்கன்று குன்றம் எடுத்து⋆ ஆநிரை காத்தாய்!
பிழைக்கின்றதருள் என்று⋆ பேதுறுவனே (3)

உறுவதிதுவென்று⋆ உனக்காள் பட்டு⋆ நின் கண்
பெறுவதெதுகொல் என்று⋆ பேதையேன் நெஞ்சம்⋆
மறுகல் செய்யும்⋆ வானவர் தானவர்க்கென்றும்⋆
அறிவதரிய⋆ அரியாய அம்மானே! (4)

அரியாய அம்மானை⋆ அமரர் பிரானை⋆
பெரியானைப்⋆ பிரமனை முன் படைத்தானை⋆
வரி வாள் அரவினணைப்⋆ பள்ளி கொள்கின்ற⋆
கரியான் கழல் காணக்⋆ கருதும் கருத்தே (5)

கருத்தே! உன்னைக்⋆ காணக் கருதி⋆ என் நெஞ்சத்-
திருத்தாக இருத்தினேன்⋆ தேவர்கட்கெல்லாம்⋆

விருத்தா விளங்கும் சுடர்ச்சோதி⋆ உயரத்-
தொருத்தா⋆ உனையுள்ளும்⋆ என்னுள்ளம் உகந்தே (6)

உகந்தே உன்னை⋆ உள்ளும் என்னுள்ளத்து⋆ அகம்பால்
அகந்தான் அமர்ந்தே⋆ இடம் கொண்ட அமலா⋆
மிகுந்தானவன் மார்வகலம்⋆ இரு கூறா
நகந்தாய்⋆ நரசிங்கம் அதாய உருவே! (7)

உருவாகிய⋆ ஆறு சமயங்கட்கெல்லாம்⋆
பொருவாகி நின்றான்⋆ அவன் எல்லாப் பொருட்கும்⋆
அருவாகிய ஆதியைத்⋆ தேவர்கட்கெல்லாம்⋆
கருவாகிய கண்ணனைக்⋆ கண்டு கொண்டேனே (8)

கண்டு கொண்டு⋆ என் கண்ணிணை ஆரக் களித்து⋆
பண்டை வினையாயின⋆ பற்றோடறுத்து⋆
தொண்டர்க்கமுதுண்ணச்⋆ சொன்மாலைகள் சொன்னேன்⋆
அண்டத்தமரர் பெருமான்!⋆ அடியேனே (9)

அடியான் இவன் என்று⋆ எனக்கார் அருள் செய்யும்
நெடியானை⋆ நிறை புகழ் அஞ்சிறைப்⋆ புள்ளின்
கொடியானை⋆ குன்றாமல்⋆ உலகம் அளந்த
அடியானை⋆ அடைந்தடியேன்⋆ உய்ந்தவாறே! (10)

‡ஆறா மதயானை⋆ அடர்த்தவன் தன்னை⋆
சேறார் வயல்⋆ தென் குருகூர்ச் சடகோபன்⋆
நூறே சொன்ன⋆ ஓர் ஆயிரத்துள் இப்பத்தும்⋆
ஏறே தரும்⋆ வானவர் தம் இன்னுயிர்க்கே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ன்னுயிர்ச்சேவல் ॥

எம்பெருமானை நினைவுட்டும் பெருள்களால் தலைவி தளர்ந்தமை கூறுதல்

‡ இன்னுயிர்ச் சேவலும் நீரும் கூவிக்கொண்டு⋆ இங்கெத்தனை⋆
என்னுயிர் நோவ மிழற்றேன்மின்⋆ குயில் பேடைகாள்⋆
என்னுயிர்க் கண்ண பிரானை⋆ நீர் வரக் கூவுகிலீர்⋆
என்னுயிர் கூவிக் கொடுப்பார்க்கும்⋆ இத்தனை வேண்டுமோ (1)

இத்தனை வேண்டுவதன்றந்தோ!⋆ அன்றில் பேடைகாள்⋆
எத்தனை நீரும் நும் சேவலும்⋆ கரைந்தேங்குதிர்⋆
வித்தகன் கோவிந்தன்⋆ மெய்யன் அல்லன் ஒருவர்க்கும்⋆
அத்தனையாம் இனி⋆ என் உயிர் அவன் கையதே (2)

அவன் கையதே எனதாருயிர்⋆ அன்றில் பேடைகாள்⋆
எவன் சொல்லி நீர் குடைந்தாடுதிர்⋆ புடை சூழவே⋆
தவம் செய்தில்லா⋆ வினையாட்டியேன் உயிர் இங்குண்டோ⋆
எவன் சொல்லி நிற்றும்⋆ நும் ஏங்கு கூக்குரல் கேட்டுமே (3)

கூக்குரல் கேட்டும்⋆ நம் கண்ணன் மாயன் வெளிப்படான்⋆
மேற்கிளை கொள்ளேன்மின்⋆ நீரும் சேவலும் கோழிகாள்⋆
வாக்கும் மனமும்⋆ கருமமும் நமக்காங்கதே⋆
ஆக்கையும் ஆவியும்⋆ அந்தரம் நின்றுழலுமே (4)

அந்தரம் நின்றுழல்கின்ற⋆ யானுடைப் பூவைகாள்⋆
நும் திரத்தேதும் இடையில்லை⋆ குழறேன்மினோ⋆
இந்திர ஞாலங்கள் காட்டி⋆ இவ்வேழுலகும் கொண்ட⋆
நம் திரு மார்பன்⋆ நம்மாவி உண்ண நன்கெண்ணினான் (5)

நன்கெண்ணி நான் வளர்த்த⋆ சிறு கிளிப் பைதலே⋆
இன் குரல் நீ மிழற்றேல்⋆ என்னாருயிர்க் காகுத்தன்⋆

நின் செய்ய வாயொக்கும் வாயன்⋆ கண்ணன் கை காலினன்⋆
நின் பசும் சாம நிறத்தன்⋆ கூட்டுண்டு நீங்கினான் (6)

கூட்டுண்டு நீங்கிய⋆ கோலத் தாமரை கண் செவ்வாய்⋆
வாட்டம் இலென் கரு மாணிக்கம்⋆ கண்ணன் மாயன் போல்⋆
கோட்டிய வில்லொடு⋆ மின்னு மேகக் குழாங்கள்காள்⋆
காட்டேன்மின் நும்முரு⋆ என்னுயிர்க்கது காலனே (7)

உயிர்க்கது காலன் என்று⋆ உம்மை யான் இரந்தேற்கு⋆ நீர்
குயில் பைதல்காள்⋆ கண்ணன் நாமமே குழறிக் கொன்றீர்⋆
தயிர்ப் பழஞ்சோற்றொடு⋆ பால் அடிசிலும் தந்து⋆ சொல்
பயிற்றிய நல் வளம் ஊட்டினீர்⋆ பண்புடையீரே! (8)

பண்புடை வண்டொடு தும்பிகாள்⋆ பண் மிழற்றேன்மின்⋆
புண் புரை வேல் கொடு⋆ குத்தால் ஒக்கும் நும் இன் குரல்
தண் பெரு நீர்த் தடம் தாமரை⋆ மலர்ந்தால் ஒக்கும்
கண் பெரும் கண்ணன்⋆ நம்மாவியுண்டெழ நண்ணினான் (9)

எழ நண்ணி நாமும்⋆ நம் வான நாடனோடொன்றினோம்⋆
பழன நன்னாரைக் குழாங்கள்காள்⋆ பயின்றென்னினி⋆
இழை நல்லவாக்கையும்⋆ பையவே புயக்கற்றது⋆
தழை நல்ல இன்பம் தலைப்பெய்து⋆ எங்கும் தழைக்கவே (10)

‡ இன்பம் தலைப்பெய்தெங்கும் தழைத்த⋆ பல்லூழிக்குத்⋆
தண் புகழ் ஏத்தத்⋆ தனக்கருள் செய்த மாயனைத்⋆
தென் குருகூர்ச் சடகோபன்⋆ சொல்லாயிரத்துள் இவை⋆
ஒன்பதோடொன்றுக்கும்⋆ மூவுலகும் உருகுமே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ உருகுமால் ॥

ஆழ்வார் எம்பெருமானது சீரைத் துயரத்துடன் கூறுதல்

‡உருகுமால் நெஞ்சம்⋆ உயிரின் பரமன்றி⋆
பெருகுமால் வேட்கையும்⋆ என் செய்கேன் தொண்டனேன்⋆
தெருவெல்லாம் காவி கமழ்⋆ திருக்காட்கரை⋆
மருவிய மாயன் தன்⋆ மாயம் நினைதொறே (1)

நினைதொறும் சொல்லுந்தொறும்⋆ நெஞ்சிடிந்துகும்⋆
வினைகொள் சீர் பாடிலும்⋆ வேம் எனதாருயிர்⋆
சுனைகொள் பூஞ்சோலைத்⋆ தென் காட்கரையென்னப்பா⋆
நினைகிலேன் நான் உனக்கு⋆ ஆட்செய்யும் நீர்மையே (2)

நீர்மையால் நெஞ்சம்⋆ வஞ்சித்துப் புகுந்து⋆ என்னை
ஈர்மைசெய்து⋆ என்னுயிராய் என்னுயிர் உண்டான்⋆
சீர் மல்கு சோலைத்⋆ தென் காட்கரையென்னப்பன்⋆
கார் முகில் வண்ணன் தன்⋆ கள்வம் அறிகிலேன் (3)

அறிகிலேன் தன்னுள்⋆ அனைத்துலகம் நிற்க
நெறிமையால் தானும்⋆ அவற்றுள் நிற்கும் பிரான்⋆
வெறி கமழ் சோலைத்⋆ தென் காட்கரை என்னப்பன்⋆
சிறியவென்னாருயிர் உண்ட⋆ திருவருளே (4)

திருவருள் செய்பவன் போல⋆ என்னுள் புகுந்து⋆
உருவமும் ஆருயிரும்⋆ உடனே உண்டான்⋆
திருவளர் சோலைத்⋆ தென் காட்கரையென்னப்பன்⋆
கரு வளர் மேனி⋆ என் கண்ணன் கள்வங்களே (5)

என் கண்ணன் கள்வம்⋆ எனக்குச் செம்மாய் நிற்கும்⋆
அங்கண்ணன் உண்ட⋆ என்னாருயிர்க்கோதிது⋆
புன்கண்மை எய்திப்⋆ புலம்பி இராப்பகல்⋆
என் கண்ணன் என்று⋆ அவன் காட்கரை ஏத்துமே (6)

காட்கரை ஏத்தும்⋆ அதனுள் கண்ணா என்னும்⋆
வேட்கை நோய் கூர⋆ நினைந்து கரைந்துகும்⋆
ஆட்கொள்வான் ஒத்து⋆ என்னுயிர் உண்ட மாயனால்⋆
கோள் குறைபட்டது⋆ என்னாருயிர் கோள் உண்டே (7)

கோள் உண்டான் அன்றி வந்து⋆ என்னுயிர் தான் உண்டான்⋆
நாளு நாள் வந்து⋆ என்னை முற்றவும் தான் உண்டான்⋆
காள நீர் மேகத்⋆ தென் காட்கரை என்னப்பற்கு
ஆள் அன்றே பட்டது⋆ எனாருயிர் பட்டதே (8)

ஆருயிர் பட்டது⋆ எனதுயிர் பட்டது⋆
பேர் இதழ்த் தாமரைக் கண்⋆ கனி வாயதோர்⋆
கார் எழில் மேகத்⋆ தென் காட்கரை கோயில் கொள்
சீர் எழில் நால் தடந்தோள்⋆ தெய்வ வாரிக்கே (9)

வாரிக்கொண்டு⋆ உன்னை விழுங்குவன் காணில் என்று⋆
ஆர்வுற்ற என்னை ஒழிய⋆ என்னின் முன்னம்
பாரித்து⋆ தான் என்னை⋆ முற்றப் பருகினான்⋆
கார் ஒக்கும்⋆ காட்கரைப்பன் கடியனே (10)

‡கடியனாய்க் கஞ்சனைக்⋆ கொன்ற பிரான் தன்னை⋆
கொடி மதிள் தென் குருகூர்ச்⋆ சடகோபன் சொல்⋆
வடிவமையாயிரத்து⋆ இப்பத்தினால் சன்மம்
முடிவெய்தி⋆ நாசம் கண்டீர்கள் எங்கானலே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ எங்கானல் ॥

எம்பெருமானது வடிவழகே பற்றுக்கோடாக தலைவி
திருமூழிக்களத்தேபறவைகளைத் தூதுவிடல்

‡ எங்கானல் அகங்கழிவாய்⋆ இரை தேர்ந்திங்கினிதமரும்⋆
செங்கால் மட நாராய்!⋆ திருமூழிக்களத்துறையும்⋆
கொங்கார் பூந் துழாய் முடி⋆ எங்குடக்கூத்தர்க்கென் தூதாய்⋆
நுங்கால்கள் என் தலைமேல்⋆ கெழுமீரோ நுமரோடே (1)

நுமரோடும் பிரியாதே⋆ நீரும் நும் சேவலுமாய்⋆
அமர் காதல் குருகினங்காள்⋆ அணி மூழிக்களத்துறையும்⋆
எமராலும் பழிப்புண்டு⋆ இங்கென் தம்மால் இழிப்புண்டு⋆
தமரோடங்குறைவார்க்குத்⋆ தக்கிலமே கேளீரே (2)

தக்கிலமே கேளீர்கள்⋆ தடம் புனல்வாய் இரை தேரும்⋆
கொக்கினங்காள் குருகினங்காள்!⋆ குளிர் மூழிக்களத்துறையும்⋆
செக்கமலத்தலர் போலும்⋆ கண் கை கால் செங்கனிவாய்⋆
அக்கமலத்திலை போலும்⋆ திருமேனி அடிகளுக்கே (3)

திருமேனி அடிகளுக்கு⋆ தீவினையேன் விடு தூதாய்⋆
திருமூழிக்களம் என்னும்⋆ செழு நகர்வாய் அணி முகில்காள்⋆
திருமேனி அவட்கருளீர்⋆ என்றக்கால் உம்மைத் தன்⋆
திருமேனி ஒளியகற்றித்⋆ தெளி விசும்பு கடியுமே (4)

தெளி விசும்பு கடிதோடித்⋆ தீ வளைத்து மின்னிலகும்⋆
ஒளி முகில்காள்!⋆ திருமூழிக்களத்துறையும் ஒண் சுடர்க்கு⋆
தெளி விசும்பு திருநாடாத்⋆ தீவினையேன் மனத்துறையும்⋆
துளி வார் கட்குழலார்க்கு⋆ என் தூதுரைத்தல் செப்புமினே (5)

தூதுரைத்தல் செப்புமின்கள்⋆ தூமொழி வாய் வண்டினங்காள்⋆
போதிரைத்து மது நுகரும்⋆ பொழில் மூழிக் களத்துறையும்⋆

மாதரைத் தம் மார்வகத்தே⋆ வைத்தார்க்கென் வாய் மாற்றம்⋆
தூதுரைத்தல் செப்புதிரேல்⋆ சுடர் வளையும் கலையுமே (6)

சுடர் வளையும் கலையும் கொண்டு⋆ அருவினையேன் தோள் துறந்த⋆
படர் புகழான்⋆ திருமூழிக்களத்துறையும் பங்கயக்கண்⋆
சுடர் பவள வாயனைக் கண்டு⋆ ஒருநாள் ஓர் தூய் மாற்றம்⋆
படர் பொழில்வாய்க் குருகினங்காள்!⋆ எனக்கொன்று பணியீரே (7)

எனக்கொன்று பணியீர்கள்⋆ இரும் பொழில்வாய் இரை தேர்ந்து⋆
மனக்கின்பம் பட மேவும்⋆ வண்டினங்காள்! தும்பிகாள்⋆
கனக்கொள் திண் மதிள் புடை சூழ்⋆ திருமூழிக் களத்துறையும்⋆
புனல்கொள் காயா மேனிப்⋆ பூந் துழாய் முடியார்க்கே (8)

பூந் துழாய் முடியார்க்குப்⋆ பொன்னாழி கையார்க்கு⋆
ஏந்து நீர் இளம் குருகே!⋆ திருமூழிக் களத்தார்க்கு⋆
ஏந்து பூண் முலைப் பயந்து⋆ என்னிணை மலர்க் கண் நீர் ததும்ப⋆
தாம் தம்மைக்கொண்டகல்தல்⋆ தகவன்றென்றுரையீரே (9)

தகவன்றென்றுரையீர்கள்⋆ தடம் புனல்வாய் இரை தேர்ந்து⋆
மிகவின்பம் பட மேவும்⋆ மென்னடைய அன்னங்காள்⋆
மிக மேனி மெலிவெய்தி⋆ மேகலையும் ஈடழிந்து⋆ என்
அகமேனி ஒழியாமே⋆ திருமூழிக் களத்தார்க்கே (10)

‡ ஒழிவின்றி திருமூழிக்களத்துறையும்⋆ ஒண் சுடரை⋆
ஒழிவில்லா அணி மழலைக்⋆ கிளிமொழியாள் அலற்றிய சொல்⋆
வழுவில்லா வண் குருகூர்⋆ சடகோபன் வாய்ந்துரைத்த⋆
அழிவில்லா ஆயிரத்திப் பத்தும்⋆ நோய் அறுக்குமே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அறுக்கும் வினை ॥

தூதர் மீளும் அளவும் தனிமை பொறாத தலைவி தலைவன் நகரான திருநாவாய் செல்ல நினைத்தல்

‡ அறுக்கும் வினையாயின⋆ ஆகத்தவனை⋆
நிறுத்தும் மனத்தொன்றிய⋆ சிந்தையினார்க்கு⋆
வெறித் தண் மலர் சோலைகள் சூழ்⋆ திருநாவாய்⋆
குறுக்கும் வகை உண்டுகொலோ⋆ கொடியேற்கே (1)

கொடியேர் இடைக்⋆ கோகனகத்தவள் கேள்வன்⋆
வடி வேல் தடங்கண்⋆ மடப் பின்னை மணாளன்⋆
நெடியான் உறை சோலைகள் சூழ்⋆ திருநாவாய்⋆
அடியேன் அணுகப்பெறு நாள்⋆ எவைகொலோ! (2)

எவைகொல் அணுகப் பெறுநாள்⋆ என்றெப்போதும்⋆
கவையில் மனம் இன்றி⋆ கண்ணீர்கள் கலுழ்வன்⋆
நவையில் திருநாரணன் சேர்⋆ திருநாவாய்⋆
அவையுள் புகலாவதோர்⋆ நாள் அறியேனே (3)

நாளேல் அறியேன்⋆ எனக்குள்ளன⋆ நானும்
மீளா அடிமைப்⋆ பணி செய்யப் புகுந்தேன்⋆
நீளார் மலர் சோலைகள் சூழ்⋆ திருநாவாய்⋆
வாளேய் தடங்கண்⋆ மடப் பின்னை மணாளா! (4)

மணாளன் மலர் மங்கைக்கும்⋆ மண் மடந்தைக்கும்⋆
கண்ணாளன் உலகத்துயிர்⋆ தேவர்கட்கெல்லாம்⋆
விண்ணாளன் விரும்பியுறையும்⋆ திருநாவாய்⋆
கண்ணாரக் களிக்கின்றது⋆ இங்கென்றுகொல் கண்டே (5)

கண்டே களிக்கின்றது⋆ இங்கென்றுகொல் கண்கள்⋆
தொண்டே உனக்காய் ஒழிந்தேன்⋆ துரிசின்றி⋆

வண்டார் மலர்ச் சோலைகள் சூழ்⋆ திருநாவாய்⋆
    கொண்டே உறைகின்ற⋆ எங்கோவலர் கோவே (6)

கோவாகிய⋆ மா வலியை நிலம் கொண்டாய்⋆
    தேவாசுரம் செற்றவனே!⋆ திருமாலே⋆
நாவாய் உறைகின்ற⋆ என் நாரண நம்பீ⋆
    ஆவா அடியான்⋆ இவன் என்றருளாயே (7)

அருளாதொழிவாய்⋆ அருள் செய்து⋆ அடியேனைப்
    பொருளாக்கி⋆ உன் பொன்னடிக் கீழ்ப் புக வைப்பாய்⋆
மருளேயின்றி⋆ உன்னை என்னெஞ்சத்திருத்தும்⋆
    தெருளே தரு⋆ தென் திருநாவாய் என் தேவே! (8)

தேவர் முனிவர்க்கென்றும்⋆ காண்டற்கரியன்⋆
    மூவர் முதல்வன்⋆ ஒரு மூவுலகாளி⋆
தேவன் விரும்பியுறையும்⋆ திருநாவாய்⋆
    யாவர் அணுகப் பெறுவார்⋆ இனியந்தோ! (9)

அந்தோ! அணுகப் பெறுநாள்⋆ என்றெப்போதும்⋆
    சிந்தை கலங்கித்⋆ திருமால் என்றழைப்பன்⋆
கொந்தார் மலர் சோலைகள் சுழ்⋆ திருநாவாய்⋆
    வந்தே உறைகின்ற⋆ எம்மா மணி வண்ணா! (10)

‡ வண்ணம் மணி மாட⋆ நன்னாவாய் உள்ளானைத்⋆
    திண்ணம் மதிள்⋆ தென் குருகூர்ச் சடகோபன்⋆
பண்ணார் தமிழ்⋆ ஆயிரத்திப் பத்தும் வல்லார்⋆
    மண்ணாண்டு⋆ மணம் கமழ்வர் மல்லிகையே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மல்லிகை கமழ் ॥

## மாலைப் பொழுது கண்டு தலைவி இரங்கிக் கூறுதல்

‡ மல்லிகை கமழ் தென்றல் ஈரும் ஆலோ!⋆
வண் குறிஞ்சி இசை தவழும் ஆலோ!⋆
செல் கதிர் மாலையும் மயக்கும் ஆலோ!⋆
செக்கர் நன்மேகங்கள் சிதைக்கும் ஆலோ!⋆
அல்லியந் தாமரைக் கண்ணன் எம்மான்!⋆
ஆயர்கள் ஏறரியேறெம் மாயோன்⋆
புல்லிய முலைகளும் தோளும் கொண்டு
புகலிடம் அறிகிலம் தமியம் ஆலோ! (1)

புகலிடம் அறிகிலம் தமியம் ஆலோ!
புலம்புறு மணி தென்றல் ஆம்பல் ஆலோ!⋆
பகல் அடு மாலை வண் சாந்தம் ஆலோ!⋆
பஞ்சமம் முல்லை தண் வாடை ஆலோ!⋆
அகல் இடம் படைத்திடந்துண்டுமிழ்ந்து
அளந்து⋆ எங்கும் அளிக்கின்ற ஆயன் மாயோன்⋆
இகலிடத்தசுரர்கள் கூற்றம் வாரான்⋆
இனியிருந்தென்னுயிர் காக்கும் ஆறென் (2)

இனியிருந்தென்னுயிர் காக்கும் ஆறென்⋆
இணை முலை நமுக நுண்ணிடை நுடங்க⋆
துனியிரும் கலவி செய்தாகம் தோய்ந்து⋆
துறந்தெம்மை இட்டகல் கண்ணன் கள்வன்⋆
தனியிளம் சிங்கம் எம்மாயன் வாரான்⋆
தாமரைக் கண்ணும் செவ்வாயும்⋆ நீலப்
பனியிரும் குழல்களும் நான்கு தோளும்⋆
பாவியேன் மனத்தே நின்றீரும் ஆலோ! (3)

பாவியேன் மனத்தே நின்றீரும் ஆலோ!⋆
வாடை தண் வாடை வெவ்வாடை ஆலோ!⋆
மேவு தண் மதியம் வெம் மதியம் ஆலோ!⋆
மென் மலர்ப் பள்ளி வெம் பள்ளி ஆலோ!⋆
தூவியம் புள்ளுடைத் தெய்வ வண்டு
துதைந்த⋆ எம் பெண்மையம் பூவிதாலோ!⋆
ஆவியின் பரமல்ல அகைகள் ஆலோ!⋆
யாமுடை நெஞ்சமும் துணையன்றாலோ! (4)

யாமுடை நெஞ்சமும் துணை அன்றாலோ!⋆
ஆ புகும்மாலையும் ஆகின்றாலோ!⋆
யாமுடை ஆயன் தன் மனம் கல்லாலோ!⋆
அவனுடைத் தீங்குழல் ஈரும் ஆலோ!⋆
யாமுடைத் துணையென்னும் தோழிமாரும்⋆
எம்மின் முன் அவனுக்கு மாய்வர் ஆலோ!⋆
யாமுடை ஆருயிர் காக்குமாறென்
அவனுடை அருள் பெறும்போதரிதே! (5)

அவனுடை அருள் பெறும் போதரிதால்⋆
அவ்வருள் அல்லன அருளும் அல்ல⋆
அவனருள் பெறும் அளவாவி நில்லாது⋆
அடு பகல் மாலையும் நெஞ்சும் காணேன்⋆
சிவனொடு பிரமன் வண் திருமடந்தை⋆
சேர் திருவாகம் எம்மாவியீரும்⋆
எவம் இனிப் புகும் இடம் எவன் செய்கேனோ
ஆருக்கென் சொல்லுகேன் அன்னைமீர்காள்! (6)

ஆருக்கென் சொல்லுகேன் அன்னைமீர்காள்!⋆
ஆருயிர் அளவன்றிக்கூர் தண் வாடை⋆
கார் ஒக்கும் மேனி நம் கண்ணன் கள்வம்⋆
கவர்ந்த அத்தனி நெஞ்சம் அவங்கண் அஃதே⋆
சீர் உற்ற அகில் புகையாழ் நரம்பு⋆
பஞ்சமம் தண் பசும் சாந்தணைந்து⋆

போர் உற்ற வாடை தண் மல்லிகைப் பூப்⋆
புது மணம் முகந்து கொண்டெறியும் ஆலோ! (7)

புது மணம் முகந்து கொண்டெறியும் ஆலோ!⋆
பொங்கிள வாடை புன் செக்கர் ஆலோ!⋆
அது மணந்தகன்ற நம் கண்ணன் கள்வம்⋆
கண்ணினில் கொடிதினியதனில் உம்பர்⋆
மது மண மல்லிகை மந்தக் கோவை⋆
வண் பசும் சாந்தினில் பஞ்சமம் வைத்து⋆
அது மணந்தின்னருள் ஆய்ச்சியர்க்கே⋆
ஊதும் அத்தீங்குழற்கே உய்யேன் நான் (8)

ஊதும் அத்தீங்குழற்கே உய்யேன் நான்⋆
அது மொழிந்திடை இடைத்தன் செய் கோலத்⋆
தூது செய் கண்கள் கொண்டொன்று பேசித்⋆
தூ மொழி இசைகள் கொண்டொன்று நோக்கி⋆
பேதுறு முகம் செய்து நொந்து நொந்து⋆
பேதை நெஞ்சறவறப் பாடும் பாட்டை⋆
யாதும் ஒன்றறிகிலம் அம்ம அம்ம!⋆
மாலையும் வந்தது மாயன் வாரான் (9)

மாலையும் வந்தது மாயன் வாரான்⋆
மா மணி புலம்ப வல்லேறணைந்த⋆
கோல நன்னாகுகள் உகளும் ஆலோ!
கொடியென குழல்களும் குழறும் ஆலோ!⋆
வால் ஒளி வளர் முல்லை கருமுகைகள்⋆
மல்லிகை அலம்பி வண்டாலும் ஆலோ!⋆
வேலையும் விசும்பில் விண்டலறும் ஆலோ!⋆
என் சொல்லி உய்வன் இங்கவனை விட்டே (10)

‡ அவனை விட்டகன்றுயிர் ஆற்றகில்லா⋆
அணியிழை ஆய்ச்சியர் மாலைப் பூசல்⋆
அவனை விட்டகல்வதற்கே இரங்கி⋆
அணி குருகூர் சடகோபன் மாறன்⋆

அவனியுண்டுமிழ்ந்தவன் மேல் உரைத்த⋆
    ஆயிரத்துள் இவை பத்தும் கொண்டு⋆
அவனியுள் அலற்றி நின்றுய்ம்மின் தொண்டீர்!⋆
    அச்சொன்ன மாலை நண்ணித் தொழுதே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மாலை நண்ணி ॥

திருக்கண்ணபுரம் சேருமாறு பிறர்க்கு உபதேசித்தல்

‡மாலை நண்ணித்⋆ தொழுதெழுமினோ வினைகெட⋆
காலை மாலை⋆ கமல மலர் இட்டு நீர்⋆
வேலை மோதும் மதிள் சூழ்⋆ திருக்கண்ண புரத்து⋆
ஆலின்மேலால் அமர்ந்தான்⋆ அடி இணைகளே (1)

கள்ளவிழும் மலர் இட்டு⋆ நீர் இறைஞ்சுமின்⋆
நள்ளி சேரும் வயல் சூழ்⋆ கிடங்கின் புடை⋆
வெள்ளியேய்ந்த மதிள் சூழ்⋆ திருக்கண்ண புரம்
உள்ளி⋆ நாளும் தொழுதெழுமினோ தொண்டரே! (2)

தொண்டர்! நுந்தம்⋆ துயர் போக நீர் ஏகமாய்⋆
விண்டு வாடா மலர் இட்டு⋆ நீர் இறைஞ்சுமின்⋆
வண்டு பாடும் பொழில் சூழ்⋆ திருக்கண்ண புரத்-
தண்ட வாணன்⋆ அமரர் பெருமானையே (3)

மானை நோக்கி⋆ மடப் பின்னை தன் கேள்வனை⋆
தேனை வாடா மலர் இட்டு⋆ நீர் இறைஞ்சுமின்⋆
வானை உந்தும் மதிள் சூழ்⋆ திருக்கண்ண புரம்⋆
தான் நயந்த பெருமான்⋆ சரணம் ஆகுமே (4)

சரணம் ஆகும்⋆ தன தாள் அடைந்தார்க்கெல்லாம்⋆
மரணம் ஆனால்⋆ வைகுந்தம் கொடுக்கும் பிரான்⋆
அரண் அமைந்த மதிள் சூழ்⋆ திருக்கண்ண புரத்-
தரணியாளன்⋆ தனதன்பர்க்கன்பாகுமே (5)

அன்பன் ஆகும்⋆ தன தாள் அடைந்தார்க்கெல்லாம்⋆
செம் பொனாகத்து⋆ அவுணன் உடல் கீண்டவன்⋆
நன் பொனேய்ந்த மதிள் சூழ்⋆ திருக்கண்ண புரத்-
தன்பன்⋆ நாளும் தன்⋆ மெய்யர்க்கு மெய்யனே (6)

மெய்யன் ஆகும்⋆ விரும்பித் தொழுவார்க்கெல்லாம்⋆
பொய்யன் ஆகும்⋆ புறமே தொழுவார்க்கெல்லாம்⋆
செய்யில் வாளையுகளும்⋆ திருக்கண்ண புரத்-
தையன்⋆ ஆகத்தணைப்பார்கட்கணியனே (7)

அணியன் ஆகும்⋆ தன தாள் அடைந்தார்க்கெல்லாம்⋆
பிணியும் சாரா⋆ பிறவி கெடுத்தாளும்⋆
மணி பொன் ஏய்ந்த மதிள் சூழ்⋆ திருக்கண்ண புரம்
பணிமின்⋆ நாளும் பரமேட்டி தன் பாதமே (8)

பாதம் நாளும்⋆ பணியத் தணியும் பிணி⋆
ஏதம் சாரா⋆ எனக்கேல் இனியென் குறை⋆
வேத நாவர் விரும்பும்⋆ திருக்கண்ண புரத்-
தாதியானை⋆ அடைந்தார்க்கல்லல் இல்லையே (9)

இல்லை அல்லல்⋆ எனக்கேல் இனியென் குறை⋆
அல்லி மாதர் அமரும்⋆ திருமார்பினன்⋆
கல்லில் ஏய்ந்த மதிள் சூழ்⋆ திருக்கண்ணபுரம்
சொல்ல⋆ நாளும் துயர் பாடு சாராவே (10)

‡பாடு சாரா⋆ வினை பற்றற வேண்டுவீர்⋆
மாடநீடு⋆ குருகூர்ச் சடகோபன்⋆ சொல்
பாடலான தமிழ்⋆ ஆயிரத்துள் இப்பத்தும்
பாடியாடி⋆ பணிமின் அவன் தாள்களே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தாளதாமரை ॥

## திருமோகூர்ப் பெருமானைச் சரணடைந்து தாம் பரமபதம் அடையக் கருதியதை ஆழ்வார் அருளிச் செய்தல்

‡ தாள தாமரைத்⋆ தடமணி வயல் திருமோகூர்⋆
நாளும் மேவி நன்கமர்ந்து நின்று⋆ அசுரரைத் தகர்க்கும்⋆
தோளும் நான்குடைச்⋆ சுரி குழல் கமலக் கண் கனிவாய்⋆
காள மேகத்தை அன்றி⋆ மற்றொன்றிலம் கதியே (1)

இலங்கதி மற்றொன்றெம்மைக்கும்⋆ ஈன் தண் துழாயின்⋆
அலங்கல் அங்கண்ணி⋆ ஆயிரம் பேர் உடை அம்மான்⋆
நலங்கொள் நான்மறை வாணர்கள் வாழ்⋆ திருமோகூர்⋆
நலங்கழல் அவன் அடி நிழல்⋆ தடமன்றி யாமே (2)

அன்றியாம் ஒரு புகலிடம்⋆ இலம் என்றென்றலற்றி⋆
நின்று நான்முகன் அரனொடு⋆ தேவர்கள் நாட⋆
வென்றிம் மூவுலகளித்துழல்வான்⋆ திருமோகூர்⋆
நன்று நாம் இனி நணுகுதும்⋆ நமதிடர் கெடவே (3)

இடர் கெட எம்மைப் போந்தளியாய்⋆ என்றென்றேத்தி⋆
சுடர் கொள் சோதியைத்⋆ தேவரும் முனிவரும் தொடர⋆
படர் கொள் பாம்பணைப்⋆ பள்ளி கொள்வான் திருமோகூர்⋆
இடர் கெடவடி பரவுதும்⋆ தொண்டீர்! வம்மினே (4)

தொண்டீர்! வம்மின்⋆ நம்சுடரொளி ஒரு தனி முதல்வன்⋆
அண்ட மூவுலகளந்தவன்⋆ அணி திருமோகூர்⋆
எண் திசையும் ஈன் கரும்பொடு⋆ பொருஞ்செந்நெல் விளைய⋆
கொண்ட கோயிலை வலஞ்செய்து⋆ இங்காடுதும் கூத்தே (5)

கூத்தன் கோவலன்⋆ குதற்று வல்லசுரர்கள் கூற்றம்⋆
ஏத்தும் நங்கட்கும்⋆ அமரர்க்கும் முனிவர்க்கும் இன்பன்⋆

வாய்த்த தண் பணை வள வயல் சூழ்⋆ திருமோகூர்
 ஆத்தன்⋆ தாமரை அடியன்றி⋆ மற்றிலம் அரணே (6)

மற்றிலம் அரண்⋆ வான் பெரும் பாழ் தனி முதலாச்⋆
 சுற்று நீர் படைத்து⋆ அதன் வழித் தொன்முனி முதலா⋆
முற்றும் தேவரோடு⋆ உலகு செய்வான் திருமோகூர்⋆
 சுற்றி நாம் வலஞ்செய்ய⋆ நம் துயர் கெடும் கடிதே (7)

துயர் கெடும் கடிதடைந்து வந்து⋆ அடியவர் தொழுமின்⋆
 உயர் கொள் சோலை⋆ ஒண் தடம் அணியொளி திருமோகூர்⋆
பெயர்கள் ஆயிரம் உடைய⋆ வல்லரக்கர் புக்கழுந்த⋆
 தயரதன் பெற்ற⋆ மரகத மணித் தடத்தினையே (8)

மணித் தடத்தடி மலர்க்கண்கள்⋆ பவளச் செவ்வாய்⋆
 அணிக்கொள் நால் தடந்தோள்⋆ தெய்வம் அசுரரை என்றும்⋆
துணிக்கும் வல்லரட்டன்⋆ உறை பொழில் திருமோகூர்⋆
 நணித்து நம்முடை நல்லரண்⋆ நாம் அடைந்தனமே (9)

நாம் அடைந்த நல்லரண்⋆ நமக்கென்று நல்லமரர்⋆
 தீமை செய்யும் வல்லசுரரை⋆ அஞ்சிச் சென்றடைந்தால்⋆
காம ரூபம் கொண்டு⋆ எழுந்தளிப்பான் திருமோகூர்⋆
 நாமமே நவின்றெண்ணுமின்⋆ ஏத்துமின் நமர்காள்! (10)

‡ ஏத்துமின் நமர்காள்⋆ என்று தான் குடம் ஆடு
 கூத்தனை⋆ குருகூர்ச் சடகோபன்⋆ குற்றேவல்கள்⋆
வாய்த்த ஆயிரத்துள் இவை⋆ வண் திருமோகூர்க்கு⋆
 ஈத்த பத்திவை ஏத்த வல்லார்க்கு⋆ இடர் கெடுமே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கெடுமிடர் ॥

திருவனந்தபுரத்தைச் சேர்ந்தால் பரமபதத்திற்போலத் தொண்டு செய்யலாம் என்று கூறுதல்

‡ கெடும் இடர் ஆயவெல்லாம்⋆ கேசவாவென்ன⋆ நாளும்
கொடுவினை செய்யும்⋆ கூற்றின் தமர்களும் குறுக்கில்லார்⋆
விடம் உடை அரவில் பள்ளி⋆ விரும்பினான் சுரும்பலற்றும்⋆
தடம் உடை வயல்⋆ அனந்தபுர நகர் புகுதும் இன்றே (1)

இன்று போய்ப் புகுதிராகில்⋆ எழுமையும் ஏதம் சாரா⋆
குன்று நேர் மாடம் ஆடே⋆ குருந்து சேர் செருந்தி புன்னை⋆
மன்றலர் பொழில்⋆ அனந்தபுர நகர் மாயன் நாமம்⋆
ஒன்றும் ஓர் ஆயிரமாம்⋆ உள்ளுவார்க்கும்பர் ஊரே (2)

ஊரும்புட் கொடியும் அஃதே⋆ உலகெல்லாம் உண்டுமிழ்ந்தான்⋆
சேரும் தண் அனந்தபுரம்⋆ சிக்கெனப் புகுதிராகில்⋆
தீரும் நோய் வினைகள் எல்லாம்⋆ திண்ண நாம் அறியச் சொன்னோம்⋆
பேரும் ஓர் ஆயிரத்துள்⋆ ஒன்று நீர் பேசுமினே (3)

பேசுமின் கூசம் இன்றிப்⋆ பெரிய நீர் வேலை சூழ்ந்து⋆
வாசமே கமழும் சோலை⋆ வயல் அணி அனந்தபுரம்⋆
நேசம் செய்து உறைகின்றானை⋆ நெறிமையால் மலர்கள் தூவி⋆
பூசனை செய்கின்றார்கள்⋆ புண்ணியம் செய்தவாறே (3)

புண்ணியம் செய்து⋆ நல்ல புனலொடு மலர்கள் தூவி⋆
எண்ணுமின் எந்தை நாமம்⋆ இப்பிறப்பறுக்கும் அப்பால்⋆
திண்ணம் நாம் அறியச் சொன்னோம்⋆ செறி பொழில் அனந்தபுரத்து⋆
அண்ணலார் கமல பாதம்⋆ அணுகுவார் அமரர் ஆவார் (4)

அமரராய்த் திரிகின்றார்கட்கு⋆ ஆதிசேர் அனந்தபுரத்து⋆
அமரர் கோன் அர்ச்சிக்கின்று⋆ அங்ககப்பணி செய்வர் விண்ணோர்⋆

நமர்களோ! சொல்லக் கேள்மின்⋆ நாமும் போய் நணுகவேண்டும்⋆
குமரனார் தாதை⋆ துன்பம் துடைத்த கோவிந்தனாரே (5)

துடைத்த கோவிந்தனாரே⋆ உலகுயிர் தேவும் மற்றும்⋆
படைத்த எம் பரம மூர்த்தி⋆ பாம்பணைப் பள்ளி கொண்டான்⋆
மடைத்தலை வாளை பாயும்⋆ வயல் அணி அனந்தபுரம்⋆
கடைத்தலை சீய்க்கப்பெற்றால்⋆ கடுவினை களையலாமே (6)

கடுவினை களையலாகும்⋆ காமனைப் பயந்த காளை⋆
இடவகை கொண்டதென்பர்⋆ எழில் அணி அனந்தபுரம்⋆
படம் உடையரவில் பள்ளி⋆ பயின்றவன் பாதம் காண⋆
நடமினோ நமர்கள் உள்ளீர்!⋆ நாம் உமக்கறியச் சொன்னோம் (7)

நாம் உமக்கறியச் சொன்ன⋆ நாள்களும் நணியவான⋆
சேமம் நன்குடைத்துக் கண்டீர்⋆ செறி பொழில் அனந்தபுரம்⋆
தூமநல் விரை மலர்கள்⋆ துவளற ஆய்ந்து கொண்டு⋆
வாமனன் அடிக்கென்று எத்த⋆ மாய்ந்தறும் வினைகள் தாமே (8)

மாய்ந்தறும் வினைகள் தாமே⋆ மாதவா என்ன⋆ நாளும்
ஏய்ந்த பொன் மதிள்⋆ அனந்தபுர நகர் எந்தைக்கென்று⋆
சாந்தொடு விளக்கம் தூபம்⋆ தாமரை மலர்கள் நல்ல⋆
ஆய்ந்து கொண்டு ஏத்த வல்லார்⋆ அந்தமில் புகழினாரே (9)

‡ அந்தமில் புகழ்⋆ அனந்தபுர நகர் ஆதி தன்னை⋆
கொந்தலர் பொழில்⋆ குருகூர் மாறன் சொல் ஆயிரத்துள்⋆
ஐந்தினோடைந்தும் வல்லார்⋆ அணைவர் போய் அமர் உலகில்⋆
பைந்தொடி மடந்தையர் தம்⋆ வேய்மரு தோள் இணையே (10)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ வேய் மருதோள் ॥

ஆநிரை மேய்க்கச் சென்றால் பிரிவாற்றி இரோம் என்று போக்கைத் தவிர்க்குமாறு ஆய்ச்சியர் கண்ணனை வேண்டுதல்

‡ வேய் மரு தோள் இணை மெலியும் ஆலோ!⋆
    மெலிவும் என் தனிமையும் யாதும் நோக்கா⋆
காமரு குயில்களும் கூவும் ஆலோ!⋆
    கண மயில் அவை கலந்தாலும் ஆலோ⋆
ஆமருவின நிரை மேய்க்க நீ போக்கு⋆
    ஒரு பகல் ஆயிரம் ஊழியாலோ⋆
தாமரைக் கண்கள் கொண்டு ஈர்தியாலோ!⋆
    தகவிலை தகவிலையே நீ கண்ணா! (1)

தகவிலை தகவிலையே நீ கண்ணா!⋆
    தட முலை புணர்தொறும் புணர்ச்சிக்காராச்⋆
சுகவெள்ளம் விசும்பிறந்தறிவை மூழ்க்கச்
    சூழ்ந்து⋆ அது கனவென நீங்கி ஆங்கே⋆
அகவுயிர் அகம் அகந்தோறும் உள் புக்கு⋆
    ஆவியின் பரம் அல்ல வேட்கை அந்தோ⋆
மிக மிக இனி உன்னைப் பிரிவையாமால்⋆
    வீவன் நின் பசுநிரை மேய்க்கப் போக்கே (2)

வீவன்நின் பசு நிரை மேய்க்கப் போக்கு⋆
    வெவ்வுயிர் கொண்டெனதாவி வேமால்⋆
யாவரும் துணையில்லை யான் இருந்து⋆ உன்
    அஞ்சன மேனியை ஆட்டம் காணேன்⋆
போவதன்றொறு பகல் நீயகன்றால்⋆
    பொரு கயல் கண்ணிணை நீரும் நில்லா⋆
சாவதிவ்வாய்க்குலத் தாய்ச்சியோமாய்ப்
    பிறந்த⋆ இத்தொழுத்தையோம் தனிமை தானே (3)

தொழுத்தையோம் தனிமையும் துணை பிரிந்தார்
துயரமும்⋆ நினைகிலை கோவிந்தா⋆ நின்
தொழுத்தனில் பசுக்களையே விரும்பித்⋆
துறந்தெம்மை விட்டவை மேய்க்கப் போதி⋆
பழுத்த நல்லமுதின் இன்சாற்று வெள்ளம்⋆
பாவியேன் மனம் அகந்தோறும் உள்புக்-
கழுத்த⋆ நின் செங்கனி வாயின் கள்வப்
பணிமொழி⋆ நினைதொறும் ஆவி வேமால் (4)

பணிமொழி நினைதொறும் ஆவி வேமால்⋆
பகல் நிரை மேய்க்கிய போய கண்ணா!⋆
பிணியவிழ் மல்லிகை வாடை தூவப்⋆
பெரு மத மாலையும் வந்தின்றாலோ!⋆
மணி மிகு மார்பினில் முல்லைப் போது⋆ என்
வன முலை கமழ்வித்துன் வாய் அமுதம் தந்து⋆
அணி மிகு தாமரைக் கையை அந்தோ!⋆
அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய் (5)

அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய்⋆
ஆழியங்கண்ணா! உன் கோலப் பாதம்⋆
பிடித்தது நடுவுனக்கரிவையரும்
பலர் அதுநிற்க எம் பெண்மை ஆற்றோம்⋆
வடித்தடம் கண்ணிணை நீரும் நில்லா⋆
மனமும் நில்லா எமக்கது தந்நாலே⋆
வெடிப்பு நின் பசு நிரை மேய்க்கப் போக்கு⋆
வேம் எமதுயிர் அழல் மெழுகில் உக்கே (6)

வேம் எமதுயிர் அழல் மெழுகில் உக்கு⋆
வெள் வளை மேகலை கழன்று வீழ⋆
தூமலர்க் கண்ணிணை முத்தம் சோரத்⋆
துணை முலை பயந்தென தோள்கள் வாட⋆
மாமணி வண்ணா! உன் செங்கமல
வண்ணா⋆ மெல் மலர் அடி நோவ நீ போய்⋆

ஆமகிழ்ந்துகந்தவை மேய்க்கின்றுன்னோடு⋆
அசுரர்கள் தலைப்பெய்யில் எவன்கொல் ஆங்கே (7)

அசுரர்கள் தலைப்பெய்யில் எவன்கொல் ஆங்கென்று⋆
ஆழும் என்னார் உயிர் ஆன் பின் போகேல்⋆
கசிகையும் வேட்கையும் உள்கலந்து⋆
கலவியும் நலியும் எங்கை கழியேல்⋆
வசிசெயுன் தாமரைக் கண்ணும் வாயும்⋆
கைகளும் பீதக உடையும் காட்டி⋆
ஒசிசெய் நுண் இடை இளவாய்ச்சியர்⋆ நீ
உகக்கும் நல்லவரொடும் உழிதராயே (8)

உகக்கு நல்லவரொடும் உழிதந்து⋆ உந்தன்
திருவுள்ளம் இடர் கெடும்தோறும்⋆ நாங்கள்
வியக்க இன்புறுதும் எம் பெண்மை ஆற்றோம்⋆
எம் பெருமான்! பசு மேய்க்கப் போகேல்⋆
மிகப் பல அசுரர்கள் வேண்டுருவம் கொண்டு⋆
நின்றுழிதருவர் கஞ்சன் ஏவ⋆
அகப்படில் அவரொடும் நின்னொடு ஆங்கே⋆
அவத்தங்கள் விளையும் என் சொல் கொள் அந்தோ! (9)

அவத்தங்கள் விளையும் என் சொல் கொள் அந்தோ!⋆
அசுரர்கள் வன் கையர் கஞ்சன் ஏவ⋆
தவத்தவர் மறுக நின்றுழிதருவர்⋆
தனிமையும் பெரிதுனக்கிராமனையும்
உவர்த்தலை⋆ உடன் திரிகிலையும் என்றென்று
ஊடுற⋆ என்னுடை ஆவி வேமால்⋆
திவத்திலும் பசு நிரை மேய்ப்புவத்தி⋆
செங்கனி வாய் எங்கள் ஆயர் தேவே! (10)

‡ செங்கனி வாய் எங்கள் ஆயர் தேவு⋆ அத்
திருவடி திருவடிமேல்⋆ பொருநல்
சங்கணி துறைவன் வண் தென் குருகூர்⋆
வண் சடகோபன் சொல்லாயிரத்துள்⋆

மங்கையர் ஆய்ச்சியர் ஆய்ந்த மாலை⋆
அவனொடும் பிரிவதற்கிரங்கி⋆ தையல்
அங்கவன் பசு நிரை மேய்ப் பொழிப்பான்
உரைத்தன⋆ இவையும் பத்தவற்றின் சார்வே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ சார்வே தவநெறி ॥

ஆழ்வார் தாம் பெறக் கருதிய பக்தி பலித்தமையை அருளிச் செய்தல்

‡ சார்வே தவனெறிக்குத்⋆ தாமோதரன் தாள்கள்⋆
கார்மேக வண்ணன்⋆ கமல நயனத்தன்⋆
நீர் வானம் மண்ணெரி காலாய்⋆ நின்றநேமியான்⋆
பேர் வானவர்கள்⋆ பிதற்றும் பெருமையனே (1)

பெருமையனே வானத்திமையோர்க்கும்⋆ காண்டற்-
கருமையனே⋆ ஆகத்தணையாதார்க்கு⋆ என்றும்
திரு மெய் உறைகின்ற⋆ செங்கண் மால்⋆ நாளும்
இருமை வினை கடிந்து⋆ இங்கென்னை ஆள்கின்றானே (2)

ஆள்கின்றான் ஆழியான்⋆ ஆரால் குறைவுடையம்⋆
மீள்கின்றதில்லைப்⋆ பிறவித் துயர் கடிந்தோம்⋆
வாள் கெண்டை ஒண்கண்⋆ மடப் பின்னை தன் கேள்வன்⋆
தாள் கண்டு கொண்டு⋆ என் தலைமேல் புனைந்தேனே (3)

தலைமேல் புனைந்தேன்⋆ சரணங்கள்⋆ ஆலின்
இலைமேல் துயின்றான்⋆ இமையோர் வணங்க⋆
மலைமேல் தான் நின்று⋆ என் மனத்துள் இருந்தானை⋆
நிலை பேர்க்கல் ஆகாமை⋆ நிச்சித்திருந்தேனே (4)

நிச்சித்திருந்தேன்⋆ என் நெஞ்சம் கழியாமை⋆
கைச் சக்கரத்தண்ணல்⋆ கள்வம் பெரிதுடையன்⋆
மெச்சப்படான் பிறர்க்கு⋆ மெய்போலும் பொய் வல்லன்⋆
நச்சப்படும் நமக்கு⋆ நாகத் தணையானே (5)

நாகத்தணையானை⋆ நாள்தோறும் ஞானத்தால்⋆
ஆகத்தணைப்பார்க்கு⋆ அருள்செய்யும் அம்மானை⋆
மாகத்திள மதியம்⋆ சேரும் சடையானை⋆
பாகத்து வைத்தான் தன்⋆ பாதம் பணிந்தேனே (6)

பணி நெஞ்சே! நாளும்⋆ பரம பரம்பரனை⋆
 பிணி ஒன்றும் சாரா⋆ பிறவி கெடுத்தாளும்⋆
மணி நின்ற சோதி⋆ மதுசூதன் என்னம்மான்⋆
 அணி நின்ற செம்பொன்⋆ அடல் ஆழியானே (7)

ஆழியான் ஆழி⋆ அமரர்க்கும் அப்பாலான்⋆
 ஊழியான் ஊழி படைத்தான்⋆ நிரை மேய்த்தான்⋆
பாழியந் தோளால்⋆ வரை எடுத்தான் பாதங்கள்⋆
 வாழி என் நெஞ்சே!⋆ மறவாது வாழ்கண்டாய் (8)

கண்டேன் கமல மலர்ப் பாதம்⋆ காண்டலுமே⋆
 விண்டே ஒழிந்த⋆ வினையாயின எல்லாம்⋆
தொண்டே செய்தென்றும்⋆ தொழுது வழியொழுக⋆
 பண்டே பரமன் பணித்த⋆ பணிவகையே (9)

வகையால் மனம் ஒன்றி⋆ மாதவனை⋆ நாளும்
 புகையால் விளக்கால்⋆ புது மலரால் நீரால்⋆
திசைதோறமரர்கள்⋆ சென்றிறைஞ்ச நின்ற⋆
 தகையான் சரணம்⋆ தமர்கட்கோர் பற்றே (10)

‡ பற்றென்று பற்றிப்⋆ பரம பரம்பரனை⋆
 மல் திண்தோள் மாலை⋆ வழுதி வளநாடன்⋆
சொல் தொடையந்தாதி⋆ ஓர் ஆயிரத்துள் இப்பத்தும்⋆
 கற்றார்க்கோர் பற்றாகும்⋆ கண்ணன் கழல் இணையே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கண்ணன் கழலிணை ॥

பக்தி பண்ணும் வகைகளைத் தொகுத்துக் கூறல்

‡கண்ணன் கழல் இணை⋆ நண்ணும் மனம் உடையீர்⋆
எண்ணும் திருநாமம்⋆ திண்ணம் நாரணமே (1)

நாரணன் எம்மான்⋆ பார் அணங்காளன்⋆
வாரணம் தொலைத்த⋆ காரணன் தானே (2)

தானே உலகெல்லாம்⋆ தானே படைத்திடந்து⋆
தானே உண்டுமிழ்ந்து⋆ தானே ஆள்வானே (3)

ஆள்வான் ஆழி நீர்க்⋆ கோள்வாய் அரவணையான்⋆
தாள்வாய் மலரிட்டு⋆ நாள்வாய் நாடீரே (4)

நாடீர் நாள்தோறும்⋆ வாடா மலர் கொண்டு⋆
பாடீர் அவன் நாமம்⋆ வீடே பெறலாமே (5)

மேயான் வேங்கடம்⋆ காயா மலர் வண்ணன்⋆
பேயார் முலையுண்ட⋆ வாயான் மாதவனே (6)

மாதவன் என்றென்று⋆ ஓத வல்லீரேல்⋆
தீதொன்றும் அடையா⋆ ஏதம் சாராவே (7)

சாரா ஏதங்கள்⋆ நீரார் முகில் வண்ணன்⋆
பேர் ஆர் ஓதுவார்⋆ ஆரார் அமரரே (8)

அமரர்க்கரியானை⋆ தமர்கட்கெளியானை⋆
அமரத் தொழுவார்கட்கு⋆ அமரா வினைகளே (9)

வினைவல் இருள் என்னும்⋆ முனைகள் வெருவிப்போம்⋆
சுனை நல் மலரிட்டு⋆ நினைமின் நெடியானே (10)

‡நெடியான் அருள் சூடும்⋆ படியான் சடகோபன்⋆
நொடி ஆயிரத்திப் பத்து⋆ அடியார்க்கருள் பேறே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அருள் பெறுவார் ॥

தமக்குப் பேறு அளிக்கச் சமயம் பார்த்திருந்த பேரருளைப் பாராட்டி
ஆழ்வார் நெஞ்சுடன் கூறுதல்

‡அருள் பெறுவார் அடியார்⋆ தம் அடியனேற்கு⋆ ஆழியான்
அருள் தருவான் அமைகின்றான்⋆ அது நமது விதிவகையே⋆
இருள் தருமா ஞாலத்துள்⋆ இனிப் பிறவி யான் வேண்டேன்⋆
மருள் ஒழி நீ மட நெஞ்சே!⋆ வாட்டாற்றான் அடி வணங்கே (1)

வாட்டாற்றான் அடி வணங்கி⋆ மா ஞாலப் பிறப்பறுப்பான்⋆
கேட்டாயே மட நெஞ்சே!⋆ கேசவன் எம் பெருமானைப்⋆
பாட்டாய பல பாடிப்⋆ பழவினைகள் பற்றறுத்து⋆
நாட்டாரோடியல்வொழிந்து⋆ நாரணனை நண்ணினமே (2)

நண்ணினம் நாரயணனை⋆ நாமங்கள் பல சொல்லி⋆
மண்ணுலகில் வளம் மிக்க⋆ வாட்டாற்றான் வந்தின்று⋆
விண்ணுலகம் தருவானாய்⋆ விரைகின்றான் விதிவகையே⋆
எண்ணின வாறாகா⋆ இக்கருமங்கள் என் நெஞ்சே! (3)

என் நெஞ்சத்துள் இருந்திங்கிரும் தமிழ் நூல் இவை மொழிந்து⋆
வன்னெஞ்சத் திரணியனை⋆ மார்விடந்த வாட்டாற்றான்⋆
மன்னஞ்சப் பாரதத்துப்⋆ பாண்டவர்க்காப் படை தொட்டான்⋆
நல் நெஞ்சே! நம் பெருமான்⋆ நமக்கருள் தான் செய்வானே (4)

வான் ஏற வழி தந்த⋆ வாட்டாற்றான் பணிவகையே⋆
நான் ஏறப் பெறுகின்றேன்⋆ நரகத்தை நகு நெஞ்சே⋆
தேனேறு மலர்த் துளவம்⋆ திகழ் பாதன்⋆ செழும் பறவை
தான் ஏறித் திரிவான்⋆ தாள் இணை தன் தலைமேலே (5)

தலைமேல தாள் இணைகள்⋆ தாமரைக்கண் என் அம்மான்⋆
நிலைபேரான் என் நெஞ்சத்து⋆ எப்பொழுதும் எம்பெருமான்⋆

மலை மாடத்தரவணைமேல்⋆ வாட்டாற்றான் மத மிக்க⋆
கொலை யானை மருப்பொசித்தான்⋆ குரை கழல்கள் குறுகினமே (6)

குரை கழல்கள் குறுகினம்⋆ நம் கோவிந்தன் குடி கொண்டான்⋆
திரை குழுவு கடல் புடை சூழ்⋆ தென் நாட்டுத் திலதம் அன்ன⋆
வரை குழுவு மணி மாட⋆ வாட்டாற்றான் மலர் அடிமேல்⋆
விரை குழுவு நறும் துளவம்⋆ மெய்ந்நின்று கமழுமே (7)

மெய்ந்நின்று கமழ் துளவ⋆ விரையேறு திருமுடியன்⋆
கைந்நின்ற சக்கரத்தன்⋆ கருதும் இடம் பொருது புனல்⋆
மைந்நின்ற வரை போலும்⋆ திருவுருவ வாட்டாற்றாற்கு⋆
எந்நன்றி செய்தேனா⋆ என் நெஞ்சில் திகழவதுவே (8)

திகழ்கின்ற திருமார்பில்⋆ திருமங்கை தன்னோடும்⋆
திகழ்கின்ற திருமாலார்⋆ சேர்விடம் தண் வாட்டாறு⋆
புகழ்கின்ற புள்ளூர்தி⋆ போர் அரக்கர் குலம் கெடுத்தான்⋆
இகழ்வின்றி என் நெஞ்சத்தெப்பொழுதும் பிரியானே (9)

பிரியாதாட் செய்யென்று⋆ பிறப்பறுத்தாள் அறக் கொண்டான்⋆
அரியாகி இரணியனை⋆ ஆகம் கீண்டான் அன்று⋆
பெரியார்க்காட் பட்டக்கால்⋆ பெறாத பயன் பெறுமாறு⋆
வரி வாள் வாய் அரவணைமேல்⋆ வாட்டாற்றான் காட்டினனே (10)

‡காட்டித் தன் கனை கழல்கள்⋆ கடு நரகம் புகல் ஒழித்த⋆
வாட்டாற்றெம் பெருமானை⋆ வளங்குருகூர்ச் சடகோபன்⋆
பாட்டாய தமிழ் மாலை⋆ ஆயிரத்துள் இப்பத்தும்
கேட்டு⋆ ஆரார் வானவர்கள்⋆ செவிக்கினிய செஞ்சொல்லே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ செஞ்சொற்கவிகாள் ॥

ஆழ்வார் தமது மேனியின்மேல் எம்பெருமான் வைத்துள்ள
வாஞ்சையைப் பாராட்டிப் பேசுதல்

‡ செஞ்சொல் கவிகாள்! உயிர் காத்தாட்-
செய்ம்மின்⋆ திருமாலிருஞ்சோலை⋆
வஞ்சக் கள்வன் மா மாயன்⋆
மாயக் கவியாய் வந்து⋆ என்
நெஞ்சும் உயிரும் உள் கலந்து⋆
நின்றார் அறியா வண்ணம்⋆ என்
நெஞ்சும் உயிரும் அவையுண்டு⋆
தானே ஆகி நிறைந்தானே (1)

தானே ஆகி நிறைந்து⋆ எல்லா
உலகும் உயிரும் தானேயாய்⋆
தானே யான் என்பான் ஆகித்⋆
தன்னைத் தானே துதித்து⋆ எனக்குத்
தேனே பாலே கன்னலே
அமுதே⋆ திருமாலிருஞ்சோலை⋆
கோனே ஆகி நின்றொழிந்தான்⋆
என்னை முற்றும் உயிருண்டே (2)

என்னை முற்றும் உயிருண்டு⋆ என்
மாய ஆக்கை இதனுள் புக்கு⋆
என்னை முற்றும் தானேயாய்⋆
நின்ற மாய அம்மான் சேர்⋆
தென்னன் திருமாலிருஞ்சோலைத்⋆
திசை கை கூப்பிச் சேர்ந்த
யான்⋆ இன்னும் போவேனே கொலோ!⋆
என்கொல் அம்மான் திருவருளே (3)

என்கொல் அம்மான் திருவருள்கள்⋆
உலகும் உயிரும் தானேயாய்⋆
நங்கென்னுடலம் கைவிடான்⋆
ஞாலத்தூடே நடந்துழக்கி⋆
தென் கொள் திசைக்குத் திலதமாய்
நின்ற⋆ திருமாலிருஞ்சோலை⋆
நங்கள் குன்றம் கைவிடான்⋆
நண்ணா அசுரர் நலியவே (4)

நண்ணா அசுரர் நலிவெய்த⋆
நல்ல அமரர் பொலிவெய்த⋆
எண்ணாதனகள் எண்ணும்⋆ நல்
முனிவர் இன்பம் தலைசிறப்ப⋆
பண்ணார் பாடல் இன்கவிகள்⋆
யானாய்த் தன்னைத் தான் பாடி⋆
தென்னா என்னும் என்னம்மான்⋆
திருமாலிருஞ்சோலையானே (5)

திருமாலிருஞ்சோலை யானே
ஆகிச்⋆ செழு மூவுலகும்⋆ தன்
ஒருமா வயிற்றின் உள்ளே வைத்து⋆
ஊழி ஊழி தலையளிக்கும்⋆
திருமால் என்னை ஆளு மால்⋆
சிவனும் பிரமனும் காணாது⋆
அருமால் எய்தி அடி பரவ⋆
அருளை ஈந்த அம்மானே (6)

அருளை ஈ எனம்மானே!
என்னும்⋆ முக்கண் அம்மானும்⋆
தெருள் கொள் பிரமன் அம்மானும்⋆
தேவர் கோனும் தேவரும்⋆
இருள்கள் கடியும் முனிவரும்⋆
ஏத்தும் அம்மான் திருமலை⋆

மருள்கள் கடியும் மணிமலை⋆
 திருமாலிருஞ்சோலை மலையே (7)

‡ திருமாலிருஞ்சோலை மலையே⋆
 திருப்பாற்கடலே என் தலையே⋆
திருமால் வைகுந்தமே⋆ தண்
 திருவேங்கடமே எனதுடலே⋆
அருமா மாயத்தெனதுயிரே⋆
 மனமே வாக்கே கருமமே⋆
ஒருமா நொடியும் பிரியான்⋆ என்
 ஊழி முதல்வன் ஒருவனே (8)

ஊழி முதல்வன் ஒருவனே
 என்னும்⋆ ஒருவன் உலகெல்லாம்⋆
ஊழிதோறும் தன்னுள்ளே
 படைத்து காத்துக் கெடுத்துழலும்⋆
ஆழி வண்ணன் என் அம்மான்⋆
 அந்தண் திருமாலிருஞ்சோலை⋆
வாழி மனமே கைவிடேல்⋆
 உடலும் உயிரும் மங்கவொட்டே (9)

மங்கவொட்டுன் மா மாயை⋆ திருமாலிருஞ்சோலை மேய⋆
 நங்கள் கோனே! யானே நீ ஆகி என்னை அளித்தானே⋆
பொங்கைம் புலனும் பொறியைந்தும்⋆ கருமேந்திரியும் ஐம்பூதம்⋆
 இங்கிவ்வுயிர் ஏய் பிரகிருதி⋆ மானாங்கார மனங்களே (10)

‡ மானாங்கார மனம் கெட⋆ ஐவர் வன்கையர் மங்க⋆
 தானாங்கார மாய்ப்புக்குத்⋆ தானே தானே ஆனானைத்⋆
தேனாங்காரப் பொழில் குருகூர்⋆ சடகோபன் சொல்லாயிரத்துள்⋆
 மானாங்காரத்திவை பத்தும்⋆ திருமாலிருஞ்சோலை மலைக்கே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திருமாலிருஞ்சோலைமலை ॥

## எம்பெருமானது அருள் திறத்தைப் பேசுதல்

‡ திருமாலிருஞ்சோலை மலை⋆ என்றேன் என்ன⋆
திருமால் வந்து⋆ என் நெஞ்சு நிறையப் புகுந்தான்⋆
குரு மா மணியுந்து புனல்⋆ பொன்னித் தென்பால்⋆
திருமால் சென்று சேர்விடம்⋆ தென் திருப்பேரே (1)

பேரே உறைகின்ற பிரான்⋆ இன்று வந்து⋆
பேரேன் என்று⋆ என் நெஞ்சு நிறையப் புகுந்தான்⋆
கார் ஏழ் கடல் ஏழ்⋆ மலை ஏழ் உலகுண்டும்⋆
ஆரா வயிற்றானை⋆ அடங்கப் பிடித்தேனே (2)

பிடித்தேன் பிறவி கெடுத்தேன்⋆ பிணி சாரேன்⋆
மடித்தேன் மனை வாழ்க்கையுள்⋆ நிற்பதோர் மாயையை⋆
கொடிக் கோபுர மாடங்கள் சூழ்⋆ திருப்பேரான்⋆
அடிச் சேர்வதெனக்கு⋆ எளிதாயின வாறே! (3)

எளிதாயினவாறென்று⋆ என் கண்கள் களிப்பக்⋆
களிதாகிய சிந்தையனாய்க்⋆ களிக்கின்றேன்⋆
கிளி தாவிய சோலைகள் சூழ்⋆ திருப்பேரான்⋆
தெளிதாகிய⋆ சேண் விசும்பு தருவானே (4)

வானே தருவான்⋆ எனக்கா என்னோடொட்டி⋆
ஊனேய் குரம்பை⋆ இதனுள் புகுந்து⋆ இன்று
தானே தடுமாற்ற⋆ வினைகள் தவிர்த்தான்⋆
தேன் ஏய் பொழில்⋆ தென் திருப்பேர் நகரானே (5)

திருப்பேர் நகரான்⋆ திருமாலிருஞ்சோலைப்⋆
பொருப்பே உறைகின்ற பிரான்⋆ இன்று வந்து⋆
இருப்பேன் என்று⋆ என் நெஞ்சு நிறையப் புகுந்தான்⋆
விருப்பே பெற்று⋆ அமுதம் உண்டு களித்தேனே (6)

உண்டு களித்தேற்கு⋆ உம்பர் என் குறை⋆ மேலைத்
    தொண்டு களித்து⋆ அந்தி தொழும் சொல்லுப் பெற்றேன்⋆
வண்டு களிக்கும் பொழில் சூழ்⋆ திருப்பேரான்⋆
    கண்டு களிப்பக்⋆ கண்ணுள் நின்றகலானே (7)

கண்ணுள் நின்றகலான்⋆ கருத்தின்கண் பெரியன்⋆
    எண்ணில் நுண் பொருள்⋆ ஏழ் இசையின் சுவை தானே⋆
வண்ண நல் மணி மாடங்கள் சூழ்⋆ திருப்பேரான்⋆
    திண்ணம் என் மனத்துப்⋆ புகுந்தான் செறிந்தின்றே (8)

இன்றென்னைப் பொருளாக்கித்⋆ தன்னை என்னுள் வைத்தான்⋆
    அன்றென்னைப் புறம்போகப்⋆ புணர்த்ததென் செய்வான்⋆
குன்றென்னத் திகழ் மாடங்கள் சூழ்⋆ திருப்பேரான்⋆
    ஒன்றெனக்கருள் செய்ய⋆ உணர்த்தல் உற்றேனே (9)

‡ உற்றேன் உகந்து பணி செய்து⋆ உன் பாதம்
    பெற்றேன்⋆ ஈதே இன்னம்⋆ வேண்டுவதெந்தாய்⋆
கற்றார் மறைவாணர்கள் வாழ்⋆ திருப்பேராற்கு⋆
    அற்றார் அடியார் தமக்கு⋆ அல்லல் நில்லாவே (10)

‡ நில்லா அல்லல்⋆ நீள் வயல் சூழ் திருப்பேர்மேல்⋆
    நல்லார் பலர் வாழ்⋆ குருகூர்ச் சடகோபன்⋆
சொல்லார் தமிழ்⋆ ஆயிரத்துள் இவைபத்தும்
    வல்லார்⋆ தொண்டர் ஆள்வது⋆ சூழ் பொன் விசும்பே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ சூழ்விசும்பு ॥

திருநாடு செல்வாருக்கு நடைபெறும் உபசாரங்களைத் தாமே அனுபவித்துப் பேசுதல்

‡சூழ் விசும்பணி முகில்⋆ தூரியம் முழக்கின⋆
ஆழ் கடல் அலை திரைக்⋆ கை எடுத்தாடின⋆
ஏழ் பொழிலும்⋆ வளம் ஏந்திய என் அப்பன்⋆
வாழ் புகழ் நாரணன்⋆ தமரைக் கண்டுகந்தே (1)

நாரணன் தமரைக் கண்டுகந்து⋆ நன்னீர் முகில்⋆
பூரண பொற்குடம்⋆ பூரித்ததுயர் விண்ணில்⋆
நீர் அணி கடல்கள்⋆ நின்றார்த்தன⋆ நெடுவரைத்-
தோரணம் நிரைத்து⋆ எங்கும் தொழுதனர் உலகே (2)

தொழுதனர் உலகர்கள்⋆ தூபநல் மலர் மழை
பொழிவனர்⋆ பூமி அன்றளந்தவன் தமர் முன்னே⋆
எழுமின் என்றிருமருங்கிசைத்தனர்⋆ முனிவர்கள்⋆
வழியிது வைகுந்தற்கென்று⋆ வந்தெதிரே (3)

எதிர் எதிர் இமையவர்⋆ இருப்பிடம் வகுத்தனர்⋆
கதிர் அவர் அவர் அவர்⋆ கைந்நிரை காட்டினர்⋆
அதிர் குரல் முரசங்கள்⋆ அலை கடல் முழக்கொத்த⋆
மது விரி துழாய் முடி⋆ மாதவன் தமர்க்கே (4)

மாதவன் தமர் என்று⋆ வாசலில் வானவர்⋆
போதுமின் எமதிடம்⋆ புகுதுக என்றலும்⋆
கீதங்கள் பாடினர்⋆ கின்னரர் கெருடர்கள்⋆
வேதநல் வாயவர்⋆ வேள்வியுள் மடுத்தே (5)

வேள்வியுள் மடுத்தலும்⋆ விரை கமழ் நறும் புகை⋆
காளங்கள் வலம்புரி⋆ கலந்தெங்கும் இசைத்தனர்⋆

ஆள்மின்கள் வானகம்⋆ ஆழியான் தமர் என்று⋆
வாளொண் கண் மடந்தையர்⋆ வாழ்த்தினர் மகிழ்ந்தே (6)

மடந்தையர் வாழ்த்தலும்⋆ மருதரும் வசுக்களும்⋆
தொடர்ந்தெங்கும்⋆ தோத்திரம் சொல்லினர்⋆ தொடுகடல்
கிடந்த எம் கேசவன்⋆ கிளர் ஒளி மணிமுடி⋆
குடந்தை எம் கோவலன்⋆ குடியடி யார்க்கே (7)

குடியடியார் இவர்⋆ கோவிந்தன் தனக்கென்று⋆
முடியுடை வானவர்⋆ முறை முறை எதிர் கொள்ள⋆
கொடியணி நெடு மதிள்⋆ கோபுரம் குறுகினர்⋆
வடி வுடை மாதவன்⋆ வைகுந்தம் புகவே (8)

வைகுந்தம் புகுதலும்⋆ வாசலில் வானவர்⋆
வைகுந்தன் தமர் எமர்⋆ எமதிடம் புகுதென்று⋆
வைகுந்தத்தமரரும்⋆ முனிவரும் வியந்தனர்⋆
வைகுந்தம் புகுவது⋆ மண்ணவர் விதியே (9)

விதிவகை புகுந்தனர் என்று⋆ நல் வேதியர்⋆
பதியினில் பாங்கினில்⋆ பாதங்கள் கழுவினர்⋆
நிதியும் நற்சுண்ணமும்⋆ நிறை குட விளக்கமும்⋆
மதி முக மடந்தையர்⋆ ஏந்தினர் வந்தே (10)

‡வந்தவர் எதிர் கொள்ள⋆ மா மணி மண்டபத்து⋆
அந்தமில் பேரின்பத்து⋆ அடியரோடிருந்தமை⋆
கொந்தலர் பொழில்⋆ குருகூர்ச் சடகோபன்⋆ சொல்
சந்தங்கள் ஆயிரத்து⋆ இவை வல்லார் முனிவரே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ முனியே ॥

## ஆழ்வார் பரம பத்தியால் கனிந்து திருமாலைத் தாம் அடைந்தமையை அருளிச் செய்தல்

‡முனியே! நான்முகனே!⋆
முக்கண்ணப்பா⋆ என் பொல்லாக்-
கனிவாய்த்⋆ தாமரைக் கண் கரு
மாணிக்கமே என் கள்வா!⋆
தனியேன் ஆருயிரே!⋆ என் தலை
மிசையாய் வந்திட்டு⋆
இனி நான் போகல் ஒட்டேன்⋆ ஒன்றும்
மாயம் செய்யேல் என்னையே (1)

மாயம் செய்யேல் என்னை⋆ உன் திரு
மார்வத்து மாலை நங்கை⋆
வாசம் செய் பூங்குழலாள்⋆
திருவாணை நின்னாணை கண்டாய்⋆
நேசம் செய்துன்னோடென்னை⋆ உயிர்
வேறின்றி ஒன்றாகவே⋆
கூசம் செய்யாது கொண்டாய்⋆ என்னைக்
கூவிக் கொள்ளாய் வந்தந்தோ! (2)

கூவிக் கொள்ளாய் வந்தந்தோ!⋆ என் பொல்லாக் கரு மாணிக்கமே!⋆
ஆவிக்கோர் பற்றுக்கொம்பு⋆ நின்னலால் அறிகின்றிலேன் யான்⋆
மேவித் தொழும் பிரமன் சிவன்⋆ இந்திரன் ஆதிக்கெல்லாம்⋆
நாவிக் கமல முதற்கிழங்கே!⋆ உம்பர் அந்ததுவே (3)

உம்பரந் தண் பாழேயோ!⋆ அதனுள் மிசை நீயேயோ⋆
அம்பர நல் சோதி!⋆ அதனுள் பிரமன் அரன் நீ⋆
உம்பரும் யாதவரும் படைத்த⋆ முனிவன் அவன் நீ⋆
எம்பரம் சாதிக்கலுற்று⋆ என்னைப் போர விட்டிட்டாயே (4)

போர விட்டிட்டென்னை⋆ நீ புறம்
போக்கலுற்றால்⋆ பின்னை யான்
ஆரைக் கொண்டெத்தை அந்தோ!⋆
எனதென்பதென் யான் என்பதென்⋆
தீர இரும்புண்ட நீர் அது
போல⋆ என்னாருயிரை
ஆரப் பருக⋆ எனக்காரா
அமுதானாயே (5)

எனக்காரா அமுதாய்⋆
எனதாவியை இன்னுயிரை⋆
மனக்காராமை மன்னி உண்டிட்டாய்⋆
இனி உண்டொழியாய்⋆
புனக் காயா நிறத்த⋆
புண்டரீகக் கண் செங்கனிவாய்⋆
உனக்கேற்கும் கோல மலர்ப் பாவைக்கு⋆
அன்பா! என்னன்பேயோ! (6)

‡கோல மலர்ப் பாவைக்கன்பாகிய⋆ என் அன்பேயோ⋆
நீல வரை இரண்டு பிறை கவ்வி⋆ நிமிர்ந்ததொப்ப⋆
கோல வராகம் ஒன்றாய்⋆ நிலம் கோட்டிடைக் கொண்ட எந்தாய்⋆
நீலக் கடல் கடைந்தாய்!⋆ உன்னைப் பெற்றினிப் போக்குவனோ (7)

பெற்றினிப் போக்குவனோ⋆ உன்னை என் தனிப் பேருயிரை⋆
உற்ற இருவினையாய்⋆ உயிராய்ப் பயனாய் அவையாய்⋆
முற்ற இம்மூவுலகும்⋆ பெரும் தூறாய்த் தூற்றில் புக்கு⋆
முற்றக் கரந்தொளித்தாய்!⋆ என் முதல் தனி வித்தேயோ! (8)

முதல் தனி வித்தேயோ!⋆ முழுமூவுலகாதிக்கெல்லாம்⋆
முதல் தனி உன்னை உன்னை⋆ எனை நாள் வந்து கூடுவன் நான்⋆
முதல் தனி அங்கும் இங்கும்⋆ முழுமுற்றுறு வாழ் பாழாய்⋆
முதல் தனி சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த⋆ முடிவிலீயோ! (9)

‡சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த⋆ முடிவில் பெரும் பாழேயோ⋆
சூழ்ந்ததனில் பெரிய⋆ பர நல் மலர்ச் சோதீயோ⋆
சூழ்ந்ததனில் பெரிய⋆ சுடர் ஞான இன்பமேயோ!⋆
சூழ்ந்ததனில் பெரிய⋆ என் அவாவறச் சூழ்ந்தாயே! (10)

‡அவாவறச் சூழ்⋆ அரியை அயனை அரனை அலற்றி⋆
அவாவற்று வீடு பெற்ற⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
அவாவில் அந்தாதிகளால்⋆ இவையாயிரமும்⋆ முடிந்த
அவாவில் அந்தாதி இப்பத்தறிந்தார்⋆ பிறந்தார் உயர்ந்தே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖